


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2053*

*மலர் - 14 இதழ் - 09 - டிசம்பர் 2022*



ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்
முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந.முத்துமோகன்
முனைவர் மு.இராமசுவாமி
முனைவர் நா.இராமச்சந்திரன்
முனைவர் பா.ஆனந்தகுமார்
முனைவர் ஞா.ஸ்டீபன்
ப.குராஜன்
முனைவர் இரா.அறவேந்தன்
முனைவர் இரா.காமராசு
முனைவர் உ.அலிபாவா

இதழ் வடிவமைப்பு

*கா. குணசேகரன்*



நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

---

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


**1** படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன்............................................04

**2** சென்னையில் தமிழ் மருத்துவக் கல்லூரி
டாக்டர். சு. நரேந்திரன்............................................07

**3** குமரிக்கு வருவதை நிறுத்திய யாசகர்கள்
அ.கா.பெருமாள்..................................................15

**4** கூட்டுறவுக் கூட்டாட்சி: ஒரு பார்வை
க.பழனித்துரை................................................ 23

**5** இந்தியச் சமூகம்: மார்க்சும் பெரியாரும்
முனைவர் சு. மாதவன்............................................29

**6** தமிழ் இன்றி இந்தியா இல்லை
சண்முக. ஞானசம்பந்தன்.......................................33

**7** மனிதக்கழிவுகளை அகற்றும் சமூகத்தின் பாதுகாப்பும் மறுவாழ்வும்
ம.சக்திவேல்.........................................................41

**8** குழந்தையும் வாழ்க்கைத் திறன்களும்
மருத்துவர் ப.வைத்திலிங்கம்....................................47

**9** நாட்டு மருந்தும் தாய் மொழியும்
ச. சுபாஷ் சந்திரபோஸ்............................................51

**10** பொருளாதார நோக்கில் குறிசொல்லலும் சடங்கியல் தோற்றமும்
கனிமொழி செல்லத்துரை.........................................58


**11** கவி கா.மு.ஷெரீபின் பல்கீசு நாச்சியார் காவியம்
பேராசிரியர் உ. அலிபாவா
அ. முகம்மது அசாருதீன்........................................61

**12** சித்தன்ன வாசலிலிருந்து முரண்படும் சித்தண்ண வாயில்
அண்டனூர் சுரா....................................................65

**13** தேவதைகளால் தேடப்படும் கவிஞர் தங்கம் மூர்த்தி
க. உஷா நந்தினி...................................................71

படித்துப் பாருங்களேன்...

ஆ.சிவசுப்பிரமணியன்




# ஒரு மாப்பிளா இஸ்லாமியப் பெண் பிள்ளையின் கனவுகள்

## பி.எம்.சுகாரா (2022)

The Dreams of a Mappila Girl - a memoir.
Zuhara B.M.(2022)
Sage publications, India pvt Ltd, New Delhi 110 044.

**இஸ்லாமியப் பெண் பிள்ளைகள் கனவு காண்பதற்குக்கூட உரிமை இல்லாத காலத்தில் நான் வளர்ந்தேன். (சுகாரா)**

சற்று இறுக்கமான சமூகக் கட்டுப்பாடுகளைக் கொண்ட சமூகமான மாப்பிள்ளா இஸ்லாமிய சமூகத்தில் பெண்ணாகப் பிறந்ததால் இந்நூலாசிரியரால் தமது குழந்தைப் பருவம், வளர் இளமைப் பருவம் சார்ந்த கனவுகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாது போனது. அப்படி அவர் கண்ட கனவுகள்தான் என்ன?

அக்கனவுகள் ஒன்றும் எளிதில் நிறைவேற்றிக் கொள்ளமுடியாத கனவுகள் அல்ல. மிகவும் எளிமையான கனவுகள் தாம்.'' புதிதாகத் திறக்கப்பட்ட திரை அரங்கில் சென்று திரைப்படம் பார்ப்பது, தன் உடன் பிறந்த சகோதரர்களுடன் நெல் வயல்களில் விளையாடுவது, அவர்களுடன் சேர்ந்து தொன்மையான வீரவிளையாட்டான களரியைக் கற்பது, வயல் வெளியில் பணிபுரியும் குடியானவர்கள் தம் வேலையின்போது பாடும் பாடல்களைப் பாலம் ஒன்றில் நின்றவாறு கேட்பது,'' என்பனவே அவளது சிறுவயதுக் கனவுகளாக இருந்தன. இக்கனவுகளை நிறைவேற்றிக்கொள்ள அவளது குடும்பத்தினர் துணை நிற்கவில்லை. அவள் ஒரு பெண் பிள்ளை என்பதுதான் இதற்குக் காரணமாகும்.

பால் வேறுபாட்டின் அடிப்படையில் சுகாரியா என்ற இஸ்லாமியப் பெண் பிள்ளை பெற்ற அனுபவங்களின் பிழிவாக மட்டுமின்றி சிறுவயதில் அவள் அவதானித்த செய்திகளையும் வெளிப் படுத்துகிறது. இந்நூலாசிரியர் மலையாள மொழியில் சிறுகதைகள் எழுதிவருபவர். இதழ்களில் பத்தி எழுதுபவராகவும் உள்ளார். 2008இல் கேரள சாகித்திய அகாதமியின் விருதைப் பெற்றுள்ளார்.

**நூலாசிரியர்:**

இந் நூலாசிரியரான சுகாரா, சென்ற நூற்றாண்டின் அய்ம்பதுகளில் கேரளத்தின் கோழிக்கோடு அருகிலுள்ள திக்கோடி என்ற கிராமத்தில் மாப்பிள்ளா முஸ்லிம் குடும்பத்தில் பிறந்தவர். அவரது உம்மா (அம்மா) தமது பதினைந்தாவது அகவையிலேயே ஒரு குழந்தைக்குத் தாயானவர். முப்பத்தியெட்டாவது அகவையில் ஒன்பது குழந்தைகளுக்குத் தாயாக விளங்கினார். இதன் பின்னர் இனிமேல் குழந்தைகளே வேண்டாம் என்ற முடிவுக்கு வந்திருந்தார். ஆனால், இம் முடிவுக்கு மாறாக சுகாராவை அவர் பெற்றெடுத்தார். சுகாராவின் குழந்தைப் பருவம் திக்கோடிக் கிராமத்திலேயே கழிந்தது. தொடக்கக் கல்வியையும் அங்கேயே பெற்றார்.

அவரது உம்மா நான்காவது வகுப்பு வரையே படித்திருந்தாலும் வாசிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். பத்துக் குழந்தைகளின் தாய் என்றாலும் மலையாள மொழிபெயர்ப்பில் குர்ரானையும் ஹதீசையும் படிக்க நேரம் ஒதுக்கிவிடுவார். அவர் ஒரு நல்ல கதை சொல்லியாகவும் சிறிய நிகழ்வுகளைக்கூட கதை போன்று சுவைபடக் கூறும் ஆற்றலுடையவராகவும் விளங்கினார். அவரிடம் கேட்ட கதைகள் சுகாராவின் கற்பனையாற்றலுக்குத் துணைபுரிந்துள்ளன. அவரது மறைவு தமது வாழ்க்கையில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தின என்கிறார் சுகாரா.

திக்கோடில் இருந்து கோழிக்கோடு நகருக்கு அருகில் உள்ள கோகினூர் கிராமத்தில் தமது திருமணத்தை அடுத்து வாழ்ந்துள்ளார். இருப்பினும் அவரது உள்ளத்தில் திக்கோடி கிராமமும் அங்கிருந்த பூர்வீக வீடான மலையக்கல் வீடும் அவரது நினைவுகளில் படிந்தே இருந்தது. எனவேதான் அவர் பெற்ற குழந்தைப் பருவ அனுபவங்களே இந்நூலில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

மலையாள மொழியில் அவர் எழுதிய இந் நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ள ஃபெமிதா சக்கிராவும் கேரளத்தைச் சேர்ந்தவர்தான். சிறுகதை ஆசிரியராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் விளங்குபவர். தம் சிறுகதைகளுக்காக விருதுகள் பெற்றவர்.



நூலாசிரியர் சுகாரா எழுதத் தொடங்கியபோது இஸ்லாமியப் பெண்களின் வாழ்க்கையை ஆண்களே எழுத்தில் பதிவுசெய்து வந்தனர். அவர் எழுத ஆரம்பித்ததும் மிகுதியான அச்சுறுத்தல்களுக்கும் விமர்சனங்களுக்கும் ஆளானார்.

**நூல்:**

தலைப்பு எதுவுமின்றி எண் வரிசையில் பகுக்கப் பட்ட மொத்தம் இருபத்தொரு இயல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. திக்கனங்கோடு கிராமத்தில் மலையக்கல் வீடு என்று அழைக்கப்பட்ட பூர்வீக வீட்டில் பிறந்து வளர்ந்த அவரது வாழ்கை அனுபவங்களின் பகிர்வாகவும் இந் நூல் அமைந்துள்ளது. இதனால் ஒரு நாவலாகவும் நினைவலைகளின் பதிவாகவும் இது காட்சி அளிக்கிறது. தன் அனுபவப் பதிவு என்பதால் நூலாசிரியரே நூலின் மையமாகிறார். ஆனால், சுயபுராணமாக நூல் மாறிவிடவில்லை. இதற்குக் காரணமாக அமைவது, இதில் நாம் சந்திக்கும் பல படிநிலைகளில் வாழும் மனிதர்களும் அவரகளது வாழ்க்கைச் சூழல்களும்தான். சுகாராவின் வளரச்சிக்கேற்ப அமையும் உற்றுநோக்கல் அவரது வாழ்க்கையை மட்டுமின்றி வேறுபட்ட வாழ்க்கை நிலையையும் குணங்களையும் கொண்ட மனிதர்களையும் சமூக மாறுதல்களையும் நமக்கு அறிமுகம் செய்கிறது. இது நிகழ் காலத்தில் இருந்து நம்மைப் பின்னோக்கி அழைத்துச்செல்கிறது.

முதல் இயலில் சிறுமி சுகாரா அறிமுகம் ஆகிறார். மூன்று பட்டப்பெயர்கள் அச்சிறுமிக்கு. அவள் கைக்குழந்தையாக இருந்தபோது இடைவிடாது அழுதுகொண்டே இருப்பாள். இதனால் கரைச்சபெட்டி (கரைச்சல்:கத்துதல்) என்ற பட்டப்பெயர் கிடைத்தது. தாராக்கோழி (வாத்து) என்ற பட்டப்பெயரும் உண்டு. எதிலும் முந்திக்கொண்டு பேசுபவரை இப்படி அழைப்பதுண்டு, (தமிழில் முந்திரிக்கொட்டை என்பது போல்) இப் பட்டப்பெயர் இவருக்குப் பிடிக்காத ஒன்று. இப்பெயரைக் கூறி அழைத்தால் கோபத்துடன் முறைப்பார். மூன்றாவது பட்டப்பெயரான உம்மாக்குட்டி (அம்மாவின் செல்லப்பிள்ளை) இவருக்குப் பிடித்தமான செல்லப் பெயர்.

இந்த இயலில் வலியப்பா (தாத்தா), உம்மம்மா (பாட்டி),என்போருடன் வீட்டின் பணியாளர்கள் சிலரும் அறிமுகமாகின்றனர். மரத்தால் செய்யப்பட்ட மிதியடியை அணிந்து வீட்டிற்குள் நடக்கும் வழக்கம் இருந்ததையும் அறிந்துகொள்கிறோம். குடும்பத் தச்சரான சந்து ஆசாரி என்பவர் ஆண்டுக்கு ஒருமுறை மரத்தாலான மிதியடிகளைச் செய்து தருவது வழக்கமாக இருந்துள்ளதும் தெரியவருகிறது.

மலையக்கல் வீட்டின் ஒவ்வொரு பகுதிக்குள்ளும் நாம் சுற்றிவரும் வாய்ப்பு அடுத்துவரும் இயல்களில் நமக்குக் கிட்டிவிடுகிறது. இதனால் உணவு வகைகள், இஸ்லாமியப் பண்டிகைகள், பண்டிகைக்கால சிறப்புணவு, புழங்கு பொருட்கள் என்பனவும் நமக்கு அறிமுகமாகிவிடுகின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக, ஒன்றுக்கொன்று முரண்பட்ட மனித உள்ளங்களையும் உணர்ந்து கொள்கிறோம். சான்றாக, திக்கோடியில் செயல்பட்டுவந்த பள்ளியின் தலைமை ஆசிரியர் அறையில் சுகாராவுக்கும் கேளப்பன் ஆசிரியருக்கும் இடையே 1947இல் முதல் இந்திய விடுதலை நாள் கொண்டாட்ட நாளில் நடந்த பின்வரும் உரையாடலைக் குறிப்பிடலாம். அங்கு சுவரில் மாட்டப்பட்டிருந்த காந்தியடிகளின் படத்தை உற்று நோக்கிக்கொண்டிருந்த சுகாராவைப் பார்த்து "இவரை உனக்குத் தெரியுமா?"என்கிறார் கேளப்பன் ஆசிரியர். "இவர் இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தந்தவர்." "காந்திஜி." என்கிறார் சுகாரா. இந்த விடைக்கு "சபாஷ்" என்று கேளப்பன் பாராட்டிய நிலையில், ஆனால் உம்மம்மா (பாட்டி) இப்படிக் கூறுகிறார் என்று தொடர்கிறார் சுகாரா:

"காந்தி, நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துகிறார். ஆங்கிலேயர்கள் நம்மை ஆண்டபோது, நாம் எல்லோரும் மகிழ்ச்சியாக இருந்தோம். அவர்கள் போனபிறகு விலைவாசி உயர்ந்துவிட்டது. நல்ல துணிகளை நெய்ய உதவும் நூலின் விலை உயர்ந்துவிட்டது."

அதற்கு நீ என்ன பதில் கூறினாய் என்று கேட்ட கேளப்பன் ஆசிரியருக்கு, வகுப்பில் முகமது ஆசிரியர் இந்திய விடுதலைப் போராட்டம் குறித்துக் கூறியதை எல்லாம் எடுத்துரைத்தேன்.ஆனால் பாட்டியால் அதைப் புரிந்துகொள்ள இயலவில்லை."இப்போதெல்லாம் பள்ளிக்கூடங்களில் அறிவுக்குப் புறம்பான எல்லாவற்றையும் கற்றுக்கொடுக்கிறார்கள். கேளப்பன் ஆசிரியரை அழைத்து இதைக் குறித்துப் பேசுகிறேன் என்று உம்மாவிடம் கூறினார்" என்றாள்.

"இவர்கள் எல்லாம் பழமையான சிந்தனைகளில் ஊறிப்போனவர்கள். நில மானிய சமூக வரலாற்றின் தாக்கத்திற்கு ஆளானவர்கள். இதன் காரணமாகவே அவர் இப்படி கூறியுள்ளார். ஆங்கில ஆட்சியின் போது, பணக்காரர்களும் நிலவுடைமையாளர்களும் எந்தவிதமான தொல்லைகளையும் எதிர் கொள்ளவில்லை. ஏழைகள் மட்டுமே பட்டினிக்கு ஆளாகித் துன்புற்றார்கள். "நீங்கள் எல்லோரும் நன்றாகப் படித்து உங்கள் சமூகத்திற்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்குங்கள்" என்றார் கேளப்பன். "பெண் பிள்ளைகள் படிக்கக் கூடாது என்று உம்மா சொல்கிறார்களே" என்று துயரம் தோய்ந்த சன்னமான குரலில் சுகாரா கூறினாள். "நீ வளரும்போது நிலைமை மாறிவிடும். நீ கடுமையாக உழைத்துப் படி" என்றார் கேளப்பன் ஆசிரியர். இங்கு வீடு என்ற எல்லையைக் கடந்த கருத்துப் பறிமாற்றம் நிகழ்கிறது.

மலையாள மொழிச் சொற்களில் சில ஒலி மொழிபெயர்ப்பாக ஆங்கில மொழிபெயர்ப்பில் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் உறவுச் சொற்கள் தனியாகவும் ஏனைய சொற்கள் தனியாகவும் அகர வரிசையில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பதிமூன்று உறவுச் சொற்கள் தமிழுடன் நெருக்கமான உறவு கொண்டுள்ளன (உம்மா, உப்பா, வலியப்பா, மூத்தம்மா). ஏனைய சொற்கள் வரிசையில் அப்பம், அம்மி, ஆசாரி, உப்பு மாங்கா, உமிக்கரி, உரல், உரல்புறம், கஞ்சி, கிண்டி (கெண்டி), தாவணி, தோசா (தோசை), பாயசம், புட்டு, மிதியடி, முட்டம் (முற்றம்) முறுக்கு, நெய்யப்பம், வீடு, என்ற தமிழ்ச்சொற்கள் இடம்பெற்றுள்ளன.

மொத்தத்தில் திடுக்கிடச் செய்யும் நிகழ்வுகளும் திருப்பங்களும் இன்றி வீட்டிற்குள்ளும் வெளியிலும் வாழும் மனிதர்களின் வழியாக ஒரு குறிப்பிட்ட மக்கள் பிரிவின் வாழ்வியலையும் குறிப்பாகப் பெண்களின் வாழ்க்கையையும் இந்நூல் நாம் அறியும்படிச் செய்கிறது.

●

கட்டுரையாளர், தமிழர் சமூக வரலாற்று ஆய்வாளர்,
மார்க்சிய சிந்தனையாளர்.



# சென்னையில் தமிழ் மருத்துவக் கல்லூரி

**டாக்டர் சு. நரேந்திரன்**

சேலத்திற்கும் தமிழ் பயிற்சி மொழிக்கும் ஒரு முக்கிய தொடர்பு உண்டு. 1932இல் சேலத்து நேதாஜி இராஜாஜி முதல் அமைச்சர். அப்போது இரட்டை ஆட்சிமுறை. 1932 ஆரம்பகட்டத்தில் 'தமிழால் முடியும்' என்று சொன்னவர் மூதறிஞர் இராஜாஜி. அப்போதைய ஸ்டாதம் என்ற கல்வி இயக்குநருக்கு கடிதம் எழுதுகிறார். தமிழில் பள்ளிகளில் கல்வியைக் கொண்டுவர வேண்டும் என்று - அதற்கு ஸ்டாதம் மறுமொழி கூறுகிறார்- "பாடபுத்தகம் இல்லை, அகராதி இல்லை. தாய்மொழியில் கல்வி இயலாது" என்கிறார்.

அதற்கு இராஜாஜி- "தமிழில் போதிப்பது தொடங்கினாலன்றி, தமிழில் எழுத பாடநூல்கள் தேவை புலப்படாது." "கற்பிக்கும்போது மணிப்பிரவாளம் நடை ஏற்படும்-பரவாயில்லை". இதனால் லாபமே தவிர நஷ்டம் இல்லை. ஆக, தொடங்குங்கள் தமிழில்! என்பதே அவர் கொள்கை.

இத்துடன் நில்லாது இராஜாஜி, 'தமிழால் முடியும்' என்ற நூலையும் 3வது வகுப்புக்கு "தம்பி வா இதையும் படி" என்ற பாடநூல்களை எழுதியதுடன் சேலத்தில் The Tamil Scientific Term Society கலைச்சொல்லுக்கான முதல் இதழை வெங்கட சுப்பையருடன் சேர்ந்து தமிழ் - சாஸ்திர பரிபாஷை எனும் மாதப் பத்திரிகையை வெளியிட்டார்.

இது இப்படி இருக்க, தாய்மொழிக் கல்விக்கு ஏன் இத்தனை தடைகள்? வரலாறு பதில் சொல்லுகிறது. செந்நீர் கண்ணீர் வருகிறது. சங்க காலத்தை விடுத்து களப்பிரர்களை விடுத்து, பல்லவர் காலத்தில் மணிப்பிரவாள நடை, சோழர் காலத்தில் இளஞ்சேட் சென்னி, நெடுங்கிள்ளி போன்ற தமிழ்ப் பெயர்கள். பராந்தகன், விஜயபாலன், பாஸ்கரவர்மன் என்று மாற்றப்பட்டது. விஜயநகரப் பேரரசில் - வடமொழி படிப்போருக்கு இலவச உணவு, ஊர் பெயர் மாற்றம் நடைபெற்றது. தமிழிசை மங்கியது.

புதுக்கோட்டை தொண்டைமான் ஆட்சியில் அம்மன் காசில், அவர்கள் கொடியில், தெலுங்கில் விஜய என்ற எழுத்து. சோழ பாண்டியர் காலத்தில் பிரபந்தங்கள், ஸ்தலபுராணங்கள் எழுதப்பட்டன. ஆனால் சமூக இலக்கியங்கள் எழுதப்படவில்லை.

நாட்டுப் பற்றானது வடமொழி,வேதங்களோடும் வேள்விகளோடும் வளர்ந்தது.

ஒட்டுமொத்தமாகக் கூறவேண்டுமெனில் தமிழ்மொழி பயன்பாடு பராமரிக்கப்படவில்லை. பிறகு காலனி ஆதிக்கம் ஆங்கிலேயர் அறிவுத்துறையையும் பண்பாட்டையும் அழித்து, நம் நாட்டை பொருள்களை விற்கும் சந்தையாக்கினார்கள். நமக்கு அறிவே கிடையாது. அறிவியலுக்கு வழிகாட்டியவர் ஆங்கிலேயர் என்று தவறாக எண்ணத்தை வளர்த்தனர். அதையும் நாம் ஏற்றுக்கொண்டோம். நமக்கு 5 அடி அஸ்திவாரத்தில் கட்டப்பட்ட சுனாமிக்கும் அசையாத தஞ்சை பெருவுடையார் கோயில் கண்ணில் படவில்லை. வற்றாத காவேரியில் கரிகாலனால் கட்டப்பட்ட கல்லணையும் நினைவுக்கு வரவில்லை.

மெக்காலே காலத்தில் சிப்பந்தி வர்க்கம் உருவாக்கப்பட்டது. இப்பொழுது உள்ள ஆங்கில கல்வியால் பயன் அடைவது இந்தியாவோ தமிழ்நாடோ அல்ல. இந்தியா தொழில்நுட்பங்களை Technocrates உருவாக்குவதற்குப் பதிலாக Tehno coolies களை உருவாக்கி இருக்கிறது என்று கூறுகிறது ஓர் இதழ். ஆங்கில வழிக் கல்வி, சிந்தனையை வளர்க்கவில்லை. ஆங்கில மொழி வழி கற்கும் நேரம் பெரும்பகுதி அழிந்துவிடுகிறது. உலக (250) நாடுகளில் 5 நாடுகளில்தான் ஆங்கிலம் தாய்மொழி. உலகத் தொடர்புக்கு ஆங்கிலம் மட்டும் போதாது.

ஆங்கிலத்தில் ஆய்வுக் கட்டுரைகள் வெளிவருவது 35% மற்றவை 20% ரஷ்ய மொழி, பிற மொழிகள் எல்லாம் அவர்கள் மொழியில் ஆங்கிலத்தில்தான் சுருக்கத்தைத் தருகின்றனர். அதுபோலவே ஜப்பான், ஸ்பானிஷ் மொழிகளிலும் அப்படியே. தாய்மொழியில்தான் அறிவியல் கல்வி நடைபெறுகிறது.

தாய்மொழி குறித்து தேசப்பிதா ''1915இல் காந்தி மயிலாடுதுறைக்கு வருகை. வரவேற்பு ஆங்கிலத்தில். அது கண்டு காந்தி ''வரவேற்பிதழ் ஆங்கில மொழியில் பொறிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறேன். காங்கிரஸ் சுதேசி உங்கள் நாட்டு மொழியைத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. நீங்கள் உங்கள் நாட்டு மொழியைக் கொன்று அவைகளின் சமாதி மீது ஆங்கிலத்தில் நிலவச் செய்வீர்களானால், நீங்கள் உண்மையில் சுதேசி இயக்கத்தை வளர்ப்பவர்களாக மாட்டீர்'' என்று கூறுகிறார். 16 மணி நேரம் கற்பதை 10 மணி நேரத்தில் தாய்மொழியில் கற்றுக்கொள்ளலாம் என்கிறார் காந்தி. ஆங்கிலத்தில் 1 மணி நேரம் படித்தால் தாய்மொழி படிப்பில் 3/8 குறைகிறது. ஆங்கிலச் சுமையால் நேரம் வீணாகிறது. 4 ஆண்டுகளில் படிப்பதை 2 ஆண்டுகளில் படிக்க முடியும் என்கிறார் அண்ணல் காந்தி.

காந்தி, பாரதி, தாகூர் நமது இராமேசுவரம் தமிழன் ஏபிஜெ அப்துல் கலாம், சந்திரயான் மயில்சாமி அண்ணாதுரை தாய்மொழிக் கல்வியை வற்புறுத்தியவர்கள். நமது அன்புக்குரிய அப்துல் கலாமும், மயில்சாமி அண்ணாதுரையும் தமிழ்வழி படித்து உச்சத்திற்குப் போனவர்கள். அறிவு வளர்ச்சிக்கு ''தாய்மொழி வழிக் கல்வியே சிறந்தது'' என்பதே இவர்கள் அனைவரும் எடுத்துரைக்கும் கருத்து. சொல்லால் மட்டுமின்றி செயலாலும் காட்டியவர்கள்.

வளர்ந்த நாடுகளில் தாய்மொழியே பயிற்றுமொழி. இதனால் நம்மைவிட பல மடங்கு பொருளாதாரத்தில் உயர்ந்து காணப்படுகிறார்கள். இந்நாடுகள்தான் மனித சமுதாயத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் வலிமை பெற்றுள்ளனர். இவ்உலக நாடுகளுடன் நாமும் சேர்ந்து வளர்ச்சியும் வல்லமையும் பெறவேண்டும்.

தாய்மொழிக் கல்வி சமூகத்துடன் ஒரு தொடர்பை உண்டாகும். வாழ்க்கையைச் செம்மையாக்கும். ஆக, வாழ்க்கை ஏற்றத்திற்கு வளர் தமிழில் அறிவியலைக் கற்கவேண்டும்.

பிரான்சை எடுத்துக்கொள்வோம். 1971இல் பிரெஞ்சு தலைமை அமைச்சர் சேச்சே செபெல்டெல்மா "பிறமொழிச் சொல்லை அகற்றி புதுச் சொற்களை பிரான்சில் உருவாக்குங்கள்" என்று கூறினார். அங்கு கலப்பட சொல்லைப் பயன்படுத்தினால் 100 பிராங்கு தண்டம். அங்கு பள்ளிப்படிப்பு, மருத்துவம், பொறியியல் அனைத்தும் பிரஞ்சு மொழியில்தான்.

ஆரம்பத்தில், இஸ்ரேலில் நாடற்ற யூதர்கள் ஒன்றுகூடினர். யூதர்களின் சமயமொழி ஈப்ரு. அங்கு ஆரம்பத்தில் பலமொழிகள் பேசப்பட்டன. ஈப்ரு, மக்கள் மொழி ஆக்கப்பட்டது. இதனால் அகர வரிசை பாடத்திலிருந்து முதுமுனைவர் பட்ட மேற்படிப்பு வரை அதனைப் பயின்றும் பயிற்றுவித்தும் மீட்சி செய்து மேனிலை அடைந்தனர்; இன்று அது ஒரு வளர்ந்த நாடு.

ஜப்பானில் உயர்படிப்பு வரை அவர்கள் ஜப்பானிய மொழியில்தான். அவர்களின் கண்டுபிடிப்புகளைக் கட்டுரைகளில் மற்றவர்களும் தெரிந்துகொள்ள சுருக்கத்தைக் கொடுக்கின்றனர்.

ஒரு நிகழ்ச்சி: உணவுக்குழாயில் மிகச்சிறந்த அறுவை முறைகளைக் கண்டுபிடித்த அறுவை மருத்துவர் டாக்டர் நக்கயாமா, 15 ஆண்டுகளுக்கு முன்பு இரைப்பை குடல் மாநாட்டுக்கு சிறப்பு விருந்தினராக இந்தியாவிற்கு வந்தார். அவர் பேசும்போது, நான்கு வார்த்தைகளே ஆங்கிலத்தில் பேசினார். Yes, Thanks, welcome, OK என்பதுதான்.

இந்தோனேஷியா, இரண்டாம் உலக மகாயுத்தத்திற்குப் பிறகு 100-க்கும் மேற்பட்ட மொழிகள் வட்டார மொழியாக, வழக்கு மொழியாகப்

பேசப்பட்டது எழுதப்பட்டது. எல்லாவற்றையும் ஒருமுகப்படுத்தி "பாஷா இந்தோனேஷியா" என்று பெயரிட்டனர். இம்மொழியே பாடமொழியாக இருக்க வேண்டும் என்பது அரசு ஆணை. இம்முடிவில் கட்சி வேறுபாடு காரணமாக எந்தக் குழப்பமும் வர இடம் தரக்கூடாது என்று மரபு தழுவிய ஒப்பந்தம்.

ஆனால், தமிழ்நாட்டில் 1999இல் முதல்வர் கலைஞர் தமிழ் பயிற்றுமொழியாக வேண்டும் என்ற ஆணை பிறப்பித்தார். மெட்ரிக் பள்ளி கூட்டமைப்பால் அது தோற்கடிக்கப்பட்டது. மேல்முறையீடு செய்தவர் கலைஞர். இவ்வழக்கு 2002 உச்சநீதி மன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது ஆட்சியில் மாற்றம். அடுத்து வந்த ஆட்சியின் வழக்குறைஞர், 'இப்பிரச்சினையை நீதிமன்ற முடிவுக்கே விட்டுவிடுகிறோம்' என்று தெரிவித்தார். "அவ்வாறு சொல்ல இயலாது. மேல் முறையீட்டு மனுவை அரசு திரும்பப் பெற்றுக் கொள்கிறீர்களா" என்று நீதிபதி கேட்கிறார். திரும்பப் பெறவில்லை என்று வழக்கறிஞர் கூறுகிறார். இதுதான் தமிழ்நாட்டில் நடைமுறை.

அடுத்து இரஷ்யா. எல்லாம் இரஷ்ய மொழியில்தான். நம் மாணவர் சென்று அங்கு இரஷ்யாவில் மருத்துவம் படித்து வருகிறார்கள். அவர்கள் மொழியைக் கற்ற பின்னரே மருத்துவப் படிப்பு. வளர்ந்த உலக நாடுகளில் அனைத்தும் தமது தாய்மொழிக் கல்வியினாலே போதிக்கப்படுகிறது. எ.கா: ஜெர்மன், ஜப்பான், இஸ்ரேல், ரஷ்யா என்று பார்த்தோம். இத்துடன் சீனாவையும், துருக்கியையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். இதற்குக் காரணம், தாய்மொழி உணர்வுடன் 60-70 ஆண்டுகளுக்கு முன்பே அறிவியலை சொந்த மொழியில் அந்நாடுகள் புகுத்திவிட்டன. அதனால் எல்லோருக்கும் வாய்ப்பு. ஏழை, பணக்காரன் என்று இல்லாது, முன்னேற்றமடைந்த நகரத்தான், பின்தங்கிய கிராமத்தான் என்ற வேறுபாடின்றி அறிவியலைக் கற்றனர். ஆகவே, ஆர்வமும் ஆற்றலும் எங்கிருந்தாலும் அறிவியல் கற்பிக்கப்பட்டது. இதனால் நாடு முன்னேறியது. மொழி வளமானது. இதனால் மேல்நிலைக் கல்வியைக் கற்க மொழி தடை இல்லை என்றாகியது. அறிவு பெருகியது, தொழில் துறையும் வேகமாக முன்னேறியது.

ஆகவே, நூல் தமிழில் பயிற்சிமொழி தேவை எனப்படுகிறது. தமிழ்நாட்டின் நிலை என்ன? வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால் 1932 இராஜாஜிக்குப் பிறகு 1956 கர்மவீரர் காமராஜர் அமைச்சரவையில் கல்வி அமைச்சர் திரு சி.சுப்பிரமணியம் அவர்களினால் 1956 தமிழ் வளர்ச்சிக் குழு அமைக்கப்பட்டது. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்கள் முயற்சிசெய்து திட்டம் வகுக்க முன்வரவில்லை. முதலமைச்சர் காமராஜர் கூறுகிறார். "படித்தவர்கள் மனப்பான்மை மாறவேண்டும். தமிழ் பயிற்சி மொழியாக உள்ள பள்ளிகளுக்கு தம்பிள்ளைகளை அனுப்ப வேண்டும். இதைச் செய்தால் தமிழ் பாட புத்தகங்கள் தானே வெளிவரும்" என்கிறார். பிறகு, திரு.சி.சுப்பிரமணியம் மத்திய அமைச்சராகிறார். அதைத் தொடர்ந்து மொழிப் போராட்டம். திரு.பக்தவச்சலம் அவர்கள் முதல்வரான பின் மொழிப் போராட்டம், ஆட்சி மாறியது. கட்சியும் மாறியது; காட்சியும் மாறியது; 1967இல் அறிஞர் அண்ணா முதல்வரான பின், "ஆட்சி மொழியாக அன்னைத் தமிழிருக்க, ஆங்கிலம் பயிற்று மொழியாக இருப்பது தலையில் தண்ணீர் ஊற்றிவிட்டு, வேரில் வெந்நீரை ஊற்றுவதற்குச் சமம்!" என்றார்.

கல்லூரிகளில் பயிற்று மொழியாகத் தமிழ் 5 ஆண்டுகளுக்குள் நடைமுறைப்படுத்தப்படும் என அண்ணா அரசு 1968இல் தீர்மானம் நிறைவேற்றியது. அண்ணா மறைவுக்குப் பிறகு, 1970இல் கலைஞர் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். அண்ணாவினால் நிறைவேற்றப்பட திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. இது தமிழ் திணிப்பு எனப்பட்டது. தமிழகத்தில் ஆங்கிலம் சார்பாக ஓர் இயக்கம் உருவானது. இதை சிண்டிகேட் காங்கிரஸ், ஏ.எல்.முதலியார் போன்றோர் எதிர்த்தனர். கலைஞருக்கு கொடும்பாவி கொளுத்தினர். ஈரோட்டில் மாணவர்கள் தமிழ் தேர்வைப் புறக்கணித்தனர். ஆங்கிலத்துக்கு ஆதரவாக மாநாடுகள் நடத்தப்பட்டன. இதுகுறித்து சென்னைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் கலைஞர் கூறுகிறார். "தமிழ் வழி கற்று நாம் புத்துலகோடு, போட்டி போடும் புதிய வரலாறு எழுத இயலும் என்று பத்தாண்டுகளுக்கு முன்பே உறுதி தோன்றியது. ஆனால் கிளர்ச்சி. தமிழ் பயிற்றுமொழித் திட்டம் தயங்கியது. பிறகு 1980 தமிழ்ப் பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. துணைவேந்தர் முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம், அறிவியல் தமிழ்த்துறைத் தலைவர் இராம.சுந்தரம் இவர்களால் 23 மருத்துவ நூல்கள் தமிழில் எழுதி வாங்கப்பட்டன. எழுதியவர்கள் டாக்டர் ப.ஆறுமுகம், மருத்துவக்கல்வி இயக்குநர்; சரசாபாரதி, நோய்க்குறியியல் வல்லுநர், சென்னை; பேராசிரியர் டாக்டர் முத்து, உடற்கூறு இயல் இயக்குநர், மதுரை; பேரா. ராமகிருஷ்ணன், ஜிப்மர் உயிர் வேதியியல் துறை, புதுச்சேரி; பேரா. ராஜேஸ்வரி, குழந்தை மருத்துவர். மருத்துவர் பேராசிரியர் முனைவர் சு.நரேந்திரன், அறுவை மருத்துவம், தஞ்சை மருத்துவக் கல்லூரி. அதுபோல் பொறியியல் முனைவர் நக்கீரன், முனைவர் இளங்கோ போன்றவர்களால் 13 நூல்கள் எழுதப்பட்டன. தமிழில் நூல்களை எழுதத் தொடங்குங்கள் என்று கூறுபவர்களுக்குத்தான் இந்தப் பட்டியல். இந்நிலையில், 700 மாணவர்கள் தமிழில் பொறியியல் படிக்க தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கலைஞர் ஆட்சியில் பயிற்சி கொடுக்கப்பட்டது. மைய

அரசு சரியான முடிவைத் தராத சூழ்நிலையில், (அனைத்திந்திய தொழில்நுட்பக் கழகம் (AICTE)) இத்திட்டம் கைவிடப்பட்டது.

இக்காலகட்டம் ஆங்கில கலைச்சொல் இல்லை, மூலநூல் இல்லை, தமிழில் படித்தால் வேலைவாய்ப்பு இராது என்று கூறப்பட்ட காலம். பலர் கேலி பேசினர்.

இக்கால கட்டத்தில் மருத்துவத் தமிழக்கு அகராதி வெளியிடப்பட்டது. டாக்டர் சாமி சண்முகம், மணவை முஸ்தபா, தஞ்சை அ.கி.மூர்த்தி, பட்டுக்கோட்டை சம்பத்குமார் போன்றோர் வெளியிட்டனர். இது தவிர, தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் 13 மருத்துவக் களஞ்சியங்கள் வெளிவந்தன. பாடநூல்களிலிருந்து 1984-2000குள்ளாகவே கலைக் களஞ்சியம் வரை தமிழால் முடியும் என்பது நிரூபிக்கப்பட்டது.

இங்கு மட்டுமல்ல தமிழர் குடியேறிய நாட்டிலும். இலங்கையில் டாக்டர் சின்னத்தம்பியும் மகப்பேறு மருத்துவம், நலம் பேணல் போன்ற மருத்துவ நூல்களை "என்னை நன்றாக இறைவன் படைத்தான். தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு" என்று சொல்லி தன் ஓய்வு ஊதியம் முழுமையையும் செலவிட்டு நூல்களை வெளியிட்டார். அதில் ஒரு கிரந்த எழுத்து கிடையாது. சமஸ்கிருத சொற்கள் இல்லை. இது தவிர, இலங்கை திணை கழகத்தால் 12 மருத்துவ கலைச்சொற்கள் பட்டியல் வெளிவந்தன. இனவாத கலவரங்கள் ஏற்படும் வரை தமிழில் MA., M.Phil., வரை இலங்கையில் பல பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்பட்டது.

மறுபடியும் தமிழ்நாட்டிற்கு வருவோம். தமிழ்நாட்டில் ஆங்கில வழிக் கல்வி அதிகம் என்று 1980 தமிழ்ச் சான்றோர் பேரவையால் 100 பேர் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. அதன் விளைவாகக் கலைஞர் அரசு, நீதிபதி மோகன் குழுவை அமைத்தது.

தமிழக அரசு, மழலைகள் பள்ளியில் தமிழைப் பயிற்றுமொழியாக்கும் திட்டத்தை அரசு ஆணை மூலம் தெரிவித்தது. மெட்ரிக் பள்ளிகள் இதனை எதிர்த்தன. உயர்நீதி மன்றத்தில் நீதியரசர்கள் ஏ.வெங்கடாசலம், எஸ்.ஜெகதீசன், என்.தினகர் ஆகியோர், "தமிழக அரசு ஆணை செல்லாது" என்று தீர்ப்பளித்தார்கள். பிறகு கலைஞர் அரசு, உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது.

பீனிக்ஸ் பறவை போல் 2006ல் மறுபடியும் கலைஞர் ஆட்சிக்கு வந்து முதல்வரான பிறகு, தமிழ்நாட்டில் பொறியியல் படிப்புகள் அண்ணா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த 12 கல்லூரிகளில் திருச்சி, திண்டுக்கல், சென்னை, அரியலூர், பண்ருட்டி, இராமநாதபுரம் எனத் தமிழ்நாடு முழுமையும் ஆரம்பிக்கப்பட்டது. 2010 ஆட்சி மாற்றம். கையேடு போல் பொறியியல் நூல்கள் வெளிவந்தன. இதையும் நகல் எடுத்துப் படிக்கவேண்டிய அவலம் நிகழ்ந்தது.

இன்றைய நிலையில் மருத்துவப் படிப்பு தாய்மொழியில் என்ற நிலையில் வரலாற்றைத் திருப்பிப் பார்க்கும்போது, இலங்கையில் ஓர் மருத்துவக் கல்வி புரட்சி தோன்றியது. "மருத்துவத்தை சொல்லும் திறன் தமிழுக்கு உண்டு" என்று 170 ஆண்டுகளுக்கு முன் ஒரு அமெரிக்கத் தமிழர் டாக்டர் சாமுவேல் பிஷ்கிறின் கூறினார். இவரே ஆங்கில மருத்துவக் கல்வியை தமிழ் மூலம் புகட்டி 33 மருத்துவர்களை உருவாக்குவதில் வெற்றி கண்டவர். 1850 யாழ்ப்பாணம் மணிப்பாலில் ஆரம்பத்தில் ஆங்கிலத்தில் கற்பித்தார். 1852 மருத்துவம் இரண்டாம் தொகுதி மாணவர்களுக்கு தமிழில் மருத்துவ வகுப்புகளைத் தொடங்கும்போது, நிதி உதவி கேட்டு இலங்கை தேசாதிபதிக்கு எழுதுகிறார். அதற்கு மறுமொழியாக,

"அமெரிக்க மிஷன் நடைமுறையில் மேற்கொண்டிருக்கும் ஆங்கிலம் தவிர்க்கும் கொள்கை பேராபத்தானது, தற்கொலைக்கு ஒப்பானது" என்று மறுத்துவிட்டார். இருப்பினும் கிறீன் தன் முயற்சிகளால் பதினொரு நூல்களை வெளியிட்டார். அந்தப் பெயர்களைப் பாருங்கள். கல்வின் கற்றரின் அங்காதி பாதம், சுகரண வாதம் உற்பாலனம்-1852, யோன்சயின் பிரசவ வைத்தியம், துருவிதரின் இரண வைத்தியம், கூட்டரிசன் வைத்தியாகரம், டால்தனின் மனுஷசுகரணம், வாநிங்கின் சிகிச்சா வாகடம், Pharmacopoeia of India (மருந்தியல்) மனுஷ சுகரண கலைச்சொற்கள் அருஞ்சொல் அகராதி-(Terminology ) இவற்றைவிட கண், காது, கை, கால், தோல், வாய், உடல் சுத்தமாய் இரு, வாந்திபேதிக்கு உதவிக் குறிப்புகள் முதலிய சிறு நூல்களும் வெளியிடப்பட்டன. ஏன் இந்த நூல்களை எழுதினேன் என்பதை ஜெமிஸ்தம் என்ற நூலின் முன்னுரையில் குறிப்பிடுகிறார் டாக்டர் கிறீன்."இல்லாத சாத்திரமென்ற மப்பில் பதுங்கி, தமிழருக்கு நாசமோசத்தை வருவிக்கும் சகுனம், சூனியம் முதலிய பொய்கள் நித்தமும் தடையின்றி உலாவுகின்றன. ரசவாதத்திற்குப் பதிலாக கெமிஸ்தம் வித்தையையும், சோதிட சாஸ்திரங்களுக்குப் பதிலாக வான சாஸ்திரமும் பொய்யான கல்விக்குப் பதிலாக மெய்யான அறிவை தேசத்தில் நிறுத்துவது" என்று கூறுகிறார்.

தமிழ்நாட்டிலும் அந்நூல் கிடைத்தது. இக்காலகட்டம் ஆங்கிலம் அரசுமொழி, ஆங்கிலம் படித்தால் அரசு வேலை என்ற நிலை. அறிவியலைப் படிக்கக்கூடாது என்று சொல்லாத கட்டுப்பாட்டுடன் இந்துக்கள் வாழ்ந்த காலம். அறிவியல் கிறித்துவத்துடன் இணைந்துள்ளது என்று பழைமைவாதிகள் எண்ணிய காலம்.

டாக்டர் கிறீன், மேலை மருத்துவம் குறித்த 4650 பக்கங்களை மொழிபெயர்த்தார். எல்லாம் மேலை மருத்துவத்தைச் சார்ந்தது. இதில் துண்டு அறிக்கைகளும் கையேடுகளும் அடங்கும். இவர் மட்டும் எழுதியது நூல்கள் நான்கு. இத்துடன் இரண்டு அகராதிகளும் வெளியிடப்பட்டன.

இவருடன் இணைந்து எழுதியவர்கள் சாப்மன் (வைத்திலிங்கம்), பவுல் என்ற அப்பாவுப்புள்ளை, நதானியல் என்ற சுவாமிநாதன். இந்த சுவாமிநாதன் தான் நூல்களை எல்லாம் பாஷாந்தரம் செய்தார். ஆனால் எல்லா நூல்களும் கிறீனினால் திருத்தப்பட்டது. எழுதியவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத் தமிழர்கள். கீறின் எல்லோரையும் பண்டிதர் என்று குறிப்பிடுகிறார். தன்னை மட்டும் வைத்தியர் என்று கூறிக்கொள்கிறார். நூலில் கலைச்சொற்கள் தமிழ்-வடமொழி-ஆங்கிலம் என்ற வரிசையில் உள்ளது. இருப்பினும் வேகம்சடுதி, என்றும் குளியல்-ஸ்நானம் என்றும் எழுதப்பட்டது. இது அக்கால வழக்கு. அக்காலத்தில் படித்தவர்கள் மேட்டுக்குடி மக்கள் பயன்படுத்திய அகராதி வில்சனின் சமஸ்கிருத- இங்கீலிஸ் அகராதி. சாம்வேல் - சமுல் எனவும் டேனியல்-தனைல் எனவும் எழுத்தும் பெயர்ப்பு செய்துள்ளார். லண்டன்-லங்கையில் ‘இ’ புகுத்தப்படவில்லை. ஆக 1870-களிலேயே இலக்கண நெகிழ்வுகள் நடந்துள்ளன. அக்கால கட்டத்தில் மாணாக்கர்கள் மேல்நாட்டுக் கல்வியைத் தமிழில் படித்தால் பயனுண்டா என சலனமடைந்தனர். கிறீன் கூறுகிறார். “எனது மாணவர்கள் ஆங்கிலத்திலிருந்து மாறி தமிழில் கற்பது பற்றி சலனமடைந்துள்ளனர். அரசு சேவையில் சம்பளம் பெறும் வாய்ப்பு குன்றுமென அவர்கள் எண்ணுகிறார்கள். உண்மை. ஆனால் வைத்தியர்கள் அவரவர் கிராமத்தில் நிலைபெறச் செய்தலே என் எதிர்கால நோக்கம். எனவே, 10 நாட்கள் ஓய்வு கொடுத்த பின் வைத்திய கல்வியைத் தொடங்குவார்களா? அன்றேல் வேறு தொழிலை நாடுவார்களா? எனத் தீர்மானிக்க அவர்களுக்கு அவகாசம் கொடுத்துள்ளேன்” எனக் கூறுகிறார். டாக்டா கிறீன் மேலும் கூறுகிறார், “ஆம் கடவுள் எமக்கு ஆயுள் பலந்தரின் காலபோக்கில் இம்மாகாணத்தை மேனாட்டு வைத்தியம் கற்ற சுதேசிகளால் நிரப்பிக் காட்டுவேன்” என மார்தட்டி புத்தகங்களை வெளியிட்டுள்ளார்.

மாணவர்கள் தங்கள் படிப்பை அவர்கள் கலாச்சார உடைகளான வேட்டி, சால்வை தலைப்பாகை ஆகியவைகளுடன் படித்தனர்.

டாக்டர் கிறீன் சொல்கிறார், “வேட்டி-காற்சட்டையாகவும் சால்வை மேற்சட்டையாகவும், தலைப்பாகை-தொப்பியாகவும், தாவர போஜனம்மாமிச போஜனமாகவும் மாறுகின்றன” என்றே நான் அறிகின்றேன். ஐரோப்பிய நடையுடை பாவனைகளைப் பின்பற்றும் இந்துக்களைவிட, கிறித்துவ இந்துக்களையே காண ஆசைப்படுகின்றேன். “கிறித்துவராவது என்பது தேசியத்தை இழப்பதல்ல” என்று தெளிவாகக் கூறுகிறார்.

அடுத்து, 1866இல் ஒரு வெற்றிச் செய்தியைக் கூறுகிறார். “இப்போது எல்லா விஷயங்களும் தமிழிலேயே நடைபெறுகின்றன. மருந்துகளின் பெயர், நோய்களின் பெயர், குறிப்புகள், கணக்கு விபரங்கள், மருத்துவக் குறிப்புகள் எல்லாம் தமிழிலே நடைபெறுகின்றன” என்று கூறுகிறார்.

இந்த நிலையில், எந்த அரசு பணம் தர மறுத்ததோ அதே அரசு கிறீன் காலத்தில் “காலரா தடுப்புமுறைகள் பற்றிய துண்டுப் பிரசுரத்தை அரசு இவரிடம் எழுதி வாங்கி வெளியிட்டது. 1870 இல் அரசு கிழக்கு மாகாண அதிபர் நூல்களை வாங்கி மக்களுக்கு வழங்கினார். டாக்டர் கிறீன் தன் கல்லறையில் எப்படி எழுதவேண்டும்" என்று கூறுகிறார். (Medical Evanglelist to the Tamils) “தமிழுக்கான மருத்துவ ஊழியர்” என்று அவருடைய நூலில் ஓர் இடத்தில் குறிப்பிடுகிறார். இறுதியாக அவர் கூறியது, “இந்தப் புத்தகம் வருங்காலத்தில் தமிழருள் கல்வியின் ஓட்டத்துக்கு தொடக்கமாக, நிலையாக இருக்கட்டும். இவ்வோட்டம் மேற்குத் தேசத்தாரின் முன் கண்ட ஓட்டத்துக்கு நிகராகக் கடவது” என்று கூறியது தான் அது. அதை மெய்பிக்கும் விதமாக நமது முதல் அமைச்சர் அவர்கள் 100 பாடநூல்களை மொழிபெயர்க்க 2 கோடி ரூபாய் ஒதுக்கியதற்கு நன்றி.

“பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்.
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்”
“சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள்
யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்”

என்ற பாரதியின் கனவை நனவாக்க, “வெளியுலகில் சிந்தனையில் புதிது புதிதாக / விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்கள் எல்லாம் கண்டு தெளிவுறுத்தும் படங்களோடு சுவடி எல்லாம் செய்து / செந்தமிழை செழுந்தமிழாய்ச் செய்தல் வேண்டும் என்ற புரட்சிக் கவிஞன் பாட்டிற்கிணங்க நம் முதலமைச்சர் ஆணைப்படி 2021 பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களால் அறிவியலில் திசைதோறும் திராவிடம், முத்தமிழ் அறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம், இளந்தளிர் இலக்கியத் திட்டம் என அறிவிக்கப்பட்டன.

அத்திட்டத்தில் உள்ள முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின்படி உயர்கல்வி பயிலும் மாணவர்க்கு இலக்கியம், இயற்பியல், மருத்துவம், பொருளாதாரம், பொறியியல், வேதியியல், வேளாண்மை ஆகிய பொருட்களில் தலைசிறந்த 206 நூல்களை மொழிபெயர்ப்பு செய்துகொண்டிருக்கின்றனர்.

முதற்கட்டமாக நூல்கள் வெளியீடு, வரும் டிசம்பர் மாதம் நடக்க உள்ளது. இயற்பியல் நூல்கள்-4, வேதியல்-5, மருத்துவம்-6, உயிரியியல்-3, வணிகவியல்-3 ஆகிய நூல்கள் வெளிவர உள்ளன.

2023 இல் இரண்டாம் கட்டமாகப் பொறியியல் 20 நூல்கள், மருத்துவம் 10 நூல்கள். இதில் சேலம் டாக்டர் லோகநாதன், சேலம் கந்தசாமி, டாக்டர் கனகராஜ், டாக்டர் கண்ணன் ஆகியோர் எழுதுகின்றனர். ஆக, 206 நூல்கள் அடுத்த ஆண்டுக்குள் வெளிவரப்போகின்றன. இவைகள் அனைத்தும் உலகத்தரம் வாய்ந்த நூல்கள். இன்றைய பாடத்திட்டத்தின்படி கல்லூரிகளில் படித்துக்கொண்டிருக்கும் எம்.பி.பி.எஸ், பி.இ.யில் என்ன படிக்கின்றார்களோ அதே நூல்கள் வெளிவர உள்ளன. அண்மையில் வெளியிட்ட ஹிந்தி நூல்கள் (Trans-Literation) ஆங்கில எழுத்தை ஹிந்தி எழுத்துக்களில் அப்படியே ஒலிபெயர்த்து எழுதப்பட்டுள்ளது. மேலும் உள்ளூர் ஆசிரியர்களால் எழுதப்பட்ட நூல்கள் என்று டாக்டர் காந்தராஜ் தன் முகநூலில் குறிப்பிடுகிறார். இங்கு, அங்கு முடியாதது முடிந்திருக்கிறது. "தொண்டு செய்வாய் தமிழுக்கு துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே" என்ற பாட்டிற்கிணங்க தமிழ் பயிற்றுமொழிக் கனவு நனவாகிறது.

ஆங்கில மொழிக்கு நாம் எதிர்ப்பாளர் இல்லை. அதே வேளையில் பாதுகாப்பாளரும் இல்லை. ஆனால், தமிழுக்கான உரிய இடத்தை ஆங்கிலத்திற்கு விட்டுவிட்டு தமிழை வலுவிழக்கச் செய்பவர்கள் தமிழ் மக்களைத் தொடர்ந்து அடிமை நிலையில் வைப்பதற்கான முயற்சியை மேற்கொள்கின்றனர் என்பது மட்டும் உண்மை. மக்களாட்சியில் மக்கள் மொழி மதிக்கப்பட வேண்டும். மக்கள் மொழிக்கு உரிய உரிமைகள் யாவும் மகிழ்ச்சியோடு வழங்கப்படவேண்டும். மக்கள் மேம்பாட்டிற்கும் மக்கள் முன்னேற்றத்திற்கும் மக்கள் மொழிபோல் எந்த மொழியும் உதவமுடியாது.

இந்த முயற்சியை முன்னெடுத்துச் செல்லும் நம் முதல்வரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இச்சமத்துவ ஆட்சியில் இவை நடைபெறுகிறது.

தமிழில் அறிவியலை எழுதவேண்டும் என்று கூறுபவர்களுக்கு, கூறியவர்களுக்கு இதோ ஒரு பட்டியல்.

1867இல் 11 மருத்துவ நூல்கள் டாக்டர் பிஷ்கீரினினால் வெளிவந்துள்ளன. இதில் 2 மருத்துவ அகராதிகளும் அடக்கம்.

1984 தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக 13 மருத்துவ நூல்கள், 8 அகராதிகள் 14 பொறியியல் நூல்கள் வெளிவந்துள்ளன.

2008இல் பொறியியல் பட்டப்படிப்பு 12 தமிழ்நாட்டுக் கல்லூரியில் தமிழில் நடைபெறுகிறது.

2022 வேளாண் கல்லூரியில் தமிழ்வழியில் நடைபெறப்போகிறது.

2023 பட்டயப்படிப்பு பொறியியல் பட்டயப்படிப்பு தமிழில் அடுத்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப் போகிறார்கள்.

"நாளும் நம்மொழி பிந்துதடா
புவி நம்மைப் பிரிந்து முந்துதடா"

என இனி கவிஞர் குலோத்துங்கன் பாடத் தேவையில்லை.

"உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூல்கள். ஒருவர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில் வரப்போகிறது." அத்துடன், சென்னை தண்டையார்பேட்டையில் தமிழ்வழிக் கல்லூரிக்கான 14 ஏக்கர் நிலத்தை புற்றுநோய் மையத்தில் ஒதுக்கி, "தமிழ் வழி மருத்துவக் கல்லூரி" அமைக்க ஒன்றிய அரசிடம் தமிழ் நாடு அரசு கேட்க விருப்பதும் நம் காதுகளில் தேனாய்ப் பாய்கிறது.

இக்கட்டுரை சேலம் புத்தகத் திருவிழாவில் (27-11-22) "மருத்துவக் கல்வியும் மணித்தமிழும்" என்ற சொற்பொழிவின் சுருக்கம்.

கட்டுரையாளர், சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர்.
மருத்துவப் பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர்.

**புத்தகங்கள் அச்சிட**
**அற்புதத் தீர்வு**

குறைந்த செலவு
அதிகபட்ச தரம்


அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**


## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்
## தொ.பரமசிவன் அவர்களின் நூல்கள்




₹ 270/-





₹ 215/-




₹ 215/-




₹ 400/-




₹ 55/-




₹ 75/-

### நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் நாகர்கோவில் கிளையின் சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சிகள்



22.11.2022 அன்று, நாகர்கோவில் சூசைபுரத்தில், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மற்றும் ஏபிஜெஎம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, புனித அல்போன்சா கலை அறிவியல் கல்லூரி இணைந்து நடத்திய புத்தகக் கண்காட்சியை ஏபிஜெஎம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தாளாளர் அருட்பணி. ஆன்றணி ஜோஸ் அவர்கள் துவக்கிவைத்தார். இதில் ஏபிஜெஎம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியை அருட்சகோதரி.டெசி அல்போன்சா கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் இசையாஸ், பேராசிரியர்கள், ஆசிரியப் பெருமக்கள், எழுத்தாளர் குறும்பனை பெர்லின், எழுத்தாளர் கோட்டூர் மனோஜ், 'கிரீன் கன்னியாகுமரி ஃபவுண்டேஷன்' ஒருங்கிணைப்பாளர் சச்சின், மற்றும் நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



04.12.2022 அன்று, நாகர்கோவிலில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் நாகர்கோவில் கிளையின் சார்பாக நடத்திய புத்தகக் கண்காட்சியை நாகர்கோவில் மாநகராட்சியின் துணைமேயர் ம.மேரி பிரின்ஸி லதா வி.கி அவர்கள் துவக்கிவைத்தார். இதில் நாளைய விடியல் அறக்கட்டளை நிறுவனர் டிக்சன், *COME* அறக்கட்டளை இயக்குநர் கோட்டூர் மனோஜ், 'கிரீன் கன்னியாகுமரி ஃபவுண்டேஷன்' ஒருங்கிணைப்பாளர் சச்சின், பரிசுத்த திருக்குடும்ப இளைஞர் இயக்க நிர்வாகிகள் மற்றும் நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



கட்டுரை

# குமரிக்கு வருவதை நிறுத்திய யாசகர்கள்

அ.கா.பெருமாள்

தமிழகத்தின் பிற மாவட்டங்களை ஒப்பிடுகின்றபோது நாட்டார் வழக்காற்று மரபுகள் தாமாகச் சரிந்து பழமையை இழந்துவரும் பகுதிகளில் கன்னியாகுமரி மாவட்டம் முதலிடத்தில் நிற்கிறது. இதற்கு அடிப்படையான காரணங்கள் சிலவற்றை ஊகிக்கலாம்.

இந்த மாவட்டம் 1684 சதுர கிலோமீட்டர் பரப்பை உடையது. இங்கு மலைகளும் சமூகக் காடுகளும் அதிகம் மக்கள் வாழிடங்களின் நெருக்கமும் அதிகம். பெரும்பாலான கிராமங்கள் நகரத் தாக்கம் உடையவை. படித்தவர்களின் எண்ணிக்கை அதிகம் உடைய மாவட்டம். இந்துக்கள் அல்லாதோரின் எண்ணிக்கையும் இங்கு அதிகம்.

இந்த மாவட்டம் 1956ஆம் ஆண்டு வரை கேரளத்தின் ஒரு பகுதியாக இருந்தது. இங்கே மறுமலர்ச்சிக் கிருத்தவர்களின் தாக்கத்தால் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அடிமை ஒழிப்பு (1853), மேலாடைக் கலகம் (1859), கோவில்களை அரசு கையகப்படுத்தியது (1810), கோவில்களில் எல்லா ஜாதியினருக்கும் நுழையும் உரிமை (1936), கோவில் தேவதாசி முறை ஒழிப்பு (1930), எனப் பலவற்றைச் சொல்லிக்கொண்டு போகலாம்.

ஆங்கிலக் கல்விமுறையும் அலோபதி மருத்துவமும் தமிழ் வழி அறிவியல் நூல்கள் அச்சானதும் 19 ஆம் நூற்றாண்டு ஆரம்பத்திலேயே இந்த மாவட்டத்தில் நிகழ்ந்துவிட்டன. இவை போன்ற சமூக மாற்றங்கள் இந்த மாவட்டத்தின் நாட்டார் வழக்காற்றியல் நிகழ்வுகளைப் பாதித்திருக்கின்றன.

இந்த மாவட்டத்தில் அய்யா வைகுண்டர், ஸ்ரீ நாராயண குரு ஆகிய இரு ஞானிகளும் மக்களிடம் செய்த பிரச்சாரம், விழிப்புணர்வை உண்டாக்கியிருக்கிறது. நாராயண குரு, நாகர்கோவிலின் ஒரு பகுதியாகிய கோட்டாற்றில் வாழும் ஈழுவ சமுதாய மக்களின் வாழ்க்கை வட்ட சடங்குகளில் பெரும் மாற்றத்தைக் கொண்டுவந்திருக்கிறார்.

கோட்டாறு மக்களிடம் வழக்கில் இருந்த நாட்டார் தெய்வ வழிபாட்டு மரபை ஒழிப்பதில் நாராயண குரு தீவிரமாக இருந்திருக்கிறார். நாட்டார் தெய்வ உருவங்களைக் குருவே முன் நின்று உடைத்திருக்கிறார். இவை தொடர்பான சடங்குகளை நிகழ்த்த வேண்டாம் என்று சொல்லி இருக்கிறார் பேய் நம்பிக்கையை உடைத்திருக்கிறார். இதன் காரணமாக நாட்டார் தெய்வவழிபாடு தொடர்பான கலைகளும் வழக்காறுகளும் இச்சமூகத்தில் இல்லாமல் ஆகிவிட்டன.

அய்யா வைகுண்டர், நாட்டார் தெய்வ வழிபாட்டைத் தீவிரமாகக் கொண்டிருந்த நாடார் மக்களின் ஒரு பிரிவினரிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். இதன் காரணமாக அய்யாவழி (அய்யா வைகுண்டரைப் பின்பற்றியவர்கள்) மக்களிடம் நாட்டார் தெய்வ வழிபாடு மறைய வேண்டிய சூழ்நிலை உருவானது. இதனால் இவ்வழிபாடு தொடர்பான சடங்குகளும் கலைகளும் அழியத் தொடங்கின.

இப்படியாக இந்த மாவட்டத்தில் மறைந்துபோன வழக்காறுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**நாட்டார் கலைகள்**
**சுவரோவியம்**
**ஓலைச்சுவடிகளில் ஓவியம்**
**தாள்களில் ஓவியம்**
**துணிகளில் ஓவியம்**
**துணிகளில் வரையப்பட்ட ஆவணம்**
**வழக்காற்றில் புழங்கிய சொற்கள்**
**புழங்கு பொருட்களும் பண்பாடும்**
**மருத்துவமும் உணவுப்பழக்கமும்**
**வாய்மொழிப் பாடல்கள்**
**மரபு சார்ந்த தொழில்நுட்பங்கள்**
**நாட்டார் வழிபாடுகள் சடங்குகள்**
**யாசகராக வந்த கலைஞர்கள்**
**நாட்டார் விழுமியங்கள்**

ஆகியன.

இந்தக் காரணங்களில் இந்த மாவட்டத்திற்கு வந்த யாசகர்களான புலம்பெயர் மக்கள் இங்கே வராமல் இருந்ததற்கு உரிய சூழ்நிலை எழுபதுகளில்தான் உருவானது. இங்கே வந்த யாசகர் பற்றி பார்ப்போம்.

படக்காரன் என்பவரை நாஞ்சில் நாட்டினர் காவடிப் பண்டாரம் என்று அழைத்திருக்கிறார்கள். படக்காரன் என்ற பண்டாரம் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பண்டாரம் ஜாதியினரின் உட்பிரிவினர் ஆவர். பெரும்பாலும் நாடோடியாகவே வாழ்ந்தனர். இவர்களில் சிலர் முருகன் கோவில்களில் காவடி எடுக்கும் சடங்குகளில் பங்குகொண்டு சன்மானம் பெற்றிருக்கின்றனர்.

இந்தப் பண்டாரங்களில் பெரும்பாலோர் தென் மாவட்டங்களில் காவடி எடுத்துக்கொண்டு நாடோடிகளாய் சுற்றியலைந்து யாசகம் பெற்று வாழ்ந்திருக்கின்றனர். இவர்களில் பெண்கள் என்ன தொழில் செய்கிறார்கள் என்பது பற்றிய தகவல்களைச் சேகரிக்க முடியவில்லை.

படக்காரன் ஆகிய இந்த காவடிப்பண்டாரம் தோளில் பெரிய காவடி வைத்திருப்பார்; காவி வேட்டி மட்டும் உடுத்திருப்பார். படக்காரரின் காவடி பார்ப்பதற்கு பிரம்மாண்டமாய் எடை கூடியதாய் தோன்றினாலும் அதை எளிதாகத் தூக்க முடியும். படக்காரன் அதை லாகவமாக இடது தோளில் வைத்திருப்பார்.

காவடியின் உள்ளேயும் வெளியேயும், ஓலை அல்லது துணியில் வரையப்பட்ட ஓவியங்கள் இருக்கும். இந்த ஓவியங்கள் இயற்கையாகக் கிடைத்த பொருட்களாலும் மூலிகைச் சாயங்களாலும் வரையப்பட்டவை. ஒவ்வொரு படத்தின் கீழும் ஒரு தலைப்பு இருக்கும். எல்லா படங்களும் நரகத்தின் காட்சிகள்தாம். அதர்மம் செய்பவர் நரகத்தில் படும் அவல காட்சிகளே படத்தின் மையம்.

காவடியில் உள்ள படத்தின் காட்சிகள் கருட புராணத்தில் வரும் செய்திகளின் அடிப்படையில் வரையப்பட்டவை: அந்தப் படங்களின் தலைப்புகள்

தாமஸ்ர நரகம் (அடுத்தவர் மனைவியை அபகரிப்பது)
அந்தாமிஸ்ரம் (மனைவி கணவனை வஞ்சிப்பது)
ரௌரவம் (அடுத்தவரின் சொத்தை அபகரிப்பது)
மகா ரௌரம் (குருவை நிந்தித்தல்)
கும்பி பாகம் (சுயநலத்துடன் இருத்தல்)
காலசூத்திரம் (பெற்றோரைக் கவனிக்காமல் இருத்தல்)
அதிபத்திரம் (தெய்வத்தை நிந்தனை செய்தல்)

இப்படியான காட்சிகள் காவடி படத்திலிருக்கும்.

படக்காரன், ஊரின் முச்சந்தியிலும் சந்தையிலும் மக்கள் கூடுகின்ற இடங்களிலும் காவடியைச் சுமந்து கொண்டு நின்று பாடுவார். இவர் பாடுவதைக் கேட்க என்றே கூட்டம் கூடிவிடும். பெரும்பாலும் வயதானவர்கள் இவரது பாட்டைக் கேட்க வருவார்கள் பொறுமையாக நின்று கேட்பார்கள்.

காவடிக்காரர். சித்தர் பாடல்களையும் குறிப்பாக பாம்பாட்டி சித்தர், சிவவாக்கியார்

பாடல்களையும் ராகத்தோடு பாடுவார். சித்திர புத்திர நாயனார் அம்மானை நூலில் பின்னிணைப்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் அமராவதி செட்டியின் கதைப் பாடலிலிருந்து சில வரிகளைப் பாடுவார்.

கிங்கிலியர் அமராவதிச் செட்டிச்சியைச் செக்கிலில் இட்டு துன்புறுத்தும் காட்சியைத் திரும்பத் திரும்ப பாடுவார். இடையிடையே சில வாய்மொழி பாடல்களையும் பாடுவார். "காயமே இது பொய்யடா; காற்றடைத்த பையடா. மாயனார் குயவன் செய்த மண்ணு பாண்டம் ஓடடா." என்னும் பாடலை பலமுறை பாடுவார், இவர் பாடும் பாடல்கள் வாழ்க்கை நிலையாமை, நரகம் பற்றிப் பேசுவதாக இருக்கும்.

படக்காரர் காவடியுடன் தெருவில் பாடிச் செல்லும்போது யாரிடமும் யாசிக்க மாட்டார். ஒரு தெருவில் பாடி முடித்துவிட்டு அடுத்த தெருவின் முனையின் ஆரம்பத்தில் நின்று பாடுவார். சூரியன் உச்சிக்கு வருவதற்கு முன்பே தன் பாட்டை நிறுத்தி விடுவார்தான் வசிக்கும் இடத்திற்கு காவடியுடன் போய்விடுவார். பொழுது சாய்ந்ததும் யாசகத்துக்கு வருவார்.

காவடிக்காரர் யாசகத்துக்கா வீடுகளுக்கு வரும்போது காவடியைத் தூக்க மாட்டார். அப்போது அவரது கையில் சிறிய கோணிப்பை இருக்கும். யாசகம் பொருள்களை அதில் வாங்கிக்கொள்வார். அவர் யாசகமாகப் பெறுவது அரிசியும் தேங்காயும்தான். சில சமயம் நாட்டுக் காய்கறிகளும் பழங்களும் கிடைக்கும் அபூர்வமாக சிலர் காசு கொடுப்பார்கள்.

பண்டாரம் சுத்த சைவம்; அவரே சமைப்பார். சமைத்த உணவை யாசகமாக வாங்கவே மாட்டார். கொடுப்பதும் இல்லை. இவர் பிராமணர் வீதிகளுக்கு யாசிக்கச் செல்லமாட்டார். அன்று பகல் தான் பாடிய வீதிகளில் மட்டும்தான் யாசிப்பார்; பிற வீதிகளுக்கு அவர் செல்வதில்லை.

நாஞ்சில் நாட்டு கிராமங்களுக்கு ஒரு வருஷத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறைதான் காவடிக்காரர் வருவார். ஒருவர் செல்லும் கிராமத்துக்கு இன்னொரு காவடிக்காரர் போகமாட்டார். சில சமயம் நான்காம் முறையும் வரலாம். கன்னிப்பூ, கும்ப பூ என்னும் பயிர் விளைச்சல் காலங்களில் வரும் யாசகர்களைப் போன்றவர் அல்லர் இவர். காவடிக்காரர் வருவதற்கு பருவகாலம் கிடையாது.

ஒரு ஊரில் 7 முதல் 10 நாட்கள் வரை படக்காரர் தங்குவார். ஊரில் உள்ள பாழடைந்த மண்டபம் பொது மண்டபம், சத்திரம் என ஏதாவது ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்துக்கொள்வார். இந்த இடத்தில் சாதம் சமைப்பதற்குரிய வசதிகளை அவரே செய்துகொள்ளுவார். ஊர் எல்லையில் உள்ள நாட்டார் தெய்வக் கோவிலிலும் அவர் தங்குவதற்கு யாரும் மறுப்பு சொல்ல மாட்டார்கள்.

படக்காரர் இரவு சாப்பாட்டை முடித்துவிட்டு எட்டு அல்லது ஒன்பது மணிக்கு ஊர் கோவிலின் முன் வாசலுக்கு வருவார். அப்போது வயதானவர்கள் ஊர் கோவிலின் வாசலிலே கூடி இருப்பார்கள். படக்காரர் தன் பயண அனுபவத்தைக் கதையாகச் சொல்வார். அவர் நல்ல கதைசொல்லி. முக்கியமாகத் தான் சென்ற ஊரில் நடந்த கோவில் விழா, கொடைவிழா, இறப்பு பிறப்பு செய்திகள், இயற்கை அழிவு, பயிர் விளைச்சல், பயிரைத் தாக்கிய நோய் எனப் பல விஷயங்களைச் சொல்லுவார்.

படக்காரர் தன் பயண அனுபவத்தைச் சொல்லும்போது கருடபுராணக் கதையைக் கலந்தே சொல்லுவார். அந்த ஊர் பெரியவர்கள் தங்கள் ஊரில் நடந்த விஷயத்தைச் சொல்லுவார்கள். இப்படியாக இவர்களின் சம்பாஷணை இரவு 11 மணி வரை நீண்டு போகும். இந்தச் சமயங்களில் ஊர் மக்கள் இவரை யாசகரைப் போல் நடத்தமாட்டார்கள். அவரும் தன்னை அன்னியராக நினைத்து உரையாடமாட்டார்.

படக்காரர் தன் அடுத்த பயணத்தைப் பற்றி பேசுவார். அப்போது ஊர் மக்களில் சிலர் அவர் செல்ல இருக்கும் ஊரில் உள்ள தங்கள் உறவினர்களைக் கேட்டதாகச் சொல்லுங்கள் என்பார்கள். தங்கள் ஊரில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் சொல்லுமாறு வேண்டிக்கொள்வார்கள்.

படக்காரரின் வரவு நாஞ்சில் நாட்டில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நின்றுவிட்டது. முக்கியமாக படக்காரரை வரவேற்று ஆதரவு கொடுத்தவர்கள் மறைந்த பின்னர் அவர்களின் வரவு நின்றுவிட்டது. கே.என் சிவராஜ பிள்ளை என்னும் தமிழறிஞர் தன் சமகாலத்தில் கண்ட பட'க்காரனை.

**பாதகம் செய்வார் பின் படும் பாட்டின் பாவனையை**
**சாதகமாய் ஓர் படத்தில் தாதித்து –காதகரை**
**செக்கில் இட்டு ஆட்டி சுடர் செங்கழுகில் மாட்டி தீ**
**வக்கிலிட வைப்பான் மதித்து**

என்று கூறுகிறார் (நாஞ்சில் வெண்பா 1935).

இராப்பாடி என்பவர், நாஞ்சில் நாட்டின் கன்னிப்பூ, கும்ப பூ அறுவடை காலங்களில் கிராமங்களுக்கு வருவார். இரவு 12 - முதல் 3 மணிக்குள் வரும் யாசகர் இவர். ராப்பாடியை யாசகர் என்று சொல்வது சரியல்ல, ஊரில் உள்ளவர்களையும்

உழவுத் தொழிலையும் வாழ்த்தி வெகுமதி பெறுகின்ற பாடகர்கள் அல்லது பாணர்கள் என்று இவரைச் சொல்லலாம். உழவர்களுக்கும் இவர்களுக்கும் உள்ள உறவே இதுதான்.

இராப்பாடி கருப்பு நிற அங்கி அணிந்திருப்பார். தலையில் கோமாளியின் கருப்புத் தொப்பி இருக்கும் அதன் உச்சி வளைந்து இருக்கும். கையில் சிற்றுடுக்கு வைத்திருப்பார். அதை அடித்துக்கொண்டு உச்ச ஸ்தாயியில் பாடுவார். பாட்டின் மையம் நாஞ்சில்நாட்டு நெல் வகைகள் பற்றியதாக இருக்கும்.

நாஞ்சில் நாட்டு நெல் வகைகளின் பட்டியலை ஒரே மூச்சில் பாடுவார். நெல் வகைகளின் பெருமை, அடுத்த பூவில் பெய்யப் போகும் மழையின் செழிப்பு, நீராதாரம் போன்றவற்றையும் பாடுவார்.

ராப்பாடிக்குத் துணையாக ஒருவர் வருவார், அவர் கையில் அரிக்கன் லாம்பு விளக்கும் (மண்ணெண்ணெய் விளக்கு) கோணிப்பையும் இருக்கும். ராப்பாடி ஒரு சந்தில் நின்று பாடி முடித்துவிட்டு அடுத்த வீட்டுக்குப் போகும்போது, துணையாக வந்தவர், 'ராப்பாடிக்குப் படி போடுங்கோ ராப்பாடிக்குப் படி போடுங்கோ', என்று கேட்டுக்கொண்டே வருவார்.

ராப்பாடியின் பாட்டு தூரத்தில் கேட்க ஆரம்பித்ததும் வீட்டில் இருக்கும் வயதில் மூத்தபெண் அவருக்கு படி கொடுக்க ஆயத்தமாகி விடுவார். முறத்தில் நெல்லும் கரித்துண்டும் வைத்து உறங்கிக்கொண்டிருக்கும் குழந்தையின் தலையைத் திருஷ்டி கழிய சுற்றுவார். பின், முறத்தைக் கணவன் அல்லது மூத்தவரின் கையிலேயே கொடுப்பார். அவர் வீட்டு வெளித் திண்ணையில் முறத்தை வைத்து விட்டு வாசல் கதவை அடைத்துவிடுவார்.

இந்த நேரத்தில் ராப்பாடிக்குத் துணையாக வருபவர் முறத்தில் உள்ள நெல்லை கோணிப்பையில் கொட்டுவார். ராப்பாடியைப் பெண்கள் பார்க்கக் கூடாது என்பது நம்பிக்கை. இதற்கு கல்வெட்டிலும் கூட ஒரு சான்று உண்டு. சில சமயம் வயதானவர்கள் ராப்பாடியுடன் உரையாடவும் செய்வர். அது பெரும்பாலும் உழவுத்தொழில் தொடர்பான பேச்சாக இருக்கும். நான் 80-களில் சந்தித்த ராப்பாடி பாடிய பாடல்கள் சிலவற்றைப் பதிவுசெய்தேன்.

**முத்துமுத்துச் சம்பா | குடு மல்லிகை சம்பா |**
**மல்லிகை சம்பா மணமுள்ள சம்பா**
**சிறு நெல்லி சம்பா சீரகச் சம்பா**
**கோணச் சம்பா இரணியல் சம்பா**

என்று அடுக்கிக்கொண்டே போனார் அவர். முப்பத்திமூன்று சம்பா நெல் வகைகளைப் பட்டியலிட்டார். அதோடு குறுவா வகையில் 11, முண்டான் வகை 6, பிற 41 என 91 நெல் வகைகளைப் பாடினார். நானே இதைப் பட்டியலிட்டேன்.

இராப்பாடி, நெற்பயிரைப் பாதிக்கும் பூச்சி வகைகள், வெட்டுக்கிளி வகைகள் ஆகியவற்றையும் பட்டியலிடுவார். செம்பனோய், அன்னத்துப்பூச்சி நோய், குருத்து நோய் என பயிர்களை அழிக்கும் நோய்களைப் பட்டியல் இடுவார். ஜோதிடரைப் போல இந்த நோய் வர வாய்ப்புண்டு என்றும் கூறுவார். அதோடு, மழை பெய்யும் வாய்ப்பு எப்போது வரும் என்பது பற்றியும் பாடுவார். இராப்பாடி பற்றி கே என் சிவராஜ பிள்ளை.

**ஓடிக் கழுது ஒளிக்குமே இருள் தன்னில் இராப்**
**பாடி வந்து செல்ல பல குறிகள்... நாடியுளம்**
**தேங்குவார் ஆங்கனாத் தேனார் எழுந்து பின்**
**வாங்குவார் சொல்லி இசையால் வைத்து**

என்று கூறுகிறார்.

சித்தூசி அல்லது சித்தோசி என்று அழைக்கப்பட்ட யாசகர், எண்பதுகளில்கூட நாஞ் சில் மண்ணுக்கு வந்திருக்கிறார். இவரும் வயல் அறுவடைக் காலங்களில் வரும் யாசகர் சுமார் நாலு கிலோ எடையுள்ள வெங்கல மணியைக் கையில் தூக்கிக்கொண்டே யாசகத்துக்கு வரும் இவர், நாஞ் சில் நாட்டில் மட்டும் சித்தோசி எனப்படுகிறார்.

தமிழகத்தில் இந்த யாசகரைக் கண்ட சங்கம் ஆண்டி, நாழி மணிக்காரர், பண்டாரம், மணியாட்டிக்காரர் என்றெல்லாம் அழைக்கின்றனர். கே.என்.சிவராஜ் பிள்ளை தன் நாஞ்சில் வெண்பா என்ற நூலில் இவரை

**நீண்ட உடை தரித்து நெற்றி பிறை சூடி**
**பூண்ட ஒரு சங்கம் பொம்பாமென யாண்டுமெழு**
**பித்தோசை தந்த பெருமணியால் நெல் பெறுவீர்**
**சித்தூசியால் திறன்**

என்று விவரிக்கிறார்.

சித்தோசி, நீண்ட வெள்ளை அங்கியை அணிந்து இருப்பார். இது மடிப்பு வைத்து வைக்கப்பட்டது. தலையில் காவி அல்லது வெள்ளை நிற தலைப்பாகை கட்டியிருப்பார். அதில் வெங்கலத்தாலான சூரியன், சந்திரன் உருவம் பொருத்தப்பட்டிருக்கும். அதன்மேல் மயிலிறகு, கையில் நான்கு கிலோ எடையுள்ள வெண்கலமணி, இன்னொரு கையில் நீண்ட கம்பு, தோளில் ஜோல்னா பை, எண்பதுகளில் நாஞ்சில் நாட்டுக்கு வந்த சித்தூசியின் கோலம் இது.

இவர், ஒரு வீட்டின் முன் வாசலில் நின்று பாடுவார். அரகரா அரகரா என்று சொல்லிவிட்டு மணியை அடிப்பார். பின்பு முருகன் அல்லது

சிவனைப் பற்றிய பாடலை பாடுவார். மறுபடியும் மணியை அடிப்பார். பின் மணியை வாய்ப்பகுதி மேலிருக்கும்படி நிமிர்த்திக் காட்டுவார். வீட்டு எஜமானி அந்த மணி வாய்நிறைய நெல்லைப் போடுவார். அவர் அந்த நெல்லைத் தன் தோள் பையில் தட்டிவிட்டு பாட ஆரம்பிப்பார்.

**மணி நிறைய போடம்மா உன் குடி வரை வாழ்த்த வேணும்**
**பட்டி பெருக வேண்டும் பால்பானை**
**பெருகவேண்டும்**
**வாழ்த்துவது சிவனடியான் வரம் தருவார்**
**சொக்கநாதர்**

என்று வாழ்த்துவார்.

பின்னர் மணியை ஒருமுறை அடித்துவிட்டு தன் கையிலுள்ள கம்பால் மணியைச் சுற்றுவார். அப்போது சுருதிப் பெட்டியை இசைத்தது மாதிரி ரீங்காரம் கேட்கும். இதைக் கேட்க சிறுவர்கள் கூடுவார்கள். சித்தேசி அந்த வீட்டிற்கு வந்ததன் அடையாளமாகக் காவி குச்சியால் வீட்டு முன்பக்க சுவரில் தன் கையொப்பத்தை இடுவார். பின் அடுத்த வீட்டுக்குச் சென்றுவிடுவார்.

சித்தோசியுடன் பயிர் அறுவடை காலத்தில் வருபவர் சிலர் தங்கள் பாட்டில் நெல் வகைகளைக் கூறுவர். பயிர் தழைக்க வாழ்த்துவர். இவர்களின் தாய்மொழி தெலுங்கு. ஆனால் தமிழகத்தில் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இவர்களைப் பதறு பாஷை பேசுபவர் என்று கூறுகின்றனர். தற்சமயம் இவர்கள் தங்களைத் தமிழர்களாகவே சொல்லிக்கொள்ளுகின்றனர். தெலுங்கு பேசுகின்றவர்கள் என்னும் அடையாளத்தை வெளிப்படுத்துவதில்லை.

இவர்களுக்கும் நெல்லுக்கும் உள்ள உறவு பற்றிய கதைகள் நிறைய உண்டு. ஒரு சமயம் சிவபெருமானைச் சனி பகவான் பிடித்துக்கொண்டான். அதனால் அவர் ஏழரை ஆண்டுகள் மணி அடித்து யாசகம் எடுத்தாராம் சனி விலகியதும் தன் கையில் இருந்த மணியை சித்தோசிகளுக்குக் கொடுத்துவிட்டாராம். அந்த வம்சாவளியினர் இவர்கள் என்ற ஒரு கதையுண்டு.

இந்த ஜாதியினரில் பெருமளவினர் திண்டுக்கல் பகுதியில் வாழ்கின்றனர். இப்போது இவர்களில் பலர் யாசகிக்கச் செல்வதில்லை பல்வேறு தொழில்களைச் செய்கின்றனர்.

கல்லுள்ளி மொங்கன் என்பவனும் நாஞ்சில் நாட்டுக்கு வந்த யாசகரில் ஒருவர் ஆவார். இவர் அறுவடைக் காலத்தில் வருவதில்லை. இவர்



வருவதற்கு என்று கால வரையறையும் இல்லை. இவர் நாஞ்சில் நாட்டில் கல்லுளிமாங்கன், கல்லுளிமங்கன் என பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறார்.

இந்த யாசகர், தென்மாவட்டங்களில் சாட்டையடிகாரர், சாட்டையடி நாயக்கர் என்றும் அழைக்கப்படுகிறார். தமிழகத்தின் வட மாவட்டங்கள் சிலவற்றில் இவர்கள் உறுமிக்காரர் எனப்படுகின்றனர், தெலுங்கு மொழியில் உறுமுலுவர் எனப்படுகிறார்.

நாஞ்சில் நாட்டில் மட்டும் சாட்டையடி நாயக்கரைக் கல்லுளிமங்கன் என ஏன் அழைத்தார்கள் என்று தெரியவில்லை. குற்றத்தை ஒப்புக்கொள்ளாமல் தொடர்ந்து மௌனம் சாதிப்பவரை கொண்டான் கோட்டு மறவன் மாதிரி, குறவன் மாதிரி, கழுக்காரன் மாதிரி, கல்லுளிமாங்கன் மாதிரி என்றெல்லாம் கூறும் மரபு நாஞ்சில் நாட்டில் இருந்தது.

தமிழ் லெக்சிகன், கல்லுள்ள மாங்கன் என்பதற்கு அருவருப்பான செய்கையால் பிடிவாதம் காட்டும் பிச்சைக்காரன் என்று பொருள்கூறுகிறது. கல்லுளிமங்கன் போன வழி கதவுகள் எல்லாம் தவிடுபொடி என்பது ஒரு வழக்காறு. இதற்கு கல்லுளி பித்தன் என்ற சொல்லும் உண்டு கல்லுளிச் சித்தன் போனவழி கதவுகள் எல்லாம் தவிடுபொடி என்ற வழக்காறும் இருந்தது.

கல்லுள்ளிச் சித்தனும் கல்லுள்ள மாங்கனும் ஒருவரா? மனம் போன போக்கிலே போகும் இந்த நாடோடி யார்? சாட்டையடிகாரரை நாஞ்சில் நாட்டில் இப்படி ஏன் அழைத்தார்கள்? நாஞ்சில் நாட்டில் மட்டும் இத்தகைய வழக்குகள் இருப்பதன் காரணம் என்ன? எல்லாம் புரியாத புதிர்தான்.

குழந்தைகளைப் பயமுறுத்துவதற்குக் கல்லுள்ளிமாங்கன் வருகிறான் என்று சொல்லும்

வழக்கம் எண்பதுகளில்கூட இருந்தது. இதை கே.என்.சிவராஜ பிள்ளை தன் நூலில் பதிவு செய்திருக்கிறார் பாடல் கீழ்வருமாறு;

**கல்லுள்ளி மொங்கனேர காசுக்கு இரண்டன்ன**
**செல்லுழிச் செல்லுமிச் செப்புவான் மெள்ள**
**உரைக்க அரியான் உருபு வான் பிள்ளை**
**வரைக்குமே கல்லுளி முன் வேர்த்து**

இராப்பாடி, சித்தோசி யாசகர்கள் போன்றவர் அல்லர் சாட்டைக்காரர். இவர்கள் தங்களை வருத்துக்கொண்டு அடுத்தவரிடம் அனுதாபம் பெற்று யாசகம் பெறுவர். சாட்டையடிப்பவர் ஆண்களே. இளைஞர், சிறுவர், முதியவர் யார் வேண்டுமானாலும் சாட்டையடிக்கலாம். இதற்குப் பின்னணியாக உறுமி என்ற இசைக்கருவி இசைக்கப்படும். இதற்கு இவர்கள் வீராணம் என்று சொல்லுகின்றனர். சாட்டையடி காரனின் கூட்டத்தில் உள்ள பெண்களே உறுமியை அடிப்பர்.

சாட்டையடிகாரன் காலில் சலங்கை கட்டி இருப்பார். கற்றாழை நாரால் பின்னப்பட்ட சாட்டையைக் கையில் வைத்திருப்பார். அதைச் சுழற்சி உடம்பில் அடிப்பது போன்ற பாவனையை உண்டாக்குவார் சுழற்றி அடிக்கும்போது கேட்கும் சத்தம் பயமுறுத்தும். ஆனால் உடம்பில் சாட்டை படாது. அப்படி அடிக்கக்கூடிய பயிற்சி அவர்களுக்கு உண்டு.

இவர்களின், உடம்பில் ரத்தக்கோடுகள் இருக்கும் இது இயற்கையாக ஏற்கனவே கீறிய கோடுகளாக இருக்கலாம். சாட்டையடிகாரனின் உடம்பில் தெரியும் ரத்தக்கோடுகள்தாம் அவனுக்கு அனுதாபத்தைக் கொடுக்கும். அவன் யாசிப்பதற்கு இதுவே காரணம். இவர்கள் நாஞ்சில் நாட்டுக்கு ஒரு குழுவாக வருவர். தனித்தனியே பிரிந்து யாசிக்கச் செல்வர்.

சங்கரன்காளை எனப்படும் மாட்டுடன் வரும் யாசகர் நாஞ்சில் நாட்டில் 90-களில் கூட வந்திருக்கிறார். எதற்கெடுத்தாலும் தலையை ஆட்டும் குழந்தையை என்ன சங்கரன் காளை மாதிரி தலையை ஆட்டுகிறாய் என்று கூறும் வழக்காறு இப்போதும் நடைமுறையில் உள்ளது. நாஞ்சில் நாட்டில் சங்கரன் காளை என அழைக்கப்படும் யாசகர், தமிழகத்தில் பெருமாள் மாட்டுக்காரர், பூம் பூம் மாட்டுக்காரர், பூம் மாட்டுக்காரர், அழகர் மாட்டுக்காரர், புரூம் புரூம் மாட்டுக்காரர் எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகிறார்.

சங்கரன் காளையை ஓட்டி வருபவர், காளை அல்லது கறவை மறந்த பசுவை அலங்காரம் செய்து ஓட்டிவருவார். காளையின் முதுகில் வண்ணத் துணிகள் அணிசெய்யும்; வெங்கல மணி தொங்கும்; கொம்பில் வண்ணக் காகிதங்கள் சுற்றப்பட்டிருக்கும்; மாட்டை ஓட்டி வருபவர் 'உருமி' என்ற இசைக்கருவியை அடித்துக்கொண்டு வருவார். அதை சிறு குச்சியால் மெல்லத் தடவுவார்; அது புரூம் என ஒலி எழுப்பும்.

சங்கரன் காளைக்காரர் வீட்டு வாசலில் நின்று உருமியைத் தேய்ப்பார். வீட்டு எஜமானி வந்ததும் காளையைப் பார்த்து அம்மா அரிசி போடுவாங்களா துணி போடுவாங்களா என்று கேட்பார். காளை தலையை ஆட்டும் இவங்களுக்கு நல்லது நடக்குமா என்று கேட்பார், காளை மீண்டும் தலையை ஆட்டும். உடனே அரிசியோ பணமோ யாசகமாகப் பெறுவார் பின் அடுத்த வீட்டுக்குச் செல்லுவார்.

சங்கரன் காளைக்காரர்கள் தங்களை பூவிடையர் அதாவது பூக்கட்டும் இடையர் என்று கூறிக் கொள்கின்றனர். தாய்மொழி தெலுங்கு. இப்போது இவர்கள் தஞ்சை மாவட்டத்திலும் வட ஆர்க்காடு பகுதியிலும் வாழ்கின்றனர். நாடோடி வாழ்க்கை இவர்களிடம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது.

சங்கூத்து பண்டாரம் என்னும் யாசகனும் நாஞ்சில் நாட்டில் எழுபதுகளின் ஆரம்பத்தில் வந்தனர். இவர்கள் ராப்பாடியைப் போல் பயிர் அறுவடை காலத்தில் வருபவர்கள் அல்லர். பெரும்பாலும் மார்கழி மாதம் முன் இரவு நேரத்தில் சங்கை ஊதிக் கொண்டும் சேமக்கலத்தை அடித்துக்கொண்டும் முச்சந்தியில் நின்று பாடுவார்கள். திருப்பாவை, திருவெம்பாவை, நடராஜர் பத்து, ஸ்ரீ ராமர் தோத்திரம் போன்ற பாடல்களைப் பாடுவர். அடுத்த நாள் காலையில் அரிசி, காய்கறி என்பவற்றை யாசகமாகப் பெறுவர்.

ஊருக்கு ஒதுக்குப்புறத்தில்தான் இவர்கள் தங்குவார்கள். இவர்களின் தாய்மொழி தமிழ். படக்காரன் என்ற யாசகரிலிருந்து (இவரும் பண்டாரம்) சங்கூத்துப் பண்டாரம் வேறுபட்டவர். இவர் மக்களிடம் நெருக்கமாகி பழகாமல் ஒதுங்கியே இருப்பார் இவர்களைச் சங்கூத்துப் பண்டாரம் என்று சொன்னாலும் இவர்கள் தங்களை வள்ளுவப் பண்டாரம் என்று அழைத்துக்கொள்கின்றனர். இவர்களில் சிலர் சோதிடக் கலைஞர்.

நாஞ்சில் நாட்டில் சங்கூத்துப் பண்டாரங்கள் பாம்பு பஞ்சாங்கம் என்ற கும்பகோணம் பஞ்சாங்கம், இரத்தின நாயகர் சன்ஸ் வெளியிட்ட நடராஜப் பத்து போன்ற பிரசுரங்களை விலைக்கு விற்றிருக்கின்றனர். ஐம்பதுகளில்கூட இது நடந்திருக்கிறது.

பண்டாரம் பற்றிய ஒரு வாய்மொழிக் கதை நாஞ்சில் நாட்டில் உண்டு. சங்கூத்துமண்காரம் ஒருவன் ஊர்ப்புற எல்லையில் உள்ள ஒரு மண்டபத்தில் படுத்துக்கிடந்தார். நள்ளிரவு நேரம். அன்று

பண்டாரத்திற்கு அதிக வருமானம் இல்லை. அந்த நேரத்தில் இரண்டு திருடர்கள் வந்தார்கள். அவர்கள் அந்த ஊர் எல்லையில் உள்ள ஆட்டுக்கிடையில் ஆட்டைத் திருட வந்தனர்.

இரண்டு பேருக்கு மூன்று பேராக இருந்தால் திருட வசதியாக இருக்கும் என்று நினைத்த திருடர்கள், பண்டாரத்தைக் கூட்டுக்கு அழைத்தனர். பண்டாரம் சரி என்றார் ஆட்டைத் தெரிவு செய்தனர். ஒருவன் ஆட்டின் கால்களைப் பிடித்துக்கொண்டான். ஒருவன் தலையைப் பிடித்தான். ஒரு திருடன் பண்டாரத்திடம் சங்கைப் பிடி (ஆட்டின் கழுத்தை) என்றான். பண்டாரம் சங்கை எடுத்து ஊதிவிட்டான். கிடையில் படுத்துக்கிடந்த இடையர்கள் விழித்துக்கொண்டார்கள். அப்புறம் என்ன நடந்திருக்கும், தர்ம அடிதான்.

பண்டாரங்கள் சாவுச் சடங்குகளிலும் சங்கூதச் சென்றனர். இதற்கு வருமானம் அதிகம் அதனால் ஒரு ஊரில் முகாமிட்ட பண்டாரத்தை அடுத்த ஊர்க்காரன் அழைப்பது என்பது நடைமுறையில் இருந்திருக்கிறது. இதனால் சங்கூதும் பண்டாரங்கள் மார்கழி மாதத்தைத் தொடர்ந்து இங்கே முகாம் அடித்திருக்கின்றனர்.

தேவாங்கு என்ற விலங்குடன் வந்த யாசகரின் வரவு அறுபதுகளில் நின்றுவிட்டது. தேவாங்கு இரவில் இரை தேடும் பாலூட்டி விலங்கு. 18 செ.மீ உயரம் வரை வளரும். 250 முதல் 350 கிராம் எடை உடையது. சிறு பூச்சி பல்லி இலை தழைகளை உண்ணுவது.

நாஞ்சில் நாட்டில் உடல் மெலிந்த நோஞ்சான் குழந்தையைத் தேவாங்கு போல் இருக்கிறாயே என்று சொல்லுவது வழக்கம் இது பட்டப்பெயராகவும் வழங்குகிறது. குழந்தையின் கழுத்தில் தேவாங்கைக் கொண்டு மஞ்சள் அல்லது கருப்புக் கயிற்றைக் கட்ட வைத்தால் அந்தக் குழந்தை புஷ்டியாகிவிடும் என்ற நம்பிக்கை உண்டு,

தேவாங்கை சிறிய பெட்டியில் வைத்திருப்பார் தேவாங்குக்காரர். ஒரு வகையில் கிளி ஜோதிட னைப் போன்றவர். இவர் தேவாங்குக்காரர் வீதி வழி வரும்போது தேவாங்கு கயிறு கட்டணுமா என சத்தமிட்டுக்கொண்டே வருவார். தாய்மார்கள் நோஞ் சான் குழந்தைகளை அவரிடம் எடுத்துக்கொண்டு வருவார்கள்.

அவர் தேவாங்கைக் கூண்டிலிருந்து வெளியே எடுத்து மடியில் வைத்துக்கொள்வார். அதன் கையில் கருப்பு அல்லது மஞ்சள் கயிற்றைக் கொடுப்பார். பழக்கப்பட்ட அந்த விலங்கு, கயிற்றை வாங்கி தாயின் மடியில் இருக்கும் குழந்தையின் கழுத்தில் கட்டும் இதற்கு அரிசியோ பணமோ தானமாகப் பெறுவர். இவரும் சமைத்த உணவை வாங்குவதில்லை.

பச்சை குத்தும் குறத்தி நாஞ்சில் நாட்டில் வந்ததைப் பற்றி மிகக்குறைவான சான்றுகளே கிடைத்தன. இவளது வருகை நாற்பதுகளில் நின்றுவிட்டது. உடலில் பச்சை குத்துவது என்ற வழக்கம் உலகம் முழுக்க இருந்திருக்கிறது. பழைய எகிப்து நாட்டில் 4000 ஆண்டுகளுக்கு முன்பே பச்சை குத்திய நிகழ்ச்சி பற்றி குறிப்பு உண்டு. தமிழகத்தில் பிராமணர் பச்சை குத்துவது இல்லை.

நாஞ்சில் நாட்டில் பச்சை குத்தியது பற்றிய செய்திகளைத் தோல்பாவைக் கூத்துக் கலைஞர் சுப்பையாராவ் தான் எனக்கு முதலில் சொன்னார். அதுவும் அவரது தனிப்பட்ட வாழ்க்கையுடன் நடந்த கதை சுப்பையாராவின் பல மனைவிகளுள் உப்பிலியக்குறத்தியும் ஒருத்தி என்று பலமுறை என்னிடம் சுப்பையா ராவின் தம்பி பரமசிவ ராவ் சொல்லியிருக்கிறார்.

தோல்பாவைக் கூத்துக் கலைஞர்கள் ஒரு ஊருக்குச் செல்லும்போது பச்சை குத்தும் உப்பிலிய குறத்தியும் செல்வாளாம். ஆனால் அது பொதுவான நிகழ்ச்சி அல்ல தோல்பாவைக்கூத்து நடத்திய சில குழுக்களிடையே உப்பிலிய குறத்தியர் தொடர்பு கொண்டிருந்தார்களாம்.

உப்பிலியக் குறவரின் மொழி நரிக்குறவர்கள் பேசும் மொழி போன்றது. அதில் மராட்டியக் கலப்பு உண்டு. தோல்பாவைக் கூத்து நடத்தும் கணிகர் ஜாதியினரின் தாய்மொழி மராட்டி. இதனால் கணிகள் ஜாதியினரின் உட்பிரிவினர் ஆன மண்டிகர் தோல்பாவைக் கூத்து கலை நிகழ்த்த முகாம் அடித்த இடத்தின் அருகே உப்பிலியக் குறவரும் தங்குவார். இவர்கள் எல்லோருமே சிறு விலங்குகளை வேட்டையாடுவது வழக்கம். மொழி, பண்பாடு இவற்றில் இவரிடம் சில ஒற்றுமையும் உண்டு.

உப்பிலிய குறத்தி, தான் தங்கிய ஊரில் பச்சை குத்த வேண்டியவர்கள் யார் என்பதை அடையாளம் கண்டு கொள்வாள். உத்தேசமாக எத்தனை பேருக்கு பச்சை குத்த வேண்டும் என்று கணக்கிட்டுக்கொள்வாள் பின்னர், மூலப்பொருள்களைத் தயாரிக்க ஆரம்பிப்பர்.

பச்சை குத்துவதற்கு உரிய மூலப்பொருள்கள் | எல்லா ஊர்களிலும் கிடைக்கும். மஞ்சள் பொடியுடன் அகத்திக்கீரையை நன்றாக மசிய அரைத்து அழுக்கில்லாத வெள்ளைத் துணியிலே தேய்த்துக் கொள்வார்கள். இதை வெயிலில் காய வைப்பார்கள். காய்ந்த பின்னர் விளக்குத்திரி போல் சுருட்டி வைத்துக் கொள்வார்கள். ஆமணக்கு எண்ணெய் ஊற்றிய விளக்கில் அந்தத் திரியைப் பெரிதாக எரியும்படி செய்வார்கள்.

எரியும் திரியின் மேலே புதிய மண்சட்டி மூடியைக் காட்டுவர். சட்டி மூடியின் அடியில் விளக்குப் புகை முழுதும் படும்படி காட்டிக்கொண்டே இருப்பார்கள். திரி முழுதும் எரிந்து முடிந்ததும் தரும் சட்டியின் உள்பகுதியில் படிந்திருக்கும் கரியை பனையோலையால் சுரண்டி எடுத்து சேகரித்துக் கொள்வார். இந்தப் பொடியுடன் தாய்ப்பாலைக் குழைத்து ஒரு குழம்பு தயாரிப்பர் இதை இரண்டு அல்லது மூன்று ஊசிகளால் தோய்த்து உடம்பின் மேல் பாகத்தில் குத்துவார்கள். இதுவே பச்சை குத்தலின் முறை.

மஞ்சள் பொடியுடன் கரிசலாங்கண்ணி கீரை, கரியாத்தாழை, சித்திரப்பாலாடை, அறுகம்புல் என்பவற்றில் ஒன்றைச் சேர்த்து அரைத்து, துணியில் தடவி எரிப்பதும் உண்டு. இந்த மூலிகைகள் எல்லாமே நாஞ்சில் நாட்டில் கிடைப்பன. இதனால் பச்சை குத்து பவளுக்கு இவை எளிதாகக் கிடைத்துவிடும்.

உப்பிலியக் குறத்தி பச்சை குத்தும்போது பாடவும் செய்வாள். பெரும்பாலும் ஒப்பாரிப் பாடலின் சாயலில் சோகமாய் இருக்கும். தோல்பாவைக் கூத்துக்காரர்கள் ஊரில் முகாம் போடுவதை நிறுத்த ஆரம்பித்ததும் பச்சை குத்தும் வழக்கமும் நின்றுபோயிற்று.

கொடும்பாவி கொளுத்தல் என்ற செயல் நாஞ்சில் நாட்டில் மிக அபூர்வமாகத்தான் நடந்திருக்கிறது. 1959 - 1960-களில் ஒரு முறை, பின் 1976 இல் ஒரு முறை. இந்த நூற்றாண்டில் கொடும்பாவி கொளுத்தல் குறித்து வேறு நிகழ்ச்சி நடந்ததாகச் செய்தி இல்லை. தமிழகத்தின் அதிக மழை பெய்யும் இடங்களில் கன்னியாகுமரி மாவட்டம் இரண்டாவது வருவது. ஆகவே, கொடும்பாவி கொளுத்துதல் நிகழ்ச்சி நடக்க வாய்ப்பில்லை.

உழவுத் தொழில் சார்ந்த நம்பிக்கைகளில் ஒன்று கொடும்பாவி கொளுத்தல். உழவர்கள் இதில் அதிக கவனம் செலுத்தினர். மழை வேண்டி செய்யப்பட்ட கொடும்பாவி சடங்கு தனிப்பட்ட ஒருவர் செய்வதல்ல.

கொடும்பாவி கொளுத்த வேண்டும் என்று தீர்மானமானதும் கொடும்பாவி பொம்மையை வைத்து இழுப்பதற்குரிய வண்டியை முதலில் தயாரிப்பர். பின்னர் கொடும்பாவி பொம்மையைச் செய்வர். வைக்கோல், பழைய துணிகள், மூங்கில் கம்பு போன்றவற்றால் கொடும்பாவி பொம்மை செய்யப்படும். இது 120 முதல் 150 செ.மீ. நீளம் உடையதாய் இருக்கும். இதை வைத்து இழுக்கும்படியான அளவு வண்டியும் இருக்கும்.

இந்த வண்டியில் கொடும்பாவிப் பொம்மையை மல்லாக்க வைப்பர். ஊரில் சிலரும் தொழிலாளிகளும் இந்தச் சடங்கில் கலந்துகொள்வர். இந்த வண்டியை இழுக்கும்போது துப்புரவுத் தொழிலாளிகள் சிலர் பறையடித்து ஒப்பாரி வைப்பர். ஊர் சிறுவர்கள் வண்டியின் பின்னே செல்லுவர். ஒப்பாரிப் பாடகனின் குரல் மிக சப்தமாகச், சத்தமாகவும் ஒலிக்கும்.

ஊர்வலம் நில உடைமையாளர்களின் வீடுகளில் நிற்கும். அப்போது கொடும்பாவிக்குக் கொள்ளி வைப்பதற்காகக் கொண்டுவரும் மண்பானையில் ஊர் மக்கள் பணம் காசு போடுவார்கள். சில சமயம் துப்புரவுத் தொழிலாளிகளுக்குத் துணியும் கொடுப்பார்கள். வண்டி சுடுகாட்டை அடையும்.

சுடுகாட்டில் ஏற்கனவே தோண்டப்பட்டிருக்கும் குழியில் கொடும்பாவி பொம்மையை வைப்பர். அதன் மேல் விறகை அடுக்குவர். ஒருவர் கொள்ளி வைப்பார். துப்பரவுத் தொழிலாளி பெண்கள் மாரடிப்பர் கொடும்பாவியின் மேல் எச்சிலும் உமிழ்வர்; வாய்க்கரிசி போடுவர்; கொடும்பாவியை திட்டிக்கொண்டே நெருப்பு வைப்பர்; பின்னர் எல்லோரும் விவசாயக் குளத்தில் குளித்துவிட்டு ஊருக்குச் செல்வர். ஊர் மக்கள் கொடுத்த பணத்தைத் துப்புரவுத் தொழிலாளர்கள் பங்கு வைத்துக்கொள்வார்.

நாஞ்சில் நாட்டில் யாசகர்களின் வரவு நின்று போனதற்கு பல காரணங்களைச் சொல்ல முடியும். கொடுப்பவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. யாசகர்களும் தங்கள் நாடோடி வாழ்க்கையை முடித்துக் கொண்டனர். இவை முக்கியமான காரணங்கள்.

இந்த நாடோடி யாசகர்களுக்குப் பொதுவான சில குணங்கள் இருந்தன. நிச்சயமாக இவர்கள் சமைத்த ‘உணவை வாங்க மாட்டார்கள். தன்னுடைய திறமை அல்லது உடலை வருத்தல் போன்ற காரியங்களை வெளிப்படுத்தி யாசகம் பெற்றார்கள். யாசகம் பெறச் சென்ற ஊரில் பொதுவான பாழடைந்த ஒரு இடத்தில்தான் இவர்கள் தங்கினார்கள். ஒரு ஊருக்கு ஒரு யாசகர் வந்தால் இன்னொரு குழு அங்கே வராது. இவர்களில் எல்லோருமே பிராமணர் வீடுகளில் யாசகம் வாங்குவது இல்லை என்பது முக்கியமான செய்தி. இவர்களில் பலர் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்.

கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர். நாட்டார் வழக்காற்றியல் மற்றும் சமூகப் பண்பாட்டு ஆய்வாளர்.



கட்டுரை

# கூட்டுறவுக் கூட்டாட்சி: ஒரு பார்வை

க. பழனித்துரை

ஹான்ஸ் சீடல் என்ற ஜெர்மானிய நிறுவனத்தின் நிதி உதவியுடன் கூட்டாட்சியில் இயங்கும் நாடுகளைப் பற்றி ஓர் ஆய்வு உலகளாவிய நிலையில் நடத்தப்பட்டுள்ளது. அதனை இந்தியாவில் இயங்கும் ஒரு தனியார் பல்கலைக்கழகம் நடத்தி முடித்து இருக்கிறது. அந்த ஆய்வினை நிறைவு செய்ய இந்தியக் கூட்டாட்சி முறையை ஆய்வுசெய்து அறிக்கை அளிக்க அந்தப் பல்கலைக்கழகம் ஒரு குறிப்பிட்ட சில ஆய்வாளர்களைக் கேட்டுக்கொண்டது. அதன் அடிப்படையில் அந்த பல்கலைக்கழகத்துக்கு ஆய்வாளர்கள் ஆய்வு அறிக்கைகளைத் தயார்செய்து சமர்ப்பித்தனர். அந்த அறிஞர்கள் அனைவரும் அழைக்கப்பட்டு, அந்த நிகழ்ச்சியை ஒரு வட்டமேஜை மாநாடாக இந்த ஆண்டு நவம்பர் 15ஆம் தேதி நடத்தினர். அந்த நிகழ்ச்சி ஒரு நாளில் நடத்தப்பட்டதால், இந்தியாவிலிருந்து அழைக்கப்பட்டவர்கள் அன்று தங்களுடைய அறிக்கைகளைக் கருத்துத் தாள்களாக சமர்ப்பித்து விவாதம் நடத்தினர். மாலை 4 மணிவரை அதன்பின் வெளிநாட்டிலிருந்து பல அறிஞர்களை காணொளிக்காட்சி மூலம் அழைத்து மாலை 6.00 மணி வரை பேசவைத்தனர். அவர்களில் ஒருவரை அந்த ஆய்வு அறிக்கைகள் அத்தனையையும் பதிப்பிக்கத் தக்க வகையில் நேர்த்தி செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டு, அந்த ஆய்வு அறிக்கைகள் இரண்டு தொகுதிகளாக மேற்கத்திய நாட்டு பதிப்பகம் ஒன்றின் மூலம் வெளியிட இருப்பதையும் அந்த நிகழ்ச்சியின் முடிவில் தெரிவித்தனர்.

அந்த நிகழ்ச்சியில் எனக்கு ஒரு வாய்ப்பு தமிழகப் பார்வையில் மைய மாநில உறவுகளைப் பற்றி ஆய்வுக் கட்டுரை தயாரித்துக் கருத்துரையாற்ற வாய்ப்பு தரப்பட்டது. அதனை ஏற்று, மூன்று மாதங்கள் செலவழித்து ஓர் ஆய்வுக் கட்டுரை தயாரித்து சமர்ப்பித்தேன். அந்தக் கட்டுரையில் சந்தைப் பொருளாதாரத்திற்கும் மைய மாநில உள்ளாட்சி அரசாங்க உறவுகளுக்கும் உள்ள தொடர்பு பற்றி விவரித்து இருந்தேன். அது மட்டுமல்ல இன்றைய சந்தைப் பொருளாதாரம் எப்படி அரசியலையும் அரசாங்கத்தையும் தன்வயப்படுத்தி வைத்துள்ளது என்பதை மையப்படுத்தி இருந்தேன்.

அந்த வட்டமேஜை மாநாட்டில் இந்தியாவிலிருந்து பதினைந்து கருத்தாளர்கள் கருத்துரையாற்றினர். வெளிநாடுகளிலிருந்து காணொளிக்காட்சி மூலம் ஆறுபேர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். அத்தனை ஆய்வு அறிக்கைகளுமே செறிவுடன் எழுதப்பட்டிருந்தது. காரணம், ஆய்வாளர்கள் எவைகளைப் பற்றியெல்லாம் கவனத்தில் கொண்டு தங்கள் ஆய்வு அறிக்கையைத் தயார் செய்ய வேண்டும் என்ற விதிமுறைகளைக் கொடுத்துவிட்ட காரணத்தால் அனைவரும் மிகச் சிறந்த ஆய்வேடுகளைக் கொண்டு வந்திருந்தனர். அங்கு பங்குபெற்று கருத்தாளர்களின் கருத்துக்களைக் கேட்ட பங்காளர்கள், ஒரு மையக் கேள்வியினைக் கேட்ட வண்ணம் இருந்தனர். அதாவது, இன்று நாம் கூட்டாட்சியில் சந்திக்கும் சவால்களுக்குத் தீர்வு என்ன என்பதுதான் அந்த வினா. அந்த ஆய்வரங்கில் கலந்துகொண்டபோது, உலகம் பொருளாதாரத்தில் மேம்பட்டதாகக் தெரிந்தபோதும், உலக நாடுகளில் மக்களாட்சி நடத்துகிறோம் என்று மார்தட்டிக்கூறும் அரசியல் கட்சிகள், அதன் தலைவர்கள் மக்களை எப்படி குழப்பத்தின் உச்சத்திற்கே தங்கள் கொள்கையற்ற அரசியலால் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார்கள் என்பதை படம்பிடித்துக் காட்டினார்கள் அந்த ஆய்வறிஞர்கள்.

இந்த ஆய்வின் நோக்கமே சமூகத்தை அமைதிக்கும், மகிழ்ச்சிக்கும், ஒருவரையொருவர் நேசித்து வாழும் ஒரு மதிக்கத்தக்க மானுட வாழ்க்கை வாழ அழைத்துச் செல்ல நடத்தவேண்டிய அரசியல், ஆளுகை மற்றும் நிர்வாகம் மக்களை சிக்கலுக்குள்ளாக்கும் செயல்பாடுகளில் கொண்டு வந்து நிறுத்திவிட்டனர் என்பதற்கான காரண காரியங்களை ஆய்வு செய்வதுதான். உலகத்தில் வளர்த்தெடுக்கப்பட்ட அறிவியலும், தொழில் நுட்பமும் சந்தை பயன்படுத்திக்கொண்டது பொருள்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி லாபம் ஈட்டி ஆனால், சமூகம் அவைகளைப் பயன்படுத்த அரசாங்கத்தால் வழிவகை செய்து கொடுக்க முடியவில்லை அல்லது முனையவில்லை என்பதும் படம்பிடித்துக் காட்டப்பட்டது. அந்த வட்டமேஜை மாநாட்டில் நடந்த பெரு விவாதித்தலில் வெளிவந்த முக்கியக் கருத்துக்களில் ஒருசிலவற்றை தொகுத்து இந்தக் கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ளது.

பொதுவாக கூட்டாட்சி என்பது இரண்டாவது உலகப் போருக்குமுன் ஒரு நான்கு நாடுகளில்தான் நடைபெற்று வந்தது. அந்தக் கூட்டாட்சி என்பதே கடைசி அத்தியாயத்தில் இருப்பதாக அரசிலுக்கு இலக்கணம் தந்த ஹெரால்டு லாஸ்கி, 1939ஆம் ஆண்டே தெரிவித்துவிட்டார். கூட்டாட்சியைப் பற்றிய தத்துவார்த்த விளக்கம் தந்த கே.சி.வியர் உலகம் சந்திக்கின்ற பெரும் சவால்கள் தொழில்மயப் பொருளாதாரத்தால் உருவாக்கப்பட்டவைகள் என்பதை தன் புத்தகத்தில் பதிவுசெய்து விளக்கியுள்ளார். அது மட்டுமல்ல சமூகம் சந்திக்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு, அதிகாரங்களை மையப்படுத்தி ஆட்சி நடத்துவதன் மூலம்தான் பெறமுடியும் எனக் கருதி மத்தியில் ஆளும் அரசாங்கத்தில் இருக்கும் தலைவர்கள் செயல்படுவதால்தான் என்பதனை மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

இன்று உலகில் 50 சதவிகித மக்கள் கூட்டாட்சி முறைக்கு வந்துவிட்டனர். அதேபோல் உலகில் உள்ள கூட்டாட்சி அரசாங்கங்கள் மாநிலங்களின் எண்ணிக்கையை 2-லிருந்து 80-க்கும் மேல் உள்ளது. ஒரு சில நாடுகள் குறைந்த எண்ணிக்கையில் மாநிலங்களை வைத்துள்ளன. பல நாடுகளில் எண்ணிக்கை அதிக அளவிலும் மாநிலங்களை வைத்து ஆட்சி நடத்துகின்றன. இந்த எண்ணிக்கைதான் மைய மாநில உறவுக்கு பிரச்சினையா என்றால், ஆம் என்று கூற இயலாது. குறைந்த எண்ணிக்கையில் மாநிலங்களைக் கொண்ட நாட்டிலும் ஆட்சி என்பது மிகுந்த சிக்கலுக்கு உள்ளாகி இருக்கின்றன. பல நாடுகளில் கூட்டாட்சியில் அதிகாரங்கள் குவிக்கப்பட்டும், சில நாடுகளில் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டும் செயல்படுகின்றன. எப்படி மக்களாட்சிக்கு மக்கள் மத்தியில் ஒரு பெரும் ஆதரவு இருக்கிறதோ அதேபோல் கூட்டாட்சிக்கும் மக்கள் மத்தியில் ஆதரவு பெருகி வந்துள்ளன. உலகத்தில் கூட்டாட்சியைக் கைக்கொண்டு செயல்படும் நாடுகளில் மக்களும் தலைவர்களும் கூட்டாட்சி பற்றி முழுவதும் புரிந்து செயல்படுத்துகின்றார்களா என்பதும் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

உலகில் தேசிய அரசு அமைக்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை மத்திய அரசின் ஆட்சித்தலைவர்கள் நம்பும் ஒரு கருத்து "மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு, அரசாங்கம் அதிகாரத்தை மையப்படுத்துவதில்தான் உள்ளது" என்பதாகும். உண்மை சற்று வித்தியாசமானது. மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு அதிகாரத்தை மையப்படுத்துவதிலும் இல்லை, அதேபோல் அதிகாரத்தை முழுவதும் பரவலாக்குவதிலும் இல்லை, இந்த இரண்டையும் எந்த அளவில்

ஆளுகையிலும் நிர்வாகத்திலும் சரியான நிலையில் வைத்துச் செயல்படுகின்றோமோ அந்த அளவில் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். இந்த அறிவியல்பூர்வ உண்மையைப் புரிந்துகொண்டு, ஆளுகையிலும் நிர்வாகத்திலும் அதிகாரங்களைப் பகிர்ந்துகொண்டு எந்தெந்த நாடுகள் செயல்படுகின்றனவோ, அந்த நாடுகள் அனைத்தும் மக்கள் பிரச்சினைக்கு மிக எளிதாகத் தீர்வுகளைக் கண்டு செயல்படுகின்றன. அந்த நாடுகள் கூட்டாட்சியிலும் சரி மக்களாட்சியிலும் சரி முன்னிலையில் இருக்கின்றன.

பெரும்பாலான நாடுகளில் மக்களாட்சி செயல்பாட்டில் இருந்தபோதும் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர்களும் முதன்மை அமைச்சர்களும் அதிகாரங்களை மையப்படுத்தி செயல்படுவதில்தான் முனைப்புக் காட்டுகின்றனர். இருந்தபோதிலும் பல நாடுகள் எந்த அளவில் அதிகாரத்தைப் பங்கிட்டுக்கொள்வது மத்திய, மாநில உள்ளாட்சி அரசாங்கங்களுக்குள் என்பதில்தான் விவாதங்களை நடத்தி வருகின்றன. உலகம் அந்த சமநிலையைக் கண்டுபிடிக்கத்தான் முயல்கிறது. பல நாடுகளில் இந்த அதிகாரப்பரவலையும் அதிகாரத்தை மையப்படுத்துதலையும் ஒரு நிலையில் சீர்செய்து சமப்படுத்த முனைந்தபோதும், அந்த நாடுகளின் அரசியல் கலாச்சாரம் அதற்கு ஒத்துழைப்பதில்லை.

எனவேதான் இன்றுவரை கூட்டாட்சி நடைபெறும் நாடுகளில் மத்திய அரசும் மாநில அரசும் மோதிக்கொள்கின்றன. இந்த மோதல் என்பது ஏதோ இந்தியாவில் மட்டும் இருப்பதாக நாம் நினைத்துக்கொள்ளக் கூடாது. அது அமெரிக்கா, கனடா, ஜெர்மெனி, ஸ்பெயின், ஏன் ஐரோப்பிய கூட்டமைப்பு என அனைத்து நாடுகளிலும் இருக்கின்றது என்பதுதான் பலருக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. ஆனால், கோட்பாட்டு அடிப்படையில் இந்தப் பிரச்சினைகளை அலசிப் பார்த்தால் பல உண்மைகள் நமக்குப் புலப்படும். கூட்டாட்சி வெற்றிபெற பல்வேறு அம்சங்கள் அந்த நாட்டு அரசாங்கத்திடமும், அரசியலிலும், ஏன் மக்களிடமும் இருக்க வேண்டும். அப்படி இல்லையேல் அவைகளை உருவாக்க முயல வேண்டும்.

கூட்டாட்சிக்குத் தேவையான முக்கிய அம்சங்களாவன: ஒன்று, நாட்டில் நிகழும் அரசியலுக்கு ஓர் முதிர்ச்சி, பக்குவம், நல்ல தலைமை மையத்திலும் மாநிலங்களிலும் இருக்கவேண்டும். இதற்கு ஒரு பக்குவமான அரசியல் கலாச்சாரம் தேவைப்படுகிறது. அது உருவாக்கப்பட்டுவிட்டால் அந்த நாட்டின் அரசியல் சாசனம் காட்டும் வழியில் நடந்து மக்கள் பிரச்சினைகளுக்கு இணைந்து தீர்வு கண்டுவிடுவர். எந்தப் பிரச்சினைக்கும் மக்களாட்சியில் விவாதம் முடிவினைக் கொண்டுவரும். ஆனால் காலதாமதம் ஆகும். அடுத்து அதற்கு மிக முக்கியத் தேவை உண்மைத் தரவுகள். அதன்மேல் விவாதம் நடைபெறவேண்டும் என்பதுதான். உண்மைத் தரவுகள் அடிப்படையில் விவாதத்தினை முன்னெடுப்பதுதான் இன்று உலகம் முழுவதும் பிரச்சினையாக இருக்கிறது. இரண்டு, அங்கு ஒருங்கிணைப்பு என்பது கலாச்சாரமாக எல்லா அமைப்புக்களிலும் பணிகளிலும் நடைபெற வேண்டும். அந்த நாட்டில் ஆளுகையும், நிர்வாகமும் ஒத்திசைந்து உணர்வுபூர்வமாக நடைபெறும்போதுதான். ஒரு மக்களாட்சி ஏற்படுத்த வேண்டிய விளைவுகளை ஏற்படுத்தும். இந்த ஒருங்கிணைப்பு என்பது அரசாங்கத்தின் துறைகளுக்குள் நடைபெற வேண்டும், அடுத்து, மத்திய மாநில அரசுத் துறைகளுக்குள் நடைபெற வேண்டும். அதேபோல் உள்ளாட்சி அமைப்புக்களிலும் நடைபெற வேண்டும். இன்றைய பொது நிர்வாக அமைப்பில் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால், ஒருங்கிணைப்புச் செய்வது. இது அரசாங்கத்தில் மட்டுமல்ல, அரசியல் கட்சிகள் மற்றும் தொண்டு நிறுவன அமைப்புகள் வரை இந்தச் சவால் நீடிக்கின்றது. ஆனால் சந்தையில், தொழிலில் இந்த ஒருங்கிணைப்பு மிகவும் சரியாக நடந்துவிடுகிறது. மூன்று அரசாங்கங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து மக்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்கும் ஒரு ஆளுகை மற்றும் நிர்வாகக் கலாச்சாரத்தை உருவாக்கிட வேண்டும். இந்தக் கலாச்சாரம் பெரும்பாலான நாடுகளில் பார்க்க முடிவதில்லை. காரணம், அரசு தன்னை பலம் பொருந்தியதாகக் கருதுவதால் மக்களின் பிரச்சினைகளுக்காகத்தான் அரசு செயல்படுகின்றது என்ற பார்வை குறைந்து, மக்கள் அரசாங்கத்திற்காக இருப்பது போன்ற சிந்தனை அரசுக்கு வந்துவிட்டது. பெருந்தொற்று காலத்தில் அமெரிக்காவில் இரண்டு மாநிலங்கள் தடுப்பூசி போட்டுக்கொள்ள முடியாது எனவும், முகக்கவசம் அணியமுடியாது எனவும் அறிவித்ததை நாம் பார்த்தோம். நான்கு, இவைகளுக்கும் மேலாக மக்களிடம் ஒரு கூட்டாட்சி மனோபாவம் கலாச்சாரமாக உருவாக்கப்பட்டு செயல்படும்போது மட்டும்தான் நல்ல விளைவுகளை அரசாங்கம் உருவாக்கும். கூட்டாட்சி சிறப்புடன் செயல்பட கூட்டுறவு மனப்பான்மை மக்கள் மத்தியில் எங்கும் கலாச்சாரமாக வளர்த்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஐந்து, கூட்டாட்சி நடைபெறும் நாட்டில் மக்களை உணர்வுகளைத் தாண்டி அரசியலில் கட்சி அரசியல், தேர்தல் அரசியல் என்பதை மையப்படுத்தாமல் மேம்பாட்டு அரசியலை மையப்படுத்தி செயல்படும்போது கூட்டாட்சி மகத்தான பணிகளைச் செய்யும். ஆறு, மத்திய மாநில அரசுகள் ஒன்றையொன்று நம்பிக்கையிழந்த நிலையில் செயல்படாமல் ஒன்றின்மேல் ஒன்று நம்பிக்கையுடன் செயல்படும்போது மட்டும்தான் கூட்டாட்சி நற்பலனைத் தந்திடும். பெரும்பாலான நாடுகளில்

மத்திய அரசு மாநில அரசுகளை நம்புவது இல்லை, மாநில அரசுகள் உள்ளாட்சி அரசாங்கத்தை நம்புவது கிடையாது. அது மட்டுமல்ல ஒன்றையொன்று குறை கூறியும் மோதியும் கொள்ளுகின்றன. ஏழு, எந்த நாட்டில் சமூகம் தன்னை மக்களாட்சிப்படுத்தி வைத்துக்கொண்டுள்ளதோ அந்த நாட்டில்தான் கூட்டாட்சி என்பது ஒரு பக்குவமான நிலையில் செயல்பட்டு அரசாங்கம் மக்களுக்கு பெரும் சேவை செய்திடும்.

மேற்கூறிய கருத்துக்கள் அனைத்தும் கோட்பாட்டாளர்கள் உலகில் செயல்படும் கூட்டாட்சி அரசாங்கங்களை ஆய்வு செய்து உருவாக்கிய கருத்தாக்கங்கள். இந்தக் கருத்துக்களைப் பின்புலத்தில் வைத்துப் பார்க்கும்போது, அமெரிக்காவில்கூட அப்படிப்பட்ட கூட்டாட்சிக் கலாச்சாரம் உருவாகவில்லை. கருப்பின மக்களின் பிரச்சினை இன்றுவரை அங்குத் தொடரத்தானே செய்கிறது. அது மட்டுமல்ல பெருந்தொற்றுக் காலத்தில் இரண்டு மாநிலங்கள் தடுப்பூசி போடுவதை ஏற்க மாட்டோம் என்று அமெரிக்க ஒன்றிய அரசை எதிர்த்து அரசியல் செய்ததைப் பார்க்க முடிந்ததே. இந்திய நாட்டில் அப்படி ஒரு சூழல் பெருந்தொற்றுக் காலத்தில் இல்லை என்பதையும் உலகம் காணத் தவறவில்லை.

அது மட்டுமா? மக்களாட்சிக்கும் கூட்டாட்சிக்கும் உலகுக்கு வழிகாட்டும் நாடு என்று மார்தட்டி தங்களை விளம்பரப்படுத்திய நாட்டில்தான் அமெரிக்க அதிபராக இருந்த டொனாட் ட்ரம்ப் அமெரிக்கா வெள்ளைக் கிருத்துவர்களுக்கான நாடு என்று பிரகடனப்படுத்தி வாக்குச் சேகரித்து வெற்றிபெற்றார். கனடாவில் இன்றுவரை க்யூபெக் பிரச்சினையாக இருந்து வருவதை நாம் பார்த்து வருகிறோமே. அந்த மாநிலத்தைத் தங்களுடன் வைத்துக்கொள்வதற்காகவே அந்த மாநிலத்திற்கு பல சலுகைகளை அந்த நாட்டின் ஒன்றிய அரசு வழங்கி மற்ற பிராந்தியங்களின் கோபத்திற்கு ஆளாகி இருக்கிறது. அந்த கியூபெக் மாநிலத்தில்தான் வெளிப்படையாக பிரெஞ்ச் மொழி பேசினால் இந்த மாநிலத்தில் இருங்கள், இல்லையேல் வேறு மாநிலங்களுக்குச் சென்றுவிடுங்கள் என்று அரசியல் நடத்தும் கட்சி ஆட்சிக்கு வந்து ஆட்சி நடத்தியது. ஆகையால்தான் ஹெரால்டு லாஸ்கியும் கே.சி.வியரும் உலக நாடுகள் மையப்படுத்துவதை கலாச்சாரமாகக் கொண்டு இயங்கும் வரை இந்தச் சிக்கல் நீடிக்கப் போகிறது என்று 1940-களிலேயே அனுமானித்தார்கள். அதுதான் இன்றுவரை உலகத்திலும் நம் நாட்டிலும் நடக்கின்றது.

மேற்கூறிய கோட்பாட்டுப் பின்னணியில் இந்திய கூட்டாட்சியைப் பார்க்கும்போது 75 ஆண்டுகால வரலாறு கூறும் உண்மை இந்தியா என்ற நாடு உருவான காலத்திலிருந்து இன்றுவரை மத்திய அரசு மாநில அரசுகளை நம்புவதும், மதித்து நடத்துவதும் கிடையாது. எப்பொழுதுமே மத்திய அரசு பெரிய அண்ணன் மனப்பான்மையுடன் செயல்பட்டு வருவதைத்தான் கலாச்சாரமாகப் பார்க்க முடிந்தது, மத்திய அரசு நாட்டுப்பற்றை வளர்ப்பதாகவும், மாநில அரசுகள் பிராந்தியப் பற்றை வளர்ப்பதாகவும் கருத்தாக்கத்தை உருவாக்கி நம் அரசியல் கட்சிகள் செயல்பட்டு வருகின்றன. உண்மை அதுவல்ல. எப்பொழுதெல்லாம் நாடு சிக்கலைச் சந்திக்கிறதோ அந்த நேரத்தில் மாநிலக் கட்சிகளும், மாநிலக் கட்சிகள் ஆளும் மாநிலங்களும்தான் நாட்டின் ஒற்றுமைக்கு மத்திய அரசோடு தோளோடு தோள் கொடுத்து செயல்பட்டிருக்கின்றன என்பதுதான் உண்மை. இந்த உண்மை பெரும்பாலும் பொது விவாதங்களில் கொண்டுவரப்படுவதில்லை.

இந்தியா என்ற நாட்டை உடைபடாமல் பாதுகாப்பது என்பதே மிகப்பெரிய சவால், அதை செய்ய வேண்டிய நிர்பந்தம் மத்திய அரசுக்கு உள்ளது என்பதைக் கூறியே மாநில அரசுகளை உதாசீனப்படுத்தும் ஒரு கலாச்சாரம் வளர்த்தெடுக்கப்பட்டுவிட்டது. இந்தியா உருவான காலத்திலிருந்து. அதேபோல் தேசிய நலனில்தான் மாநில நலன் அடங்கியுள்ளது என்ற பொதுப்புரிதலை மக்களுக்கு ஏற்படுத்தி செயல்படுவதிலிருந்து மாநில நலன்கள் என்பதற்குப் பதில் அடையாள அரசியலுக்குள் மக்களைத் தயார்செய்து செயல்பட்டதன் விளைவு, நம்பிக்கையின்மேல் மத்திய அரசு மாநில அரசுகளை நடத்தவில்லை.

இந்தியா என்பது எல்லையில்லா வித்தியாசங்களையும் வேறுபாடுகளையும், ஏற்றத்தாழ்வுகளையும் கொண்டிருந்தாலும் மக்களாட்சியாகச் செயல்படுவது என்பது ஒரு விசித்திரம் அல்லது புதிர் என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்தியா என்ற நாட்டை கட்டமைக்கும்போது, உலகமே இது ஒரு சாகசம் என்று விமர்சித்தபோது, ஒரே ஒரு வரலாற்று ஆசிரியர் மட்டும் "அது அதிசயம்: அதுதான் இந்தியா" என்ற புத்தகத்தில் மிக ஆழமாக ஒரு கருத்தைப் பதிவுசெய்தார். இந்தியா என்பதை எவராலும் உடைக்க இயலாது, அதற்குக் காரணம் அந்த நாட்டின் நாகரீகத்தின் விழுமியங்களில் இணைக்கப்பட்டுள்ளது" என்று விளக்கினார்.

வெள்ளைய அறிஞர்கள் இந்தியா பற்றி கொண்டிருந்த கருத்துக்கள் அனைத்தும் காலப்போக்கில் தவிடுபொடியானது. வெள்ளைய அறிஞர்களும், இந்திய நிர்வாகத்தில் பணியாற்றிய அதிகாரிகளும் இந்தியா என்று உருவாக்கப்படும் நாடு ஒன்றாக இருக்கப்போவது கிடையாது, அது மட்டுமல்ல அது மக்களாட்சியாகவும் செயல்படப்போவது கிடையாது என்ற கருத்தை ஆழமாகத் தங்களுடைய புத்தகங்களில்

பதிவுசெய்து வைத்தனர். ஆனால், அவைகள் அனைத்தும் இந்திய நாட்டின் 75 ஆண்டுகால வரலாறு உடைக்கப்பட்டுவிட்டது. ஆனால், இந்தியா யாருக்காக உருவாக்கப்பட்டதோ அவர்களில் பெரும்பான்மை மக்களுக்கு இந்த நாடு செயல்படவில்லை.

அடுத்து மக்களாட்சியாலும், கூட்டாட்சியாலும் எல்லாத் தரப்பு மக்களுக்கும் கிடைக்கவேண்டிய பலன்கள் கிடைக்கவில்லை என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கான முழுக் காரணமும் இந்த நாட்டில் நடைபெற்று வரும் அரசியல் சாசனத்திற்கு எதிரான சாதி, மத அரசியல் என்பதும் ஒரு கசப்பான உண்மை மற்றும் சோக வரலாறு. பல நேரங்களில் நம் அரசியல் அரசியல் சாசனத்தைப் பின்பற்றாமல் புறந்தள்ளியதின் விளைவு, அரசியல் சாசனத்தைப் புறந்தள்ளி மத்திய அரசு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளைக் கலைத்தது எந்த விதத்திலும் ஏற்புடையது அல்ல. மத்திய அரசு ஒரு தலைமையமைச்சரின் ஆட்சியில் 50 முறை மாநில அரசுகள் கலைக்கப்பட்ட நிகழ்வு கூட்டாட்சி வரலாற்றில் ஒரு சோக நிகழ்வு என்று வர்ணிக்கப்பட்டது. இதைக் கூர்ந்து ஆராய்ந்து பார்த்தால், நம் மக்களாட்சி அரசியல் கட்டப்பட்ட விதம் அதற்கு காரணமாக இருக்கின்றது என்பதை நம்மால் புரிந்துகொள்ளமுடியும்.

நம் அரசியல் கட்சிகள் மக்களாட்சியைக் கலாச்சார விழுமியங்களாகக் கொண்டு செயல்படுவதற்குப் பதில், ஆட்சியைப் பிடிப்பதற்கு தேர்தல் என்பது ஒருவழி என்பதைத் தாண்டி செயல்படுவதில்லை. அதன் விளைவு, நம் அரசியல் என்பது கட்சி அரசியலாகவும், தேர்தல் அரசியலாகவும் இருக்கின்றதே தவிர, அது மேம்பாட்டு அரசியலாகவும், மக்கள் அரசியலாகவும் கட்டமைக்கப்படவில்லை என்பதை மிக எளிதாக புரிந்துகொள்ள முடியும். அடுத்து, இந்திய நாட்டில் அரசியலமைப்பு என்பதைப் புனித சாசனமாக பேசுவதுண்டு. ஆனால், அவைகளை சாதாரணமாக தூக்கி எறிந்து செயல்படும் அவல நிலைகளைக் கடந்த 75 ஆண்டுகளில் இந்தியாவில் நாம் பார்த்து வருகின்றோம். மாநில ஆட்சிக் கலைப்புகளின் வரலாற்றைப் புரட்டினால் மக்களாட்சியில் மத்திய அரசின் ஆதிக்கச் செயல்பாடுகள்தான் வெளிப்படுகிறது. இந்தச் சூழல் என்பது இந்தியா சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து இன்றுவரை தொடர்கிறது.

அது மட்டுமேயல்ல எப்படி மத்திய அரசு மாநில அரசுகளை நடத்தியதோ அதைவிட மோசமாக உள்ளாட்சிகளை மாநில அரசுகள் நடத்தியதும் இன்று வைரலாகிவருகிறது. அரசியல் சாசனத்தால் உருவாக்கப்பட்ட உள்ளாட்சியை மாநில அரசுகள், மாநில அரசின் அதிகாரிகளின் கீழ் கொண்டு வந்து செயல்படுவது எந்தவித கூட்டுறவுக் கோட்பாடு என்பதும் ஒரு விவாதப் பொருளே. இந்திய நாட்டில் மைய மாநில உறவு பற்றி நடைபெறும் பொது விவாதங்கள்போல் மாநில உள்ளாட்சி உறவுகள் விவாதிக்கப்படுவதில்லை. இன்றுவரை கூட்டாட்சியில் பரிணாம வளர்ச்சியில் உருவான மூன்றாவது அரசாங்கம் பற்றி ஒரு புரிதல் பெரும்பாலான அரசியல் கட்சிகளுக்கும் இல்லை. அதேபோல் பொது மக்களிடமும் உருவாக்கப்படவில்லை. அதற்கான எந்த முன்னெடுப்பும் இல்லாமல் இருப்பதுதான் நாம் எதிர்கொள்ளும் ஒரு சோக நிகழ்வு இந்திய மக்களாட்சி வரலாற்றில்.

2014 ஆண்டுக்குப் பின் உருவாக்கப்பட்ட நிதி அயோக் என்பது ஒரு திட்டக்குழு அல்ல. இந்தியாவின் மாற்றத்திற்குச் செயல்படும் அமைப்பு என்ற தலைப்பிட்டு அந்த நிறுவனத்தை செயல்பட வைத்துள்ளனர். அந்த நிறுவனம் இந்த கூட்டுறவுக் கூட்டாட்சி என்பது ஒத்துழைப்போடும் போட்டியோடும் வேறுபாடுகளை வித்தியாசங்களைக் களைந்து செயல்படும் அமைப்பாக மாநிலங்கள் செயல்படவேண்டும் என்று குறிப்பிடுகின்றது. இந்தக் கருத்தாக்கத்தை விமர்சனத்திற்கு உள்ளாக்கிய அரசியல் கட்சிகள் ஒன்றை மறந்துவிட்டன. தேசத்தை மேம்படுத்துவதற்கு மத்திய திட்டக்குழு உருவாக்கப்பட்டுள்ளது என ஒரு விவாதத்தை அன்றைய மத்திய அரசு வைத்தபோது, இந்த மத்தியத் திட்டக்குழு என்ற அமைப்பு அரசியல் சாசனத்திற்குப் புறம்பாக அமைக்கப்பட்ட ஒரு அமைப்பு, என்ற விவாதத்தை முன் வைத்தனர். இந்த அமைப்பு மாநில அரசுகளுக்குத் தரவேண்டிய நிதியைத் தன்வயப்படுத்தி, மாநிலங்களை நிதிக்காக மத்திய அரசிடம் கையேந்தி நிற்க வைத்துவிட்டது என்ற வாதத்தை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாநில அரசுகளின் தலைவர்களே முன் வைத்தனர் என்பதனையும் நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

இன்று, ஜி.எஸ்.டி என்று மாநில அரசின் ஆளுகை அதிகாரத்தை மாநில அரசிடமிருந்து பறித்து, மத்திய அரசிடம் மாநில அரசுகளை மண்டியிட வைத்துள்ளது. இதற்கு விலைபோனது மாநில அரசுகள் என்பதையும் நாம் கவனிக்கத் தவறக்கூடாது. மாநில அரசின் ஒத்துழைப்புடன் மாநில அரசின் அதிகாரம் பறிக்கப்பட்டதுதான் ஒரு பெரும் முரண்பாடான அரசியல் செயல்பாடு. இன்றைய அரசு ஜி.எஸ்.டி-ஐ எதற்காகக் கொண்டுவந்தது என்றால் பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்துவதற்காக என்றுதான் விளக்கமளிக்கப்பட்டது. இந்த பொருளாதார வளர்ச்சி என்ற மயக்கத்தில்தான் பல மாநிலக் கட்சிகள் இந்த அதிகாரப் பறிப்புக்கு உடன்பட்டு செயல்பட்டன. இன்று அதை பெரும் விவாதமாக்குகின்றன. இதற்கு விடைதேடக்கூட முடியாமல் மாநில அரசுகள் நிலை தடுமாறி

நிற்கின்றன. இதற்கு ஒரு வாய்ப்பை நீதிமன்றமே உருவாக்கித் தந்தபோதும் மாநில அரசுகள் அதை எடுத்து ஒரு அரசியலை கட்ட இயலாமல் இருக்கின்றன.


ஒரு காலத்தில், இந்திய நாட்டை கட்டியமைத்து உருவாக்க முயல்கின்றோம் என்று கூறி மாநில கட்டுமானங்களை எடுத்துச் செய்யவிடாமல் மத்திய அரசு பார்த்துக்கொண்டது. மாநில மேம்பாடு, மாநில அரசின் அதிகாரம் என்று பேசுவதை தேச விரோதச் செயலாகப் பார்க்கப்பட்டது. இன்று அதேபோல் இந்தியாவின் வல்லரசுச் செயல்பாடுக்காக பொருளாதார வளர்ச்சியைப் பயன்படுத்துகின்றோம் என்று கூறி, மாநில அரசின் அதிகாரம், மக்கள் மேம்பாடு என்று விவாதித்தால், இவைகள் அனைத்தும் தேச விரோத செயல்பாடாகவே பார்க்கப்படுகிறது.

இந்தியா சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து இன்றுவரை இந்திய மைய மாநில உறவுகள் விரிசல் அடைந்துதான் வருகிறது. இதை சீரமைக்க முதலில் ஆய்வு நடத்தி அறிக்கை தந்த மாநிலம் தமிழகம். மாநில சுய ஆட்சிச் சிந்தனையை முதலில் உருவாக்கியது தமிழ்நாடுதான். அதுவும் இந்தச் சிந்தனையை உருவாக்கியதும் தேசிய உணர்வு கொண்ட தமிழ் அறிஞர்களும் உணர்வாளர்களும்தான். அதில் பெரும் தலைவர் காமராஜரும் ஜீவாவும் அடக்கம் என்பதும் ஒரு வரலாறு. அதனைத் தொடர்ந்து மாநில அரசின் முன்னெடுப்பில் ராஜமன்னார் குழு அறிக்கையும், மத்திய அரசின் முன்னெடுப்பில் சர்க்காரிய குழு அறிக்கையும் வெளிவந்தன. அடுத்து மொரார்ஜி தேசாய் தலைமையில் அமைந்த முதல் நிர்வாக சீர்திருத்த ஆணையம் அறிக்கை ஒன்றைத் தந்தது. அதனைத் தொடர்ந்து வீரப்ப மொய்லி தலைமையில் இரண்டாவது நிர்வாக சீர்திருத்த ஆணையம் உருவாக்கப்பட்டு, அந்தக் குழுவும் ஓர் அறிக்கையினைத் தந்தது. அடுத்து, மைய மாநில உறவை அலசி ஆராய பூஞ்ச் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவும் அறிக்கை சமர்ப்பித்துவிட்டது. இவ்வளவு ஆய்வு அறிக்கைகளும் அரசாங்கத்தின் குடோன்களிலும், நூலகங்களிலும் உள்ளதே தவிர செயலாக்கத்தில் இல்லை என்பது அடுத்த சோக நிகழ்வு.

இந்த அறிக்கைகளை நடைமுறைப்படுத்த ஒரு குறைந்தபட்ச நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால்கூட பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டிருக்கலாம். இந்த அறிக்கைகளை வைத்தே ஒரு பெரும் பொது விவாதத்தை மாநில கட்சிகள் இந்தியாவில் உருவாக்கியிருக்க முடியும். அந்த அளவுக்கு நம் மாநில கட்சிகளுக்கு கருத்துப்பின்புலம் இல்லை என்பதுதான் நாம் பார்க்கும் எதார்த்தம். அதேபோல் உள்ளாட்சியை வலுப்படுத்தி அரசாங்கத்தின் திட்டங்களை மிகச் சிறப்பாகச் செயல்பட குழுக்கள் அமைக்கப்பட்டன. கடைசியாக மணிசங்கர் குழு ஓர் அறிக்கையைத் தயாரித்துத் தந்தது. அந்த அறிக்கையை அந்த அரசாங்கமே நடைமுறைப்படுத்தவில்லை. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் சமூகத்தின் மேம்பாட்டிற்கும் மூன்று நிலை அரசாங்கங்களும் ஒரே நேர்கோட்டில் செயல்பட வேண்டும். அதற்கு தேசத்தின் மீது பற்று, ஊழலில்லாத ஆளுகை மற்றும் நிர்வாகம் இன்றியமையாதவைகள். ஆனால் சிக்கல் இங்குதான் ஏற்பட்டுள்ளன. கட்டுக்கடங்காத ஊழல் ஆளுகையிலும், நிர்வாகத்திலும் ஏற்பட்டுள்ளதை எவரும் மறுப்பதில்லை. அடுத்து, அரசியல் ஒற்றுமைப்படுத்துவதற்குப் பதில் சாதிமத அரசியல் மக்களை பிரித்து வைத்துக்கொண்டுள்ளது. இதற்கான தீர்வு மேம்பாட்டுக்கான ஓர் அரசியல் கட்டமைப்பதிலும், மாற்றங்களைக் கொண்டுவர தன்னலமற்ற நாட்டுப்பற்று கொண்ட தியாகத் தலைமையும், சுயநலம் பேணும் பயனாளிப் பார்வை துறந்து பொதுநலம் பேணும் நாட்டுச் சிந்தனையும் நியாயச் சிந்தனையும் கொண்ட குடிமக்கள் உருவாக்கலும்தான் ஒரு கூட்டுறவுச் கூட்டாட்சியை உருவாக்கத் தேவையான செயல்பாடு என்று விவாதிக்கப்பட்டது அந்த மாநாட்டில். இவற்றை முன்னெடுப்பதற்காக ஒரு பொது விவாதம் உருவாக்கப்படல் வேண்டும் என்று கூறி அந்த வட்டமேஜை மாநாடு நிறைவுப்பகுதிக்கு வந்தது. அந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்ட கட்டுரைகள் அனைத்தும் இரண்டு தொகுதிகளாக ஆங்கிலத்தில் வெளிவர இருக்கின்றன என்ற செய்தியோடு அந்த வட்டமேஜை மாநாடு நிறைவுபெற்றது. இந்த மாநாடு தமிழகத்திற்கு பல செய்திகளைத் தந்தது. ஒன்று, இன்றைய சந்தைச் சூழலுக்கு பழைய விவாதங்களை நம்மால் முன்னெடுத்து வெற்றிபெற இயலாது. அனைத்தும் அடிபட்டுப் போகும். மாநில சுயாட்சி என்பதை நம் அரசியல் கட்சிகள் வலுவான சந்தைப் பின்புலத்தில் வைத்தே முன்னெடுத்து விவாதிக்கும்போது மட்டுமே வெற்றிபெற முடியும். இந்த விவாதத்தை முன்னெடுக்க சந்தைச் செயல்பாடுகளை நன்கறிந்த கருத்தாளர்களின் கருத்துப் பின்புலம்தான் உதவிடும். வெற்று அரசியல் முழக்கங்கள் எதுவும் வெற்றியைக் கொண்டுவராது. அடுத்து, மாநில அரசுகளை மைய அரசு ஊழல்வாதிகளாகச் சித்திரித்து சிக்க வைத்து இந்த விவாதத்தை முன்னெடுக்கவிடாமல் பார்த்துக் கொண்டுள்ளது. எனவே, இந்த விவாதத்தை அறிவுத் தளத்தில் முன்னெடுக்க பொதுக்கருத்தாளர்களை இந்தியா முழுவதும் ஒருங்கிணைத்துச் செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இதற்கான புதுக் கருத்தாடலை முன்னெடுக்க அறிவு ஜீவிகளை ஒன்றிணைக்க வேண்டும். இதுதான் நமக்குக் கிடைத்த செய்தி இந்த மாநாட்டில்.

கட்டுரையாளர், காந்திகிராமிய பல்கலைக்கழக ராஜீவ் காந்தி பஞ்சாயத்துராஜ் ஆராய்ச்சி இருக்கைத் தலைவர் (ஓய்வு)





# இந்தியச் சமூகம்: மார்க்சும் பெரியாரும்

முனைவர் சு.மாதவன்

*(சென்ற இதழ்த் தொடர்ச்சி)*

**மூடநம்பிக்கை**

எந்தவொரு காரண - காரிய இயைபும் இல்லாமல் ஏதாவது ஒன்றை நம்புவதை “மூடநம்பிக்கை” என்கிறோம். புராதன சமூகத்தில் இருந்த மனிதன் பட்டறிவுக் குறைவால் தனது அறிவுக்கும் அனுபவத்திற்கும் எட்டாதவற்றின்மீது ஓர் பயங்கலந்த மரியாதை செலுத்தித் தொடங்கினான்; வணங்கவும் செய்தான். ஆண்டான் - அடிமைச் சமூகத்தில் அத்தகைய நம்பிக்கைகள் பெருகின. இன்றைய நிலப்பிரபுத்துவ - முதலாளித்துவ சமூகத்திலும் அவை நிலவி வருகின்றன. இந்நிலை ஆங்கிலேய ஆட்சியின்போதும் இருந்தது.

சகமனிதனால் வாழ்க்கை இழந்து நிற்கும் மனிதன், தனது தாழ்வு நிலைக்கான காரணங்களை ஆராய்ந்து நோக்க எண்ணாமல் கடவுளின் அவதாரங்களாக அல்லது குறியீடுகளான விலங்குகளை வணங்கிய மூடநம்பிக்கையை மார்க்ஸ் கடுமையாக, நையாண்டியாக - விமர்சனம் செய்துள்ளார்.

> “இயற்கையின் எஜமானாகிய மனிதன், குரங்காகிய அனுமான் முன்பும், பசுமாட்டின் முன்பும், தெண்டனிட்டு வணங்கியதில், இந்தச் சிறுமை காட்சியளித்தது. இவற்றையும் நாம் மறக்கக் கூடாது. அவை மனிதனது சிந்தனையைக் குன்றிய வட்டத்தில் சுழலச்செய்து, அதனை மூடநம்பிக்கைக்கு ஏற்ற கருவியாகவும் மரபின் அடிமையாகவும் செய்து, அதன் மேன்மை முழுவதையும் - வரலாற்றுப் படைப்பாற்றல் அனைத்தையும் - இழக்கச் செய்துவிட்டன என்பதையும் நாம் மறப்பதற்கில்லை.”

*(இந்தியாவைப் பற்றி., பக்.27-28).*

என்ற அவரது விமர்சனம் இத்தகைய மூடநம்பிக்கையின் இழிநிலையையும் சிந்தனையை மழுங்கடிக்கும் தன்மையையும் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தி நிற்கிறது.

> "விலங்குகளை வணங்கும் மூடநம்பிக்கையை, இன்றும் இந்துக்கள் கோடிக்கணக்கான கடவுள்களை உருவத்துடன் மாத்திரமில்லாமல் பெண்டு, பிள்ளை, வைப்பாட்டி, ஆடு, மாடு, குதிரை, யானை, எலி, பெருச்சாளி, மயில், கருடன், பாம்பு ஆகிய உருவங்களுடன் வணங்குகிறார்கள். இவையெல்லாம் மேல்சாதி - கீழ்சாதி அனைவரிடமும் உள்ளன."

(பெரியார்: ஈ.வெ.ரா.சி., ப.1380).

என்று பெரியாரும் விமர்சித்துள்ளார். மார்க்ஸ் இத்தகைய மூடநம்பிக்கைகள் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை விவரித்துள்ளார். பெரியார் அதை நையாண்டி செய்வதோடு, சமூகத்தில் தன்னை அறிவாளியென்று காட்டிக்கொள்கிற பிராமணரிடமும் இம் மூடநம்பிக்கை நிலவுகிறது என்பதைச் சுட்டியுள்ளார். இதைப் பிராமணர்களும் மூடத்தனமாக இருந்தார்கள் என்று புரிந்துகொள்ளக்கூடாது. மாறாக, இதைத் திட்டமிட்டே செய்தனர் என்றே கொள்ள வேண்டும். பெரியார் இந்த முரண்பாட்டை எடுத்துக்காட்டுவதன்மூலம் நடைமுறையளவில் பிராமணனும் மூடநம்பிக்கையைப் பின்பற்றுபவனே என்பதாக நையாண்டி செய்துள்ளார். மார்க்ஸ் குறிப்பிடும் 'வரலாற்றுப் படைப்பாற்றல் இழப்பு' என்பது எவ்வெவற்றால் நிகழ்ந்தது என்பதைப் பெரியார் பட்டியலிடும் பாங்கு வியக்கத்தக்கது.

**மனுதர்மம்**

வேதங்களும் உபநிடதங்களும் கட்டமைத்த சமூக நிறுவனங்களை அப்படியே நிலைநிறுத்துவதற்கென்று எழுந்தது மனுதர்மம். அதாவது, இயல்பாக வளர்கின்ற சமூகத்தைத் தாம் விரும்புகிற அல்லது தமது கட்டளைக்குக் கட்டுப்பட்டிருப்பதாக நிலைநிறுத்துவதே மனுதர்மத்தின் அடிப்படை. இத்தகைய தன்மைகளோடு அவர் எதைச் செய்தாலும் அந்நடவடிக்கை மனுதர்மத்தின்பாற்பட்டதாகவே கொள்ளப்படும். அந்த வகையில், 1853 ஆம் ஆண்டில், இங்கிலாந்தின் இந்திய அதிகாரியாக இருந்த சர்.சார்லஸ்வுட் செயல்பட்டதால், மார்க்ஸ் அவரை 'நவீன மனுதர்மன்' என்றே குறிப்பிடுகிறார். ஏனென்றால், 1854 இல் காலாவதியாகும் கிழக்கிந்தியக் கம்பெனியின் சாசனத்தை ஒரேயடியாக மேலும் 20 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப் பரிந்துரை செய்தார் அவர். இந்திய விவகாரங்கள் குறித்து சட்டமியற்றும் எல்லா வேலைகளையும் ஒத்திப்போடும்படி இங்கிலாந்து மக்களும் இந்திய மக்களும் ஒருமித்த குரலில் கோரிய நிலையிலும் அவர் பிடிவாதமாய் நின்றார். மக்களின் விருப்பத்தைக் கணக்கிலெடுத்துக்கொள்ளாமல் மனுதர்மம் எப்படி விதிகளைத் திணிக்கிறதோ அதுமாதிரி சர்.சார்லஸ்வுட்டும் செயல்படுகிறார் என்பதற்கு அழுத்தம் கொடுப்பதற்காகத்தான் இந்தியப் புரிதலுக்கேற்ற 'மனுதர்மன்' என்ற சொல்லால் அவரைக் குறிப்பிடுகிறார் மார்க்ஸ்.

**இது குறித்து மார்க்ஸ் எழுதுவது இதுதான்:**

> "உடனடியாகவும் நேரடியாகவும் அது (அரசு) 15 கோடி மக்களுக்குச் சட்டமியற்ற விரும்புகிறது. அதுவும் ஒரேயடியாக 20 ஆண்டுகளுக்குச் சட்டமியற்ற வேண்டுமென்கிறது. சர்.சார்லஸ் வுட் தன்னை நவீன மனுதர்மனாக நிலைநாட்டிக்கொள்ள விரும்புகிறார்."

(இந்தியாவைப் பற்றி., ப.8).

சமூகத்தின் இயல்புநிலைக்கு ஒவ்வாதவற்றைத் திணித்து, அதையே நிலையானதாக்க முயலுவதில் மனுவும் சர்.சார்லஸ் வுட்டும் ஒன்றுபடுகிறார்கள். இதர கருத்தியல்களைப் போலவே ஆங்கிலேயர்கள் இதையும் தங்கள் ஆதிக்கத்திற்கு உதவியாகப் பயன்படுத்திக்கொண்டனர்.

> "வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டில் தங்களது ஆட்சி என்றும் நிலைத்திருக்கவும், இந்த நாட்டுச் செல்வத்தைத் தாராளமாய்த் தங்கள் நாட்டுக்குக் கொள்ளைகொண்டு செல்லவும் உத்தேசித்து, இந்த நாட்டில் யாருடைய தயவு தங்களுக்கு இருந்தால் தங்களது எண்ணம் தாராளமாய் நிறைவேறுமோ அவர்களது தயவைப் பூர்ணமாய்ச் சம்பாதிக்க வேண்டியே, அவர்கள் மனித தர்ம ஆட்சி என்பதை அடியோடு மறந்து முழுவதையும் கைவிட்டு மனுதர்மப்படி ஆட்சி முறையை வகுத்து நடத்த வேண்டியவர்களானார்கள்."

(பெரியார் :ஈ.வெ.ரா.சி.,ப.177).

என்ற பெரியாரின் மதிப்பீடும் மார்க்ஸின் கருத்தோடு ஒப்புமை உடையதாகவே விளங்குகிறது. மார்க்ஸ், மனுதர்மத் தன்மையோடு ஆங்கிலேயர்கள் ஆட்சியை நடத்தினார்கள் என்பதோடு நிற்க, பெரியாரோ மனுதர்மத்தின் காவலர்களான பிராமணர்களின் ஆதரவோடு - அவர்களுக்குப் பயன்விளைவதாகவே ஆட்சியை நடத்தினார்கள் என்றும் குறிப்பிடுகிறார்.

**இந்தியக் கிராமங்கள்**

> "இந்த அமைதியான கிராமச் சமூகங்கள் சாதுக்களாகத் தோன்றிய போதிலும், கீழ்க்கண்ட கொடுங்கோன்மைகளுக்குத் திட்டமான அடிப்படையாக இருந்தன என்பதை நாம் மறக்க முடியாது; அந்தச் சமூகங்கள் மனித மூளையைச் சின்னஞ்சிறு கூட்டுக்குள் அடைத்து - அதைவிட மூடநம்பிக்கையின் சுலபமான கருவிகளாகவும் பரம்பரைச் சம்பிரதாய விதிகளின் அடிமையாகவும் ஆக்கியதையும், சகல வகைப்பட்ட சிறப்புக்களையும் சரித்திரப் பூர்வமான சக்திகளையும் மனித மூளை பெறமுடியாமல் செய்ததையும் நாம் மறக்க முடியாது."

(இந்தியாவைப் பற்றி.,ப.26).

என்று இந்தியக் கிராமங்களின் தன்மைகளை விவரிக்கிறார் மார்க்ஸ். ஒவ்வொரு கிராமத்தில் வாழும் மனிதனுக்கும் அவனது கிராமமே, மிஞ்சிப் போனால் சுற்றுப்பத்து (சுத்துப்பத்து) கிராமங்களே உலகம் என்பதான நிலையில் முந்தைய இந்தியா இருந்ததைத் துல்லியமாகப் பதிவுசெய்துள்ளார் மார்க்ஸ். சமய விதிகளும் சமூக விதிகளும் இந்தியக் கிராம மக்களை,

> "தேக்கம் நிறைந்த அசைவற்ற வாழ்க்கை - சிருஷ்டிக்கும் திறனில்லாத செயலற்ற வாழ்க்கை"
>
> (இந்தியாவைப் பற்றி., ப.27).

வாழவைத்தது என்பதையும் மார்க்ஸ் தெளிவுபடுத்தியுள்ளார்.

சகல வகைப்பட்ட சிறப்புக்களையும் வரலாற்றுப்பூர்வமான சக்திகளையும் மனித மூளை பெறமுடியாதபடிக்கு இந்தியக் கிராமங்கள் இருந்தன என்பதை மார்க்ஸ் குறிப்பிடுவதைப் போலவே பெரியாரும்,

> "கிராமம் என்றால் என்ன? அதில் பள்ளிக்கூடமில்லை, ஆஸ்பத்திரி இல்லை. டிராமா இல்லை, பார்க் இல்லை, நீதி ஸ்தலமில்லை, போலீஸ் காவல் இல்லை, நல்ல ரோட்டு வசதியில்லை, விளக்கு இல்லை, நல்ல தண்ணீர் இல்லை, உயர்ந்த நாகரீகம் என்பது இல்லை, பெரும்பாலும் வயிற்றுக்கு ஆகாரம் சம்பாதிப்பதைவிட வாழ்வு ஆசைக்குப் பணம் சம்பாதிக்கும் வசதியில்லை - இப்படி இன்னும் பல வசதிகள் (நகரத்தானுக்கு இருப்பவைகள்) "கிராமத்தானுக்கு இல்லை."
>
> (கிராமச் சீர்திருத்தம்,ப.6)

என்று அதே சிந்தனையோட்டத்தோடு கூறியிருப்பது ஒப்புநோக்கத்தக்கது. பெரியார் பட்டியலிடும் மேற்கண்டவற்றைப் பெற்ற நகரமக்களின் வளர்ச்சியோடு எந்த வகையிலும் ஒப்புநோக்கத்தக்கதாக இந்தியக் கிராமங்கள் அன்றைக்கும் இருக்கவில்லை என்பதே இருவரின் முடிவாகவும் இருப்பது நோக்கத்தக்கது. எனவே, உலக ஞானத்தைக் கிராம மக்கள் பெறுவதற்கு அறிவியல்பூர்வமான கண்டுபிடிப்புகளும் வாழ்க்கை முறையும் சிந்தனையும் அவர்களைச் சென்றடைய வேண்டும் என்பதே இருவரது எதிர்பார்ப்பாகும்.

**விடுதலையும் சமூக மாற்றமும்**

ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலை பெறப்போகும் இந்தியா, எத்தகைய தன்மையிலான விடுதலையைப் பெறப்போகிறது என்பதைத் தீர்க்கதரிசனத்தோடு கீழ்க்காணுமாறு எழுதுகிறார் மார்க்ஸ்:

> "பிரிட்டனில் இன்று அதிகாரத்திலிருக்கும் ஆளும் வர்க்கங்கள் ஒழிக்கப்பட்டு, இயந்திரத் தொழிலாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவது வரையிலும் அல்லது ஆங்கிலேய ஆதிக்கத்தை அறவே ஒழித்துக்கட்டும் அளவுக்கு இந்தியர்கள் வளர்ந்து வலிமைபெறும் வரையிலும் பிரிட்டிஷ் முதலாளிகளால் அங்குமிங்கும் உருவாக்கப்பட்டிருக்கும் சமுதாயத்தின் புதிய அம்சங்களின் பலன்களை இந்தியர்கள் அனுபவிக்க முடியாது. எது எப்படி இருந்தாலும் சரி, அந்த மகத்தான, கவர்ச்சியான தேசம் ஏறக்குறைய தூரத்திலுள்ள ஒரு காலத்தில் மறுமலர்ச்சியடைவார்கள் என்று நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம்".
>
> (இந்தியாவைப் பற்றி., ப.107)

மார்க்சால் கவனமாகவும், சரியான புரிதலோடும் கையாளப்பட்டுள்ள வார்த்தை, "மறுமலர்ச்சியடைவார்கள்" என்பதாகும். இந்தியாவில் சமூக மாற்றம் ஒன்றும் இப்பொழுது நிகழப்போவதில்லை. ஆட்சி மாற்றம் நிகழ்வது மட்டும் நிச்சயம் என்பதை அந்த வார்த்தை அழுத்தமாகக் குறிப்பிடுகிறது. இத்தகைய ஆட்சி மாற்றம் அனைத்து மக்களுக்கும் பலனளிப்பதாக இருக்காது என்பதுதான் பெரியாரின் வாதமும். அதனால்தான் அவர்,

> "இந்தியாவுக்கு ஏதாவது அரசியல் மாறுதல் ஏற்படுத்த வேண்டுமானால் அதில் மனுதர்மக் கொள்கைகள், வருணாசிரமக் கொள்கைகள் ஆகியவைகள் இல்லாத ஆட்சி ஏதாவது ஏற்படக்கூடும் என்கின்ற நம்பிக்கை சிறிதாவது இருந்தால்தான் இந்த ஆட்சியை மாற்ற முயற்சிக்கலாமே ஒழிய, மற்றபடி செய்யும் அரசியல் முயற்சிகள் பாமர மக்களின் தற்கொலை முயற்சியாகும்."
>
> (பெரியார் :ஈ.வெ.ரா.சி.,ப.777).

என்று கருத்தறிவித்தார். இந்த அணுகுமுறைதான் இந்திய விடுதலை நாளைக் கறுப்புநாள் என்று அவரை அறிவிக்க வைத்தது. எனினும், சமூக வளர்ச்சி வரலாற்றில் மாற்றத்திற்கான ஒவ்வொரு பாய்ச்சலும் முயற்சியும் அவசியத் தேவையென்றே மதிப்பிடப்படுகிறது. அந்த வகையில், அந்நியச் சுரண்டலில் இருந்தும் ஆதிக்க - அடிமைத் தளத்திலிருந்தும் விடுதலையடைவது காலத்தின் தேவை என்றே கருத வேண்டியுள்ளது. இங்கு, பெரியாரின் அச்சம் நியாயமானதுதான் என்பதையும் இன்றைய அரசியல் சூழல் தெளிவாக்குகிறது. இன்று மனுதர்மம், வருணாசிரம பார்ப்பனக் கொள்கைகள் புத்துயிர்பெற்று எழுவது மக்கள் நலனுக்கு எதிரானது என்பது உண்மையே.

சமூக வரலாற்றில் ஒவ்வொரு சமூக அமைப்பும் அதற்கு முந்தைய சமூக அமைப்பைவிட முற்போக்கானது என்று மதிப்பிடப்படுகிறது. ஆங்கிலேயர் ஆட்சியின்போது இந்தியாவில் இருந்தது நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பாகும். இயங்கியலின்படி அது முதலாளித்துவ சமூகமாக மாறவேண்டும். அவ்வாறு இந்தியா முதலாளித்துவ சமூகமாக மாறுவதற்கும் சமத்துவச் சமூகத்தை நோக்கி நடைபோடுவதற்கும் தேவையான அடிப்படைப் பணிகளை ஆங்கிலேயர்கள் நிறைவேற்ற வேண்டுமென்று மார்க்ஸ் விரும்பினார்; ஏனெனில், ஒவ்வொரு சமூக அமைப்பும் தனக்கு நேர் எதிரான விளைவுகளை உண்டாக்கும் காரணிகளைத் தம்மை அறியாமல் தாமே உற்பத்திசெய்துகொள்கிறது என்பது மார்க்சீயம். எனவே,

"இந்தியாவில் இரண்டு கடமைகளை இங்கிலாந்து ஆற்ற வேண்டியிருக்கிறது; ஒன்று அழிக்கும் வேலை; மற்றொன்று புத்துயிரளிக்கும் வேலை. பழைய ஆசிய சமுதாயத்தை அழிக்கவேண்டும்; அத்துடன் ஆசியாவில் மேற்கத்திய சமுதாயத்தின் பௌதீக அடிப்படைகளை அமைக்க வேண்டும்."

(இந்தியாவைப் பற்றி.,ப.99).

என்று கூறினார். அவர் குறிப்பிடும் 'அழிக்கும் வேலை' என்பது இந்தியாவில் சனாதன - வருணாசிரம தர்ம முறையை அழித்தலேயாகும். 'புத்துயிரளிக்கும் வேலை' என்பது ஏற்கனவே இந்தியச் சமூகத்தில் வளர்ந்திருப்பது அன்றைய நிலையில் சக்தியற்றிருந்த உலகாயதச் சிந்தனைகளுக்குப் புத்துயிரளிப்பதாகும்.

அதை மேற்கத்திய சமுதாயத்தின் பௌதீக அடிப்படைகளான ஆலைகளையும் சிந்தனைகளையும் இந்தியாவில் அமைப்பதன் வாயிலாக நிறைவேற்ற வேண்டும் என்று விரும்பினார் எனலாம். எனினும்,

"ஆசியாவின் சமூக அடிப்படையான புரட்சி ஏற்படாமல், மனிதகுலம் தன் லட்சியத்தில் நிறைவு எய்துமா என்பதே கேள்வி."

(இந்தியாவைப் பற்றி.,ப.99).

என்ற அவரது கூற்றை ஆழ்ந்து நோக்கவேண்டியுள்ளது. 'மனித குலத்தின் இலட்சியம்' என்று மார்க்ஸ் குறிப்பிடுவது பொதுவுடைமைச் சமூகத்தை நிர்மாணிப்பதேயாகும். அது நிறைவேற வேண்டுமாயின், இந்தியச் சமுதாயத்தின் சிறப்புத் தன்மையான வருணாசிரம தருமத்தை அழிக்க வேண்டும் என்பதே அவரது எதிர்பார்ப்பு. ஆக, இந்தியச் சமூக நிறுவனங்களின் பழமைத் தன்மைகளை உடைத்தெறிய வேண்டியதை இந்தியச் சமூக மாற்றத்தை உருவாக்குவதற்கான அடிப்படைகளுள் ஒன்றாக மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த உலக மானுடப் பொதுவுடைமை வாழ்வியலை முழுமைப்படுத்துவதாகவும் அமையும் எனவும் மார்க்ஸ் கருதியுள்ளார் என்பது உறுதியாகிறது.

"இந்தியாவின் பொருளாதாரத் துறையைச் சீர்படுத்துவதற்கு, முதலாவது, வருணாசிரம முறை ஒழிய வேண்டும்; இரண்டாவது, மத சம்பந்தமான எண்ணங்கள் அகற்றப்பட வேண்டும்; மூன்றாவது, கோவில், குளம், சடங்கு, சாத்தான், சனி விலக்கு ஆகிய எண்ணங்கள் அழிக்கப்பட வேண்டும். பிறகு, அரசன், ஜமீன்தார் முதலிய தத்துவங்கள் அழிக்கப்பட்டாக வேண்டும்."

(மேற்கோள் பெரியார் : சுய /சம., ப.169).

என்றும்,

"......இந்தியாவுக்கு முக்கியமாய் வேண்டியதான காரியங்கள்...

1. மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வு உணர்ச்சி மறைதல்
2. ஆண், பெண் வித்தியாச உணர்ச்சி ஒழிதல்
3. ஏழை, பணக்காரன் என்ற தன்மை, உணர்ச்சி அழிதல்." (மேற்கோள் பெரியார் : சுய /சம., ப.160).

என்றும் பெரியார் குறிப்பிடுகிறார்.

இருவருமே வர்க்க பேதமற்ற, மூடவழக்கங்களற்ற சமூகம் உருவாக வேண்டுமென்று விரும்பியுள்ளனர். ஆங்கிலேயர் ஆட்சி அகற்றப்பட வேண்டும் என்று பெரியார் கூறிய அதே வேளையில் ஆட்சி மாற்றம், அரசியல் மாற்றம் யார் கையில் வரப்போகிறது என்பதையும் உன்னிப்பாகக் கவனித்தார். எனவேதான், மனுதர்மம், வருணாசிரம தர்மம், பார்ப்பன ஆதிக்கம் ஒழிந்த ஆட்சியாக அது மலர வேண்டுமென்று உறுதிபடத் தெரிவித்தார். அதே காலகட்டத்தில் அரசியல் அதிகாரம் காங்கிரஸ் கைக்குப் போவதை - சுரண்டும் வர்க்கத்திடம் ஆட்சி அதிகாரம் செல்வதை - கம்யூனிஸ்டுகளும் மறுதலித்தார்கள் என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது.

மார்க்ஸ் சுட்டும் அழித்தல் வேலைக்கே பெரியாரும் மிகுந்த முக்கியத்துவம் அளித்தார். கிராமச் சீர்திருத்தத்தில் மேற்கத்திய பௌதீக அடிப்ப டைகளை அமைப்பதற்குரிய செயல்திட்டங்களையும் பெரியார் முன்வைத்துள்ளார் (கிராமச் சீர்த்திருத்தம். பக் 12-13).

சமூகத்தைத் தேக்கநிலைக்கு ஆளாக்கும் கருத்தியல்களை உடைத்தெறிந்துவிட்டால் பௌதீக அடிப்படைகளை அமைப்பதற்கான சரியான சூழல் உருவாகும் என்று இருவருமே நம்பியுள்ளனர். ஆனால், இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களின் செல்லத்தக்க தன்மைகளோடு இருக்க வேண்டும் என்பதுதான் வரலாற்றுத் தேவையாக உள்ளது. இதைத்தான், இன்றைக்குப் பொதுவுடைமை மற்றும் திராவிட இயக்கங்கள் தங்கள் படிப்பி னையாகக் கற்றுக்கொண்டுள்ளன அல்லது கொள்ள வேண்டியுள்ளன எனில் அது மிகையில்லை.

**துணைநூற் பட்டியல்**


1. ஆனைமுத்து.,வே. (பதி.ஆ.) 1974 பெரியார்: ஈ.வெ. ரா.சிந்தனைகள் தொகுதி 1,2,3, சிந்தனையாளர் கழகம் திருச்சிராப்பள்ளி -2
2. கார்ல் மார்க்ஸ் பிரடெரிக் எங்கெல்ஸ் 1971 இந்தியாவைப் பற்றி, தமிழாக்கம்: எஸ்.ராமகிருஷ்ணன், ஆர்.எஸ். நாதன், ஆர்.கிருஷ்ணய்யர், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பிரைவேட் லிட், 6, நல்லதம்பிச் செட்டித்தெரு, சென்னை.
3. தந்தை பெரியார் 1988 கிராமச் சீர்திருத்தம், பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை-600 007.
4. நெடுஞ்செழியன்., க. 1990 தமிழ் இலக்கியத்தில் உலகாய்தம் மனிதம் பதிப்பகம் திருச்சி -21
5. ராஜதுரை., எஸ்.வி.கீதா.,வ. 1976 பெரியார்: சுயமரியாதை சமதர்மம் விடியல் பதிப்பகம், 3 மாரியம்மன் கோவில் வீதி, உப்பிலிப் பாளையம், கோவை -641 005
6. Karl Marx Friedrich Engels 1973 Collected Works, Vol-3 Progress Publishers, Moscow.




கட்டுரையாளர், உதவிப் பேராசிரியர் – தலைவர்
தமிழாய்வுத் துறை இராஜேஸ்வரி வேதாசலம்
அரசு கலைக்கல்லூரி, செங்கல்பட்டு.

மதிப்புரை

# தமிழ் இன்றி இந்தியா இல்லை

சண்முக.ஞானசம்பந்தன்




தமிழ்ச் செவ்விலக்கியங்கள்
அவை தோன்றிய சூழலும் சமஸ்கிருதத்தில் அவற்றின் சாயலும்
*(The Poems of Ancient Tamil: Their Milieu and Their Sanskrit Counterparts)*
மூல நூல்: பேராசிரியர். ஜார்ஜ் எல் ஹார்ட்
தமிழில்: பு.கமலக்கண்ணன்
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
சென்னை - 50 | விலை: ரூ.460/-

*கடந்த 2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் சார்பில் வெளிவந்திருக்கும் இரண்டு நூல்கள்; 1. தமிழ்ச் செவ்விலக்கியங்கள் - அவை தோன்றிய சூழலும் சமஸ்கிருதத்தில் அவற்றின் சாயலும் (The Poems of Ancient Tamil Their: Milieu and Their Sanskrit Counterparts) 2. தமிழ் - சமஸ்கிருதச் செவ்விலக்கிய உறவுகள் (The Relation between Tamil and Classical Sanskrit Language). இந்த இரு நூல்களும் பேராசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட் அவர்களால் எழுதப்பெற்றவையாகும். இந்தக் கட்டுரை, தமிழ்ச் செவ்விலக்கியங்கள் குறித்த நூல் குறித்து மட்டும் பேசுகிறது. இதன் தொடர்ச்சியாக அடுத்த நூல் பற்றிய தனிக் கட்டுரை இடம்பெறும்.*

தமிழ்ச் செவ்விலக்கியங்கள் - அவை தோன்றிய சூழலும் சமஸ்கிருதத்தில் அவற்றின் சாயலும் என்ற நூல் 368 பக்கங்கள் கொண்ட நூல் ஆகும். நூலாசிரியர் பேராசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட் 1960-களின் பிற்பகுதியில் தமிழ்நாட்டிற்கு வந்து அரிதின் முயன்று தமிழ் படித்தவர். அறிவியல் முறையியலான ஆய்வை நிகழ்த்தி, ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகியவற்றின் தெரிவு செய்யப்பெற்ற பாடல்களையும், அகநானூறு, புறநானூறு முழுமையையும் கம்பராமாயண ஆரண்ய காண்டத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தமிழின் பெருமையை உலகறியச் செய்தவர். தமிழ் ‘செம்மொழி’ என எடுத்துரைத்து, தொடர்ந்து தமிழ்த் தொண்டாற்றி வருபவர் இவர். மதுரையைச்

சேர்ந்த கௌசல்யா என்ற தமிழ்ப் பெண்ணை மணந்தவர்.

கதகளி நடனக் கலைஞர் ஒருவர் ஒருமுறை தன்னோடு பேசும்போது, "சமஸ்கிருதம் இல்லையென்றால் இந்தியா இல்லை" என்று சொன்னதை நினைவுகூர்ந்து, அதே போல், "தமிழ் இல்லையென்றாலும் இந்தியா இல்லை" என்று குறிப்பிட்டு, தமிழை உயர்தனிச் செம்மொழி என மதிப்பிடுகிறார்.

சங்க இலக்கியம் நமக்குக் கிடைத்துள்ள மூல இலக்கியம். சங்க இலக்கியத்தின் பண்பட்ட, குறிப்புப் பொருள் நிறைந்த, அழகியலில் சிறந்த மொழி நடை எப்படி உருவாகியது என்னும் கேள்வி, தேடத் தேட விடை தெரியாத கேள்வி. சங்க இலக்கியத் தன்மைகள் சில தமிழைக் கடந்து பிராகிருதம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் இருப்பதைக் காட்டுவதே இந்த நூல் எடுத்துக்கொண்ட மையப் பொருள்.

தமிழின் மூல இலக்கியத் தன்மைகள் சுயம்புவாக வந்தவை என்பது ஒரு சாராரின் வாதம். மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணர் எழுத்துக்களைப் படித்தோர் இதனை நன்குணர முடியும். தமிழின் மூல இலக்கியத்தன்மைகள் சமஸ்கிருத இலக்கியங்களிலிருந்து மட்டுமே வந்திருக்க முடியும் என்பது மற்றொரு வாதம். இதன் சாயலை வையாபுரிப்பிள்ளை எழுத்துக்களில் பெரிதும் நாம் காணலாம். ஆனால், ஜார்ஜ் எல். ஹார்ட் அவர்களோ போக்குவரத்து இரண்டு பக்கங்களிலும் இருந்தது; பாமர இலக்கியத்திலிருந்தும் வந்தது என்று காட்டுகிறார்.

சங்க இலக்கியத்தின் கூறுகள் எங்கிருந்து வந்தாலும் (வந்தவை என்பது முற்றான முடிவு அல்ல) அவை உயரிய நிலைக்கு வளர்த்தெடுக்கப்பட்டன. இதில் குறிப்புப் பொருள் அக இலக்கியத்தில் உள்ளுறை உவமமாக வளர்ந்ததும் அடங்கும். திணை அடிப்படையில் இலக்கியக் கொள்கை உருவானதும் அடங்கும். இந்த வளர்ச்சிகள் தமிழுக்கே தனித்தன்மையானவை.

இந்த நூலுக்கு அப்பால் பயணிக்க இன்று இலக்கியத்திற்கு அப்பால் தொல்லியல் தரவுகள் இருக்கின்றன. அரிக்கமேடு, கொடுமணல், கீழடி ஆகிய இடங்களில் அகழாய்வு பண்டைய தமிழர் வாழ்முறையின் குறுக்குவெட்டுத் தோற்றத்தை உறுதிபடத் தருகிறது.

இந்த நூல் இரண்டு பகுதிகளில் 10 அத்தியாயங்களைக் கொண்டிருக்கிறது. பின் இணைப்புகள் இரண்டு வகையாக வழங்கப்பட்டுள்ளன. முதல் பகுதி அதாவது பகுதி அ - முதல் கட்டுரை, "பழந்தமிழ்ச் செய்யுட்களின் பின்னணி" என்ற தலைப்பில் அமைந்துள்ளது.

கி.பி. 604 வாக்கில் மதுரையில் உருவாக்கப்பட்ட சமணர்களின் 'சம்ங்கா' என்னும் பெயரிலான நிலையான சங்கமொன்று இருந்தது. இந்த சங்கத்தை மாதிரியாகக் கொண்டே, மரபு சங்கக் கதையைப் புனைந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. சங்கங்கள் பற்றிய முதல் தகவல்கள் தொகைப் பாடல்களுக்குக் குறைந்தது அறுநூறு ஆண்டுகளுக்குப் பிற்பட்டனவாக அமைகின்றன. எனவே, சங்கத் தமிழ் பற்றிய கதைகள் வரலாற்றுத் தரவுகளாகக் கொள்ள இயலாதவை என ஆசிரியர் நிராகரிக்கிறார்.

பண்டைத் தமிழிலக்கியத்தில் வடக்கின் தாக்கம் இருப்பது உண்மையானாலும், நீலகண்ட சாஸ்திரி போன்றோர், அதன் அளவை மிகைப்படுத்திக் கூறுகின்றனர். நீலகண்ட சாஸ்திரி பண்டைத் தமிழ் இலக்கியங்கள் முழுமையும் வட சொற்களால் ஆனவை என எவ்வாறு வரையறுக்கிறார் என்பதை அறிவது உண்மையில் கடினமானதாக அமைகிறது. ஜெ.வி.செல்லையா என்பார், பத்துப்பாட்டில் இடம்பெறும் காலத்தில் பிந்தையதான ஒரு பாட்டான திருமுருகாற்றுப்படையில் வெறும் இரண்டு சதவீதம் மட்டுமே சமஸ்கிருதச் சொற்கள் இடம்பெறுவதாகக் கணித்துள்ளார். அவற்றுள்ளும், தற்போது திராவிட மூலத்தை உடையதாக அறியப்படும் மீன், தாமரை, முத்து முதலிய சொற்களும் சமஸ்கிருதச் சொற்களாகக் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளன. மகாபாரதத்தை ஆராய்ந்தால், அது அதிக சதவீதமான திராவிடச் சொற்களைக் காட்டும் என நான் நம்புகிறேன் என ஹார்ட் எழுதிச்செல்கிறார்.

அரசனும் அவனது அரசும் என்ற தலைப்பிலான இரண்டாம் கட்டுரையில்,

**"நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**
**அதனால் யான் உயிர் என்பது அறிகை**
**வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே"**

என்ற புறநானூற்றின் 186 ஆம் பாடலை எடுத்தாண்டு தமிழ்ச் சமூக அமைப்பில் மன்னன் பெறும் இடம், வட இந்திய மன்னனது இடத்திலிருந்து முரண்பட்டு அமைகிறது என்கிறார் ஆசிரியர். வடக்கே புனித ஆற்றல் பெரும்பாலும் பிராம்மணர்களின் பாதுகாப்பிலேயே அமைகிறது. வட இந்தியாவில் கடவுளுக்கு உரிய சொல்லான தேவன் என்பதே மன்னன் என்னும் பொருளில் வந்துள்ளது. ஆகவே தமிழில் இச்செயல்முறை தலைகீழாக அமைந்துள்ளது என்கிறார்.

இந்தக் கட்டுரையில் ஹார்ட், சங்க கால மன்னனின் செங்கோல், வெண்கொற்றக் குடை, காவல் மரம், சூடிக்கொண்ட மலர், முரசு போன்ற பல்வேறு சின்னங்களும் இலச்சினைகளும் (ACCOUTREMENTS OF AUTHORITY) பற்றி பல்வேறு ஆய்வுத் தகவல்களை முன் வைக்கிறார்.

இக்கட்டுரையை நிறைவு செய்யுமுன், இத்தொகைப் பாடல்களின் காலத்தில், பல்லவ சோழர் காலத்தின் பண்பாக விளங்கிய, சிறு பகுதிகளின் பிராமண - நிலவுடைமை மேலாதிக்கம் தொடங்கியிருக்கவில்லை என்பதைத் தெளிவாக்குகிறார்.

பழந்தமிழர் சமயத்தில் காணலாகும் சில தனித்தன்மைக் கூறுகள் என்ற கட்டுரை இந்த இயலின் மூன்றாம் கட்டுரையாக இடம்பெறுகிறது.

பழந்தமிழர்களின் கடவுளர், அச்சத்தை உண்டாக்கக்கூடிய சூர் அல்லது வருந்துதல் என்னும் பொருள் தரும் அணங்கு என்பதாகவே அமைகின்றன என்பது ஹார்ட் அவர்களின் கூற்றாகும். இறந்தவரின் ஆற்றல் உறையும் மற்றொரு இடமாக நடுகல் வழிபாடு நம்புகிறது. மறவர்களுக்காக எடுக்கப்பட்ட நடுகற்களுக்கு நெல் தூவி வழிபாடு நடத்தப்பட்டது. இன்றும் கேரளத்தில் வாழும் நாயாடி மக்கள் தங்களின் முன்னோர்கள் அவர்களுக்காக எழுப்பப்பட்ட நடுகற்களில் உறைந்திருப்பதாகவே நம்புகிறார்கள். இந்த இறைத்தன்மையே பிற்காலத் தமிழரிடையே சிவலிங்க வழிபாடாக உருமாற்றம் பெற்றுள்ளது.

கடவுள் என்னும் சொல்லின் பகுபத இலக்கணமாகக் கட (கடந்து வருதல்) உள் (மனம்) என்பன அமைகின்றன. உண்மையில் இச்சொல் மனத்தினைக் கடத்தல் என்னும் பொருண்மையில் அமைவதாகச் சொல்கின்றனர். இவ்வாறு கொண்டால், ஏழாம் நூற்றாண்டுவாக்கில் தோன்றிய தேவார திவ்யபிரபந்தங்கள் சுட்டுகிற இரக்கம், மீவியல்புத்தன்மை ஆகியவையே கடவுளரின் பண்புகளாகக் குறித்த எண்ணம் தொல் தமிழர்களிடம் நிலவியது என்று கொள்ள வேண்டியுள்ளது. எனினும் இவ்விலக்கணப் பகுப்பு எனக்குச் சரியாகத் தோன்றவில்லை. பழந்தமிழ் இலக்கியங்கள் சுட்டுகின்ற கடவுள் குறித்தான கருத்தாக்கங்களோடு இது பொருந்துவதாய் இல்லை. பழந்தமிழர்கள் இத்தகைய தன்மை வாய்ந்த கடவுளரை வழிபட்டனர் என எந்தவொரு பாடலும் சுட்டி நிற்கவில்லை. குறுந்தொகை 218ஆம் பாடல் ஒரு பெண் கடவுள் குறித்துப் பேசுகிறது. அவ்விடத்தில் அக்கடவுளரிடம் கடன் ஏதுமில்லை என்ற கருத்தைச் சுட்டுகிறது. அதாவது, நேர்த்திக்கடன் எனப்படும் உயிர்ப்பலி அல்லது, வேண்டுதல் என்னும் பொருளில் அமைகிறது. உள் என்னும் சொல் பெரும்பாலும் ஒரு பெயரின் பின்னொட்டாக அமைந்து, வேரிலிருந்து உருவாகும் ஒரு பெயர்ச்சொல்லை உருவாக்குவதாய் அமைகிறது. சான்றாக அர்+உள் = அருள், பொரு+அள்= பொருள். எனவே, கடவுள் என்னும் சொல் தியாகம் கடன் ஆகியவற்றோடு தொடர்புடையதாய் பழந்தமிழ்க் கடவுளர்கள் பெயர்களுக்கு ஏற்ப அமைந்திருக்கலாம்.

இந்த இயலின், ''தொகைப் பாடல்களின் காலத்தில் தமிழ் நாட்டில் காணப்பட்ட வடமரபுக்கூறுகள்'' என்ற நான்காம் கட்டுரையைக் காண்போம். இக்கட்டுரையில் முதலாவதாக பிராமணர்களைக் குறித்த ஆய்வு தொடங்குகிறது. மிகச்சிறந்த தமிழ்ப் புலவர்கள் பலர் பிராமணர்களாக இருப்பதையும் பிராமணரல்லாத புலவர்கள் பயன்படுத்தும் ஆரிய சமஸ்கிருதக் கூறுகளைக்கூட இவர்களின் பாடல்களில் காண முடியாமையையும் கூறலாம். அதே வேளையில், சில பிராமணர்கள் வடபகுதித் தோற்றம் வாழ்க்கை முறை ஆகியவற்றைத் தக்க வைத்துக்கொண்டு வாழ்ந்துள்ளனர். வேதத் தியாகங்கள் (புறம் 166), அதனோடு தொடர்புடைய வேள்வித் தூண்களையும் (புறம் 224, 400) அறிமுகப்படுத்தினர். முத்தீ வழக்கத்தைக் கையாண்டனர் (புறம் 02) பிராமணன் வடக்கிலிருப்பதைப் போலவே, ஓதுதல் தியாகம் செய்தல், மற்றவர்களை அவ்விரு செயல்களையும் செய்ய வைத்தல், கொடுத்தல், ஏற்றல் என்னும் ஆறு செயல்களையும் செய்வதை, பதிற்றுப்பத்து 24 ஆம் பாடல் குறிப்பிடுகிறது. இது மனுஸ்மிருதி 10.75 உடன் மிகச் சரியாகப் பொருந்துவதாக அமைகிறது.

புத்த ஜாதகக் கதையில் இடம்பெறும் ஒரு புறாவிற்காகத் தனது வாழ்க்கையைத் தியாகம் செய்யத் தயாராகும் சிபி என்னும் மன்னன் கதை, புறம் 37,39 ஆம் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு சமஸ்கிருதப் பெயர் செம்பியன் எனத் தமிழில் மாற்றப்பட்டுள்ளதும் அது தமிழுக்கு மிக இயல்பான ஒன்றாக அமைவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சொர்க்கம் குறித்தான பல வடபகுதிக் கருத்தாக்கங்கள் பாடல்களில் கிடைக்கின்றன. நான்கு பாடல்களில் நரகம் குறித்த செய்திகள் பேசப்பட்டுள்ளன. எல்லாப் பாடல்களிலும் சமஸ்கிருதத்திலிருந்து கடன் பெற்ற சொல்லான நிரைய (சமஸ்கிருதத்தில் நிரய) என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாகலோகம் குறித்துப் பேசும் புறம் 06, அமிர்தத்தைக் குறிக்கும் குறுந்தொகை 83, தேவர்களைக் குறிக்கும் புறம் 62, இந்திரன் அரண்மனையைக் குறிக்கும் புறம் 241, ஊழ்வினையைக் குறித்துப் பேசும் புறம் 213,214 ஆம் பாடல்களைக் குறிப்பிடலாம். புறம் 361 ஆம் பாடல், ஊழ்வினைக் கோட்பாட்டை பிராமணக் கண்ணோட்டத்தில் பார்க்கிறது. பண்டைய தமிழர்களின் சமய அமைப்புகள், வட இந்திய அமைப்புகளைக் காட்டிலும் இயற்கையானதாய் அமைந்தன என்பதை விளக்குவதற்கு புறநானூற்றின் 162 ஆம் பாடலான, ''யாது ஊரே யாவரும் கேளிர்'' என்ற பாடல், அமைகிறது. எனது மதிப்பீட்டில், ஊழ்வினையை விளக்கும் எந்த வடமரபுக் கருத்தாக்கமும் ஆழமானதாகவும், கவிதை நயத்தால் நன்கு விளக்கப்பட்டதாகவும் அமையவில்லை' என்பது ஜார்ஜ் ஹார்ட்டின் துணிபு.

சோதிடம், தேர்கள் போன்ற ஆரியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டவை பற்றிய குறிப்புகளும் உள்ளன. பழந்தமிழ்ப் பண்பாட்டில் புனித ஆற்றலின் இடம் என்னும் ஐந்தாம் கட்டுரையில், தமிழர்களின் தொல் சடங்குகள் பற்றிப் பேசுகிறார் ஜார்ஜ் எல். ஹார்ட்.

சில சடங்குகள் தமிழர்களுக்கு மாத்திரமே இருப்பதாகவும், சில தமிழர்கள் ஆரியார்களுக்குப் பொதுவாக இருப்பாதாகவும் விளக்குகின்றார்.

மன்னன், கற்புடைப் பெண்மை போன்றவற்றில் புனித ஆற்றல் உள் பொதிந்துள்ளதாகத் தமிழர்கள் கருதியதையை ஆசிரியர் இக்கட்டுரையில் எடுத்துரைக்கிறார்.

பெண்ணின் கற்புடைமை குறித்த கருத்தாக்கத்திற்கு வேத கால வட இந்தியாவில் மிகக் குறைந்த அளவிலான முதன்மையே தரப்பட்டது.

விதவை தனது தலையை மழித்துக்கொள்ளல் என்னும் வழக்கமும் அதனோடு தொடர்புடைய பிற விதவைக் கூறுகளும் தமிழில் காணப்பட்டதற்கான பிறகான ஆறு நூற்றாண்டுகள் வரையிலும்கூட வடக்கில் நுழையவில்லை. ஒரு குழு உருவாவதற்கு முன்னதாகவே பிராமணர்கள் அக்குழுவுடன் தொடர்புகொண்டு அக்குழுவினரால் மிகவும் மதிக்கப்படுவனவற்றை அவர்களின் நன்மதிப்பைப் பெறுவதற்காகச் செய்யத் தொடங்கினர் என்பது அவரது விளக்கமாக உள்ளது.

பழந்தமிழ்ப் பாடல்கள் கீழ்ப் பிறப்பு மக்கள் குறித்துப் பலமுறை சுட்டுகின்றன.

புறம் 335 ஆம் பாடலில் தனித்து விளங்கும் ஒரு நிலத்தின் தன்மையை விளக்கும் புலவர், 'துடியன், பாணன், பறையன், கடம்பன் என்று இந்நான்கல்லது குடியும் இல்லை' எனக் குறிப்பிடுகிறார்.

தாழ்த்தப்பட்டவர்கள் என்பதற்கான சான்றுகளாக இங்கு சுட்டப்பட்டவர்கள் யாவரும் வெளிப்படையாக ஒரு பொதுக் கூறினைத் தம்முள் பகிர்ந்துகொள்கின்றனர். இவர்கள் யாவரும் தாங்கள் செய்யும் தொழிலின் காரணமாகப் புனித ஆற்றல் உறையப் பெற்று ஆபத்து வாய்ந்தவர்களாக அமைகின்றனர்.

ஒரு குழுவைச் சேர்ந்த ஆண்,பெண் குழந்தைகள் தந்தையின் அதே தொழிலைப் பின்பற்றுவதாக அகம் முதற் பாடல் விளக்குகிறது. தனது தலைவிக்கு உறுதியளிக்கும் தலைவன், சிறுகாரோடன், பயினோடு சேர்த்திய கல் போல் பிரியலம் என்ற சொல்தான்'' என விளக்குகிறாள். இதையொத்த பாடல்களில், தச்சரின் மகன்கள் (புறம் 206), குயவரின் மகன்கள் (புறம் 32), ஆநிரை மேய்ப்பவரின் மகன்கள் (குறுந்தொகை 241), வெள்வாய் வேட்டுவரின் மகன்கள் (புறம் 324), ஆகியோர் தமது செயல்களால் தமது தந்தைக்கு உதவும் செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

உயர்குடியைச் சேர்ந்த பிராமணரல்லாத எவனொருவனும், தீண்டத்தகாத தாழ்த்தப்பட்ட குடியைச் சேர்ந்தவர்களைத் தங்களின் வீட்டிற்குள் அனுமதிக்க வில்லை. இது தவறுதலாகச் சமஸ்கிருதமயமாக்கம் எனப்படுகிறது. இது பிராமணரல்லாதவர்கள் பிராமணர்களைப் பின்பற்றுதலாலும் அவர்களின் மதிப்பைப் பெற விரும்பியதாலும் ஏற்பட்டதன்று. மாறாகச் சமூகத்தில் உயர் நிலையை அடைய விரும்பும் எந்தக் குழுவும் தன்னைத் தூய்மைக் கேட்டிற்கு உள்ளாக்கும் கூறுகளிலிருந்து வேறுபடுத்திக்கொள்ள எடுக்கும் முயற்சியின் விளைவாகும். இந்தப் போக்கு, பிராமணர்களின் வருகைக்கு முன்பாகவே தமிழகத்தில் காணப்பட்டது. இதன் காரணமாகவே, மனித ஆற்றலைக் கையாள்பவர்கள் தாழ்நிலையினராகக் கருதப்பட்டனர். எவ்வாறாயினும், பிராமணர்கள் இச்செயல்பாட்டிற்குக் கிரியா ஊக்கிகளாகச் செயல்பட்டனர் என்ற ஜார்ஜ் ஹார்ட் கருத்து பொதுவான புரிதலுக்கு மாறானதாக சிந்திக்க வேண்டிய ஒன்றாக உள்ளது.

பழந்தமிழ் நாட்டுப் பாணர்களும் புலவர்களும் என்ற ஆறாம் கட்டுரையில், பழந்தமிழ் நாட்டில் இசையும் நடனமும் சமய முதன்மை பெற்றிருந்தன என்கிறார் ஆசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட். எனவே, ஆடும் பெண்கள், பரத்தமைத் தொழிலை மேற்கொள்ளுபவராகப் பிற்காலத்தில் கோயிலோடு தொடர்புபடுத்தப் பட்டிருத்தல் வேண்டும் என்பது இயற்கையானதாகத் தோன்றுகிறது என வரையறுக்கிறார்.

பாணர்கள்- இக்குழுவில் கோட்டியர்கள், வயிரியர்கள், ஆடல் ஆண்கள், பெண்கள் ஆகியோர் அடங்குவர். கிணை இசைப்பவர்கள் - இக்குழுவின் அகவுநன்களும் துடியன்களும் அடங்குவர். முதல் இவ்விரு குழுக்களும் தொழிலால் நன்கு வேறுபடுத்தப்பட்டன. கிணை இசைப்பவர்கள், பாணர் குழுவைக்காட்டிலும் மதிப்புக் குறைந்தவர்களாய் இருந்தனர். துடி இசைப்பவர்களின் இசை, கிணை இசைப்பவர்களின் இசையைக் காட்டிலும் குறைவானதாய் மதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. நிகழ்த்துக் குழுவினரின் மூன்றாம் பிரிவினராகப் புலவர் அல்லது கவிஞர்கள் அமைகின்றனர். இவர்கள் எழுதிய பாடல்களின் பெரும்பாலான கருப்பொருள்கள், பாணர்கள், பிறர் ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொண்டனவாகவும் குறிப்பிட்ட அளவு அவர்களின் சொந்த வாழ்க்கையிலிருந்து பெறப்பட்டனவாகவும் அமைந்தன. எனினும், புலவர்கள் யாவரும் ஆதிக்கக் குடியைச் சேர்ந்தவர்கள் என்பதையும் அதே நேரம் பாணர்கள் யாவரும் தாழ்த்தப்பட்ட குடியைச் சேர்ந்தவர்கள் என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

இந்திய இசை, கவிதை ஆகியவற்றின் பெரும்பகுதி, தென்னிந்தியத் தாழ்த்தப்பட்ட குடிகளான பாணர்களின் கலைகளிலிருந்து தோற்றம்பெற்றன என்பது உறுதியானால் அதுவே ஆர்வந்தரக்கூடியதுவும் மகிழ்ச்சியளிக்கக்கூடியதுவுமான உண்மையாகும்.

இனி இரண்டாம் இயலுக்குள் நுழைகிறோம். அதன் முதற் கட்டுரை தமிழ் இந்தோ ஆரிய மரபில் உட்பொருள் உத்தி என்ற தலைப்பில் ஆனதாகும்.

புறம் 86, 277, ஐங்குறுநூறு 57, 186, 454, குறுந்தொகை 03, 192, 307, 373, 387 ஆகிய பாடல்களை முன் எடுத்துக்காட்டுகளாக ஜார்ஜ் எல்.ஹார்ட் எடுத்தாண்டு, தமிழ்ப்புலவர்களின் உத்திகள் குறித்துத் தெளிவாக்குகிறார்.

ஒவ்வொரு படிமமும் பெரும்பாலும் சிக்கலான குறியீட்டுப் பண்புகளைக் கொண்டனவாக அமைகின்றன. குறிகளின் இருதிசைப்பண்பு பாடல்களை, வாசகர் மனதில் அதிர்வுத் தன்மையுடையனவாய் மாற்றுகின்றன. ஆர்வந்தரத்தக்க வகையில் இந்த உத்தி சமஸ்கிருத த்வனிக் கோட்பாட்டோடு பொருந்துவதாக அமைகிறது. இக்கோட்பாட்டை ஆனந்தவர்த்தனா என்பவர் தனது த்வனியாலோகா என்ற நூலில் மிகச் சிறப்பாக விளக்கியுள்ளார்.

மேலும், அவர் "மகாபாரதத்தில் குறைவான புரிதல் திறன் உடையவராக இருந்தால் மட்டுமே எந்தவொரு அணியின் ஒட்டுமொத்தக் கருத்தையும் தவற விட முடியும். அதே நேரம், தமிழில் இடம்பெறும் பாடல்கள் யாவும் மிகவும் சிக்கல் வாய்ந்தனவாக அமைகின்றன. அவற்றின் இரு நிலைப் பயன் விளைவுகளும் அணிகளின் தாக்கங்களும் பொதுத்தன்மை வாய்ந்தனவாகத் தோற்றமளித்தாலும் சில இடங்களில் மிகவும் கடினமானதாகவும் இன்றும் கூட அவை குறிப்பிடும் மையப்பொருளை, உறுதியாக விளக்க முடியாதனவாகவும் அமைகின்றன" என்றும் கூறுகிறார்.

தமிழில் காணப்படும் பல மரபுக்கூறுகளும் உருவகங்களும் சத்யசயீ இன் வழியாக இந்தோ ஆரியத்தில் முதலாவதாக தோற்றம்பெறுகின்றன என்பது பின்னர் விளக்கப்படும். தமிழில் இரண்டு பொருட்களை ஒப்பிடும்போது பெரும்பாலும் 'போல' முதலிய உவம உருபுச்சொற்களும் வெளிப்படையான உருவகமும் பயன்படுத்தப்படுவதில்லை. மாறாக, இரு பொருட்களும் பாடலின் வெவ்வேறு இடங்களில் குறிக்கப்பட்டு, அவை வாசகரால் தொடர்புபடுத்தப்படும்படி விடப்படுகின்றன. இந்தோ ஆரியத்தில் இத்தகைய அமைப்பு தமிழைப் போன்று பொதுவானதாக அமையவில்லை.

நல்ல தமிழ்ப்பாடல் என்பது முடிவில்லாத நதியைப் போன்றதாக அமைகிறது. சமஸ்கிருதச் செய்யுட்களும் அதன் வெளிப்பாட்டிற்கு உட்பொருளைச் சார்ந்துள்ளபோதும் அவை அரிதாகவே நல்ல தமிழ்ச் செய்யுட்கள் கொண்டுள்ளதைப் போன்று இருதிசைப் பயன்விளைவைப் பெற்றனவாக அமைகின்றன.

உட்பொருளைத் தெளிவாக வெளிப்படுத்தும் தமிழின் மற்றுமொரு பண்பாக, ஒரே தொடரில் எளிமையாகப் பல தெளிவற்ற உறவுடைய பொருட்களை இணைத்துக்கொள்ளுதல் என்பது அமைகிறது. இதனை ஆங்கிலத்தில், தனித் தனித் தொடர்களாக அமைக்க வேண்டியுள்ளது. ஒரு சொல் அல்லது சொற்றொடருக்கான பொருள், ஆங்கிலம் அல்லது சமஸ்கிருதத்தைக் காட்டிலும் மிக இயல்பாக வாசகரின் மனதில் கடத்தப்படுகிறது.

இந்தோ ஆரியத்திலும் தமிழிலும் வெவ்வேறு வகையான கவிதைகள் இடம்பெறுவதற்கான மற்றொரு காரணம், வடக்கிலும் தெற்கிலும் நிலவிய வெவ்வேறு வகையான சமயங்களே. சமஸ்கிருதத்தின் சமய மரபு அதன் இலக்கியத்தை எடுத்துரைப்புக் கதை சொல்லல் முறைக்கும் விளக்க முறைக்கும் மாற்றியுள்ளது. இவை, வெறுமனே கதை சொல்லல் முறையின் ஒரு பகுதியாகவும் தமிழில் காணப்படுவது போன்று உள்ளுணர்வோடு தொடர்புடைமை, பெயர் சுட்டாமை, உட்பொருளை முதன்மையாகப் பயன்படுத்தும் அக நோக்குத் தன்னுணர்வுப் பாடல்களைக் கொண்டுள்ளமை ஆகியவற்றுக்கு மாறானதாக அமைகின்றன. தமிழ்ப்பாடல்கள் அர்த்தங்களின் சிக்கலான ஊடாட்டத்தின்போது உட்பொருளை வெளிப்படுத்துவதில்லை.

தமிழ் நாட்டில் பெரும்பாலும் புராணம் என்பதே இடம்பெறவில்லை. குறைந்தபட்சம் பழைய பாடல்களிலிருந்தும் பிற்கால மரபுகளிலிருந்தும் கடவுளர் பற்றிய பெரும்பாலான கதைகள் யாவும் வடக்கிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதைத் தீர்மானிக்கலாம். வட இந்தியக் கூறுகளின் தாக்கத்தினால் பண்டைத் தமிழர்களின் சமயத்தில் ஏற்பட்ட உருமாற்றமே அவர்களின் இலக்கியத்தில் காணப்பட்ட உட்பொருள் உத்தி மெதுவாகத் தரமிறங்கியமைக்கான முதன்மைக் காரணம் என எனக்குத் தோன்றுகிறது. சிலப்பதிகாரக் காலத்திலேயே உட்பொருளின் பயன்பாடு மிகக் குறைந்த முதன்மையையும் தொகைப் பாடல்களில் இடம்பெற்றதைக் காட்டிலும் மிகக் குறைந்த நுட்பத்தையும் பெற்று, வட மூலங்களிலிருந்து எடுக்கப்பட்ட அல்லது நகல் செய்யப்பெற்ற கடவுளர் பற்றிய கதைகள் நிறைந்தனவாய் அமைந்தன. தமிழ்ப்புலவர்கள் எப்போதும் தமிழ் மரபுகளைப் பயன்படுத்தியும் பெரும்பாலான தமது எண்ணங்களைப் பண்டைத் தமிழ் இலக்கியங்களிலிருந்தும் பெற்று வந்துள்ளனர். புராணக்கதைகள் மிகுந்த புகழைப் பெற்றதும், பக்தி சமயத்தின் முதன்மைக் கூறாக அமைந்ததும் மட்டுமல்லாது உட்பொருள் பொதிந்த சிறிய தன்னுணர்வுப் பாடல்கள் மெல்ல மெல்ல அருகத் தொடங்கின. இருப்பினும், இத்தகைய பாடல்கள் தமிழிலக்கியப் பரப்பு முழுவதிலும் ஓரளவு எழுதப்பட்டுள்ளன. இன்று பெரும்பாலான தமிழர்களின் தமிழிலக்கியத்தின் மிகச் சிறந்த படைப்பாக கம்ப இராமாயணம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் சமஸ்கிருத எதிரிணைகளிடமிருந்து மிக முதன்மையான வேறுபாடுகளையும் கொண்டுள்ளது கம்பராமாயணம். இந்தப் பாடல்களின் விவரிப்பின் நோக்கம், உட்பொருளின் சிக்கலான ஊடாட்டத்தைத் தோற்றுவித்தல் என்பதைக் காட்டிலும் ஒரு குறிப்பிட்ட மன நிலையை உருவாக்குதல் என்பதே ஆகும்.

நூலின் எட்டாம் கட்டுரையாக, யாப்பியல் - தமிழ் - இந்தோ ஆரிய இணை நிலைகள் குறித்து ஆசிரியர் ஆய்வு செய்கிறார்.

தமிழ் யாப்பமைப்பு சீர், தளை, அடி என்ற முதன்மையான மூன்று கூறுகளைக் கொண்டுள்ளது.

கலித்தொகை, பரிபாடல் தவிர்த்த பிற தொகைப் பாடல்கள் அனைத்தும் எழுதப்பட்ட பொதுவான யாப்பாக ஆசிரியப்பா (அகவலோசை) அமைகிறது. கலித்தொகைப் பாடல்களில் குறிப்பிட்ட அளவில் பயன்படுத்தப்பட்டு, தொகைப் பாடல்களின் காலத்திற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு எழுதப்பட்ட பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்ட யாப்பாக வெண்பா யாப்பு (செப்பலோசை) அமைகிறது. ஆசிரியப்பா யாப்பைக் காட்டிலும் வெண்பா யாப்பில் தளை அதிகம் பயன்படுத்தப்படுகிறது. "இந்த அமைப்பு முதலில் பார்ப்பதற்கு செயற்கைத்தன்மை வாய்ந்ததாகத் தோன்றினாலும் சமஸ்கிருத யாப்பைக் காட்டிலும் மேன்மை பொருந்திய இதன் தன்மை வியக்கத்தக்கதாக அமைகிறது; தமிழிலிருந்து இயல்பானதாக உருவாகி, 512 நீண்ட அடிகளைக்கூட உருவாக்க முடியும் என்பதன் வழி, வெண்பா யாப்பின் சிறந்த மெல்லிசை குறித்து தெளிவாக அறிய முடிகிறது" என்கிறார் ஜி.யூ.போப்.

சமஸ்கிருதத்திற்கு உரிய மரபார்ந்த செவ்வியல் யாப்புகள் பொதுமக்கள் பாடல்களிலிருந்து எடுக்கப்பட்டவையாகத் தோன்றவில்லை. நாட்டுப்புறப் பாடகராலும் பாணராலும் பாட முடியாத வகையில் மிகக் கடினத்தன்மை வாய்ந்தவையாக இவை அமைகின்றன. மாறாக, இவை யாவும் பெரும்பாலும் செவ்வியல் புலவர்களால் செயற்கைத் தன்மையில், நவீன சமஸ்கிருதக் கவிதைகளுக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் தமிழ் இணை நிலைகளைத் தேடுவது பயனற்றதாகிவிடுகிறது.

நூலின் ஒன்பதாம் கட்டுரை, "தமிழ்க் கவிதையியல் மரபுகளும் இந்தோ ஆரிய இணை நிலைகளும்" என்பது பற்றியதாகும்.

புறப்பாடல்கள் தொல்காப்பியத்தாலும் அப்பாடல்களில் இடம்பெறும் குறிப்புகளாலும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இக்குறிப்புகள் திணை அல்லது அது கையாளும் கவிதையியல் சூழல் அல்லது துறை என்பனவாக அமைகின்றன. ஒரு சில புறப்பாடல் அடிக்கருத்துக்களே இந்தோ ஆரிய இணை நிலைகளைக் கொண்டனவாக அமைகின்றன. புறம் 135 ஆம் பாடல், "என் பின்னே வளையல் அணியப் பெற்ற விறலி, புலி உறையும் உயரமான மலைகளின் சிறிய வழியின் கண் வந்தமையால் துன்புற்று நிற்கிறாள். எம் தலைவனே, உனது புகழை நினைத்தபடி, சிறிய யாழை ஒரு கையில் அணைத்தபடி நின்பால் வந்தேன். நினது அவையில் பரிசிலர்களைக் காணும் போதெல்லாம் அவர்களுக்கு யானைகளை வழங்கக்கூடியவன் நீ" சுபாஷித 1435 ஆம் பாடல் இதை ஒத்ததாய் அமைகிறது.

"எனது முதல் முடிவின்போது பயிர் முளை விட்டது.

**கிளம்பியவுடன் இலைகள் உருவாயின.**
**என் பயணத்தினூடே தவிர்க்கத் துவங்கியது**
**நகரத்தை அடைந்த போது கிளைகள் பரவின**
**காலையில் மக்களைக் காணும் போது**
**மொட்டுக்கள் அரும்பின**
**மன்னா, இப்போது உன்னைக் கண்டவுடன்**
**என் உள்ளத்து ஆசை என்னும் மரம்**
**மலர்ந்து கனியாக உருவெடுத்துள்ளது**

**(சுபாஷித 1435)**

சமஸ்கிருதத்தில் இடம்பெறுவதைப் போலவே, தமிழில் இடம்பெறும் மிகுதியான புறப்பாடல்கள் மன்னனைப் போற்றுதலோடு பாடாண் திணை தொடர்புடையனவாய் அமைகின்றன. இவ்விரண்டும் ஒத்த தன்மையனவாய், பெரும்பாலும் போரில் ஈடுபடும் மன்னனின் வீரம், அவனது பகைவர்களின் துயர நிலை ஆகியவற்றை விளக்குவனவாய் அமைகின்றன.

தமிழில் அகப்பாடல்கள் யாவும் ஒரு குறிப்பிட்ட சூழலில் இடம்பெறும் பாத்திரங்களின் வாயிலாகப் பேசப்படுவனவாக அமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய பாத்திரங்களாகத், தலைவன், தலைவி, நற்றாய், செவிலித்தாய், தோழி, தோழன், தூதாக அனுப்பப்படும் தலைவனது பாணன், உடன்போக்குச் செல்லும் இணையரைக் காணும் கண்டோர், சுற்றத்தார், பரத்தை, பரத்தையரின் தோழி ஆகியோர் அமைகின்றனர். ஆர்வந்தரத்தக்க வகையில் எந்தவொரு பாடலிலும் தலைவியின் தந்தை, தலைவனது உறவினர்கள் ஆகியோர் கூற்று நிகழ்த்துபவர்களாக அமையவில்லை. இம்மரபுகள் முதன்முதலாக இந்தோ ஆரிய சத்யசயீ-யில் காணப்படுகின்றன. எனினும், இவற்றை இப்படைப்பின் எல்லாப் பாடல்களிலும் காண முடிவதில்லை. இங்குள்ள பெரும்பாலான பாடல்களில் புலவரே கூற்று நிகழ்த்துபவராக அமைகிறார்.

இந்த இந்தோ ஆரிய மரபுகள் தமிழிலிருந்து நேராகக் கடன் பெற்றிருக்குமாயின், அவை தமிழ் மரபுகளைத் தற்போது செய்வதைக் காட்டிலும் இன்னும் கூடுதலாகப் பிரதிபலித்திருக்கும். எனவே, இவ்விரு மரபுகளும் ஒரு பொதுவான மூலத்திலிருந்து பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

தமிழின் குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் மற்றும் தூதுப்பாடல்கள் மரபுகளும் சமஸ்கிருத மரபுகளும் எவ்வாறு ஒத்திசைவாக அமைகின்றன என்பதை இந்த அத்தியாயத்தில் பல பக்கங்களில் சில எடுத்துக்காட்டுகளுடன் ஜார்ஜ் எல் ஹார்ட் நிறுவி முடிவுரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

தமிழ் மற்றும் சமஸ்கிருத கவிதை மரபுகளும் பொதுவான, புகழ் பெற்ற ஐயத்திற்கு இடமின்றி வாய்மொழி மரபிலிருந்து வளர்ச்சியடைந்தனவாக அமைகின்றன. இந்த மரபு தக்காணப் பண்பாடு முழுவதிலும் மிகச் சிறப்புடைய பழமையானதாக செழிப்புற்றிருக்க வேண்டும். எனவே, தக்காணம் முழுமையும் பரவியிருந்த ஓர் இலக்கிய மரபு, ஆரியமும் தக்காணப் பண்பாடும் கலந்திருந்த மஹாராஷ்ட்ராவிலும், தக்காணப் பண்பாட்டிலிருந்து வெளிப்படையாய் உருவாகி, சிறிய அளவிலான ஆரியம் மற்றும் பிற வெளிப்புற ஊக்கிகளைப் பெற்றிருந்த

தமிழ் நாட்டிலும் குறிப்பிடத்தக்க வகையில் ஒரே மாதிரியான கவிதையியலைத் தோற்றுவித்தது என்பது ஏற்கத்தக்கதாய் அமைகிறது.

பழைய தக்காணக் கவிதை மரபுகளை மாறாமல் தமிழர்கள் பாதுகாத்ததற்கான காரணம் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கும் பாடல்களின் தொகையாக்க காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ்நாடு பெரிய அளவில் வேற்றுப் பண்பாட்டினரின் தாக்கத்திற்கு உட்படவில்லை என்பதும் ஆகும். இக்கால கட்டத்தில் வட நாட்டிலிருந்து பல புதிய வரவுகளும் சிந்தனைகளும் வரத் தொடங்கின. ஆரியக் கடன் வாங்கலால், தொகைப் பாடல்களின் மொழி பெரிதும் மாறவில்லை. பழைய திராவிட வழக்கங்கள் பெரும்பாலும் கோலோச்சின. சமஸ்கிருதத்தில், திராவிடத்திற்கே உரிய அடிக்கருத்துகள் கூடுதல் மாறுதல்களையும் புனித நீக்கத்தையும் அடையப் பெற்றன. தமிழ்ச்சமூகம் முதன்மையாக ஒரு தார மணத்தைக் கொண்டுள்ளமையால், இங்குப் பொறாமையைத் தூண்டுவதற்கு புலவன் தலைவனது பரத்தமை ஒழுக்கம் பற்றிப் பேச வேண்டி நேர்ந்தது. பல தார மணம் நிறுவனப்படுத்தப்பட்டதே ஆரிய இலக்கியங்களில் திருமணம் பற்றியான திராவிட மதிப்பீடுகள் புனித நீக்கம் செய்யப்பெற்றமைக்குப் பெரிதும் காரணம் ஆகலாம்.

பல உதாரணங்களின் அடிப்படையில், தமிழ்க் கவிதைகளை உருவாக்கிய தென்னிந்திய மரபுகளுக்கும் முற்கால சமஸ்கிருதக் கவிதைகளுக்கும் இடையே ஓர் உறவு இருப்பது தெளிவாகிறது. இந்த உறவு குறித்து விளக்குவதற்கு மூன்று விளக்கங்கள் சாத்தியமாகின்றன. அவை,

1. தமிழ் சமஸ்கிருதத்திலிருந்து கடன் பெற்றிருத்தல் வேண்டும்.
2. ஐயத்திற்கு உரியதாக அமையும் அடிக்கருத்துகள், முழு இந்தியத்தன்மை வாய்ந்தனவாக சமஸ்கிருதக் காப்பியக் காலத்திற்கு முன்பே இருந்திருத்தல் வேண்டும்.
3. சமஸ்கிருதம், காப்பியங்கள் உருவான காலகட்டத்தில் தென்னிந்திய மரபுகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இந்த சாத்தியக் கூறுகளுள், முதலாவது முற்றிலும் தள்ளுபடி செய்யக்கூடியதாக அமைகிறது. இந்த அடிக்கருத்துகள் இந்தோ - ஆரியப் பண்பாடுகளைக் காட்டிலும் தமிழ்ப் பண்பாட்டோடு நன்றாகப் பொருந்துவனவாக அமைகின்றன. பழந்தமிழ் நாட்டில் மலர்கள் பல்வேறு பயன்பாடுகளைக் கொண்டிருந்தன. இம்மலர்களை அடிப்படையாக வைத்து சில நிகழ்வுகளை நடத்துவது தமிழ்ச்சமூகத்தில் குறிப்பிடத்தக்க அம்சங்களுள் ஒன்றாக அமைகிறது. அதே நேரம், இந்தோ - ஆரிய வாழ்க்கை முறையில் மலர்கள் இத்தகைய முதன்மை இடம் பெறவில்லை.

சமஸ்கிருதக் காப்பியக் காலத்திலேயே குறிப்பிடத்தக்க திராவிடக் கூறுகள் இந்தோ ஆரியத்தில் நுழைந்தன. இந்த நுழைவு சொற்களாக, பண்பாடுகளாக, யாப்புகளாக அமைந்தன. கவிதையியல் மரபுகளும் அத்திராவிட உட்புகுதலோடு சேர்க்கத்தக்கதாய் அமைகிறது. காளிதாசரின் காலத்தில் சமஸ்கிருதக் கவிதைகளில் பல புதிய கூறுகள் தென்னிந்திய மரபிலிருந்து நுழைந்தன. காளிதாசருக்குப் பிற்கால சமஸ்கிருத ஆசிரியர்கள் உணர்திறன் குறைந்தவர்களாகவே எனக்குத் தோன்றுகின்றனர். இவர்களிடம் நுட்பமான செய்யுட்களை அரிதாகவே காண முடிகிறது. விதிவிலக்காகப் பெயர் அறியாப் புலவர் இயற்றிய பாகவத புராணம் அமைகிறது. இந்த ஆசிரியர், தனக்கான உந்துதலை தமிழ் வைஷ்ணவத் துறவிகளின் படைப்புகளிலிருந்தும் அவர்களது மரபிலிருந்தும் பெற்றுக்கொண்டார் எனலாம்.

சமஸ்கிருதம் தவிர்த்த இந்தியாவின் பிறமொழி இலக்கியங்களுள் தமிழ் ஒப்புயர்வற்ற இடத்தைக் கொண்டுள்ளது. இதுவே மூத்ததும், சமஸ்கிருதத்தை மிகக் குறைந்த அளவில் சார்ந்திருப்பதும் ஆகும். தமிழ்க் கவிதைகளின் தொகைப் பாடல்களில் கொண்டிருந்த விரிவான மற்றும் நேர்த்தியான உட்பொருள் உத்திகளைத் தக்கவைக்கவில்லை என்பதை வருந்துவதற்குரியதாக சிலர் கருதுகின்றனர். ஆனால், உட்பொருள் உத்திகள் தொகைப் பாடல்களின் காலத்திலேயே முழுமை அடைந்துவிட்டதாக நான் கருதுகிறேன். அதனை அதற்கு மேலும் வளர்த்தெடுக்க முடியாது. தமிழ்க்கவிதை மரபு சிலப்பதிகாரத்தின் வழியாகப் புதிய பாதைகளைக் கண்டறிந்ததை நற்பேறாகவே கருதுகிறேன். உண்மையில், இடைக்கால இலக்கியத்தின் உச்சமாக கம்பராமாயணம் அமைகிறது. நவீன தமிழ்க்கவிதை பழைய தொகைப் பாடல்களின் காலத்திலிருந்து துவங்கி தற்போது அரை வட்டத்தை அடைந்துள்ளது.

இன்று தமிழ்த் தொகைப் பாடல்கள் தமிழ் எழுத்தாளர்களால் படிக்கப்படுவதில்லை. ஒரு வேளை தமிழர்கள் தங்களது மிகப் பழைய இலக்கியங்களை மீட்டெடுத்து அவற்றின் உத்திகளைச் சரியாகப் புரிந்து கொண்டால், தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளில் புதிய பரிமாணம் உருவாகும். அது நிகழுமானால், தமிழ் நாடு மீண்டுமொரு முறை உலகின் நுட்பமான இலக்கியங்களின் இல்லம் ஆகும் என ஜார்ஜ் ஹார்ட் முத்தாய்ப்பாக நிறைவு செய்கின்றார்.


மொத்தத்தில் இந்த நூல் தமிழர்கள் தங்களைத் தாங்களே அறிய ஓர் அரிய பொக்கிஷம் எனலாம்.

மொழிபெயர்ப்பாளர் பு.கமலக்கண்ணன், தில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் (JNU) ஆய்வு மாணவர். இந்த நூல், அவர் ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளராகவும், ஆய்வாளராகவும் மிளிர இருக்கின்றார் என்பதைக் கட்டியம் கூறுகின்றது எனலாம்.


●

(கட்டுரையாளர், இலக்கியத் திறனாய்வாளர். மதுரை அகில இந்திய வானொலி ஓய்வுபெற்ற நிகழ்ச்சித் தயாரிப்பாளர்.)


## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் வெளியீடாக
## எஸ்.ஜெயசீல ஸ்டீபன் அவர்களின் நூல்கள்





₹ 300/-




₹ 275/-




₹ 250/-




₹ 200/-




₹ 160/-




₹ 375/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in




# மனிதக்கழிவுகளை அகற்றும் சமூகத்தின் பாதுகாப்பும் மறுவாழ்வும்

ம.சக்திவேல்

21ஆம் நூற்றாண்டில் உலகச் சமுதாயம் எண்ணற்ற மாற்றத்திற்குரிய வளர்ச்சிகளை எதிர்நோக்கி பயணப்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில், இந்தியத் துணைக்கண்டம் தன் சமூகப் பொருளாதார வளர்ச்சியை ஒழுங்குபடுத்தி, உலக சமூகத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி, தனக்கான அங்கீகாரத்தை நிலைநிறுத்திட விழைகிறது. ஆனால், சாதியக் கட்டமைப்புகளால் சில சமூகப் பொருளாதாரச் சவால்களை இன்றளவும் எதிர்கொண்டே வருகின்றது. இந்திய விடுதலையின் 75ஆம் ஆண்டு கொண்டாட்டங்களைத் துவங்கியுள்ள இத்தருணத்தில், சில சமூகக் குழுக்களினுடைய சிக்கல்களைத் தீர்க்க இயலாமலும், அவர்கள் சமத்துவத்துடனும் கண்ணியத்துடனும் வாழ்வதற்கான உரிமையினை, இந்திய அரசமைப்பு சட்டத்தால் உறுதியளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை உறுதிசெய்திட இயலாச் சூழலிலேயே உள்ளது என்பதை புறம் தள்ள இயலாது. இதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமெனில், ‘மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றுவது’ (மலம் அள்ளுதல்) என்கின்ற காட்டுமிராண்டித்தனமான நடைமுறையைக் குறிப்பிடலாம்.

சமூகத்தில் இன்றளவும் நிலவிவரும் இந்த மனிதத்தன்மையற்ற செயலுக்கு, ஒரு முடிவுரை எழுத, இந்திய அரசும், மாநில அரசுகளும் 1950 முதல் பல்வேறு நிர்வாக, சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டபோதிலும், இலக்கினை எட்டிட இயலவில்லை. அரசின் நடவடிக்கைகள் எதிர்பார்த்த பலனை அளிக்காததற்கு மிக முக்கிய காரணமாகக் கருதப்படுவது, இந்திய சமுதாயத்தில் நிலவிவரும் சாதியக் கட்டமைப்பும், தனி மனித விழிப்புணர்வு இன்மையுமே. எனவேதான் இன்றளவும் முழுமையாக இந்தச் சமூக அவலம் ஓய்ந்தபாடில்லை. இக்கட்டுரையானது, மனிதக்கழிவுகளை மனிதர்களே அகற்றும் சமூகக் குழுவின் அவல நிலைகளை எடுத்துரைத்து, அதற்காக அரசு மேற்கொண்ட பல்வேறு நிர்வாக, சட்ட நடவடிக்கைகளை விரிவாக விளக்கி, அவற்றின் தோல்விக்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்ய விழைகிறது.

### மனிதக்கழிவுகளை மனிதனே அகற்றுவது: தோற்ற சுருக்கம்

மனிதக்கழிவுகளை மனிதனே அகற்றுவது என்பது காலம் காலமாக சாதிய பழக்கமாக மாறி, தனிமனித வாழ்வின் இரண்டறக் கலந்த ஒரு விடயமாகவும் தொழில்முறையாகவும் உருப்பெற்றது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமெனில், இது பரவலாக

வடமாநிலங்களிலும், சில தென்னிந்திய மாநிலங்களிலும் பின்பற்றப்பட்டு வந்த ஒரு சமூக அவலம். சுய பிரகடனப்படுத்தப்பட்ட உயர்சாதி குடும்பங்கள், ஒரு குறிப்பிட்ட சாதியைச் சார்ந்த ஒரு நபரையோ அல்லது அவரது குடும்பத்தினரையோ, தங்களது வீட்டிலோ அல்லது பகிரப்பட்ட கழிப்பறைகளிலோ துப்புரவு நடவடிக்கைகளுக்காகப் பணியமர்த்தி, தண்ணீர் இல்லாத சுகாதாரமற்ற கழிவறைகளைத் தூய்மை செய்யவும், மனிதக்கழிவுகளை கால்நடைக்கழிவுகளை அகற்றுவதுபோல் கைகளால் அகற்றி, தலையில் சுமந்து, அப்புறப்படுத்தவும் வழிவழியாக பணிக்கப்பட்டனர். இந்த சுகாதாரமற்ற, தண்ணீர் கொண்டு சுத்தம் செய்ய இயலாத கழிவறைகள்தான் உலர்கழிவறைகள் என்பன.

வரலாற்று ஆய்வுகளின் வழியே, இந்தச் சமூக அவலத்தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள், ஒரு குறிப்பிட்ட சாதியையோ அல்லது குறிப்பிட்ட வகுப்பினையோ சார்ந்தவர்கள் என்பது புலப்படவில்லை. மாறாக இது, அடிமைகளுக்கு வழங்கப்பட்ட தண்டனை முறையாகவே கருதப்பட்டது. பின்னாட்களில், இது ஒரு தொழிலாக நடைமுறைப்படுத்தப்பட்டு, சமூக, பொருளாதார காரணிகளை உள்ளடக்கியதாக உருமாற்றப்பட்டு, சாதியக் கட்டமைப்பின் வழியே ஒரு குறிப்பிட்ட சாதி அல்லது வகுப்பினரின் மீது திணிக்கப்பட்டிருப்பதாகப் பதிவிடப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து நிகழ்த்தப்பட்ட பல்வேறு வரலாற்று ஆய்வுகளின் மூலம், இந்த சமூக அவலத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள், சில குறிப்பிட்ட சாதியையோ அல்லது குறிப்பிட்ட வகுப்பினையோ சார்ந்தவர்கள் என்பதும் வெளிப்படுகிறது.

ஒருங்கிணைந்த இந்தியாவின் 1931 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, சுமார் 20 லட்சம் மக்கள், இந்தத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. சுதந்திரத்திற்குப் பிறகு, இந்த எண்ணிக்கை 1961இல் 8.2 லட்சமாகவும், 1981இல் 6.18 லட்சமாகவும், 1989இல் 4 லட்சமாகவும் கணக்கிடப்பட்டது. இருபத்திஒன்றாம் நூற்றாண்டில், 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, சுமார் 80 ஆயிரம் பேர் இத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகவும், இதற்குக் காரணமான தண்ணீர் கொண்டு சுத்தப்படுத்த இயலாத சுமார் 26 லட்சம் உலர்கழிவறைகள் பயன்பாட்டில் இருந்தன என்பதும் அதிர்ச்சியளிக்கக்கூடிய தகவல்களாக உள்ளன.

சமீபத்திய 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தரவுகளின்படி, சுமார் 53,130 பேர் இந்தத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகவும், இதில் 50 சதவீதத்திற்கும் அதிகமானோர் உத்தரப் பிரதேசத்தில் மட்டும் உள்ளதாகவும் தெரியவருகிறது. மனிதக் கழிவுகளை மனிதர்களே அள்ளும் முறை நாட்டின் பெருவாரியான பகுதிகளில் ஒழிக்கப்பட்டுவிட்டாலும், பாதாள சாக்கடைகளை சுத்தம் செய்யும் முறையிலும், பிற கழிவு நீர் தொட்டிகளைச் சுத்தம் செய்யும் தொழிலிலும், இந்தத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தவர்களே இன்றளவும் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள் என்பதும் புலப்படுகிறது. மிக அபாயகரமான இச்செயல்களின் விளைவாக, பல்வேறு இறப்புகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 1993 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை சுமார் 954 பேர் உயிரிழந்திருப்பதாகவும், இதில் 2019 ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 110 உயிரிழப்புகள் நிகழ்ந்ததாகவும், 2020-2021 ஆண்டில் மட்டும் சுமார் 140 உயிரிழப்புகள் நிகழ்ந்ததாகவும் அரசாங்கத் தரவுகள் தெரிவிக்கின்றன.

**நிர்வாகரீதியிலான நடவடிக்கைகள்:**

இந்திய அரசமைப்புச் சட்டத்தினால் வலியுறுத்தப்பட்டுள்ள சமூக, அரசியல் மற்றும் பொருளாதார சமத்துவத்தை அனைவருக்கும் உறுதிசெய்வதற்காக, நாடு விடுதலையடைந்தது முதல், இந்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளைச் செவ்வனே மேற்கொண்டு, சமூகத்தில் நிலவும் சமத்துவமின்மையை நிவர்த்தி செய்து, ஒடுக்கப்பட்ட சமூக மக்களையும் உள்ளடக்கியதான ஒரு வளர்ச்சியை எட்டிட விழைகிறது.

இந்திய விடுதலைக்குப் பிறகு, 1949 ஆம் ஆண்டு மும்பை அரசாங்கத்தால் (அன்றைய பாம்பே அரசாங்கத்தால்) முதன்முதலாக இந்த மனிதக் கழிவுகளை அகற்றும் தொழிலாளர்களின் வாழ்வியல் சூழலை ஆராய்வதற்காக, பி.என். பார்வே தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. 1952ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட இக்குழுவின் அறிக்கையானது, மனிதக்கழிவுகளை தலையில் சுமப்பது, கைகளால் அகற்றுவது போன்ற பணிகளில் அன்று பரவலாகப் பணியமர்த்தப்பட்டு வந்த பாங்கி சாதியினரை அப்பணியமர்த்தலிலிருந்து முற்றிலுமாகத் தடை செய்ய வேண்டும் எனவும், நகர்ப்புற பகுதிகளில் நவீன கழிப்பறைகள் கட்டுவதன் மூலமாக, இந்த அவலச் செயலைத் தடுத்து நிறுத்த முடியுமெனவும், வழிவழியாக இந்த மனிதக்கழிவுகளை அகற்றும் தொழிலில் ஒரு குடும்பத்தைச் சார்ந்தோ அல்லது ஒரு வீட்டைச் சார்ந்தோ பணிபுரிந்து வரக்கூடிய முறையை முற்றிலுமாக நீக்கி, கழிவறைகளை நகராட்சி வசம் கொண்டு வருவதன் மூலமாக, பொது கழிப்பறை வசதியை அனைவருக்கும் வழங்க முடியும் எனவும், இதன் மூலமாக இப்படிப்பட்ட அவதொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், இந்த நவீன கழிப்பறைகளை அமைப்பதன் மூலமாக அவர்களுக்கு ஏற்படும் வேலையில்லாத் திண்டாட்டம் என்னும் சிக்கலினைக் கருத்தில் கொண்டும், அவர்களுக்கு தகுந்த சமூக பாதுகாப்புகளை வழங்கி, அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசு சீரிய முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் பரிந்துரைத்தது. இக்குழுவினுடைய அறிக்கையானது ஒன்றிய அரசினால் அனைத்து மாநில அரசுகளுக்கும் வழங்கப்பட்டு, மேற்சொன்ன கருத்துக்களை நடைமுறைப்படுத்த பணிக்கப்பட்டன.

இதன் பிறகு, 1955 ஆம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் இந்த அவலச் செயல் குறித்த தனது கவலையைத் தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், தேசத்தந்தை காந்தியடிகள் சுட்டிக்காட்டிய, இந்த மனிதாபிமானமற்ற நடைமுறையை ஒழிப்பதற்காக, பல்வேறு நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தது. பலவகையான திட்டமிடுதலுடன்கூடிய நிதி உதவிகளை நகராட்சிகளுக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி, நவீன கழிப்பறைகளை அமைப்பதன் மூலமாக, இந்த சமூக அவலத்தினை முற்றிலுமாகக் களைந்திட இயலும் எனவும் தீர்மானமாகத் தெரிவித்தது. இதனைத் தொடர்ந்து, ஒன்றிய அரசு 1957ஆம் ஆண்டு பேராசிரியர் என். ஆர். மால்காணியின் தலைமையில் ஒரு குழு அமைத்து, இந்த மனிதக் கழிவுகளை அகற்றும் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தவர்களுடைய வாழ்வியல் சூழல் குறித்த ஆய்வினை மேற்கொள்ளப் பணிக்கப்பட்டது.

இக்குழுவானது பல்வேறு கட்ட ஆய்வுகளுக்குப் பிறகு, 1960இல் தனது அறிக்கையினைச் சமர்ப்பித்தது. குறிப்பிட்டு சொல்லக்கூடிய பின்வரும் பல்வேறு பரிந்துரைகளை வழங்கியது. அதில் அரசு அலுவலகங்கள், பள்ளிகள், பொதுக் கட்டிடங்கள், மருத்துவமனை போன்றவற்றில் இயன்ற அளவு தண்ணீரால் சுத்தம் செய்யக்கூடிய கழிவறைகளைப் பயன்படுத்துதல் அல்லது மலக்குழி (செப்டி டேங்க்) கழிவறைகளைப் பயன்படுத்துதல், கைகளால் மலம் அள்ளுவதைத் தடை செய்தல், பாதுகாப்பு உபகரணங்களையும் கையுறைகளையும் வழங்குதல், மனிதக்கழிவுகளைத் தலையில் சுமப்பதைத் தடைசெய்தல், இந்தியா முழுவதும் உள்ள தொடர்வண்டி நிலையங்களில் பாதுகாப்பான கழிவறைகளை அமைத்தல், பல வட இந்திய மாநிலங்களில் பின்பற்றப்பட்டு வந்த, சாதிய அடிப்படையில் வழிவழியாக கழிவறைகளை சுத்தம் செய்யும் முறையைத் தடைசெய்தல், உள்ளாட்சி அமைப்புகள் இந்த சமூக அவலத்தைப் போக்குவதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகை செய்யும் வகையில், நிதி உதவிகளை அளித்தல் என விரிவான பரிந்துரைகளை வழங்கியது.

மேற்சொன்ன பார்வே கமிட்டியும், பேராசிரியர் என். ஆர். மால்காணி குழுவும் பரிந்துரைத்தது போல சாதிய அடிப்படையில் பரம்பரை பரம்பரையாகக் கழிவறைகளை சுத்தம் செய்யும் முறையை முற்றிலுமாக தடை செய்வதன் மூலமே இந்த சமூக அவலத்தைக் களைய முடியும். எனவே, இதை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. ஆனால் 1964ஆம் ஆண்டு வரை இதில் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை. இதன்பிறகு 1965-ஆம் ஆண்டு, முந்தைய பல குழுக்களில் உறுப்பினராக இருந்த பேராசிரியர் என்.ஆர். மால்காணியின் தலைமையில் ஒரு குழுவை அமைத்து, வழிவழியாக கழிவறைகளைச் சுத்தம் செய்யும் முறையை ஆந்திரப் பிரதேசம், குஜராத், ஜம்முகாஷ்மீர், உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், பஞ்சாப் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஆய்வு செய்யப் பணிக்கப்பட்டது. மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரை, நகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் எடுக்கப்பட்ட சில குறிப்பிடத்தகுந்த மாற்றங்களின் விளைவாகவும், தனி மனித கழிவறைகளுக்கு வரி விதித்ததன் மூலமாகவும், இந்த சமூக அவலத்தில் இருந்து பல்வேறு தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

1965 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட குழுவானது தனது பரிந்துரையில், பிற மாநிலங்களில் கழிவறைகளுக்கான வரி விதித்தது போல், இந்த மாநிலங்களிலும் உள்ளாட்சி அமைப்புகள், தனி மனித கழிவறைகளுக்கு வரி விதிப்பதன் மூலமாக, இந்த சமூக அவலம் தீர்க்கப்பட்டு, பொதுக் கழிவறைகளை அமைப்பதின் மூலமாக இந்த மனிதக் கழிவுகளை மனிதர்களே அள்ளும் முறையினை முற்றிலும் ஒழிக்க இயலும் என்று பரிந்துரைத்தது. மேலும், தொழில்நுட்ப முன்னேற்றங்களை முற்றிலும் பயன்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தியது.

இதனைத் தொடர்ந்து 1967ஆம் ஆண்டு துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் மனிதக்கழிவுகளைப் அகற்றுபவர்களுடைய வாழ்வியல் சூழல் குறித்து ஆய்வு செய்வதற்காக முனைவர் பாண்டியா தலைமையில், தேசிய தொழிலாளர் ஆணையம் ஒரு குழுவினை அமைத்தது. 1968இல் சமர்ப்பிக்கப்பட்ட இக்குழுவினுடைய அறிக்கையானது, மனிதாபிமானமற்ற நடைமுறையிலிருந்து மனிதர்களை விடுவிப்பதற்காக இயந்திரமயமாக்கலை வலியுறுத்தி, அவர்களுடைய சமூகப் பாதுகாப்பு மற்றும் வாழ்வியல் தேவைகளைப் பூர்த்திசெய்ய வலியுறுத்தியது. முதன்முதலாக இக்குழுவானது ஒரு தகுந்த சட்டத்தின் மூலமாக இந்த மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் முறையைத் தடை செய்ய வேண்டும் எனப் பரிந்துரைத்தது.

இதனைத்தொடர்ந்து, அரியானா, கர்நாடகா மற்றும் ராஜஸ்தான் அரசுகள், பல்வேறு குழுக்களை அமைத்து, தங்களது மாநிலங்களில் இந்த சமூக அவலத்தினைக் களைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள விழைந்தன. ஆனால் குறிப்பிடத்தகுந்த அளவு, எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. 1983 ஆம் ஆண்டு நாடாளுமன்ற மக்களவையில், கேள்வி நேரத்தின்போது, இந்த தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தை சுட்டிக்காட்டி எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அன்றைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, இந்த அருவருப்பான முறை ஒழிக்கப்படும் என்றும், இதற்கான முயற்சிகள் சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும், தண்ணீர் வசதி இல்லாத உலர்கழிவறைகளை முற்றிலுமாக அகற்றிவிட்டு, தண்ணீர் மூலம் சுத்தப்படுத்தக்கூடிய கழிவறைகளை அமைக்கப் பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் எனவும், இந்தத் தொழிலில்

ஈடுபடுத்தப்பட்டிருந்தவர்களுடைய வாழ்வாதாரத்தை உறுதிசெய்யும் விதமாக, மாற்றுத் தொழில் வழங்கப்படும் எனவும் உறுதியளித்தார்.

இதன் தொடர்ச்சியாக 1989ஆம் ஆண்டு, அன்றைய ஒன்றிய திட்டக்குழுவின் ஆலோசகரான எஸ். கே. பாசு தலைமையில் ஒரு குழுவினை, மனிதக் கழிவுகளை அகற்றுபவர்களுடைய நலன்கள் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைத்தது. இக்குழுவானது, விரிவான ஆய்வினை மேற்கொண்ட பிறகு, இதற்கு முன்னர் மேற்கொண்ட பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் உள்ள குறைகளை சுட்டிக்காட்டி, அதற்கான தீர்க்கமான சில தீர்வுகளைப் பரிந்துரைத்தது. துப்புரவுப் பணியாளர்களுடைய வேலை மற்றும் வாழ்வியல் சார்ந்த பிரச்சனைகளுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவமானது, சுகாதாரமற்ற உலர் கழிவறைகளை, தண்ணீர் வசதி உள்ள கழிவறைகளாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளில் (அதே ஆர்வமும், முனைப்பும்) காட்டப்படவில்லை என்று விமர்சித்தது.

ஒன்றிய அரசு, இத்தகைய நடவடிக்கைகளைச் சீரிய முறையில் மேற்கொண்ட, போதிலும், 'வழிவழியாக தனிநபர் வீட்டில் கழிவறைகளைச் சுத்தம் செய்யும் உரிமை முறை' பல்வேறு மாநிலங்களில் நடைமுறையில் இருந்த காரணத்தினாலும், சாதி அடக்குமுறை நீடித்த காரணத்தினாலும், உள்ளாட்சி அமைப்புகளில் போதிய நிதி ஆதாரங்கள் இல்லாத காரணத்தினாலும், மாநில அரசுகளினுடைய அர்ப்பணிப்பில்லா அணுகுமுறை காரணமாகவும் (இந்த சீரிய நடவடிக்கைகள்) எதிர்பார்த்த மாற்றங்களை ஏற்படுத்த முடியவில்லை. இந்த நிர்வாகரீதியிலான முன்னெடுப்புகளின் தோல்வியால் அரசு, இந்த சமூக அவல நிலையைக் களைவதற்காக, 1993ஆம் ஆண்டு ஒரு சட்டத்தை நாடாளுமன்றத்தின் வாயிலாக இயற்றி, இந்த விளிம்பு நிலை மனிதர்களினுடைய நலனை உறுதி செய்வதற்காக ஒரு தேசிய ஆணையத்தையும் அமைத்தது.

**சட்டப்பாதுகாப்பு மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள்:**

இந்திய அரசியலமைப்பு சட்டமானது தனி மனிதர்களுக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளான 'சாதிய பாகுபாட்டிற்கு எதிரான பாதுகாப்பு', தீண்டாமைக்கு எதிரான பாதுகாப்பு, வாழ்வதற்கான உரிமை மற்றும் தனிப்பட்ட சுதந்திரம் ஆகிய பிரிவுகளின் கீழ், இந்த சமூக அவலத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தவர்களுடைய வாழ்வாதாரம் மேம்பட நடவடிக்கை மேற்கொள்ள இயலும். இந்தத் தொழிலில் ஈடுபட வற்புறுத்தப்பட்டிருப்பதால், இச்செயலானது உறுப்பு 23 இன் கீழ், அதாவது கட்டாய உழைப்பு மற்றும் பாரபட்சமான நடைமுறையைத் தடைசெய்வதன் கீழ் வருவதால் அரசமைப்புச் சட்ட உரிமைகள் வெளிப்படையாகவே மீறப்படுகின்றன என்பதும் புலப்படுகிறது.

இத்தகைய அரசியலமைப்பு பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும், இந்த சமூக விளிம்பு நிலை மக்களின் உரிமைகளானது மீறப்பட்டு, மறுக்கப்பட்டு, வஞ்சிக்கப்பட்டனர். உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955 மற்றும் பட்டியல் இனத்தவருக்கு எதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம், 1989இன் கீழும் மனிதக்கழிவுகளை அகற்றுபவர்களுடைய வாழ்வியல் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண இயலும் என்று இருந்த போதிலும், இவ்விரு சட்டங்களும் மனிதக்கழிவுகளை மனிதர்களே அகற்றும் முறையை வெளிப்படையாக வன்கொடுமை என வரையறை செய்யாத காரணத்தினால் (2015 ஆம் ஆண்டு சட்டத்திருத்தம் வரை), இந்த அவதொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தவர்களுடைய பாதுகாப்பானது, முழுமையாக வழங்கப்படவில்லை. இதன் விளைவாக, ஒரு தகுந்த, தனிச் சட்ட பாதுகாப்பினை வழங்க வேண்டி, 1993ஆம் ஆண்டு, மனிதக்கழிவுகளை மனிதர்களே அகற்றுவதைத் தடைசெய்தும், உலர் கழிப்பறைகள் கட்டப்படுவதைத் தடைசெய்தும் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. 1993 இல் இச்சட்டம் இயற்றப்பட்டாலும், 1997 சனவரி 26 ஆம் நாள்தான் இச்சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. அதுவும் 6 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மட்டுமே.

இச்சட்டமானது 2 உயரிய நோக்கங்களைக் கொண்டு இருந்தபோதிலும், (அதாவது மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றுவதனைத் தடை செய்தலும் மற்றும் அதற்கு மிக முக்கியக் காரணியாக இருக்கக்கூடிய உலர் கழிப்பறைகள் கட்டுதலைத் தடை செய்வதும்) எதிர்பார்த்த, விரும்பத்தகுந்த விளைவுகளை ஏற்படுத்தத் தவறியிருந்தது. இதற்கு மிக முக்கியக் காரணம், சுகாதாரமற்ற கழிப்பறைகள் என்பதை விடுத்து, இச்சட்டமானது உலர்ந்த கழிப்பறைகள் என்ற பெயரில் ஒரு குறுகிய கண்ணோட்டத்தோடு வரையறுத்து செயல்பட்டதே. இதன்முலம், மிகவும் அபாயகரமான மலக்குழிகள், திறந்தவெளி மற்றும் பாதாளச்சாக்கடைகள் ஆகியவற்றில் மனிதர்களை ஈடுபடுத்தி சுத்தம் செய்வது தடை செய்யப்படவில்லை.

அதேபோல, மனிதக்கழிவுகளை மனிதர்களே அகற்றுவதைத் தடை செய்வதிலிருந்து மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்ட விலக்கு அளிக்கும் உரிமை, பல்வேறு வகைகளில் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டதாலும், மனிதக் கழிவுகளை அகற்றுவோரினுடைய வரையறையும், மிகக்குறுகிய கண்ணோட்டத்தோடு வரையறுக்கப்பட்டதாலும், பல மனிதக்கழிவுகளை மனிதர்களே அகற்றும் நடைமுறைகள் இச்சட்டத்தின் எல்லைக்குள் அகப்படாதிருந்தன.

மேலும், இந்த மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் செயலில் தனிநபர்களைப் பணியமர்த்தலைத் தடை செய்தும், இதனை மீறி பணி அமர்த்தினால், பணியமர்த்துபவருக்கு ஒரு வருட சிறை தண்டனையும் 2,000 ரூபாய் தண்டமும் விதிக்க 1993ஆம் ஆண்டு சட்டம் வகை செய்திருந்தாலும், 1993 முதல் 2013ஆம் ஆண்டு வரை, ஒரு வழக்குகூட இச்சட்டத்தின் கீழ்

பதிவு செய்யப்படவில்லை என்ற ஒன்றே, இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படவே இல்லை என்பதை எடுத்துக்காட்டியது. மேலும், 1993ஆம் ஆண்டு சட்டம், கழிவு நீர் தொட்டிகளைச் சுத்தம் செய்யும் முறை குறித்து எவ்வித விளக்கமும் அளிக்காத காரணத்தினால், இந்த அபாயகரமான செயல்கள், தடைசெய்யப்பட்ட மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் முறையின் வரையறையில் வரவில்லை என்பதும் தெளிவாகிறது.

மிக அதிர்ச்சி தரும் விதமாக "மனிதக்கழிவுகளை சக்கர வண்டிகளிலும் குவளைகளிலும் எடுத்துச் செல்வதையும், வடிகால்களிலிருந்து அகற்றுவதையும் மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் முறையாகக் கருதமுடியாது. 1993ஆம் ஆண்டு சட்டம், கைகளால் அகற்றுவதை மட்டுமே தடை செய்கிறது. எனவே, இம்முறைகள் மனிதக்கழிவுகளை மனிதர்களே அகற்றுவதாகாது. அவ்வாறு பொருள் கொள்ள இயலாது" என்று தில்லி மாநில அரசு, உயர்நீதிமன்றத்தில் வாதிட்டது.

இப்படிப்பட்ட தெளிவற்ற சட்டப்பிரிவுகளினால், இந்த மனிதத்தன்மையற்ற செயலை முற்றிலும் தடைசெய்ய இயலாததாலும், இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தாலும், 2003ஆம் ஆண்டு, ஸஃபாய் கர்மாச்சாரி அந்தோலன் (துப்புரவுத் தொழிலாளர் இயக்கம்) எனும் அமைப்பு, ஒரு பொதுநல வழக்கினை உச்சநீதிமன்றத்தில் தொடுத்து, இந்த சமூக அவலச் செயலைத் தடை செய்யவும், 1993ஆம் ஆண்டு சட்டத்தினை சீரிய முறையில் செயல்படுத்திடவும் வலியுறுத்தியது.

உச்ச நீதிமன்றம், ஏறக்குறைய ஒரு தசாப்தத்திற்குப் பிறகு, மனிதக்கழிவுகளை மனிதர்களே அகற்றும் நடைமுறை அரசியலமைப்பிற்கு எதிரானது மட்டுமல்லாது, சர்வதேச சட்டங்களுக்கான இந்தியாவின் அடிப்படை உத்தரவாதத்திற்கும் (உறுதிப்பாட்டிற்கும்) எதிரானது என்று தீர்ப்பளித்தது. மனிதக்கழிவுகளை அகற்றுபவர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களின் நலம் பேணும் பல தொண்டு நிறுவனங்களின் தொடர்ச்சியான போராட்டங்களின் விளைவாகவும், ஐக்கிய நாடுகள் அமைப்பினுடைய துணை அமைப்புகளின் அழுத்தங்கள் காரணமாகவும், உச்சநீதிமன்றத்தில் அன்று நிலுவையில் இருந்த பொதுநல வழக்கினுடைய விசாரணைப் போக்கின் தன்மை காரணமாகவும், 1993 ஆம் ஆண்டு சட்டத்தின் குறைகளைக் களைந்து, 2013ஆம் ஆண்டில் ஒரு புதிய சட்டத்தை ஒன்றிய அரசு பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது.

இறுதித் தீர்ப்பை வழங்கும்போது, உச்சநீதிமன்றம், இந்த புதிய சட்டத்தைக் கவனத்தில் கொண்டு, மாநிலங்களுக்கும் மறுவாழ்வு, வாழ்வாதார உதவி, கல்வி மற்றும் தொழில்முனைவோர் பயிற்சி மற்றும் சட்ட உதவி போன்றவற்றினை வழங்கும் பிற சட்ட அமைப்புகளுக்கும் தேவையான வழிகாட்டுதல்களை வழங்கியது. மேலும், எதிர்காலத்தில் இச்சட்டப்பிரிவுகள் மீறப்படுமேயானால், உயர்நீதிமன்றங்களை அணுகுமாறும் அறிவுறுத்தியது.

இந்த 2013 ஆம் ஆண்டு சட்டம், இந்த அவதொழிலில் ஈடுபட சமூகரீதியாக நிர்ப்பந்திக்கப்பட்டவர்களின் துயர் துடைக்கும் விதமாக, இத்தனை காலமாக அரசியலமைப்பு உரிமைகளானது மீறப்பட்டு, மறுக்கப்பட்டு, வஞ்சிக்கப்பட்டதை வரலாற்று அநீதியாகப் பறைசாற்றி, அந்த மக்களின் கண்ணியத்தை மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதும், மனிதக்கழிவுகளை அகற்றும் முறையானது நடைமுறையில் இருந்ததை வெளிப்படையாக ஏற்றுக்கொண்டதன் மூலம், முந்தைய சட்டத்தின், பல்வேறு கொள்கை முன்முயற்சிகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளின் தோல்வி/திறனின்மையை அரசு ஒப்புக்கொண்டுள்ளது என்பதும் புலப்படுகிறது.

1993 ஆம் ஆண்டு சட்டத்தைபோல் கைகளால் மலம் அள்ளுவதையும், உலர்கழிவறைகள் கட்டப்படுவதையும் தடை செய்வதோடு மட்டுமல்லாது, 2013ஆம் ஆண்டு சட்டம், மனிதர்களைக் கொண்டு கழிவு நீர்த் தொட்டிகளைச் சுத்தம் செய்தல், திறந்த வெளி வடிகால்களில் ஏற்படும் அடைப்புகளைச் சரிசெய்தல், கழிவுநீர்த் தொட்டிகளைச் சுத்தம் செய்தல், பாதாளக் கழிவுநீர் அமைப்புகளைச் சுத்தம் செய்தல் போன்றவற்றையும் தடைசெய்கிறது. சில அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டும், கழிவுநீர் தொட்டிகள் போன்றவற்றைச் சுத்தம் செய்வதற்கான அனைத்து பாதுகாப்பு உபகரணங்களையும் அரசு வழங்க வேண்டும் என்றும், அத்தகைய துப்புரவு செயல்முறை மனிதக் கழிவுகளை அகற்றும் முறையாக கருதப்படாது என்றும், தொடர்வண்டித் துறையில் பாதுகாப்பு உபகரணங்களைக் கொண்டு சுத்தம் செய்வது மனிதக்கழிவுகளை அகற்றும் முறையாகக் கருதப்படாது என்றும் சட்டம் விலக்கு அளிக்கிறது.

இச்சட்டப்பிரிவுகளை மீறி, மனிதர்களை இத்தொழிலில் பணியமர்த்துவதும், விலக்களிக்கப்பட்ட துறைகளிலோ பணிகளிலோ, பாதுகாப்பு உபகரணங்கள் இல்லாது பணிசெய்ய வைப்பதும், பிணையில் வெளிவர இயலாத தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டு, குறைந்தபட்சமாக ஒரு வருடம் முதல் அதிகபட்சமாக 5 ஆண்டுகள் வரை சிறை தண்டனை வழங்கவும், 50 ஆயிரம் முதல் 2 லட்சம் வரை தண்டம் விதிக்கவும் வகைசெய்கிறது.

இச்சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்த, ஒன்றிய அளவிலும் மாநில அளவிலும் மேற்பார்வை குழுக்களை அமைத்து, இத்தொழிலில் ஈடுபட்டிருந்தவர் களையும், இன்றளவும் ஈடுபட்டிருக்கின்றவர்களையும் கணக்கெடுத்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அதற்கான நிதி உதவிகளை வழங்கவும் வகைசெய்கிறது. எவ்வாறாயினும், தொடர்வண்டித் துறைக்கு விலக்கு அளிக்கும் சட்டப்பிரிவு, இந்த அவதொழிலை மேற்கொள்ள அரசே ஊக்குவிப்பது போலவும், சட்டத்தின் அடிப்படை நோக்கத்தை சீர்குலைப்பதாகவும் அமைந்திருக்கிறது. தொடர்வண்டித் துறை இந்த சுகாதாரமற்ற கழிவறைகளை

மாற்றி, உயிரியல் தொழில்நுட்பத்தோடு கூடிய கழிவறைகளை அமைப்பதற்கான பணியினை முன்னெடுத்துள்ளபோதிலும், மிகவும் மந்தமான போக்கிலேயே இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தச் சட்டம் அமல்படுத்தப்பட்டு ஏறக்குறைய எட்டு ஆண்டுகள் கடந்தபொழுதிலும், இன்றளவும் 25 சதவீதமான ரயில் பெட்டிகள்கூட உயிரியல் தொழில்நுட்பத்தோடு கூடிய கழிவறைகளாக மாற்றப்படவில்லை என்பது நிதர்சனமான உண்மை.

2014 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்ற தீர்ப்பின் பிறகு, பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு உயர் நீதிமன்றங்களின் முன்பாக, குறிப்பாக சென்னை உயர் நீதிமன்றம், பஞ்சாப் மற்றும் அரியானா மாநில உயர் நீதிமன்றங்களின் முன்பாக பல்வேறு வழக்குகள் தொடுக்கப்பட்டு, வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மனிதர்களைக்கொண்டு, அபாயகரமான கழிவுநீர் தொட்டிகளைச் சுத்தம் செய்தலையும், பாதாளச்சாக்கடைகளைச் சுத்தம் செய்வதையும் முற்றிலுமாகத் தடைசெய்து, மேம்பட்ட தொழில்நுட்ப உபகரணங்களைக்கொண்டு, இயந்திரமயமாக்கல் மூலம் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், இந்தக் காட்டுமிராண்டித்தனமான பணியமர்த்தல் நடவடிக்கைகளின் வாயிலாக பாதிக்கப்பட்ட நபர்களினுடைய குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், தகுந்த இழப்பீடு வழங்க வேண்டுமெனவும் உத்தரவிட்டுள்ளன. ஏன் கடந்தமாதம் கூட, சென்னை உயர் நீதிமன்றம், கழிவுநீர்த் தொட்டிகளையும் பாதாளச் சாக்கடைகளையும் சுத்தம் செய்ய மனிதர்கள் பணியமர்த்தப்படுவதை முற்றிலுமாகத் தடைசெய்து உத்தரவிட்டுள்ளது.

சுமார் 8 ஆண்டுகள் கடந்தபோதிலும், இன்றளவும் பாதாளச் சாக்கடைகளைச் சுத்தம் செய்வதற்காக மனிதர்கள் பணியமர்த்தப்படும் பொழுது, அந்த மலக்குழிக்குள் மீத்தேன் வாயு உள்ளதா என்பதைப் பரிசோதிக்கும் மிக எளிய நடைமுறையான ‘தீக்குச்சியைக் கொளுத்திப் பார்க்கும் முறை’ கூட கடைபிடிக்கப்படுவதில்லை என்பது வேதனைக்குரியது. இந்த மலக்குழிக்குள் நச்சுவாய்வுக்குப் பலியானோர் பற்றியும், பல்வேறு உடல் நலக்கோளாறுகளுக்கு உள்ளானோர் குறித்தும் செய்திகள் ஏடுகளில் வந்த வண்ணம் உள்ளன. இன்றளவும் இந்தச் செய்திகளை, கனத்த இதயத்தோடு கடந்து செல்ல இயலுகிறது எனில், அரசு கட்டமைப்புகள் எந்த அளவுக்கு ஈடுபாட்டோடு இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன என்பது வெட்டவெளிச்சமாகிறது.

**முன்னோக்கிய பாதை:**

இந்தியத் துணைக்கண்டம் போன்ற மக்கள் தொகை பெருகியுள்ள நாட்டில், அதுவும் சாதியக் கோட்பாடுகளால் கட்டுண்டு, இரண்டறக் கலந்துள்ள சமுதாயத்திலிருந்து, மனிதக்கழிவுகளை மனிதர்களே அகற்றும் மனிதாபிமானமற்ற அவதொழிலில் இருந்து சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ளோரைப் பாதுகாப்பதும், அவர்களுக்கான மறுவாழ்வு நல உதவிகளை வழங்குவது என்பதும் மிகவும் சவாலான பணியாகும். சமுதாயத்தில் சாதியக் கட்டமைப்புகள் ஆழமாக வேரூன்றி இருக்கின்ற காரணத்தினால்தான், இன்றளவும் சில மாதங்களுக்கு முன்புவரை, நாட்டின் சில பகுதிகளில், குறிப்பாக வடமாநிலங்களில் மனிதக் கழிவுகளை மனிதர்களே அள்ளும் முறையானது பின்பற்றப்பட்டு வந்தது என்பதனை சமீபத்திய ஆய்வின் வாயிலாக அறிய முடிகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்புவரை, அரசினுடைய பல்வேறு சமூக மேம்பாட்டு நடவடிக்கைகள் தன்னெழுச்சியாக இல்லாது. அரசுசாரா நிறுவனங்களினுடைய அழுத்தங்கள் காரணமாகவும், நீதிமன்ற பேராணைகளின் வெளிப்பாடாகவும் மட்டுமே நடந்தேறின என்றே கருதப்பட வேண்டியுள்ளது. பல்வேறு தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் உதவியுடன் நடத்தப்பட்ட ஆய்வுகளின் வாயிலாக வெளிக்கொணரப்பட்ட தரவுகளுக்கும், அரசு அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளுக்கும் இடையில் இன்றளவும் முரண்பாடுகள் உள்ளன. சமூக அழுத்தங்களாலும், நீதிமன்ற நடவடிக்கைகளாலும் பன்னாட்டு அமைப்புகளின் வலியுறுத்தல்களின் காரணமாகவும், ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் இன்றைய சூழ்நிலையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும், இந்த அவதொழிலில் இருந்து மனிதர்களை இன்றளவும் விடுபட வைக்க இயலவில்லை என்பது மிகவும் கவலை அளிக்கிறது.

நவீனமயமாக்குதல், இயந்திரமயமாக்கல், உயர் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் ஆகியவை மட்டுமே இந்த நடைமுறைக்கு மிகச்சரியான தீர்வாக அமையும். பாதாளச் சாக்கடைகளில் தானியங்கி தொழில்நுட்பத்தை மேற்கொள்வதன் மூலமாக, மனிதர்கள் பணியமர்த்தப்படுவதை முற்றிலுமாகக் கைவிட இயலும். இந்த அவதொழிலைத் தடைசெய்வது ஒருபுறம் இருந்தாலும், இத்தொழிலில் பணியமர்த்தப்பட்டு, விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்களினுடைய சமூகப் பாதுகாப்பினை உறுதிசெய்வதும், அவர்களினுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதும் இன்றியமையாக் கடமையாகிறது. நாடு விடுதலை அடைந்ததன் 75 ஆம் ஆண்டுக் கொண்டாட்டங்களில் நாம் ஈடுபட்டுருக்கின்ற இத்தருணத்தில், இந்த அவதொழி-லிலிருந்து சகமனிதர்களுடைய விடுதலையை வேண்டி, நாமும் உறுதி ஏற்பதே சாலச் சிறந்தது.

கட்டுரையாளர், உதவிப்பேராசிரியர் (சட்டம்), குருகோவிந்த்சிங் இந்திரபிரஸ்தா பல்கலைக்கழகம், புதுடெல்லி

கட்டுரை



# குழந்தையும் வாழ்க்கைத் திறன்களும்

மருத்துவர் **ப.வைத்திலிங்கம்**

ஒவ்வொரு குழந்தையும் இவ்வுலகில் பிறந்தவுடன் பிழைத்து, வளர்ந்து, வாழ்ந்து காட்டவேண்டும். அதற்கு உறுதுணையாய் இருப்பது அந்தக் குழந்தைகள் மரபுவழி பெற்ற உள்ளுணர்வுகளும், அவர்களின் பெற்றோர்களும் சமூகமும் சொல்லிக்கொடுக்கும் பண்புகளும், திறன்களும்தான். அவர்கள் தினசரி வாழ்வில் தாங்கள் எதிர்நோக்கும் மன உடல் ரீதியான அழுத்தங்கள் எதுவும் தங்களைப் பாதிக்காமல் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு அந்தக் குழந்தைகளுக்கு நல்ல பண்புகளும் (VALUES) திறன்களும் (SKILLS) வேண்டும். திறன்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று, வாழ்க்கைத் திறன்கள் (LIFE SKILLS), மற்றொன்று வாழ்வாதாரத் திறன்கள் (LIVELIHOOD SKILLS). பெற்றோர்கள், குழந்தைகளுக்கு முக்கியமாகச் சொல்லிக்கொடுக்க வேண்டிய நற்பண்புகளையும் வாழ்க்கைத் திறன்களையும் பற்றி இந்தக் கட்டுரையில் பார்ப்போம்.

**நற்பண்புகள்**

குழந்தைகள் உயர்ந்த குறிக்கோள்களுடனும் நல்ல பண்புகளுடனும் வாழ்வதை விரும்பும் பெற்றோர்கள் அனைவரும் மனித வாழ்வோடு ஒன்றிப்போகும் நற்பண்புகளுக்கு (CORE VALUES) முக்கியத்துவம் கொடுத்து, சிறு வயதிலிருந்தே

சொல்லிக்கொடுக்க வேண்டும். பண்புகள் என்று நான் இங்கே சொல்வது வாழ்க்கையை செம்மைப்படுத்தி நம்மை அற வழியில் நடக்க வைக்கும் கோட்பாடுகளே. நம் சமூகத்தாலும் கலாச்சாரத்தாலும் பெரிதும் மதிக்கப்பட்டு, வழி வழி வரும் அன்பு, நேர்மை, உண்மை பேசுதல், பிறரை மதித்தல், தன் செயலுக்குப் பொறுப்பேற்றுக்கொள்ளுதல் போன்றவைகள்தான். நல்ல ரோல்மாடல் பெற்றோர்களாக வாழ்ந்தாலே போதும். குழந்தைகளும் நம்மை இமிடேட் செய்து நற்பண்புகளை எளிதில் கற்றுக்கொள்வார்கள்.

பண்புகள் நம்முள்ளேயே தங்கி நம் குணத்திற்கும் நடத்தைக்கும் காரணமாயிருந்து, நம்மை வெளி உலகுக்கு யார் என்று வெளிச்சமிட்டுக் காட்டும். நம்முடைய சொந்த உணர்வுகளுக்கும் நாம் பிறர்பால் காட்டும் உணர்ச்சி வெளிப்பாடுகளுக்கும் காரணமாயிருப்பது நம் பண்புகளே. காலங்களும் சூழ்நிலைகளும் மாறினாலும் அவ்வளவு எளிதில் நம் பண்புகள் மாறாது. நாம் வாழ்வில் எடுக்கும் முடிவுகளுக்கும் நம் பண்புகள்தான் காரணமாயிருக்கும். குழந்தைகளுக்கு நல்ல பண்புகளைச் சொல்லிக்கொடுக்க வீடு, பள்ளி, சமூகம் எனப் பல தளங்கள் இருந்தாலும் முக்கியமான தார்மீகப் பொறுப்பு வீட்டில் உள்ளவர்களுக்குதான். பச்சை மரத்தில் ஆணி அடிக்கும் உரிமையும் பொறுப்பும் அவர்களுக்குத்தானே உண்டு!

**வாழ்க்கைத் திறன்கள்**

வாழ்க்கைத் திறன்கள்தான் நம்மை சமூகத்தோடு சேர்ந்து வாழவும், அன்றாட வாழ்வில் வரும் சவால்களை ஆக்கபூர்வமாக எதிர்நோக்கவும் நமக்கு உதவும். குழந்தைகளுக்கு இந்தத் திறன்களை எப்படி சொல்லிக்கொடுத்து வளர்க்கலாம் என்று பார்ப்போம்.

**சிந்தித்தல்**

குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே பெற்றோர்களால் எளிதில் சொல்லிக்கொடுக்கக் கூடியது இந்த சிந்திக்கும் திறன்தான். இயல்பாகவே குழந்தைகள் நடக்க ஆரம்பித்து இந்த உலகைப் புரிந்துகொள்ள முயலும்போது, தாங்கள் இருக்கும் இடத்தையும் சுற்றுப்புறத்தையும் மிகவும் உன்னிப்பாகக் கவனித்து, நம்மைக் கேள்வி மேல் கேள்வி கேட்டுத் திணற அடிப்பார்கள். அவைகளுக்கெல்லாம் அசராமல் பெற்றோர்கள் பதில் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். சொல்லும் பதில்கள் அவர்களை மேலும் சிந்திக்கத் தூண்ட வேண்டும். அவர்கள் மனதில் ஏன், எதற்கு, எப்படி என்று கேள்விகளை எழுப்ப வேண்டும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் அவர்கள் திறந்த மனதுடன் இந்த உலகைப் பார்க்க உதவ வேண்டும். புதிர்கள், விடுகதைகள், நீதிக்கதைகள் எனச் சொல்லி அவர்களின் சிந்தனையும், கற்பனையும், பகுத்தறிவும் வளர உதவ வேண்டும். வாழ்வில் சிறந்த சரித்திர நாயகர்கள், அறிஞர்கள், அறிவியல் மேதைகள் போன்றோர்களின் வாழ்க்கை பற்றிப் சொல்லி ஆர்வத்தைத் தூண்டலாம். இதனால் அவர்களுக்கும் நாளடைவில் வாழ்வில் சிக்கலான நேரங்களில் முடிவெடுக்கும் திறன் தானாகவே வந்துவிடும்.

சமூகத்தோடு பழகுதல் (*COMMUNICATION AND SOCIALISATION*) இன்றைய காலகட்டத்தில் குழந்தைகளுக்கு மிகவும் தேவையானது சமுதாயத்தோடு பழகும் திறமை. இதற்கு பெரும்பாலான குழந்தைகளுக்கு கூச்சமும் பயமும் பெரிய தடைக்கல்லாக இருக்கின்றன. பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளுக்கு ஒரு பாதுகாப்பு வளையத்தை உண்டுபண்ணி, அவர்கள் சமூகத்தோடு பழகும் வாய்ப்பைக் குறைத்துவிடுகிறார்கள். இதனால் குழந்தைகளும் எளிதில் ‘இன்ட்ரோவெர்ட்’ என்று சொல்லுவதுபோல பிறரிடம் பழகுவதைத் தவிர்த்தே வளர்கிறார்கள். இப்படிக் கூண்டுக்கிளியாக இல்லாமல் வெளியில் வந்து தன்னம்பிக்கையோடு தைரியமாகவும் தெளிவாகவும் பேசும் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். முதலில் வீட்டிற்கு வரும் உறவினர்கள், நண்பர்கள் எனத் தங்களைச் சுற்றியுள்ள சமூகத்தோடு உரையாட, பழகக் கற்றுக்கொள்ள வேண்டும். மாற்றுக் கருத்தாக இருந்தாலும் தைரியமாக, எதிராளியின் மனம் கோணாதவாறு சொல்லிப் பழக வேண்டும். அதுபோலவே அவர்களை மதிப்பதும், மரியாதையுடன் பேசுவதும் இயல்பாகவே வர வேண்டும். மரியாதைக் குறைவாகப் பேசுவதையோ அல்லது செயல்படுவதையோ பெற்றோர்கள் அனுமதிக்கக் கூடாது.

மற்றவர்கள் பேசும்போது குறுக்கிடாமல், முழுவதையும் கேட்டு உள்வாங்கிப் புரிந்துகொள்வதை மிகச்சிறந்த திறன். வார்த்தைகளால் பேசாமலேயே உடல்மொழி, சைகைகள், முக பாவனைகள் மூலமும் தொடர்ந்து தொடர்பில் இருக்கலாம். இந்தத் திறமை இருப்பவர்களால்தான் பிறருக்காக அனுதாபப்படவோ, உதவி செய்யவோ முடியும். தான் தவறு செய்திருந்தால் வருந்த முடியும். வாழ்க்கையில் திருந்தவும் முடியும். இந்த கம்யூனிகேஷன் திறன் இருந்தால் வாழ்வில் தன்னம்பிக்கையும், ஆளுமைத்திறனும் தானாகவே வந்துவிடும் சமூகத்தோடு பழகும் திறன் வரவில்லை யென்றால் வாழ்க்கையில் நிறைய குழந்தைகள் தனிமைப்பட்டு, பெரியவர்களாக வளர்ந்த பிறகும் சிரமப்படுவார்கள். சில நேரங்களில் சமூகத்தால் தனிமைப்படுத்தப்படுவார்கள்.

**உணர்ச்சிகளைக் கையாளுதல்**

அடுத்ததாக, குழந்தைகளுக்குத் தேவையான முக்கியத் திறன், தங்களுடைய உணர்ச்சிகளைக் கையாளும் திறமை. பயம், கோபம், துக்கம்,

மகிழ்ச்சி என அனைத்து உணர்ச்சிகளையும் கையாளக் கற்றுக்கொள்ளும் குழந்தையாக வளர்க்க வேண்டும். இதை வீட்டில் உள்ளவர்களால் எளிதில் சொல்லிக்கொடுக்க முடியும். முதலில் குழந்தைகளின் அடத்தையும் அழுகையையும் பெற்றோர்களுக்கு கையாளத் தெரிய வேண்டும். குழந்தைகளைத் தொட்டாற்சிணுங்கியாகவோ அல்லது முன்கோபியாகவோ வளர்ப்பதில் அர்த்தமில்லை. தோல்விகள், ஏமாற்றங்கள், சறுக்கல்கள் முதலியவைகளைக் கண்டு துவளாத மன நிலையை உருவாக்க வேண்டும். ஆத்திரத்தையும் கோபத்தையும் கட்டுக்குள் வைக்கும்படி பழக்க வேண்டும். மகிழ்ச்சியான தருணங்கள் எல்லோருக்கும் தேவைதான். ஆனாலும் குழந்தைகள் கேட்பதையெல்லாம் வாங்கிக் கொடுத்து உடனடி மகிழ்ச்சி என்ற போதைக்கு அவர்களை அடிமையாக்கக் கூடாது. உணர்வுகளைக் கையாளத் தெரிந்த குழந்தைக்கு அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் மன அழுத்தங்கள் அதிகம் பாதிக்காது.

### தன் உடல் ஆரோக்கியம் பேணுதல்

குழந்தைகளுக்குத் தங்கள் உடலைச் சுத்தமாக வைத்துக்கொள்ளத் தெரிய வேண்டும். சிறு வயதிலிருந்தே தாங்களாகவே பல் துளக்குவது, குளிப்பது, டாய்லெட்டை உபயோகிப்பது போன்றவைகளைப் பழக வேண்டும். தங்கள் குழந்தைகளுக்கு எதுவும் தெரியாது என்று சொல்லிக்கொண்டு பெற்றோர்கள் உதவுவதை நிறுத்திவிட்டு, அவர்கள் கற்றுக்கொள்ளும்படி செய்ய வேண்டும். உடல் ஆரோக்கியம் என்றால் என்னவென்று கற்றுக்கொள்ள வேண்டும். தொற்று நோய்கள் வராமல் காத்துக்கொள்ளவும், ஆரோக்கிய வாழ்க்கை வாழவும் தெரிய வேண்டும். நல்ல உணவுப் பழக்கம், மேனரிசம் எல்லாம் சிறுவயதிலேயே கற்றுக் கொடுக்க வேண்டும்.

### வாழ்வாதாரத் திறன்கள்

வாழ்வாதாரத்திற்கான திறன்கள் *(LIVELIHOOD SKILLS)* நாம் வாழ்க்கையில் வெற்றிகரமாக வாழ நமக்கு உதவும். இதனால் நாம் பணம், பொருள், புகழ், அதிகாரம் ஈட்டலாம். வாழ்க்கையையும் வளப்படுத்திக் கொள்ளலாம். பெரும்பாலான திறன்களுக்கு நமக்கு திடமான மனதும், உடலின் உறுப்புகளின் இயங்கு சக்தியின் ஒத்துழைப்பும் தேவை. நம்முடைய முயற்சி மற்றும் கடின பயிற்சியினால் நம் திறமையை வளர்த்துக்கொள்ளலாம். புதுப்புது திறமைகளை எந்த வயதிலும் பெறலாம். பிறந்ததிலிருந்து நம் வாழ்நாள் முடியும் வரையிலும் ஒவ்வொரு கால கட்டத்திற்கும் தக்கவாறு இந்தத் திறன்களைக் கற்றுக்கொண்டே இருக்கலாம். மீண்டும் மீண்டும் பயிற்சி செய்வதன் மூலம் நம் திறமையை செம்மைப்படுத்திக்கொண்டு நம் இலக்கை எளிதில் அடையலாம். உலகம் முழுதும் எல்லோருக்கும் ஒரே மாதிரியான வாழ்வாதாரத் திறமைகள் இருக்காது, தேவையும் இல்லை. அவர்கள் வாழும் இடம், நாடு, இனம், மொழி, கலாச்சாரம் என பலவேறு காரணிகளால் தேவைப்படும் வாழ்வாதாரத் திறமைகள் வேறுபடலாம். படிப்பு, மொழி, கலைகள், கணிதம், கம்ப்யூட்டர் போன்றவைகள் எல்லாம் நம் வாழ்வாதாரத் திறன்களே. இவைகளைப் பள்ளிகளும், பல்கலைக்கழகங்களும் நமக்கு சொல்லிக்கொடுத்து விடும்.

### பண்புகளும் திறமைகளும்

வாழ்வாதாரத் திறன்கள் சூழ்நிலைகளால் வேறுபட்டாலும் பண்புகளும் வாழ்க்கைத் திறன்களும் எல்லோருக்கும் ஒன்றுதான். பிறந்ததிலிருந்து வாழ்க்கையே ஒரு போராட்டம்போல் இருக்கும் போது, திறமையும் நற்பண்புகளும் ஒருசேர இருந்தால்தான் மனிதன் வெற்றி வாழ்க்கை வாழ முடியும். குழந்தைகள் நற்பண்புகளுடனும், வாழ்க்கைத் திறன்களுடனும் வளர்ந்தால், அவர்கள் வாழும் சமுதாயத்திற்கு முக்கிய பங்களிக்கும் நபராக ஆகிவிடுவார்கள். நல்ல பண்புகளும் திறமைகளும் ஒன்றை ஒன்று மேம்படுத்தும். பண்புகள் அற்ற திறமையினால் ஒரு பயனும் இல்லை. அம்மாதிரி நபர்களால் சமூகத்திற்கு கேடுகள்தான் விளையும்.


### எப்போது சொல்லிக்கொடுக்க வேண்டும்?

குழந்தைகள் பள்ளிக்கூடம் போகும் முன்னரே அவர்களை மனதளவில் நல்ல பண்புகளும் வயதுக்கேற்ற திறமைகளும் உள்ள குழந்தையாக வளர அடித்தளம் போட வேண்டும். நல்ல பண்புகளையும் திறன்களையும் குழந்தைகளுக்கு பெற்றோர்களும் வீட்டில் உள்ளவர்களும்தான் சொல்லிக்கொடுக்க வேண்டும். பண்புகள் நம்முடன் வாழ்நாள் வரையும் இருந்து நாம் திறன்களைக் கற்றுக்கொள்ள அடிப்படையாக அமையும். ஒவ்வொரு வேலையையும் செம்மையாக முடிக்க நமக்கு நல்ல பண்புகள் தேவை. பண்புகள் மனிதனை நல்ல குணநலன்கள் உள்ளவனாக உலகுக்கு பறைசாற்றும். பண்புகள் மனிதர்களை ஒன்றுசேர்க்கும். பெற்றோர்கள் சிறுவயதிலிருந்தே நற்பண்புகளையும், வாழ்க்கைத் திறன்களையும் குழந்தைக்கு அறிமுகப்படுத்தி சொல்லிக்கொடுத்தால் ஒரு நல்ல இளைய சமுதாயத்தை உருவாக்கலாம். அதுவே அவர்கள் வீட்டிற்கும் நாட்டிற்கும் செய்யும் பெரிய தொண்டாக இருக்கும்.


●

கட்டுரையாளர், குழந்தைகள் நல மருத்துவர்.


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





₹ 350/-




₹ 115/-





₹ 380/-




₹ 180/-

கட்டுரை

# நாட்டு மருந்தும் தாய் மொழியும்




தமிழ் பயிற்றுமொழி (கனவும் நனவும்)
டாக்டர் சு.நரேந்திரன்
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
சென்னை - 50 | விலை: ரூ.340/-

**ச.சுபாஷ் சந்திரபோஸ்**

அடிபட்டு வீங்கி இருந்தால், மஞ்சளை அரைத்துச் சுடு தண்ணீர் விட்டுக் குழப்பிப் பற்றுப் போடுவார்கள். சுக்கு, மிளகு, பூண்டு, பட்டை, சோம்பு, கசகசா போன்றவற்றை மருந்துச் சாமான் என்பார்கள். நாட்டு மருந்துக் கடையில் கேட்டால் இவற்றை எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் அள்ளிப் போட்டு பொட்டலம் கட்டிக் கொடுப்பார்கள்.

இவற்றை அம்மியில் வைத்து நன்றாக அரைத்துக் குழந்தை பெற்ற பெண்களுக்குக் கொடுப்பார்கள். புண் இருந்தால் ஆறும்; உடல் அலுக்கை தீரும் என்பதற்குக் கிராமப்புற மக்கள் காலங்காலமாகச் செய்யும் வைத்திய முறை. இதே நாட்டு மருந்துகளை அரைத்துக் கூவாத கோழிக் குஞ்சைச் சுத்தம் செய்து அறுத்து, நசுக்கிப் போட்டு, அடிபட்டவர்களுக்கு மருந்து இரசம் வைத்துக் கொடுப்பார்கள். பாரம் இழுத்தும் உழுதும் களைத்த காளை மாடுகளுக்கும் நாட்டு மருந்தை உரலில் போட்டு இடித்துக் கொடுப்பார்கள்.

நாட்டு மருந்தின் நன்மை மெதுவாகத் தெரியும். இக்கால ஆங்கில மருந்துகளைப் போல கண்டிப்பாகப் பக்கவிளைவுகளை ஏற்படுத்தா. கடப்பாரையை விழுங்கிவிட்டு சுக்குக் கசாயம் குடிப்பது போல என்பார்கள். கண்டிப்பாக முற்றிய நோய்களுக்கு அலோபதி வைத்தியமே செய்ய வேண்டும்; நெருப்போடு விளையாடக் கூடாது.

என் மகனும் நாகதீபன் என்னும் மருத்துவரும் உடன் பயின்றவர்கள். ஒரு புத்தகத்தைக் கொடுத்து, மருத்துவர் நாகதீபனிடம் படிக்கச் சொன்னேன். ஒரு வாரத்தில் புத்தகத்தைக் கொண்டுவந்து கொடுத்தார். வியப்புக்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, கொடுத்த புத்தகத்தைத் திரும்பக் கொண்டுவந்து கொடுப்பது; இன்னொன்று, பணியில் - குறிப்பாக மருத்துவப் பணியில் இருப்பவர்களால் விரைவாகப் படிக்க நேரம் இருக்குமா? என்பது.

புத்தகம் படிக்க எப்படி இருந்தது எனக் கேட்டேன்; அசடு வழியவில்லை; புத்தகத்தைப் படித்துள்ளார் என்பது முகத்தெளிவு நன்றாகக் காட்டியது. மருத்துவர் நாகதீபன் இன்னொன்றையும் கூறினார். வியப்பாகவும் இருந்தது.

அவர் வைத்திருந்த மருத்துவமனைக்கு ஏதாவது ஒரு அல்லது பல நோய்ப்பற்றாளர்கள் வருவார்களாம். தமக்குரிய நோய்கள், அவற்றுக்கு நாட்டு மருந்து பயன்படுத்திய விதம் போன்றவற்றைக் கூறுவார்களாம். அவை இந்தக் காதில் போய்க்கொண்டிருக்குமாம்.

பொதுவாக, பெரும்பாலான இளம் மருத்துவர்களுக்கு மரபு வழியில் உற்பத்தியாகும் சைவ, அசைவ உணவுகள் பற்றிய விழிப்புணர்வு அதிகம் இல்லை. அவர்கள் படித்தவை, வாழும் காலம் இப்படிப்பட்ட மன உணர்வை உண்டாக்கி இருக்கலாம். நோயை ஆளும் வர்க்கம் பசுமைப் புரட்சிவழி உருவாக்கிப் பரப்பிவிட்டது. ஒரு நோய்க்கு மருந்தைப் பயன்படுத்தினால் பல நோய்கள் உடம்புக்குள் உற்பத்தியாகின்றன. ஒரு புற்றுக்குள் பல வகைப் பாம்புகள் குடி இருப்பதுபோல ஒருவரின் உடம்புக்குள் பல நோய்கள் ஆட்சி செய்கின்றன.

'வாழ்க்கை முறை மாறிவிட்டது. குடிக்கிறார்கள்; புகைக்கிறார்கள்; போதைப் பொருளை மெல்கின்றார்கள்' என்று காரணம் கூறுவார்கள். இவையும் காரணம் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அதே வேளையில்

பலவகை இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி, களைக் கொல்லிகளால் விளையும் தானியங்கள், காய், பழம், கீரைகளைப் பயன்படுத்துவதால்தான் பல நோய்கள் வருகின்றன. மருத்துவர்கள் தாம் சொல்ல வேண்டும்.

சுபாஷ் பலேக்கர், நம்மாழ்வார் போன்றவர்கள் மரபு சார்ந்த வேளாண்மையை ஊக்குவித்ததற்கான காரணம், மக்கள் நோய் இல்லாமல் வாழ வேண்டும் என்பதற்காகத்தான். நாற்பது - நாற்பத்தைந்து நாட்களில் ஒரு கிலோ, ஒன்றரைக் கிலோ சமயத்தில் இரண்டு கிலோ கூட கறிக்கோழிகள் வளர்கின்றன; எப்படி வளர்கின்றன? இப்படி வளர்க்கப்படும் கோழிகள், மீன்களை உண்ணக் கூடாது எனப் பெரும்பாலான மருத்துவர்கள் தற்போது அறிவுரை வழங்குகின்றார்கள். தாய்ப் பாலிலேயே நஞ்சு கலந்திருப்பதாகக் கூறுகின்றார்கள்.

இவற்றுக்கும் தற்போது விளையும் உணவுப் பொருள்களுக்கும் அதிக வேறுபாடு இல்லை. எல்லாம் வேதியல் பொருள்களாலேயே விளைகின்றன. எந்த மருத்துவரும் சமூக ஆர்வலர்களைப் போல பெரிய அளவில் பேசியதாகத் தெரியவில்லை, பேரளவுக்கு வேண்டுமானால் பேசி இருக்கலாம்.

நான் மருத்துவர் நாகதீபனிடம் கொடுத்த புத்தகத்தின் பெயர் ‘நோயின்றி வாழ உணவே மருந்து’. நூலாசிரியர்கள் மருத்துவர் சு. நரேந்திரன், மருத்துவர் ஃபிரடெரிக் ஜோசப். இந்தப் புத்தகத்தில் மருத்துவர்கள் இருவரும் மக்கள் காலங்காலமாகப் பயன்படுத்தி வந்த உணவுப் பொருள்களின் இயல்பை விரிவாக விளக்கி உள்ளார்கள். மருத்துவர்கள் குறிப்பிடுமாறு பழங்கள், காய்கறி, மசாலைப் பொருள் போன்றவற்றில் உள்ள சத்துக்கள், நன்மை செய்யும் வேதிப் பொருட்கள் போன்றவை பற்றி மக்களுக்குத் தெரியாது. ஆனால் காலங்காலமாகக் கிடைக்கும் எல்லாவற்றையும் மக்கள் பயன்படுத்தினார்கள்.

மக்கள் பயன்படுத்தும் பூமியில் விளைபவற்றில் அரளி விதையும் கார்த்திகைக் கிழங்கும் உயிரைக் கொல்லும் தன்மை உடையவை. அண்மையில் செங்காந்தள் எனப்படும் கார்த்திகைக் கிழங்கைத் தின்ற இருவரில் ஒருவர் உயிர் இழந்த செய்தி வெளிவந்திருந்தது (*தினமணி, 12-11-2022, ப.4*). வேறு இடங்களில் வேறு எதுவும் இருக்கலாம். பூமியில் விளையும் எல்லாம் புனிதமானவை. நாம்தான் அவற்றை நஞ்சாக்கிப் பயன்படுத்துகின்றோம்.

இதேபோன்று பேராசிரியர் - மருத்துவர் சு. நரேந்திரன் அவர்கள் எழுதிய நூல் ஒன்றை அண்மையில் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. ‘*தமிழ் பயிற்றுமொழி: கனவும் நனவும்*’ (2022) என்பதே அந்நூல், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிட்டு உள்ளது.

நூலாசிரியர் மருத்துவர் சு.நரேந்திரன், வரலாற்று நிலையில் பல கட்டுரைகளையும் நூல்களையும் எழுதி இருக்கின்றார். எல்லாமே உடல் நலம் பேண ஏதாவது ஒரு வகையில் விழிப்புணர்வைக் கொடுக்கும். அவ்வாறே தமிழ் பயிற்று மொழி: கனவும் நனவும் என்னும் நூலும் தாய்மொழியின் இன்றியமையாமை பற்றிய ஒரு விழிப்புணர்வைக் கண்டிப்பாக நூலைப் படிப்பவர்களுக்குக் கொடுக்கும்.

**தாய்மொழி தமிழ்**

தெய்வ மொழி, சாதாரண மொழி என்றெல்லாம் ஒன்றும் கிடையாது. எல்லாமே கருத்தை வெளிப்படுத்தப் பயன்படும் ஓர் ஊடகமே. தெய்வ பாடையாகிய சமக்கிருதத்தை உச்சரித்தால் ஓர் அதிர்வலை இருக்கும் என்று காலங்காலமாகவே மிரட்டிக்கொண்டிருந்தார்கள். கரோனாத் தொற்று எல்லா மொழிகளும் எல்லா மதத் தெய்வங்களும் ஒன்றுதான் என்று காட்டிக் கொடுத்துவிட்டது.

வழிபாட்டுத் தலங்கள் வழியாகவும் கரோனா பரவுகின்றது என்று மதவேறுபாடு இல்லாமல் இந்தியா மட்டுமல்லாமல் எல்லா நாடுகளிலும் வழிபாட்டுத் தலங்களையும் மூடி வைத்திருந்தார்கள். யார் மனதையும் புண்படுத்த இவ்வாறு கூறவில்லை; இயல்பான நிலை இதுதான். எந்தத் தெய்வத்தாலும் மக்களைக் கரோனா போன்ற தொற்றில் இருந்து காப்பாற்ற முடியாது. பலலெட்சம் பேரைக் கொன்று குவித்த அம்மைக்கு மருந்து கண்டுபிடித்தார்கள். மாரியம்மன் காப்பாற்றவில்லை. மருந்தாலும் விழிப்புணர்வாலும் மட்டுமே காப்பாற்ற முடியும்.

நம்முடைய தாய்மொழி தமிழ் காலங்காலமாகவே மக்களின் பயன்பாட்டில் இருந்த மொழி; மக்களின் வாழ்க்கையைப் பதிவுசெய்த மொழி; சங்க காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைப் பதிவு சங்க நூல்கள் என்றால் அவற்றை உரசிப் பார்க்கும் உரைகல்லாகப் பூம்புகார், அரிக்கமேடு, ஆதிச்சநல்லூர், கொடுமணல், கீழடி போன்ற ஊர்ப்பகுதிகளில் கிடைத்த அகழாய்வுப் பொருள்கள் திகழ்கின்றன.

அகழாய்வில் தாழியும் பானை ஓடும் எலும்பும் தானே கிடைக்கின்றன. எந்த விதமான அறிவியல் சிந்தனையும் இல்லாமல் சிலர் எழுதுகின்றார்கள். வடமொழி இதிகாசங்கள் விளக்குவதைப் போல இந்திரலோகமும் சொர்க்கலோகமுமா கிடைக்கும்? மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்களின் எச்சங்கள்தாமே கிடைக்கும்!

**உரலும் மத்தளமும்**

உரலுக்கு ஒரு பக்கம் இடி; மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி என்பார்கள். சங்க காலத்தில் தொடங்கியது வடமொழித் தாக்குதல் - ஒரு பக்க இடி; ஆங்கிலேயர் காலத்தில் இருந்து சமக்கிருதத்தோடு இந்தியும் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இன்னொரு பக்கம் ஆங்கிலம் தாக்கத் தொடங்கியது. தமிழ், மத்தள நிலைக்கு உள்ளானது.

சமக்கிருதம், இந்தி என்னும் இரண்டும் ஆங்கில மொழியைப் போல தமிழுக்கு அந்நிய மொழிகளே; எந்த மொழியையும் கற்றுக்கொள்ளலாம்; கருத்து வேறுபாடு

இல்லை; திணிக்கும்போதுதான் பிரச்சினைகள் தோன்றும். எதிர்த்துக்கொண்டிருக்கும் போதே ஒன்றிய அரசு இந்தியைத் திணித்துக் கொண்டிருக்கின்றது. தாய்மொழிக் கல்வியைப் பற்றியும் பேசுகின்றது.

ஒரே நாடு சரி; ஒரே மொழி, ஒரே இனம் எப்படிச் சாத்தியமாகும்? ஒருக்கால் இந்தியை ஆட்சி மொழியாகக் கொண்டுவந்துவிட்டால் ஒரே மொழி, ஒரே இனம் எனக் கொண்டுவந்துவிடலாம் எனத் தொலைநோக்குடன் கனவு காண்கின்றார்களா என்பது தெரியவில்லை.

எப்படியோ! ஒருவரின் தாய்மொழியைப் பயிற்று மொழியாக ஆக்குவதற்கு எவ்வளவு சிக்கல்கள்? மொழியைத் திணிக்க நினைப்பவர்களை மட்டும் குறை கூற முடியாது; அந்நிய மொழியின்பால் மோகம் கொண்டிருப்பவர்களிடமும் குறை இருக்கின்றது; மோகப்பட்டவர்களை மட்டும் குறை கூற முடியாது; தாய்மொழிப் படிப்பு மட்டும் சோறு போடாது என்னும் சூழல் நிலவுவதால், மக்கள் ஆங்கிலத்தின்பால் மோகம் கொள்கின்றார்கள்.

ஆங்கிலம் படித்தால் மட்டும் எல்லோருக்கும் சோறு போட்டு விடுமா என்று கேட்பதிலும் நியாயம் இருக்கின்றது. வடமாநிலத்தவர் இந்திபோன்ற இந்தோ - ஆரிய மொழிகளைப் படித்துவிட்டுத் தமிழகத்தில் மக்கள் குறிப்பாக இளைஞர்கள் படும்பாட்டை நினைக்கும்போது ஆங்கிலம் படிப்பது தேவலாம் போலத் தெரிகின்றது. ஆங்கிலம் பணிக்காகப் படிப்பதும் தற்காலிகமாகத்தான் இருக்க வேண்டும்.

தாய்மொழிக் கல்வியே ஒருவரின் சிந்தனையைப் பெருக்கெடுக்க வைக்கும். மகாகவி, சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச் செல்வங்கள் யாவும் கொணர்த்திங்கு சேர்ப்பீர் *(பார.கவி.21:11)* எனக் கூறுவதைப் போன்று மருத்துவம், தொழில்நுட்பம், அறிவியல் கோட்பாடுகள் போன்றவற்றைத் தாய்மொழியில் கொண்டு வரவேண்டும். அதற்கான ஆக்க பணியை மாநில அரசுதான் செய்ய வேண்டும்.

மக்கள் தாய்மொழியின் மீது பற்று வைக்கலாம்; ஆளும்வர்க்கத்தின் ஆதரவு இல்லாமல் எந்த மொழியும் வளராது. மெல்ல மெல்ல தமிழகத்திற்குள் புகுந்த ஆரியர்கள் மன்னர்களிடம் தங்கள் மொழியின் தெய்வத் தன்மையைக் கொஞ்சம் கொஞ்சமாக வேள்விகள்வழி ஊட்டினார்கள். போர்தானே எல்லாக் காலத்து மன்னர்களுக்கும் குறிக்கோள். காக்காய் உட்கார ஏதாவது பனம் பழம் விழுந்திருக்கும்.

சங்க காலத்தில் ஊன்றிய ஆரியம், பல்லவர் காலத்தில் வளர்ந்து பிற்காலச் சோழர், பாண்டியர் காலங்களில் மரத்தின் வளர்ச்சியைத் தடுக்கும் கொடிபோலப் படர்ந்து பரவியது. தற்போது தமிழக, அண்டை மாநில ஆளுநர்கள் தமிழகம் ஆன்மிக பூமி என்கின்றார்கள். ஆதிகாலத்தில் இல்லை; பாதியில் - இடைக் காலத்தில் ஆக்கப்பட்டது.

மன்னர்கள் ஆலயங்களை - அவற்றையும் ஆற்றங்கரைப் பகுதிகளில் அமைத்துக் கொடுத்து நிலத்தையும் வேலிக்கணக்கில் வழங்கினார்கள். ஆன்மிகமும் தேவ பாடையாகிய வடமொழியும் முதன்மைபெற்றன. தமிழை வெறுத்ததில் விஜய நகரர், நாயக்கர், மராட்டியர்களும் போன்றோரும் குறைந்தவர்கள் இல்லை. தமிழ் தன்னுடைய பழமையால்தான் தாக்குப்பிடித்து வளர்ந்தது. தொல்காப்பியமும் சங்க நூல்களும் திருக்குறளும் தமிழ்த் தாயைத் தாங்கிப்பிடித்து விழுதுகளாக வேரோடி இருந்தன.

எவ்வளவு தடைகள் இன்றும் தொடர்கின்றன. அவற்றை எல்லாம் தம் மருத்துவப் பணியுடன் தமிழ், தமிழர்பால் கொண்டுள்ள அக்கறையால் மிகவும் முயன்று, மருத்துவர் சு.நரேந்திரன் தமிழ் பயிற்று மாழி: கனவும் நனவும் என்னும் நூலில் ஆராய்ந்துள்ளார்.

**தாய்மொழி வளர்ப்பு**

ஒவ்வொரு மாநிலத்திலும் அவரவர் தாய் மொழியை வளர்ப்பதற்குப் பெரிய கம்ப சூத்திரம் எல்லாம் தேவையில்லை. தமிழகத்திற்குக் காவிரியில் தண்ணீர் விட மறுத்து அடாவடித்தனம் செய்து வடிகால் ஆக்கினாலும் கன்னடக்காரர்களின் தாய்மொழிப் பற்றைப் பாராட்ட வேண்டும். அந்தந்த மாநில அல்லது நாட்டு மொழியைப் படி என்று எரிவதை இழுத்தாலே கொதிப்பது அடங்கிவிடும்.

மியான்மரில் பல விரும்பத்தகாத அரசியல் நிகழ்வுகள் நிகழ்ந்தாலும் பர்மிய மொழியைப் படி; இல்லை என்றால் மூட்டையைக் கட்டிக்கொள்' என்று தாய்மொழிப் பற்றைக் காட்டுகின்றார்கள். நூலாசிரியர் சு.நரேந்திரனும் இந்தோனேசியா, இஸ்ரேல், மாலி , கினியா போன்ற நாடுகளில் தாய்மொழி பயிற்றுமொழி ஆக்கப்பட்டதை விளக்குகின்றார். *(பக.26 - 28)*

வடமொழி, கிரேக்கம், இலத்தின், ஈப்ரு மொழிகளை எல்லாம் தேவபாடை எனப் போற்றி ஆலயத்திற்குள்ளேயே குழிதோண்டிப் புதைத்துவிட்டார்கள். மற்றவர்கள் படித்தாலோ கேட்டாலோ அம்மொழிகளின் வீரியம் குறைந்து விடுமாம். வடமொழியைப் பற்றி மட்டும் ஒன்றைத் தெளிவாகக் கூறமுடியும். பலரும் அம்மொழியைப் படித்தால் எழுதப்பட்டுள்ள மனித குலத்துக்கே எதிரான பிற்போக்குத்தனங்கள் முழுவதும் வெளியே தெரிந்துவிடும். எனவேதான் மறை மொழி என்றார்களோ?

வழக்கொழிந்த மொழிக்கு உயிர் கொடுக்க முடியும் என்பதற்கு யூதர்களின் ஈப்ரு மொழி நல்ல சான்று. உலகம் முழுவதும் சிதறிக்கிடந்த யூதர்கள், இஸ்ரேலில் குடி ஏறினார்கள். வழக்கிழந்த அம்மொழியையும் வாழும் மொழி - பேச்சுமொழி ஆக்கிவிட்டார்கள். ஈப்ரு மொழியை மீட்டுருவாக்குவதற்கு மாற்றிலக்கண மொழியியல் அறிஞர் நோம் சோம்ஸ்கி *(Noam Chomsky)* செய்துள்ள பணி அளப்பரியது.

வடமொழிப் பற்றாளர்கள் அப்படியாவது சமக்கிருதத்தைப் புழங்கு மொழி ஆக்கினார்களா? என்றால் அதுவுமில்லை. கோடிக்கணக்கில் ஒன்றிய அரசு நிதியை அள்ளி அள்ளிக் கொடுக்கின்றது. மற்றைய தமிழ் போன்ற செவ்வியல் மொழிகளுக்குக் கிள்ளித் தான் கொடுக்கின்றது. வடமொழியாகிய சமக்கிருதத்தை வளர்ப்பதை விட்டுவிட்டு அதை வைத்துக்கொண்டு அரசியல்தான் செய்கின்றார்கள்.

தேவபாடை; இறைவனைச் சமக்கிருதத்தில் ஓதி வழிபட்டால் அதிர்வலையை உருவாகும் என்றெல்லாம் காலங்காலமாகக் காது குத்திக் கொண்டிருக்கின்றார்கள். குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடந்த ஈப்ரு மொழிக்குப் புத்துயிர் கொடுத்தது போல வடமொழியை வளர்த்தார்கள் என்றால் பாராட்டலாம். உலக மொழிகளுக்குப் பொதுவான கோட்பாட்டைக் கொண்டுள்ள மொழியியல் (Linguistics) என்னும் துறை வளர்ச்சிக்கு வடமொழியில் தோன்றியுள்ள இலக்கணங்களின் பங்கு குறிப்பிடத்தக்கது என மொழியியல் அறிஞர்கள் குறிப்பர்.

ஆரியரின் தொடர்பு, பின்னர் அந்நியரின் தொடர்பால் தமிழுக்கும் தமிழர் பண்பாட்டிற்கும் கிடைத்த தீமைகள் நன்மையைவிட அதிகமே; மொழிக் கலப்புக்காக மறைமலையடிகள், தேவநேயப்பாவாணர் முதலாகப் பலர் குரல் கொடுத்துள்ளார்கள். தமிழ் பயிற்று மொழி ஆவதற்கும் எத்தனை முட்டுக் கட்டைகள். மருத்துவர் சு.நரேந்திரன் தமிழ் பயிற்று மொழி: கனவும் நனவும் என்னும் தம் நூலில் வரலாற்று அடிப்படையில் தெளிவாக விளக்கியுள்ளார். பாராட்டுவதோடு படித்தும் பார்க்க வேண்டும். தமிழ் வளர்ச்சிக்கு மற்றவர்களைக் குறை கூறுவதைப் போல நாம் செய்த வரலாற்றுப் பிழைகளையும் எண்ணிப் பார்க்க வேண்டும். நூலாசிரியர் காய்தலோடு அதே வேளையில் உவத்தல் இன்றி இந்நூலை எழுதி இருக்கின்றார். தமிழ் பயிற்று மொழி என்பதோடு நூல் தலைப்பை நிறுத்தாமல் கனவும் நனவும் என நீட்டும் போதே நூலாசிரியரின் உவத்தல் இன்மையைப் புரிந்து கொள்ளலாம்.

**தாய்மொழி பயிற்றுமொழி**

பொதுக் கல்வியில் தாய்மொழி வழிக் கல்வி கட்டாயம் என்று ஒரு நிலை இருந்தது. ஆறாம் வகுப்பு முதல் ஆங்கிலம் ஒருமொழிப் பாடமாக மட்டுமே கற்பிக்கப்பட்டது. விடுதலைக்கு முன்னே இங்கே நிலவிய, இந்த நிலை கைநழுவிப் போனது தமிழகத்துக்குப் பெருமையளிப்பதாக இல்லை. (ப.31) என நூலாசிரியர் குறிப்பிடுவதைப் படிக்கும்போது என்னைப் போன்றோருக்கு ஆறாம் வகுப்பில் இருந்து ABCD..... கற்று, இரண்டாவது மொழியாக ஆங்கிலத்தைப் படிக்கத் தொடங்கியது நினைவுக்கு வரும்.

நூலாசிரியர் மருத்துவர் சு.நரேந்திரன் தமிழ் பயிற்று மொழி: கனவும் நனவும் என்னும் நூலில் பக்கம் பக்கமாகத் தமிழ் மொழியாகிய நம் தாய்மொழிக்கு மட்டுமல்லாமல் மொழிப் பற்றில்லாமல் பிற மொழிகளின் மேல் மோகம் கொள்வோருக்கும் ஒருவர் மேல் இன்னொரு மொழியைத் திணிக்க நினைக்கும் ஆளும் வர்க்கத்திற்கும் அறிவுரை வழங்கி உள்ளார்.

ஒரு நாடு வெளி நாடுகளில் வேலை தேடுவதை அடிப்படைத் திட்டமாக வைத்துத் தனது கல்விக் கொள்கையையோ பொருளாதாரக் கொள்கையையோ வகுத்தால் அந்நாடு முன்னோற்றத்தின் முதல் படியில் கூட ஏற முடியாது. (ப.32) நூலாசிரியர் கூறுவது எவ்வளவு எதார்த்தமான உண்மை! தமிழ்வழிக் கல்விக்கு முதல் எதிரி தனியார் பள்ளிகளே! (உங்கள் நூலகம், 14:3, பக். 11-17) என நூலாசிரியர் அரசு வளர்த்துவிட்ட தனியார் கல்வி நிறுவனங்களைக் கடுமையாகச் சாடுவதில் எவ்வளவு உண்மை உள்ளது!

கல்வியையும் மருத்துவத்தையும் தனியாருக்கும் பெரும் நிறுவனங்களுக்கும் தாரை வார்த்துக் கொடுத்தால் மக்களுக்கு எவ்வளவு இன்னல் விளையும் என்பதை மக்களே உணரவில்லை; பின்னர் எப்படி ஆளும் வர்க்கம் உணரும்?

இவை இரண்டையும் கெடுப்பதற்கு முன்னர் மக்களின் பசியைப் போக்கப்போகிறோம் என்று பசுமைப் புரட்சியைக் கொண்டு மக்களின் உடல் நலம், மண்வளம் என எல்லாவற்றையும் கெடுத்து உலகத்துக்கு ஆணியாகிய வேளாண்மையைக் குட்டிச்சுவர் ஆக்கிவிட்டார்கள். பல ஆண்டுகளாக இருந்த ஐயம் ஒன்றுக்கு மருத்துவர் சு.நரேந்திரன் அவர்களின் நூலைப் படித்தபோது, ஐயம் சரியானதே எனப்பட்டது. இத்தனை ஆண்டுகள் ஆங்கிலம் வழிப் படித்தவர்களில் எத்தனைபேர் தேசிய, சர்வதேசப் புகழ்வாய்ந்த நூல்களை, கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதியுள்ளனர்? வெளி நாடுகளில் / மாநிலங்களில் பணியாற்றும் தமிழர்களின் எண்ணிக்கையும் ஆங்கிலம் வழி கற்ற அவர்கள் எழுதியுள்ள ஆங்கில நூல்களின் எண்ணிக்கையும் மிகக் குறைவே (ப.34).

நூலாசிரியர் அடிக்கடி குறிப்பிடும் மேட்டுக்குடி மக்கள் மெக்காலே கொண்டு வந்த ஆங்கிலக் கல்வியால் அப்போதும் பயன்பெற்றார்கள்; இப்போதும் பயன்பெறுகின்றார்; இந்திய தொழில் நுட்பக் கழகம் (IIT), அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகம் (AIIMS) போன்ற ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களில் படித்துவிட்டு வெளிநாட்டுக்கு ஓடி விடுகின்றார்கள். தேசத் துரோகம் என்றொரு தொடர் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றதே; இவர்களுக்குப் பொருந்தாதா? உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்கள் மட்டும்தான் தேசத்துரோகிகளா? வெளிநாட்டில் கருப்புப் பணத்தைப் பதுக்குவது, வங்கியில் பணம் பெற்று மோசடி செய்வது, ஏழைகளுக்கு வரியை விதித்துப் பெரும் நிறுவனங்களுக்குக் கடன் தள்ளுபடி, மானியம் கொடுப்பது போன்றவை எல்லாம் தேசத் துரோகம் இல்லையா?

தாய்மொழியில் படிக்க வேண்டும். தொல்காப்பியர், திருவள்ளுவர் போன்றோர் தமிழில்

ஆழங்கால் பட்டவர்கள். வடமொழியை நன்கு அறிந்தவர்கள். தொல்காப்பியர் இருமொழியையும் ஒப்பிட்டு வேற்றுமையைக் கூறுவார். திருவள்ளுவர் வடமொழியில் எழுதப்பட்டுள்ள வர்க்க வேதம், பிற்போக்குத் தனங்களை எல்லாம் எடுத்துக்காட்டுவார்.

தமிழை ஒருவர் அறிந்தாலே போதும்; அவரின் எண்ணங்கள் எல்லாம் அருவியாகக் கொட்டும். சிறுகதை, புதினம் போற்றவற்றால் புகழ்பெற்ற ஜெயகாந்தன், நாட்டுப் புறவியலின் கரை கண்ட கி.ராஜநாராயணன் போன்றவர்கள் நம் காலத்தில் வாழ்ந்தவர்கள்.

எனவே, தாய்மொழியில் கலை - அறிவியலைப் படித்தால் சிந்தனைத் தெளிவு பிறக்கும். தனிப்பட்டவர்கள் எழுதலாம்; பேசலாம். ஆளும் அரசுதான் முன்னெடுக்க வேண்டும். தமிழ் மொழி பயிற்று மொழியாக இருக்கக் கூடாது என்று போராடியவர்களை எல்லாம் நூலாசிரியர் சு.நரேந்திரன் ஆங்காங்கே இனங்காட்டுகின்றார்.

**தமிழ் பயிற்று மொழி வரலாறு**

நூலாசிரியர் சு.நரேந்திரன் பொதுவாக அந்நியரின் வருகைக்குப் பிறகு கல்வி வளர்ச்சி அடைந்ததை முதலியலில் விரிவாக வரலாற்று நிலையில் விளக்குகின்றார். அவர்கள் மதத்தைப் பரப்பினார்கள்; ஆங்கிலம் போன்ற அந்நிய மொழியைப் புகுத்தினார்கள் என்று காலங்காலமாகக் கூறிக் கொண்டே இருக்கின்றார்கள்.

மக்களைப் படிக்கவே விடவில்லை; பெரும்பான்மை மக்களைத் தீண்டத்தகாதவர் என்று ஒதுக்கினால் மதம் மாறாமல் என்ன செய்வார்கள்? அந்நியர், அவர்கள் மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்டு வந்தபோது படித்துப் பயன்பெற்றோர் யார்? இரண்டாம் உலகப் போரில் இட்லர் இந்தியாவைப் பிடிக்கப்போகும் சூழல் இருப்பதாக அறிந்து, ஆங்கிலேயேர் ஆட்சியில் ஆங்கிலம் படித்தவர்கள் ஜெர்மன் மொழியைக் கற்கத் தொடங்கினார்களாம்.

எட்டிப் போக வேண்டியதில்லை; திருவையாற்றில் சரபோஜி மன்னரின் அறக்கட்டளை வழி வேதபாடசாலை தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. தமிழ் வித்துவான் படிப்பைக் கொண்டு வர முயற்சி செய்தபோது மேற்படியார்கள் எதிர்க்கின்றார்கள்.

அறக்கட்டளை தொடர்பான ஆவணங்களைப் படித்துப் பார்த்தால், வடமொழி கற்கத் தொடங்கப்பட்டது என்று கூறவில்லை. கல்வி வளர்ச்சிக்கு என்றே இருந்துள்ளது. தமிழவேள் உமாமகேசுவரனார், பட்டுக்கோட்டை நாடிமுத்து போன்றோரின் முயற்சியால் தமிழ் வித்துவான் படிப்பு தொடங்கப்பட்டது.

நீச மொழியாகிய தமிழைக் கற்றுக்கொள்ளும் சூத்திரப்பிள்ளைகளோடு எங்கள் பிள்ளையைப் படிக்கவைக்க மாட்டோம் என்று பையன்களைப் பலர் அழைத்துக்கொண்டு போய்விட்டார்களாம். ஏரிமேல் கோபித்துக்கொண்டு கால் கழுவாமல் போன கதைதான்.

எவ்வளவு பிற்போக்குத் தனமானவர்கள்! சனாதனம், குழந்தை மணம், கைம்பெண் மறுமண எதிர்ப்பு, உடன்கட்டை ஏறுதல் என்னும் பிற்போக்குத்தனம் கொண்டவர்களிடம் முற்போக்குத் தனத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்? தமிழர் விளைய வைத்தவற்றை உண்டு, நெய்ததை உடுத்திக்கொண்டு தமிழ் மண்ணில் தமிழைக் கற்பிக்கக் கூடாது என்பவர்களை எந்த வகையில் சேர்ப்பது என்றே புரியவில்லை.

அவர்கள்தான் அப்படி என்றால், நம்மவர்களிலும் சிலர் அவர்களுக்குக் குறைந்தவர்கள் இல்லை. தமிழ் பயிற்று மொழியாக அறிவிக்கப்பட்டபோது பலர் எதிர்த்துள்ளார்கள். வாலாக இருந்தால் ஆட்டித்தானே ஆகவேண்டும்! ஆரியம் சார்ந்தவர்கள் மகாகவி பாரதியார் உட்படப் பலர் எவ்வளவு முற்போக்குவாதிகளாக இருந்தாலும் அவர்களின் சனாதனக் கருத்துகள் எப்படியும் கொஞ்சம் வெளிப்படும். அவற்றுக்காகப் பாரதியார் மேல் கொண்டுள்ள பற்றுக் குறையாது. அதே வேளையில் இராஜாஜி முதலில் தமிழ் பயிற்று மொழி ஆவதை ஆதரித்துள்ளார். பின்னர் இந்தியைத் திணிக்க முயன்றுள்ளார்.

திண்ணைப் பள்ளிக்கூடங்களில் பயிற்று விக்கப்பட்ட தமிழ், அந்நியர் ஆட்சியில் பயிற்று மொழியாகவும் இருந்துள்ளது. விடுதலை பெற்ற பிறகு, 1956 இல் ஆட்சி மொழியாகத் தமிழ் அறிவிக்கப்பட்ட பிறகும் அந்தச் சட்டம் செத்ததாகவும் தெரியவில்லை; சிறந்ததாகவும் தெரியவில்லை. பிறந்த மண்ணில் அது ஒண்டுக் குடித்தனம் இருக்கின்றது. தமிழர் வெட்கித் தலைகுனியும் அளவிற்கு நூலாசிரியர் சு.நரேந்திரன் ஒரு நடைமுறையைக் குறிப்பிடுகின்றார். தமிழர்கள் சிங்கப்பூரில் 6 விழுக்காட்டிற்கும் குறைவு. தமிழர்கள் மண்ணின் மைந்தர்கள் அல்லர். குடியேறியவர்கள். அங்கு 9.5.56 அன்றே தமிழ் ஆட்சி மொழித் தகுதி பெற்றுவிட்டது (ப.239).

தமிழ் ஆட்சி மொழி, பயிற்று மொழி எனத் திராவிட அரசுகள் ஆணைகளை வெளியிட்டாலும் அவை ஆமை வேகத்திலேயே நகர்வதை நூலாசிரியர் ஆங்காங்கே சுட்டிக் காட்டுகின்றார். தமிழ் ஆட்சி மொழி, பயிற்று மொழி தொடர்பான ஆணைகள் ஆங்கிலத்திலேயே பிறப்பிக்கப்பட்டன என்பதையும் மறவாமல் குறிப்பிடுகின்றார். இவற்றில் முக்கியமான ஆணை ஒன்றை மிக்க மகிழ்ச்சியுடன் மருத்துவர் சு.நரேந்திரன் குறிப்பிடுகின்றார்.

**எழுத்துச் சீர்திருத்தம்**

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவை ஒட்டி ஓர் அருமையான அரசாணை பிறப்பிக்கப்பட்டது (1979). தந்தை பெரியார் குறிப்பிட்ட எழுத்துச் சீர்திருத்தம் ஏற்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கான வரலாற்றுச் சிறப்புமிக்க அரசாணை பிறப்பிக்கப்பட்டது (ப.243).

சனாதன விரும்பிகள் தந்தை பெரியார் இறந்து இத்தனை ஆண்டுகள் ஆனபிறகும் அவர் மீது கொண்டிருக்கும் வெறுப்பை இன்னும் விடவில்லை.

அவர்கள் வெறுப்பதில்கூட பொருள் இருக்கின்றது. ஒட்டுமொத்த பொருளாதாரம், வேலை வாய்ப்பு என அனைத்தையும் அதாவது தொண்ணூற்று ஏழு விழுக்காட்டினர் உரிமைகளையும் இந்த மூன்று விழுக்காட்டினரே ஒரு குளத்து ஒரு வரால் மீன் போல ஒட்டுமொத்தமாக விழுங்கிக் கொண்டிருந்தனர். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தாலும் அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் போன்ற இன்னும் பல முற்போக்குச் சிந்தனையாளர்களாலும் அவர்களின் ஏகபோக உரிமைகள் பறிபோயின. தந்தை பெரியாரின் சிலையோடு மல்லுக்கட்டுகிறார்கள். சூரியனைப் பார்த்துக் குரைக்கும் நாய் போலத்தான். வேறு எந்த உவமையைச் சொல்வது?

கொல்லைக்காரன் சும்மா இருந்தாலும் சீட்டை பொறுக்கிகள் சும்மா இருக்காது என்றொரு சொலவச் சொல் இருக்கின்றது. அவர்கள் தூக்கிப் போடும் பதவி, துட்டுக்காகச் சனாதனத்தை எதிர்க்க வேண்டிய சாதியினரே அவர்களுக்கு ஆதரவாகப் பேசுகின்றார்கள். பதவிக்காக அல்லது பசிக்காக எதை வேண்டுமானாலும் தின்னலாமா? இப்படி எழுதவே கை தயங்குகிறது; வேறு வழி இல்லை; சொல்லாமல் விடவும் மனமில்லை.

அந்நியர் இல்லாவிட்டால் இந்து இல்லை; இந்தியா இல்லை; தற்போது பேசப்படும் இந்துத்துவா இல்லை. நாலு குச்சியில் ஏழு கட்சிகள் என்பது போல இன்று பேசப்படும் அகண்ட பாரதம் ஐம்பத்தாறு தேசமாக இருந்தது. அந்நியரே சிறுகச்சிறுகச் சேமிப்பது போல ஒன்றுசேர்த்தார்கள்.

அந்நியர்கள் சுரண்டினார்கள் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. தேனை எடுத்தவன் கையை நக்குவான். அவர்கள் கொண்டுபோனது கடுகளவு என்றால் நம்மவர்கள் வெளிநாட்டில் பதுக்குபவை, இந்நாட்டில் உலகப் பணக்காரர் ஆகிக் குவிப்பவை பனங்காய் அளவு. மிளகு அளவை எல்லாம் சொல்லி அவர்களைச் சிறுமைப்படுத்தக்கூடாது. நம்மவர் வெளிநாட்டில் பதுக்கிய கருப்புப் பணத்தை வெளியே கொண்டுவந்து இந்தியர் ஒவ்வொருவரின் வங்கிக் கணக்கிலும் பதினைந்து லெட்சம் போடத்தானே ஒன்றிய அரசு பணமதிப்பு இழப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தது.

பசுப் பாதுகாப்புச் சட்டம், சிறுபான்மையினருக்கு எதிரான சட்டங்கள், நீட்தேர்வு, பொருளாதாரத்தில் நலிந்தோருக்கான பத்து விழுக்காடு போன்று இன்னும் பல சட்டங்கள் வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவை. அவை இருக்கட்டும்.

மேலை நாட்டினரின் வருகை இந்தியாவை வளர்க்க இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். அவர்களால் சனாதனவாதிகளுக்கும் நன்மை. சனாதனம், ஆன்மிகம் போன்றவற்றால் மறைக்கப்பட்டிருந்த பழந்தமிழர் - திராவிடர் தொடர்பு மீட்டுருவாக்கம் செய்யப்பட்டமை தமிழருக்கும் நன்மை. மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற திராவிட மொழி பேசுவோருக்கும் நன்மைதான். ஆனால், அவர்கள் திராவிடமொழி பேசுவோர் தனிக் குடும்ப மொழியினர் என்பதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. தண்ணீர் படுத்தும் பாடு!

இடைக் காலத்தில் தோன்றிய பக்தி இலக்கியங்களும் சிற்றிலக்கியங்களும் பழந்தமிழ் இலக்கியங்களுக்கும் தமிழருக்கும் இருந்த தொடர்பை முற்றிலுமாக அறுத்துவிட்டன. கல்வி மறுக்கப்பட்டு, உழைப்பில் பூட்டப்பட்டவர்களால் அவற்றை எப்படி அறிய முடியும்?

அந்நியர் மதம் மாற்ற வந்தவர்கள் என்று அரசர்களின் ஆசியோடு மக்களை அடிமைச் சேற்றில் உழலவிட்டவர்களுக்குப் பேசத் தகுதி இல்லை. அவர்கள் கல்வியைக் கொடுத்தார்கள்; மருத்துவத்தைக் கொடுத்தார்கள். விழிப்புணர்வைக் கொடுத்தார்கள்.

திராவிடரும் ஆரியரும் வேறுவேறு இனத்தவர்; ஆரியர் இந்தோ - ஐரோப்பிய இனத்தவர் என்று கூறிய வில்லியம் ஜோன்ஸ் (1788) (Thomas R. Trautmann :53) என்பவருக்கு நன்றி கூற வேண்டும். திராவிட மொழிகளை இனங்கண்டு கூறிய எல்லிஸ் (1816) இராபர்ட் கால்டுவெல் மற்றும் பல திராவிட மொழியியல், தொல்லியல் அறிஞர்களுக்குத் தமிழர்கள் கடப்பாடுடையவர்கள். அகண்ட பாரதம் முழுவதற்கும் உரிமை உடையவர்கள் திராவிடர்களே என்று பறை சாற்றியவர்கள். சிந்துச் சமவெளி நாகரிகம் திராவிட நாகரிகம் என்று உலகுக்குப் பறை சாற்றியவர்கள்.

பேச்சுமொழி காலந்தோறும் பெரிய அளவில் மாற்றம் பெறுவதில்லை. பிற மொழிச் சொற்கள் கலக்கும். ஆனால் வரிவடிவம் காலந்தோறும் மாறும். தமிழிலுள்ள எகரமும் ஒகரமும் மெய்போலப் புள்ளி பெறும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார் (தொல்.எழுத்து.16). மற்றைய உயிர்க் குறில், நெடிலுக்கு முறையாக வரி வடிவம் அமைத்தவர் ஏன் இவற்றுக்கு மட்டும் புள்ளி வைத்துக் குறில் என்றார்கள் என்பது விளங்கவில்லை.

இவற்றுக்கு ஒழுங்காக வரி வடிவம் கொடுத்தவர் வீரமா முனிவர் (தொல். விள. 6) எ - ஏ, ஒ - ஓ என்னும் முறையில் தமிழ் உயிர், நெடிலை நிரல்பட வைத்தவர் மதம்பரப்ப வந்த வீரமா முனிவர்தான்.

நன்றாகப் பசுமையாக நினைவில் இருக்கிறது. 1950-களில் தொடக்கப் பள்ளியில் படிக்கும்போது வேலை செய்கிறான் என்று எழுதாமல் வேலை செய்கிறான் என்று எழுதியமைக்காக ஆசிரியர் என்னை அடிக்கவில்லை; அந்த எழுத்துகளை மட்டும் அடித்துத் திருத்தினார். 'இப்படி மற்றவர்கள் எழுதுவார்கள்; நாம் எழுதக்கூடாது' என்றார். அப்போது புரியவில்லை. கல்லூரியில் படிக்கும்போதுதான் புரிந்தது.

தமிழ் எழுத்துகளில் குறிப்பாக உயிர்மெய்களில் சீர்திருத்தம் செய்ய வேண்டியவை நிறைய உள்ளன. மெய்யோடு உயிர் சேரும்போது ஒரே அமைப்பாக இல்லாமல் வரி வடிவம் மாறுபட்டிருக்கும். மெய்யுடன்

ஆ, ஐ சேரும்போது மாறுபட்ட முறையில் உள்ளவை மட்டும் சீர்திருத்தம் செய்யப்பட்டன.

தந்தை பெரியாரின் முற்போக்கான சிந்தனைகளை எல்லாம் எதிர்ப்பவர்கள் அரசு எழுத்துச் சீர்திருத்த ஆணையை வெளியிட்டதும் வாய்மூடி ஏற்றுக் கொண்டார்கள். அனைவரும் அர்ச்சகர் ஆனால் ஆலயத்தின் புனிதம் கெட்டுவிடும் எனப் பேசுபவர்கள் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தந்தை பெரியார் கூறியபடி அரசு கொண்டு வரும்போது எதிர்க்கவில்லை. அடிமடியில் கை வைக்கும்போது மட்டும் அலறுவார்கள்.

**நீட்தேர்வு**

நூலாசிரியர் மருத்துவர் சு.நரேந்திரன் பயிற்றுமொழி, ஆட்சி மொழிச் சிக்கல்களை எல்லாம் தெளிவாக விளக்கிவிட்டுத் தொற்று நோய்போல ஆண்டுக்கு ஒரு முறை எதிர்கால மருத்துவக் கனவர்களைக் கொல்லும் நீட்தேர்வு பற்றியும் தெளிவாக விளக்குகின்றார்.

சாகுபடி செய்பவர்கள் பயிரைக் காக்கப் பூச்சி மருந்தை அடிக்கும்போது மயங்கி விழுந்து இறப்பது போல நீட் தேர்வை நினைத்து இறப்பவர்கள், எழுதிவிட்டு இறப்பவர், முடிவு வந்தவுடன் இறப்பவர் என்று ஆராய்ச்சி செய்யாமலேயே வகைப்படுத்தலாம்.

ஆரம்ப காலத்தில் ஆங்கில மருத்துவம் படிக்கவே சமக்கிருதம் கண்டிப்பாகத் தெரிந்திருக்க வேண்டும் என்று விதி இருந்ததாம். தமிழைப் படிக்கக்கூட அப்படி ஒரு நடைமுறை இருந்ததாம். மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் அவர்கள் முடிச்சுப் போடுவார்கள். தலையை ஆட்டுவதே மன்னர், மக்கள் வழக்கமாக இருந்துள்ளது. எத்தனை முறைதான் பெரியார்கள் தோன்றிக்கொண்டிருக்க முடியும்?

நீட் தேர்வைக் கள்ளிப்பால் கொடுப்பதோடு ஒப்பிடலாம். கள்ளிப்பால் கிடைக்காத நகர்ப்புறங்களில் பாலில் நெல்லைக் கலந்து கொடுப்பார்களாம். பெண் குழந்தை தேவையில்லை, அதிகம் என நினைக்கும்போது இப்படிக் கொலை செய்வார்கள். பெண், ஆண் வேறுபாடு இல்லாமல் நீட் தேர்வு என்னும் நஞ்சு ஊட்டப்படுகின்றது. மருத்துவப் படிப்பு கண்டிப்பாகத் தகுதியுடன் இருக்க வேண்டும்; எந்தவித கருத்து வேறுபாடும் இல்லை; அரசியல்வாதி, ஆளும் வர்க்கம் போல மருத்துவர்கள் நாட்டுப் பிரச்சினைகளோடு விளையாடுபவர்கள் இல்லை. உயிருக்குப் பாதுகாப்புக் கொடுப்பவர்கள். தகுதி வேண்டும். மருத்துவம் படிக்கத் தேவை இல்லாமல் ஆசைப்படுகின்றவர்கள் செத்தாலும் நாட்டுக்குக் கேடில்லை. பெற்றவயிற்றில் பிரண்டை அரிப்பாக மனம் வருந்தி மனநோயாளி ஆகிவிடுவார்கள். படிப்பு முடித்தவுடன் வெளிநாட்டுக்கும் போய் மருத்துவம் பார்க்க மருத்துவர் தேவை. பணம் படைத்தவர்கள், ஆங்கில வழிப் பள்ளிகளில் படித்தவர்கள் மட்டும் மருத்துவர்கள் ஆக வேண்டும்.

ஆண்டுக்குப் பல லெட்சங்களைச் செலவு செய்து, ஓர் ஆண்டு மட்டுமில்லை தேர்ச்சி பெறும்வரை பல ஆண்டுகள் செலவு செய்து பிள்ளைகள் மருத்துவர் ஆக்கப்படுகின்றார்கள். இதன் விளைவாகத் தனியார் பயிற்சி மையங்கள் ஊக்குவிக்கப்பட்டுள்ளன. பழங்குடி, தமிழ்வழிக் கிராமப்புற மாணவர்கள் வாய்ப்புகளை இழந்தார்கள். இதன் காரணமாக மாணவி அனிதா போன்ற 19 மாணவர்கள் உயிரை மாய்த்துக்கொண்டனர் (ப.277)

மருத்துவரான நூலாசிரியர் சு.நரேந்திரன் அவர்களின் நொந்துபோன மனத்தின் வெளிப்பாடே இந்தக் கருத்து. தமிழ் வழியில் படித்த எத்தனை கிராமப்புற மாணவர்கள் மருத்துவராகக் காரணமாக இருந்திருப்பார்!

நீட் தேர்வை எதிர்க்கும் தமிழக அரசு, ஓய்வு பெற்ற நீதியரசர் ஏ.கே ராஜன் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. அக்குழு 165 பக்க அறிக்கையை அளித்துள்ளது. அதன் சாரத்தை நூலாசிரியர் கொடுத்துள்ளார். படிக்கும்போது இதயமே வெடித்து விடும்போல உள்ளது. காங்கிரஸ், பாரதிய ஜனதா என ஒன்றிய அரசு எது ஆண்டாலும் அவை ஏழை மக்களுக்கு ஆனவை அல்ல என்பதை மட்டும் உணர முடிகின்றது. (பக்.275 - 281).

இப்படி நூலாசிரியர் மருத்துவர் சு. நரேந்திரன் அவர்களின் தமிழ் பயிற்று மொழி: கனவும் நனவும் என்னும் பயிற்று மொழி, ஆட்சி மொழி நடைமுறை பற்றிய நூலைப் பற்றி எழுதிக்கொண்டே போகலாம். இந்தியாவின் படை பலம், ஆன்மிகம் மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பேசப்படும் பெருமிதம் போல இன்னும் பேச வேண்டியவை உள்ளன. காலங்காலமாக வேளாண் மக்கள் சுரண்டப்படுகின்றார்கள். அவர்களைப் பற்றிப் பெருமிதம் பேசும் நிலைக்கு உயர வேண்டும். வேற்றுமையில் ஒற்றுமை பேசும்நாடு இந்தியா; ஆள்பவர்களே ஒற்றுமையைக் கிண்டிக்கிளறி வேற்றுமையைக் காட்டக் கூடாது.

இந்தியாவிலுள்ள எல்லாத் தாய்மொழிகளும் அவை பேசப்படும் மாநிலங்களில் ஆட்சி மொழியாகவும் பயிற்று மொழியாகவும் இருக்க வேண்டும். மாநில அரசுகள் நூலாக்கம், மொழிபெயர்ப்பு போன்ற கட்டமைப்புக்களை உருவாக்க வேண்டும். தாய்மொழி உணர்வு மட்டும்போதாது. ஒன்றிய அரசும் பேசுவதோடு நிற்காமல் மாநிலத் தாய்மொழி வளர்ச்சிக்கு உதவவேண்டும். இந்தி தான் இந்தியாவின் தொடர்பு மொழியாக இருக்க வேண்டும் எனத் திணிக்க நினைப்பது தேவையற்றது. மொழிமாற்றம் செய்ய எவ்வளவோ தொழில்நுட்பங்கள் வளர்ந்துவிட்டன.

தாய்மொழியில் எல்லாத் துறைகளிலும் படிக்க வசதிகள், தாய்மொழியில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை என வந்துவிட்டால் எல்லாம் சரியாகிவிடும். இவற்றை எல்லாம் நூலாசிரியர் மருத்துவர் சு.நரேந்திரன் வரலாற்று முறையில் தெளிவாகப் பதிவுசெய்துள்ளார். அனைவரும் படிக்க வேண்டிய நூல்.

கட்டுரையாளர், ஓய்வுபெற்ற தமிழ்ப் பேராசிரியர்,
இலக்கணவியல் ஆய்வாளர், எழுத்தாளர்.



கட்டுரை

# பொருளாதார நோக்கில் குறிசொல்லலும் சடங்கியல் தோற்றமும்

கனிமொழி செல்லத்துரை

குறிசொல்லுதல் நாட்டார் வழிபாட்டுக் கூறுகளில் ஒன்றாக இருக்கிறது. குறிசொல்லுதல் என்பது குறி சொல்லுபவருக்கும் கேட்பவருக்கும் இடையில் இருக்கும் ஆழ்ந்த நம்பிக்கையின் அடையாளமாகும். குறிசொல்லுபவர்களாக ஆண், பெண் என இருபாலரும் ஈடுபடுகின்றனர். நாட்டார் தெய்வம் குறிசொல்லுபவருக்குள் ஏறி ஆடி குறிகேட்பவரின் நன்மை கருதிச் சொல்வதே குறிசொல்லல் ஆகும். சடங்கியல் அல்லாமலும் குறிசொல்லல் பல இடங்களில் நடைபெறுகின்றன. கோடங்கி குறிசொல்லல், குறத்தி குறிசொல்லல், மலையாள குறிசொல்லிகள், மந்திரவாதி போன்றவர்கள் சடங்கியல் சாராது குறிசொல்கின்றனர். எனினும் வழிபாட்டு குறிசொல்லலின் வழி புதிய சடங்குகள் தோற்றம் பெறுகின்றன. நாளடைவில் இச்சடங்குகள் பொருளாதார நோக்கமாக மாற்றமடைகின்றன என்பதை விளக்குவதாய் இவ்வாய்வு அமைந்துள்ளது.

**வழிபாடும் குறிசொல்லலும்**

நாட்டார் வழிபாட்டுக் கூறுகளில் இடம்பெறும் பல சடங்கியல் நிகழ்வுகளில் ஒன்றாக குறிசொல்லுதலும் இடம்பெறுகின்றது. நாட்டார் தெய்வத்திற்கு பூசைசெய்யும் பூசாரி குறிசொல்பவராக இருப்பார். அல்லது அத்தெய்வத்திற்கு அடிமைப்பட்ட குடும்பத்தினருள் மூத்தவரின் மேல் தெய்வம் ஏறி குறிசொல்லும். வருடத்திற்கு ஒருமுறை நடைபெறும் விழாவில் சடங்கின் இறுதி நிகழ்வாக, அதாவது

பெரும்பாலும் விழாவானது நிறைவு பெறும் போது குறிசொல்வார்கள். முடிவு நேரத்தில் குறிசொல்பவரின் உடலில் இருந்து தெய்வம் நீங்கிவிடும். உடனே அவர் மலை ஏறிவிடுவார். குறிசொல்ல ஆரம்பித்து விட்டால் மக்கள் நெருக்கிக் கொண்டு குறி கேட்பதற்காக சாமியாடியை நோக்கி முன்னே செல்வார்கள்.

குறிசொல்பவர் மக்களின் மனத்தில் உள்ளதைக் கூறுவார். மக்களும் தங்களுக்குத் தேவையானவற்றை வேண்டும் என உரிமையுடன் குறி சொல்பவரிடம் கேட்பார்கள். இந்நிகழ்வு தெய்வத்திற்கும் மக்களுக்கும் இடையே நிகழும் ஊடாட்டம் ஆகும். இத்தகைய ஊடாட்டம்தான் மக்களை நாட்டார் வழிபாட்டில் பிணைத்துள்ளது எனலாம்

**சாமியாடும் நிகழ்வு**

சாமியாடுபவரை கோமரத்தாடி அல்லது சாமியாடி என்று அழைப்பார்கள். சாமி ஆடுபவர் பெரும்பாலும் நாட்டார் தெய்வத்திற்கு பூசை செய்பவராகவோ அல்லது குலதெய்வ வழிபாடு செய்பவராகவோ இருப்பார். சாமியாடுதலின் போதுதான் குறிசொல்லல் நிகழ்த்தப்படும். பூசைகள் முடிந்த பின்புதான் குறிசொல்ல ஆரம்பிப்பார்கள். சில இடங்களில் இடையிலும் நடைபெறும். பூசை முடிந்த பின்பு குறிசொல்பவர் நடுஇரவாக இருந்தாலும் தலையில் தண்ணீரை ஊற்றிக்கொண்டு தெய்வத்தின் முன்வந்து நிற்பார்கள். அவர்முன் மண்சட்டியில் நெருப்பை வளர்த்து சாம்பிராணி போடுவார்கள். புகை அதிகமானதும் சாமியாடி உடல் ஆட ஆரம்பிக்கும். அப்போது ‘ஓ’ என்று வேகமாகக் கத்துவார்கள். சாமியாடுபவரின் உடலில் தெய்வம் வந்ததின் அறிகுறிதான் இந்தச் சத்தம். அப்போது பம்பை, உடுக்கை, பறை போன்ற இசைக் கருவிகளை அதிவேகத்துடன் வாசிப்பார்கள். இவ்வகையான இசைக்கருவிகள் அந்தந்தப் பண்பாடுகளுக்கேற்ப மாறுபடும். இசையின் வேகம் அதிகமானதும் வழிபாட்டில் ஈடுபட்ட மக்களில் ஒருசிலர் (ஆண், பெண்) சாமி வந்து ஆடுவார்கள். இவை போலச்செய்தல் எனலாம். சாமி ஆடுபவரை கட்டுப்படுத்துவதற்கு இரண்டு மூன்று பேர் தேவைப்படுவார்கள். சாமியாடியைத் தவிர சாமியாடும் மற்றவர்களைத் தடுப்பதற்கு தலையில் சாம்பலைத் தெளிப்பார்கள். அல்லது எலுமிச்சை பழத்தை வாயில் வைத்து கடிக்கச் சொல்வார்கள். பழத்தைக் கடித்த பின்பு சாமியாடுபவர் சமநிலைக்கு வந்துவிடுவார். கோமரத்தாடி தெய்வத்தின் அருகில் இருக்கும் கத்தியையோ, சுக்குமோத்தடி என்ற கருவியையோ கையில் எடுத்துக்கொண்டு ஆடுவார். ஆடும் போது நிலையின்றி ஆக்ரோஷமாக ஆடுவார். தெய்வம் வந்து ஆடும்போது எதிரில் யாரும் நிற்கமாட்டார்கள்; பேசவும் மாட்டார்கள். தெய்வத்தின் கருவியால் சாமியாடி தன்னையே அடித்துக்கொண்டும் ஆடுவார். நெருப்புச் சட்டியைக் கையில் எடுத்து ஆடிக்கொண்டிருக்கும்போது சாம்பலை எடுத்து வழிபட வந்திருக்கும் நாட்டார்களிடம் கொடுப்பார். கொடுத்ததும் குறிசொல்ல ஆரம்பித்து விடுவார். குறிசொல்லி முடித்தபின் மலையேறி விடுவார். குறி சொல்லலின் போது ஆவிகள் சாமியாடியின் மீது உறைவதாக நம்பிக்கைக் கொள்கின்றனர். குறிசொல்பவர் அசைவம், மது சாப்பிடாமல் விரதம் இருக்கவும் சிலர் குடும்ப வாழ்விலிருந்து விலகியும் இருப்பர்.

சில வழிபாட்டு முறைகளில் மலையேறி முடித்த பிறகு குறிசொல்வதையும் காணலாம். குறிசொல்லல் இல்லாமலும் சாமியாட்டம் நிகழ்த்தப்படும். இவ்வாறு பல முறைகளில் சாமியாடுதல் நடைபெறுகின்றது.

**குறிமொழி**

குறிசொல்லலில் குறிசொல்பவர் சில குறிமொழிகளைப் பயன்படுத்துவார். இத்தகைய குறிமொழியைக் கேட்கும் நாட்டார்களுக்கு புரியும் வகையில் குறிசொற்கள் அமைந்திருக்கும்.

| | |
|---|---|
| சின்னவரப்பு | - வாரம் |
| நடுவரப்பு | - மாதம் |
| பெரியவரப்பு | - வருடம் |
| குட்டி | - பெண்குழந்தை |
| குஞ்சு | - ஆண்குழந்தை |
| கரும்பு | - கிடா |
| சாப்பாடு | - நெருப்பு |

போன்ற குறிசொற்களைத் தனித்த மொழிகளாகக் கையாளுகின்றனர். மக்களும் குறிசொற்களைப் புரிந்துகொண்டு பதில் அளிப்பார்கள். அந்நேரத்தில் தெய்வத்திடம் பேசுவது போன்றே மக்கள் உணர்வார்கள். நீ, வா, போ என்று உரிமையுடன் உரையாடுவார்கள். சென்ற வருடம் கூறியது நடந்துவிட்டால் மகிழ்வுடன் தெரிவிப்பார்கள். நடக்கவில்லை என்றால் ஏன் நடக்கவில்லை என்று வருத்தத்துடன் கேட்பதற்கும் மக்களுக்கும் உரிமை உண்டு. அதே போல தெய்வமும் இந்த வருடம் விழா நிறைவாக இருந்ததா? இல்லையா? என்பதைக் குறிசொல்பவர் மூலம் தெரிவிக்கும். இவ்வாறு குறிசொல்லும் நிகழ்வானது நடைபெறும்.

**உடல்மொழி**

குறிசொல்லும் போது குறிசொல்பவர் உடல்மொழியையும் கையாளுவார். கைகளிலும் முகத்திலும் சில சைகைகளை வெளிப்படுத்துவார். எண்களைக் கூறுவதற்கு விரல்களை நீட்டிக் காட்டுவார். சில சாமியாடிகள் வாயைத்திறந்து பேசமாட்டார்கள்; சைகையின் மூலமே குறிசொல்லுவார்கள். குழந்தை என்பதற்கு இருகைகளையும் குவித்துக் காட்டுவார்கள்; மனத் திருப்தி என்றால் நெஞ்சில் கைவைத்து தலையை ஆட்டுவார்கள். இவ்வாறு குறிசொல்லுதலில் உடல்மொழியும் முக்கியத்துவம் பெறுகின்றது.

**உடை அமைப்பு:**

குறிசொல்லுதலில் உடை அமைப்பு என்பது நோக்கத்தக்கதாகும். குறிசொல்லுபவரில் சிலர் சாதாரண உடையிலும், வேறு சிலர் ஏற்கனவே தெய்வத்தின் சிலைக்கு உடுத்தப்பட்ட உடையினையும் உடுத்திக்கொண்டு குறிசொல்வார்கள். அவ்வாறு சொல்லும் போது தெய்வம் தன்னுடன் தொடர்பில் இருப்பதாக உணர்வார்கள். மக்களும் தெய்வமே நேரில்



வந்தது போல மகிழ்வார்கள். மேலும் தெய்வத்தின் பொருள் மற்றவர்களிடம் வரும்போது அவர் தெய்வத் தன்மை பெற்றுவிட்டதாகக் கருதுகிறார்கள். இவ்வாறு, குறி சொல்லும் நேரத்தில் உடையும், உடை அமைப்பும் முக்கியத்துவம் பெறுகின்றன.

## குறிசொல்லும் முறைகள்

குறிசொல்லும் முறைகள் பலவகைப்படும். ஆண்களும் குறிசொல்வார்கள், பெண்களும் குறிசொல்வார்கள். கோவிலில் அதிகமாக ஆண்கள்தான் குறிசொல்கிறார்கள். தற்போது வீட்டிலோ கோவிலுக்கு அருகிலோ குறிசொல்லும் முறை காணப்படுகிறது. அவற்றில் சாமியாடி குறிசொல்லுதல், மைபோட்டு கூறுதல், வெற்றிலையைப் பார்த்துக் கூறுதல். விளக்கின் ஒளியைப் பார்த்துக் கூறுதல், எலுமிச்சைப் பழத்தைப் பார்த்துக் கூறுதல், சூடத்தின் ஒளியைப் பார்த்துக் குறிசொல்லுதல், சாம்பலைப் பார்த்துக் குறிசொல்லுதல், கத்திமேல் நின்றுகொண்டு குறிசொல்லுதல் போன்ற பல்வேறு முறைகள் காணப்படுகின்றன.

## குறிசொல்லுதல் குறித்த நம்பிக்கைகள்

குறி சொல்லலும், குறிகேட்டலும் மக்களின் நம்பிக்கை சார்ந்த ஒன்றாகும். இதன் மூலம் தங்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்று மக்கள் நம்புகிறார்கள். எதிர்காலத்தில் நடக்கும் நிகழ்வுகள் சிக்கல்கள் இல்லாமல் நடைபெறும் என்ற நம்பிக்கைகள் மக்கள் மத்தியில் நிலவுகின்றன. குறிகேட்டல் நிகழ்விற்குப் பிறகு தெய்வம் தம்முடன் இருப்பதாகவும் அவர்கள் உணர்கின்றனர். இந்த நம்பிக்கையின் அடிப்படையில் குறிசொல்லல் குறித்த செய்திகள் பரவலாக்கம் செய்யப்படுகிறது. நாட்டார்களிடமிருந்து மற்ற சமயத்தினருக்கும் வேறு பண்பாட்டிற்கும் பரவலாக்கமானது நடைபெறுகின்றது. தற்போது வேற்று சமயத்தினரும் நம்பிக்கைக்கொண்டு குறிகேட்க வருவதை வேதாரண்யம் வட்டம் ஆயக்காரன்புலம் கலிதீர்த்த அய்யனார் கோவிலில் வெள்ளி, செவ்வாய், ஞாயிற்றுக்கிழமை நாட்களில் காணமுடியும். மேலும் நாட்டார் கிறித்தவர் வழிபடும் தேவாலயங்கள் மற்றும் நாட்டார் இசுலாமியர் வழிபடும் தர்காக்களிலும் குறிசொல்லலும் பேய் விரட்டும் சடங்குகளும் நடைபெறுகின்றன.

## பொருளாதாரத்தை முன்வைத்த சடங்கியல்

சடங்கியல் தோற்றத்திற்கு அடிப்படை வழிபாடுகளும் நம்பிக்கைகளும் ஆகும். நம்பிக்கைகள் புதிய புதிய சடங்குகளைத் தோற்றுவிக்கின்றன.சங்க காலத்தில் குறத்தி குறிசொல்லல் என்ற நிலை இருந்ததை இலக்கியங்கள் வழி அறியலாம். தற்போது குறிசொல்லல் என்பது சடங்கியலுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. முன்பு வருடத்திற்கு ஒருமுறை விழா அன்று மட்டும் நடைபெற்ற குறிசொல்லல் இன்றைய காலக்கட்டத்தில் அனைத்து நாட்களிலும் நடைபெறுகின்ற ஒன்றாக ஆகிவிட்டது. இதற்குக் காரணம் குறிசொல்லும் நிகழ்வானது பொருளாதார நோக்கமாக மாறிவிட்டது என்பதே.

பணத்தேவையினை அடிப்படையாகக் கொண்டு புதிய சடங்கியலை உருவாக்குகின்றனர். அத்தகைய சடங்குகளாக திருமணத் தோசம் கழித்தல், பில்லி சூன்யம் எடுத்தல், காவுகொடுத்தல், கோழி அறுத்து தலையில் இரத்தம் விடல், குழந்தையின்மைக்குப் பரிகாரம் செய்தல், பேய் விரட்டுதல் போன்ற சடங்குகள் நடைபெறுகின்றன. இத்தகைய சடங்குகளைச் செய்வதன் வழி தெய்வத்திற்குத் தேவையானப் பொருட்கள் வாங்கிக்கொடுக்க மக்கள் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். இத்தகைய சடங்குகள் நாட்டார் தெய்வ வழிபாட்டில் புதிதாகத் தோன்றியவையாக இருக்கின்றன. பரிகாரம் செய்வது என்ற பெயரில் நாட்டார் மக்களிடம் பணத்தினை வசூல் செய்வதும் வாடிக்கையாகிவிட்டது.

குறிகேட்பதற்கு மக்கள் கூட்டம் அதிகமாக வருவதால் வரிசை முறைப் பின்பற்றப்படுகிறது. அவ்வாறு வருபவர்களில் நபர் ஒன்றுக்கு ரூபாய் 50 முதல் 100 வரை வசூலிக்கப்படுகிறது. அவசரமாகக் குறிபார்க்க வேண்டுமானால் அதற்குத் தனியாகப் பணம் வாங்குகிறார்கள். குறிசொல்லும் நபருக்கும் தனியே பணம் வைக்கவேண்டும் என்று கூறியே உள்ளே அனுப்புகிறார்கள். நெருக்கி அடித்துக்கொண்டு குறி கேட்ட மக்கள் இன்று அலைபேசியில் வருகையைப் பதிவு செய்துவிட்டு குறிக்கப்பட்ட நேரத்திற்கு வருகை தந்து குறிகேட்கும் சூழல் உருவாகிவிட்டது. இது இன்றைய தொழிற்நுட்ப வளர்ச்சியைக் காட்டுவதோடு, கார்பரேட் வணிக கலாச்சாரமாகவும் ஆகிக்கொண்டிருக்கிறது. நம்பிக்கை என்பது ஆழமான உளவியல் அடிப்படை கொண்டது. குறிசொல்லல் என்ற நிகழ்வு மக்களின் நம்பிக்கையைச் சுரண்டுவதாகவும், அதற்கான ஒரு தொழில் உத்தியாகவும் இருக்கிறது என்பதுதான் உண்மையையும் வெளிப்படுத்துவதாகக் கருதலாம்.

வழக்காறுகள் அரசியல், சமூகம், பண்பாடு, மக்களின் வாழ்வியல் முறைகள் போன்றவற்றின் காரணமாக காலத்திற்கேற்ப மாற்றங்கள் நடைபெறுகின்றன. இம்மாற்றங்கள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு புதிய வழக்காறாகவும் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு நாட்டார் மக்களின் வழிபாடு, நம்பிக்கை, சடங்குகள் போன்ற இயல்பான விசயங்கள் பொருளாதாரத்தை முன் வைத்து ஒரு வணிகமாக மாற்றம் பெறுவதையும், அதன் வழி புதிய சடங்குகள் தோற்றம் பெறுவதையும் இவ்வாய்வின் வழி அறிய முடிகின்றது.

கட்டுரையாளர், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்

கட்டுரை



# கவி கா.மு.ஷெரீபின் பல்கீசு நாச்சியார் காவியம்

பேராசிரியர் உ. அலிபாவா
அ. முகம்மது அசாருதீன்

கவிஞர் எழுதிய இஸ்லாமியத் தமிழ்க் காப்பியமான பல்கீசு நாச்சியார் காவியம், 1991 ஆம் ஆண்டு வெளிவந்தது. கிறித்துவர்களின் புனித வேதமான விவிலியத்திலிருந்து எடுக்கப்பட்ட இந்தக் கதை இஸ்லாமிய ஏற்புக்குத் தகுந்தவாறு கவிஞரால் பல்கீசு நாச்சியார் காவியமாக இயற்றப்பட்டுள்ளது. மானிட இனமும் வேண்டிய உருவை எடுத்துக்கொள்ளும் ஆற்றலுடைய 'ஜின்' எனப்படும் அணங்கினமும் கொண்ட காதலின் ஆழத்தைக் காட்டும் இக்காப்பியத்தில் பெண்களின் கற்பைச் சூறையாடும் சுறாயிக் எனும் பேயரசனைக் கொன்றொழித்த 'பல்கீசு' என்னும் பெண்ணரசியின் வீரம் நயமாகப் பேசப்படுகிறது.

'பிறை' என்னும் இதழில் வெளிவந்த இக்காப்பியம் மூன்று அங்கங்களைக் கொண்டது. கவிஞர், முதல் அங்கத்தை மட்டும்தான் எழுதியுள்ளார். எஞ்சிய இரு அங்கங்களை எழுதக் காலம் கவிஞருக்கு ஒத்துழைக்கவில்லை. முதல் அங்கத்தில் மட்டும் மொத்தம் 302 விருத்தப்பாக்கள் உள்ளன.

'சுறாயிக் மன்னனை மணந்து, அவன் தன்னைத் தொடுவதற்கு முன்பே கொன்று, அவனுடைய நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, சிறந்த ஆட்சி எனும் மக்கள் பாராட்டினைப் பெறுவது' இக்காப்பியத்தின் இரண்டாவது அங்கமாகும். திருவிவிலியம் சாலமன் என்றழைக்கும் சுலைமான் நபியை மணந்து, அவருடன் பதின்மூன்றாண்டுகள் அவர்களுடைய நன் மனைவியாக வாழ்ந்து, ஓர் ஆண் குழந்தையையும் பெற்று மரணித்ததாக நிறைவுபெறும் அங்கம், இக்காப்பியத்தின் மூன்றாவது அங்கமாகும்.

"இந்த முப்பெரும் அங்கங்களையும் கவிதைகளாக்கிடும் எண்ணத்தில் 'பிறை' எனும் திங்கள் ஏட்டில் 1977 ஜனவரியில் ஆரம்பித்தேன். முற்றுற்றிடா நிலையில் எனது தொடர் நின்றது. பின்னர் பிறை வெளிவருவதும் நின்றுவிட்டது. ஒரு ஏட்டில் தொடராக வெளிவந்ததை மற்றோர் ஏட்டில் தொடர்ந்தால் புது வாசகருக்கு முற்பகுதி தெரியாததால் படித்திடத்தோன்றாது. எனவே, வேறு ஏடுகளை அணுகிடவில்லை. சீறாப்புராணத்திற்கு உரை எழுதிடும் கடினமான பணியில் ஈடுபட்டிட வேண்டியதிருந்ததால், தனியாக இதன் பிற்பகுதியை எழுதிட முடியவில்லை. பலர் நேரிலும் கடிதங்கள் மூலமாகவும் இக்காப்பியத்தை முழுவதுமாக எழுதி முடித்திடுமாறு வற்புறுத்தினார்கள். அவர்களின் அளவு கடந்த கவிதைச் சுவைப்பார்வத்தை என்னால் உணர முடிந்தது. ஆயினும் நிறைவேற்றிட இயலவில்லை. தம்பி ஆலிஜனாப் எம். சையது முகம்மது ஹஸன் அவர்கள், வெளிவந்துள்ள வரையிலான கவிதைகளையேனும் நூலாக்கிடலாமே

என உரைத்தார்கள். அவர்களின் விருப்பு எனக்கும் விருப்பாயிருந்ததால் இந்தக் குறைக் காப்பியம் உங்கள் கையில் திகழ்கின்றது. இறையருளால் நான் உடல் நலம் பெற்றால், சீறா உரை எழுதும் பணி நிறைவுற்றதும் இக்காவியத்தை முற்றுமாக எழுதி முழுமையாக்கி வெளியிட்டிட எண்ணம். முடிவில் கிட்டிடும் பயன். தன்னலம் கருதாமல் பொதுநலம் கருதிச் செயல்பட்டால், அதற்கு ஆண்டவன் தந்திடும் கூலி மிக உயர்ந்ததாக இருந்திடும். ஆம். பல்கீஸ் நாச்சியாரின் சிந்தித்திடவும் இயலா வீரச் செயலுக்கு, பெண்களின் கற்பைக் கவர்ந்து களம்புகப்படுத்திய சுறாயிக் மன்னனைக் கொன்றொழித்தற்கு இறைவன் அளித்த பரிசு, அறிவாளராகவும் மிகப் பெரிய பேரரசாகவும் விளங்கிய சுலைமான் நபியவர்களைக் கணவராக்கி அளித்த நற்பேறாகும்!' எனக் கவிஞர் கருத்துரைக்கிறார்.

பல்கீஸ் நாச்சியார் வரலாற்றை விவிலிய அடிப்படையை மையமாக வைத்து இஸ்லாமிய ஏற்பிற்கு மாற்றமுடைய வகையில் ஆங்கிலத்தில் ஷிபா (SHEBA) என்னும் பெயரில் வரலாற்றுப் புதினம் புனையப்பட்டிருந்தது. அப்புதினம் ஆங்கிலத் திரைப்படமாகவும் நாற்பதாண்டுகட்கு முன்னர் வெளிவந்துள்ளது. ஏமனில் காதுவழிக் கதையாக இவ்வரலாறு இன்றளவும் பேசப்படுகிறதென்பர். கல்வெட்டுக்களிலும் உளதென்பர். அபிசீனிய அரச பரம்பரையினர் தடங்களைப் பல்கீஸ் நாச்சியார் வழித்தோன்றலாக உரைத்துப் பெருமைப்படுவதாகவும் தெரிந்திட முடிகின்றது. அங்கேயும் காதுவழிச் செப்பலும் கதைகளும் கல்வெட்டும் உண்டென்பர்.

இந்த அரிய வரலாற்றினைக் கவிநயத்துடன் காவியமாக்கிட முற்பட்டதற்கான கதைக் கருவூலம் 'கசசுல் அன்பியா' எனும் பெயரில் துலங்கிடும் நபிமார்களின் வரலாற்றுரை நூலையும் வண்ணக் களஞ் சியப் புலவர் யாத்தளித்துள்ள ராஜ நாயகம் எனும் சுவை நிரம்பிய தமிழ்க் காப்பியத்தையும் படித்துப் பெற்றதாகும்.

காவியம் முற்றுறாதாயினும் கற்பனை வளமும் கவிதை வளமும் நிறைந்ததாகும். கவிதைகள் பலவித யாப்புகளில் அமைக்கப்பட்டுள்ளன. சந்த விருத்தங்கள் நிறைந்து திகழ்வதைக் காணலாம். படிப்போருக்கு எளிதாக இருந்திடக் கருதி, சில சந்தப் பாடல்களுக்குத் தத்தகாரம் தலைப்பில் தரப்பட்டுள்ளது' எனக் கவிஞர் சுட்டுகிறார்.

சுறாயிக் மன்னன் அறபு நாட்டில் 'சபா' என்னும் ஊரிலிருந்து ஆண்டுவந்தான். அவன் ஆட்சி, தீய நண்பர்களின் வழிகாட்டுதலால் மனம்போன போக்கில் நடந்துவந்தது. பெண்களுக்குப் பாதுகாப்பில்லை. இவ்வுலக உடைமைகள் அனைத்தும் தனக்கே சொந்தம் எனும் ஆணவப் போக்கோடு செயல்பட்டான்.

**"மன்னவன் எனக்கே இந்த வையத்தில்**
**உடைமை சொந்தம்**
**பொன்னோடு பூமி பெண்கள்**
**போகபோக்கியங்கள் எல்லாம்**
**என்னதே இவற்றில் ஒன்றை ஏற்கநான்**
**விருப்பங் கொண்டால்**
**அன்னதைத் தடுக்க யார்க்கும் அளித்திலேன்**
**உரிமை காண்க"**

என சுறாயிக் மன்னனின் ஆணவத்தைக் கவிஞர் எடுத்துக்காட்டுகிறார்.

சுறாயிக் மன்னன் தன்னுடைய நாட்டில் மக்கள் தவமாய்த் தவமிருந்து பெற்றெடுத்த பெண் பிள்ளைகளைப் பூப்படைந்தவுடன் தனக்கு இன்பம் தருவதற்கு அனுப்ப வேண்டும் என்றும், தான் இன்பம் துய்த்தபின் வேறொருவனுக்கு மணம் முடித்துத் தரலாம் என்றும் பெற்றோருக்குக் கட்டளையிட்டிருந்தான்.

பெண்மையைப் போற்றாமல் கேவலமாய்ப் பார்த்த சுறாயிக் மன்னனின் அமைச்சனாகத் திகழ்பவன் யூசருகு. தாய் தந்தை இல்லாத யூசருகுவைச் சார்ந்து யாரும் வாழவில்லை; அவனுக்குத் திருமணமும் ஆகவில்லை. அமைச்சனாக இருந்தும் தவறிழைத்து வாழும் அரசனைத் திருத்தும் வழி எதுவும் தெரியாமல் தவித்தான் அமைச்சன் யூசருகு. மனம் பொறுக்காமல் பெண்களைப் போற்றும் இயல்புடைய யூசருகு, ஒரு காட்டுப் பகுதிக்குச் சென்றுவிட்டான். அங்கிருந்த 'ஜின்' நாட்டின் அழகியர் மான் வடிவில் வந்து யூசருகு ஜின்கள் நாட்டுச் சிறுதோப்பில் மயங்கிய நிலையில் உறக்கம் கொண்டான். விழித்ததும் ஜின் குலத்துக் கன்னியர்,

**"உன்னழகைப் பருகுவதே எங்களின் நோக்கம்**
**உன்றனுக்கோர் சிறிய தீங்கும் நாங்கள் செய்திடோம்**
**ஜின்னரசன் தனைக்கான நீ விரும்பினும்**
**சிரமமின்றி நாங்களதை நிறைவு செய்வோம்**
**இன்னுமெதற்காக நீயும் பயமடைகின்றாய்**
**எழிலையெலாம் திரட்டிவந்த வடிவழகனே**
**தன்னை விரும்பாதபேரை வற்புத்துதல்**
**தருமமன்று நாங்களதை நன்கறிவோம்"**

என்றுரைத்தனர். பின்பு அவர்களை யூசருகு ஏறிட்டுப் பார்த்தனர். வலுக்கட்டாயமாக யூசருகுவை அடைய அவன் விரும்பவில்லை; இந்த நிலையிலும் அவன் பெண்மையைப் போற்றும் இயல்புடையவனாகத் திகழ்ந்தான்.

சந்திரனும் பார்த்து நாணமடையும் அழகுடையவள் ஜின்னரசனின் மகளான உமையிரத்து. அவளைச் சுயம்வரத்தில் மணம் செய்ய வந்த வாலிபவர்கள்

அனைவரும் அவள் கண்களைக் கண்டவுடன் கண்ணொளி இழந்தனர்; திண்ணிய தோள்களின் வலிமையையும் இழந்தனர்; சிறிது நேரத்தில் மூச்சையுமிழந்தனர். இதனைப் பார்த்த உமையிரத்து வருந்தியிருந்தாள். பிறகு அவள் யூசருகுவைக் காணுகிறாள்; காதல் கொள்கிறாள்; ஜின்னரசனின் ஒப்புதலோடு இருவருக்கும் திருமணம் முடிந்தது. யூசருகுவும் இதுவரையிலும் எந்தப் பெண்களையும் நிமிர்ந்து பார்க்கவில்லை. இதன் முதலாக உமையிரத்தைத்தான் பார்த்தான்.

காலையில் 'சபா' நாடடைந்து அங்கு அமைச்சர் பணியாற்றினான். பின் மாலையில் ஜின் நாட்டிற்கு வந்து மனைவியுடன் மகிழ்வோடிருந்தான். சிறிது காலத்தில் உமையிரத்து ஓர் அழகிய பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அக்குழந்தைக்குப் 'பல்கீஸ்' என்று பெயரிட்டனர். ஆயிரக் கணக்கான மக்களின் நாவுகளில் 'பல்கீஸ்' என்னும் நாமம் ஒலித்தது. பல்கீஸின் தாயார் உமையிரத்து ஊஞ்சலாட்ட வந்தபோது வழுக்கி விழுந்து இறந்துபோனார். பல்கீஸைத் தந்தையும் பாட்டனும் இணைந்தே வளர்த்தனர். பல்கீஸ் பூப்படைந்த நிலையில் தந்தை யூசருகுவின் சபா நாட்டினைச் சென்று பார்க்க எண்ணினாள். இதனை யூசருகு ஏற்கவில்லை. முதுமைப் பருவத்திலும் திருந்தாத சுறாயிக் அரசனின் நாட்டிற்கு வரக்கூடாது என்றான். பின்னர், பல்கீஸ் தன் பாட்டனாரிடம் பேசி 'சபா' நாட்டிற்குச் செல்ல அனுமதி பெற்றாள்.

பல்கீஸ் நாச்சியார், 'தாரமில்லா மாதரைத் தன்னருந் தாயாய் நினையாத பழிகாரனை மேலவன் என்று மதிப்பது கற்றோர் செயலாமோ?' என்று வினாத் தொடுக்கிறார். 'படுசூரனே யாயினுந் தாரங்கடப்பவன் துட்ட விலங்காவான்; அவனை வேரோடழித்திடுவதற்கு வேண்டுவனவற்றைச் செய்வதே வீர மறச் செயலாம்' எனத் தெளிவுபடுத்துகிறார். அங்ஙனம் வேரோடழிக்கும் பணியினையும் பல்கீஸ் நாச்சியார் வேரோடழிக்கத் துணிகிறாள். தீயவனை அழிக்கும் பொறுப்பினை ஏற்றுச் செயல்பட வேண்டும். தீயவன் செய்யும் தீமைகளைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கக் கூடாது என்கிறார் பல்கீஸ் நாச்சியார். இத்தகைய கருத்துடைய பல்கீஸ் நாச்சியார், சுறாயிக் மன்னனை அழிக்கும் பொருட்டுப் பாட்டனாரின் ஒப்புதலுடன் சபா நாட்டுக்குப் புறப்பட்டு விட்டார் என்பதைக் கவிஞர்,

"தீயவை செய்பவன் தன்னிலும்
தீயதைப் பார்த்திருத் தல்மிகத்
தப்பிதமாகுமத் தப்பிதம் தன்னையென்
தந்தையே செங்குவ தோஇனை
ஒப்பிலதென்மனம் ஒப்பிலேன் இங்கினி
ஓர்கணம் நானிருக்க இதோ
இப்பொழுதே சபா நாட்டிற்கே நான்
எழுந்தனன் என்றாளவள்"

என்று காப்பியத்தில் எடுத்துரைக்கிறார்.

இறை மறுப்புக் கொள்கையாலும் உரை மறுப்புக் கொள்கையாலும் இறைவனால் சபிக்கப்பட்ட ஜின்கள் பற்றிக் கவிஞர்,

"பின்பவை உலகில் செய்த பீடறு நடத்தைகண்டு
மன்பெறும் இறையவற்றை வதையுற அழித்துப் போட்டான்
பின்பவை இறைஞ்சி வேண்ட பிசாசுபோல் உலகந்தன்னில்
மன்னிடும் அருவமாக வாழ்ந்திட வைத்து விட்டான்"
"நிறைபட வாழ்ந்த வாழ்க்கை நெடியவன் உரை மறுப்பால்
குறைபட மாய்ந்து கெட்டுக் கெட்டுக் கொடியபேய்
பிசாசு போன்று
மறைந்துமே உலகம் தன்னில் மனிதனுக்கு அடங்கி நாளும்
உறைந்திடும் கீழ்மை ஜின்கள் உற்றதாம் மேலும் கேளும்!"

"பூமியும் வெறுத்தொதுக்க புனல் செடி கொடி மரங்கள்
ஏமமில் பூண்டு புற்கள் யாவையும் வெறுத்தொதுக்க
தாமமர்ந்திருக்க வுண்ண ஜெகத்திலே ஏதுமின்றி
வாமமாம் அந்தரத்தில் வதியவும் உண்பதற்கு"

"மானுடன் தின்றெறிந்த மாசுடை எலும்பைச் சோற்றை
தானுணும் நிலையை ஜின்கள் தனக்கிணையாக்கி வைத்தான்
மாணுநல் லொழுக்கம் நீதிமறைவழி நடத்தி விட்டோர்
தானிதை நோக்கியாய்ந்து தனியவன் வழிநடத்தல்
நன்றென உரைப்பேன் இன்றேல் நரகிடை வீழநேரும்"

என்று எடுத்துரைக்கிறார். இதில் இறை மறுப்பாளர்கள் இறைவனால் சபிக்கப்பட்டவர்கள் என்பதும் இறைமறுப்பு என்பது வெறுப்புணர்வு மிக்கது என்பதும் கவிஞரால் காட்டப்படுகிறது. ஆகவே, மேற்காணும் அடிகள் கவிஞரின் வெறுப்புணர்வின் வெளிப்பாடாய் அமைந்துள்ளன.

இக்காப்பியம் குறித்து மு.வலவன் குறிப்பிடுவதும் இங்கு சுட்டத்தக்கது.

'பல்கீசு நாச்சியார் காவியம்' விவிலிய மூலத்திலிருந்து முளைத்தது. ஏமன் நாட்டில் பேசப்படும் 'பாட்டி சொன்ன கதை' அபிசீனிய அரசு வரலாற்றுக் கருவூலம். பெண் கற்பைச் சூறையாடும் பேயரசை ஒழித்த மாதரசியின் நோன்பு கூறும் பெண்ணுரிமைப் பெட்டகம் எனினும் அதை செரீபுப்பாட்டன் படைப்பில் படிக்கும்பொழுது, நம் தமிழ்நாட்டுப் பெண்ணின் வரலாறுபோல் உணர்கிறோம். அதுமட்டுமல்ல பழந்தமிழ் மரபைப்போல அந்நாட்டிலும் மலர்களின் பெயரை மகளிர்க்கு இடும் வழக்கமிருப்பதை அறிந்து வியப்படைகிறோம்'' எனக் குறிப்பிடும் வலவன் இதற்குச் சான்றாதாரமாக,

"பிள்ளையின் தந்தையூர் 'சபா' அந்நாட்டுறும்
பீடுறும் மலர்ப்பெயர் 'பல்கீஸ்' ஆனதால்
கொள்ளை வனப்புள பிள்ளைக்கு அப்பெயர்
சூட்டுதல் பொருத்தமே கொள்ளும் என்றனர்"

எனும் பாடலையும் தருகிறார்.

கவிஞர் இக்காவியத்தில் கையாண்டுள்ள உவமை நயங்களையும் சுட்ட வேண்டும். பசியின் கொடுமையினை உணர்ந்தோர்க்கு உடனடியாகப் புலப்படும் ஓர் உவமையினைக் கவிஞர் கையாண்டுள்ளார். ‘பசித்தோன் உண்ணும் உணவுதனைப் பறித்தல் போன்ற அவ்வுரை...’ என்று பாடுவது காவியத்திற்கு அணி சேர்க்கிறது. காவிய அழகு கவித்துவ நடையிலும் காணப்படுகிறது. ஓர் இடத்தில் கவிஞர் ‘திரண்டெழுந்த புண்ணியத்தின் உருவம் ஈதோ சித்திரத்தில் உயிர் புகுத்திவிட்டார் தாமோ?” என்று அதனை வெளிப்படுத்துகிறார். கவிஞர், காவியத்தில் சந்த நயங்களும் சிந்து பாடுகின்றன. மதுவிலும் மங்கையர் மயக்கத்திலும் மகிழ்ந்து களிக்கும் சுறாயிக் மன்னனின் எண்ணத்தை அமைச்சர் யூசருகு தன் மகளிடம்,

“அழகேந்திய கொடியே அறிவேந்திய மகளே
இழிவேந்திய அரசன் எனையாளுவோ னானான்
பழிதாங்கிய அவனின் செயலால் உனை அழகார்
பொழிலேந்திய திருநாட்டைத் தேகிட மறுத்தேன்”


என்று எடுத்துரைக்கிறார். இதில் சந்த நயம் மிக்க கவித்துவம் வெளிப்படுவதுடன் காவியத்திற்கும் அழகு சேர்க்கிறது.

“இப்படிப் பல்வேறு சந்த விருத்தங்கள் பாங்குற அமைந்த நூலாக ‘பல்கீசு நாச்சியார் காவியம்’ பரிமளித்தாலும் மூன்று அங்கங்களாய் அமைய வேண்டிய இந்நூல் முதல் அங்கத்தோடு முற்றுப்பெறாமல் நின்றுவிட்டதால், படைப்பின் முழுப் பாங்கையும் சுவைத்துணர முடியாச் சோகவுணர்வையே நமக்கு அளிக்கிறது. சுவையான விருந்தைப் பாதியிலே சுவைத்து எழுந்தோட நேரிட்டால் என்னவுணர்வு ஏற்படுமோ அந்த உணர்வுதான் நமக்கேற்படுகிறது” என்று மு. வலவன் ஆய்ந்துரைப்பது மிகவும் பொருத்தமுடையதாக இருக்கிறது.

(கட்டுரையாளர்கள்:
பேராசிரியர் உ. அலிபாவா, தலைவர், தமிழியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், அ.முகம்மது அசாருதீன், முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி 620 024)

**உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!**





**டிசம்பர் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

4347, 2773, 5604, 5610, 5616, 5622, 5628, 5661,
4348, 5728, 5605, 5611, 5617, 5623, 5629, 1851,
4340, 311, 5606, 5612, 5618, 5624, 5630, 2773,
2774, 5601, 5607, 5613, 5619, 5625, 5631, 5738,
1851, 5602, 5608, 5614, 5620, 5626, 5632,
4876, 5603, 5609, 5615, 5621, 5627, 5633,

**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

தனி இதழ் ₹ 45.00
ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00.
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00
சந்தாத் தொகையை
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch, Chennai - 600 050
A/c.No. 1035249018
IFSC Code : CBIN0282161
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

உங்கள் நூலகம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050.
தொலைபேசி எண் : 044-26251968, 26258410

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.





# சித்தன்ன வாசலிலிருந்து முரண்படும் சித்தண்ண வாயில்

அண்டனூர் சுரா

புதுக்கோட்டை மாவட்டத்தின் சிறப்புகளில் ஒன்று சித்தன்ன வாசல். தொன்மையும் பழமையும் புதுமையும் கல்வெட்டுகளாக, ஓவியமாக, சிற்பமாக நிரம்பப் பெற்ற இடம். சித்தன்ன வாசலுக்குப் பல முறை சென்றிருக்கிறேன். இப்பொழுது இருக்கின்ற ஒழுங்குமுறை, முள்வேலித் தடை, நுழைவுக் கட்டணங்கள் அப்போது இல்லை. சமணப் படுக்கையில் ஏறுவதற்குத் தயக்கம் என்பதைத் தவிர வேறெந்தத் தடையும் இருந்ததில்லை. குன்றில் ஏறி ஐந்து நிமிடங்கள் நண்பர்களோடு படுத்திருந்திருக்கிறேன். முட்புதர், குடைவு, குறுகிய வழி வழியே மலையில் ஏறுகையில் இப்போது நான் ஏறிக்கொண்டிருப்பது ஏழடிப்பாட்டம் என்றோ, குடைவான மலைக்குள் வடிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு படுக்கையின் பெயர் அதிட்டானம் என்றோ, இதில் பதினேழு படுக்கைகள் இருக்கின்றன, அவற்றில் ஆறு படுக்கைகளில் பத்து சமணர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன என்றோ தெரிந்துகொள்ள ஆர்வமிருந்ததில்லை. அதேநேரம் இம்மலையைச் சுற்றிலும் இருக்கின்ற தற்கால மற்றும் நாட்டார் வழிபாட்டு அடையாளங்களுடன் ஓரளவு நான் பரிச்சயமாகியிருந்தேன்.

சித்தன்ன வாசல் என்றால் பலருக்கு முதலில் நினைவுக்கு வருவது ஓவியம்தான். அடுத்து சமணர்களின் படுக்கை. சித்தன்ன வாசல் மலையிலும் மலையின் அடியிலும் இன்னும் பிற அடையாளங்கள் உண்டு. நாட்டார் வழிபாட்டு தெய்வங்கள் நிரம்பப் பெற்ற இடம் இது. இதற்குள் சிவன், பிடாரி, பைரவர், அய்யனார், பால்குடி அய்யனார், அடைக்கலம் காத்தார், கன்னிகள், குழுமிக்கருப்பர்,

புல்லிக்கருப்பர், இருளப்பர், காவல்காரன், குறத்தியம்மன், இராசாத்தி அம்மன், பிரமநாதன், உதிரக்காளி, மந்தையம்மன், வெள்ளச்சியம்மாள், நொண்டி அப்பச்சி, சொரிக்காரன், வண்ணார்கோவில், எல்லைக்கருப்பர் எனப் பல கோவில்கள் உண்டு. எல்லாம் கைக்கு அடக்கமான வழிபாட்டுத் தலங்கள். சிறிய சிறிய அடையாளங்கள். புதர், குடைவு, பத்தைக்குள் இக்கோவில்கள் உள்ளன. நான் முதன் முதலில் சித்தன்ன வாசலுக்குச் செல்கையில் நான் பார்த்துத் திரும்பியது இந்தக் கோவில்களைத்தான்.

இரண்டாம் முறை இங்கே சமணர் படுக்கையும் பல்லவர் கால ஓவியங்களும் இருப்பதாகத் தெரிந்துகொண்டு இம்மலையை ஒரு சுற்று பார்வையிடக் கிளம்பினேன். பார்வையில் ஓவியங்களும் சமணப்படுக்கையும் கண்களில் படுவதற்குப் பதிலாக புதர் மறைவில் காதல் ஜோடிகளே தெரிந்தார்கள். மூன்றாம்முறை கல்லூரி களப்பயணம். ஒரு வரலாற்று ஆய்வாளருடன் சென்றிருந்தோம். அங்கேயே ஒரு ஆய்வாளர் இருந்தார். இருவரும் சித்தன்ன வாசலை ஒரு சுற்று சுற்றி ஏற்றிறக்கி, இதற்குள் மறைந்துள்ள வரலாறுகளை விளக்கத் தொடங்கினார்கள். இருவர் சொல்வதும் ஒன்றுக்கொன்று முரணாக இருந்தது. இவர் சொல்வதை அவர் மறுத்தும் அவர் சொல்வதை இவர் மறுத்தும் குறுக்கிட்டும் சொன்னதில் இருவருக்குமிடையில் சொற்போர் மூண்டது. ஏழரைப்பாட்டத்திலுள்ள படுக்கை சமணர் படுக்கை என்றார், ஒருவர். மற்றொருவர் அதை மறுத்து அசீவகப் படுக்கை என்றார். குடைவரைக் கோவிலில் வரையப்பட்டிருந்த ஓவியத்தை ஒருவர் பல்லவர் கால ஓவியம் என்றார். மற்றொருவர் பாண்டியர் காலத்தியது என்றார்.

இதன்பிறகு சித்தன்ன வாசல் வெறும் மலையாகவோ, குன்றாகவோ மட்டும் தெரிந்திருக்கவில்லை. உறங்கும் வரலாற்றுக் குன்றாகத் தெரியத் தொடங்கியது. தூரத்திலிருந்து பார்க்கையில் இம்மலை அழகாகவும் அருகில் சென்று பார்க்கையில் வரலாற்றுக் குழப்பம் தருவதாகவும் இருந்தது. இந்தக் குழப்பத்திலிருந்து தெளிய நான் இம்மலையைப் பற்றிய வரலாற்று நூல்களைத் தேடத் தொடங்கினேன்.

புதுக்கோட்டை மாவட்ட வரலாற்று ஆர்வலர் புலவர் பு.சி.தமிழரசன், சித்தன்ன வாசலை ஆய்வு செய்து ஓர் ஆராய்ச்சி நூல் வெளியிட்டார். நூலின் பெயர் சித்தன்ன வாசல். இவர் புதுக்கோட்டை வரலாற்றுப் பேரவை நிறுவனர். இவர் புதுக்கோட்டையை மையமாகக் கொண்டு இன்னும் பல நூல்கள் எழுதியுள்ளார். புதுக்கோட்டை மாவட்ட வளநாடுகளும் கோயில்களும், புதுக்கோட்டை மாவட்ட வரலாறு குறுநில மன்னர்கள், புதுக்கோட்டை மாவட்டச் சங்ககால மன்னர்கள், கொடும்பாளூர் வேளிர், புதுக்கோட்டை மாவட்ட முத்தரைய மன்னர்கள், நார்த்தாமலை வரலாறு, பெரும்பிடுகு முத்தரையரான சுவரன் மாறன் ஆகிய நூல்கள் குறிப்பிடத் தகுந்தவை. இந்நூல் பேராசிரியர் க. நெடுஞ்செழியனின் ஆய்வு நூலான சித்தண்ணவாசல் நூலுக்கும் பிந்தியது.

இவ்விரு நூல்களையும் படிக்கையில் இரு ஆய்வுகளும் ஒருசில வரலாற்றுடன் ஒத்தும் பெரும்பான்மையாக முரண்பட்டும் இருந்ததை புரிந்துகொள்ள முடிந்தது. இருவர் கருத்துகளும் ஒத்துப்போகிற இடமாக இவ்வூரின் பழைய பெயர் ‘சிறுபோசில்’ என்பதாக இருந்தது. அதேநேரம் இவ்வூருக்கான பெயர்க்காரணத்துடன் இரு நூல்களும் முரண்கொண்டன.

**சிறுபோசில் காரணப்பெயரும் மறுப்பும்**

சிறுபோசில் என்பது சித்தன்ன வாசலின் பழைய பெயர். போசில் என்கிற ஊர் சிற்றூராய் இருந்ததால் சிறுபோசில் என்றானது. போசில் என்கிற சொல் கன்னடச் சொல் என்கிறார் ஐராவதம் மகாதேவன். கன்னடம் என்பது தமிழுடன் சமஸ்கிருதம் கலந்த மொழி. சைன சமயம் கர்நாடகம் வழியே தமிழகத்திற்கு வந்தது. அதோடு கன்னடம் மொழியும் வந்தது. அப்படியாக வந்த சொல் போசில் என்கிறார் அவர்.

க.நெடுஞ்செழியன் ஐராவதம் மகாதேவனின் கருத்தை மறுக்கிறார். கன்னட மொழி புதிய கன்னடம் பழைய கன்னடம் என்று இரண்டு திரிபுகளைக் கொண்டிருக்கிறது. பழைய கன்னடத்தில் ப, பா, பு, பூ என்கிற வரிசை உண்டு. புதிய கன்னடத்தில் இவ்வரிசை இல்லை. ப என்பது ஹ என்பதாக திரிந்துள்ளது. இதன்படி பா - ஹா, பொ - ஹொ, போ - ஹோ. கன்னடத்திலிருந்து போசில் என்கிற சொல் தமிழகத்திற்கு வந்திருக்குமேயானால் அது ஹோசில் என்றே வந்திருக்கும். மேலும், சிறுபோசில் என வடிக்கப்பட்ட கல்வெட்டு புது கன்னடக் காலம் என்பதால் போசில் என்கிற சொல் கன்னட மொழியாக இருக்க வாய்ப்பில்லை. மேலும், போசில் என்கிற சொல் கன்னடம் என்று சொல்வது தமிழகத்தின் தொன்மை அடையாளங்களை வடமொழியாக்கும் முயற்சி என்கிறார்.

மேலும் இவர் புழை, பாழி என்கிற இரு சொற்களைக் கொண்டு போசில் என்பது தமிழ்ச்சொல் என நிறுவுகிறார். பாழி என்பதற்குப் படுக்கை என்று பொருள். தமிழர்களின் ஆதி சமயமான ஆசீவகத் துறவிகளின் இருப்பிடம் பாழி. இச்சொல் சைன சமயக் காலத்தில் பள்ளி என்பதாகத் திரிந்தது. இவ்விரு சொற்களின் உள்ளார்ந்த பொருள் படுக்கை. இதேபோன்று புழை என்கிற சொல்லின் பொருள் உள்துளை. வாயில் என்றும் பொருள் கொள்ளலாம். இச்சொல்லே பொசில் என்றாகி பிறகு போசில் என்றானது என்கிறார் அவர்.

**முதல் கல்வெட்டு**

சித்தன்னவாசல் குன்றின் மீது வடிக்கப்பட்ட முதல் கல்வெட்டில்தான் சிறுபோசில் என்கிற சொல் இடம்பெற்றுள்ளது. "எருமி நாடு குமிழ் ஊர் பிறந்த காவுடிஇ தென்கு சிறுபோசில் இளையர் செய்த அதிட்டானம்" இங்கு, எருமி நாடு என்பது இன்றைய மைசூர். எருமைக்கு வடமொழியில் மகிசம் என்று பெயர். மகிசம் ஊர் பிற்காலத்தில் மைசூர் ஆகியது. எருமி நாடாக மைசூர் இருக்கையில் புதுக்கோட்டை செனிகுல மாணிக்கபுரம் என்று அழைக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்நிலம் சிறுபோசில், நார்த்தாமலை அதைச் சுற்றிய நிலங்கள் கச்சமங்கலம் என்றும் இதற்கும் கிழக்குப் பகுதி கலசமங்கலம் என்று அழைக்கப்பட்டிருக்கிறது. இந்நிலம் பன்றி நில நாடு. காட்டுப் பன்றிகள் ஆதிக்கம் செய்த நிலம். இதைக்கொண்டு அணுகுகையில் எருமை நாட்டின் குமிழூர் ஊரைச் சேர்ந்த காவுதி என்கிற துறவி சிறுபோசில் நாட்டிற்கு வருகிறார்.

காவுதி ஆண் துறவியா, பெண் துறவியா என்பது நீண்ட கால விவாதப் பொருள். ஐராவதம் இவரைப் பெண் துறவி என்கிறார். காவுதி மற்றும் அவருடன் வரும் துறவிகளுக்கு பன்றி நாட்டார்கள் வரவேற்புக் கொடுக்கிறார்கள். கல்வெட்டின்படி சிறுபோசில் என்கிற ஊரைச் சேர்ந்த இளையர், காவுதி தங்குவதற்கு அதிட்டானம் அமைத்துக்கொடுக்கிறார். இங்கு இளையர் என்கிற சொல்லுக்கு ஐராவதம் துறவிகள் என்று பன்மையில் விளிக்கிறார். பு.சி. தமிழரசன் செல்வந்தர் அல்லது மாணவர் என்று ஒருமையில் குறிக்கிறார்.

**காவுதி என்பவர் யார்?**

**இச்சொல் மீது மூன்று கதைகள் உலாவுகின்றன.**

**கதை - 1**

மயிலையார் இப்படிச் சொல்கிறார். கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் வட இந்தியா பாடலிபுத்திரத்தை மௌரிய அரசன் சந்திரகுப்தன் ஆட்சி செய்கிறான். இவன் அரசாட்சியைத் துறந்து சைன சமயத் தலைவராக இருந்த பத்திரபாகு முனிவரிடம் சீடனாகிறான். பத்திரபாகு சீடர் மற்றும் ஆயிரக்கணக்கான சைனத் துறவிகளுடன் தென்னிந்தியா நோக்கி வருகிறார். கன்னட நாட்டில் சிரவண பௌகொள என்கிற இடத்தில் தங்கி சைனம் பரப்புகிறார்கள். அவர்களில் ஒரு பிரிவினர் விசாக முனிவரின் தலைமையில் தமிழகத்திற்கு வருகிறார்கள். இவரது சீடர்களில் ஒருவர் காவுதி.

**கதை - 2**

ஐராவதம் மகாதேவன் இப்படிச் சொல்கிறார். சந்திரகுப்தனின் பேரன் அசோகன். அவனது பேரர்கள் தசரா, சம்பிரட்டி. இவர்களில் தசரா - ஆசீவக சமயம். சம்பிரட்டி - சைன சமயம். சம்பிரட்டி தலைமையில் ஒரு குழுவினர் தென்னிந்தியா வந்து கர்நாடகத்தில் தங்கி அங்கேயிருந்து தமிழகம் வந்து, சைனம் பரப்பினர். அவர்களின் வழியில் வந்தவர் காவுதி. கன்னட மொழியில் கவுடா என்பதற்கு ஊர் அலுவலர் என்று பொருள். காவுடி என்றால் பெண் அலுவலர். கவுடா என்கிற துறவியின் மனைவி காவுதி.



**கதை - 3**

பு.சி. தமிழரசன் மேற்கண்டவர்களின் கருத்துகளோடு ஒத்துப்போகிறார். காவுதி ஈதன் என்பது இவரது பெயர். எருமையூர் நாட்டில் குழுமூரில் வாழ்ந்த சைன முனிவர் இவர். ஈதன் என்றால் வள்ளல் என்று பொருள். ஆகவே இவர் உழவராக இருக்க வேண்டும். காவுதி என்பது வேளாண்குடி பட்டம். காவுதி பட்டம் பெற்ற ஈதென், என்கிறார்.

**கதை - 4**

க. நெடுஞ்செழியன் மேலே சொல்லப்பட்ட கருத்துகளை மறுக்கிறார். கர்நாடகம் சிரவண வெள்ளைக் குளத்திலிருந்து சைன சமயம் தமிழகம் வந்தது எனில், சிரவண பகுதியில் ஏன் சைன சமயம் குறித்த எந்தத் தடயங்களும் இல்லை, என்பது இவர் எழுப்பும் முக்கியமான ஒரு கேள்வி.

தமிழ்நாட்டிலுள்ள சைன தடயங்கள் அசோகர் காலமோ, அவரது பேரன்கள் காலமோ அல்ல. இவர்களின் காலத்திற்கும் பல நூற்றாண்டுகளுக்கு முந்தியது.

கவுடா என்கிற துறவியின் மனைவி பெயர் காவுதி என்றால் கவுடா எப்படி துறவியாக இருக்க முடியும்?

இம்மூன்று கேள்விகளினூடே காவுதி என்பவர் யாரென்று விளக்கம் தருகிறார். காவிதி என்றால் நடுவர் என்று பொருள். ஆசீவகத்தின் தலைவர் மற்கலிகோசலார். ஆசீவகர்கள் 96 வகை தர்க்கம் செய்வதில் வல்லவர்கள். எருமையூர் நாட்டு குமிழூரில் பிறந்த இவர்கள் தர்க்கப்

போரில் தலைவராக இருந்தமையால் காவிதி என்று அழைக்கப்பட்டார்கள். இச்சொல் கல்வெட்டில் காவுடி என்று தவறாக வடிக்கப்பட்டுள்ளது. இங்கு காவுடி என்பது ஆசீவகர்கள். இச்சொல் பெண்பால் பெயராகவோ, பெண் துறவியாகவோ இருக்க வாய்ப்பில்லை, என்கிறார் இவர்.

**சித்தன்னவாசல் - சித்தண்ணவாயில்**

'காவுடிஇ தென்கு சிறுபோசில் இளையர் செய்த அதிட்டானம்' என்கிற இந்தக் கல்வெட்டு கி.மு. மூன்றாம் நூற்றாண்டு காலத்தியது என்கிறார் ஐராவதம். இக்காலத்தோடு ஒத்துப்போகும் பு. சி. தமிழரசன் மேற்கண்ட கல்வெட்டை இவ்வாறு பிரித்து ஊர்ப் பெயர்க்காரணத்தை விளக்குகிறார். தென் சிறுபோசில் - தெற்கு சிறுவாயில் - சிற்றன்னவாயில் - சித்தன்னவாசல்.

மேலும் இவர், மற்றொரு கதையைச் சொல்கிறார். இது வாய்மொழிக் கதை. காராளன் வெள்ளாளன் காலத்தில் பெரியண்ணன், சின்னண்ணன் என்கிற இருவர் இப்பகுதிகளை ஆட்சி செய்துள்ளனர். பெரியண்ணன் ஆட்சி செய்த பகுதி அண்ணல்வாயில். சின்னண்ணன் ஆட்சி செய்தது சின்னண்ணவாயில். இதுவே பிறகு சித்தன்னவாயில் - சித்தன்னவாசல் என்பதாக மருவியது. இது வரலாற்றுடன் சற்றும் ஒத்துப்போகவில்லை.

சித்தன்னவாசலில் மற்றொரு கல்வெட்டு உள்ளது. இது கி.பி நான்காம் நூற்றாண்டு காலத்தியது. அக்கல்வெட்டு இவ்வாறு வடிக்கப்பட்டுள்ளது. "மண்ணில் சீர்மதுரை ஆசிரியன் அண்ணல் / அகமண்டபம் புதுக்கி ஆங்கறிவர் கோயில் / முகமண்டபம் எடுத்தான் முன்."

இதன்படி அருந்தவ முனிவர் 'அறிவர்' என்றும் 'அண்ணல்' என்றும் அழைக்கப்படுகிறவர். அருந்தவ முனிவர்கள் சித்தர்கள். சித்தராகிய அண்ணல் எனும் அறிவர் கொண்டுள்ள இடம் சித்தர் - அண்ணல் - வாயில். இதுவே சித்தண்ணவாயில், என்கிறார் க. நெடுஞ்செழியன்.

**அண்ணவாயில் பெயர்க்காரணம்**

சித்தன்னவாசல், அண்ணவாசல் ஒன்றியத்திற்குள் உட்பட்ட கிராமம். இவ்வூரில் மகாவீரருக்குக் கோவில் உள்ளது. மகாவீரர் அண்ணல் என அழைக்கப்படுகிறவர். வாயில் என்பது வெளி. இதுவே அண்ணல்வாயில். கி.பி ஏழாம் நூற்றாண்டில் அப்பர், இவ்வூரை அண்ணல் வாயில் என்று குறிப்பிட்டுப் பாடியுள்ளார். "கண்ணுதலோன் நுண்ணுமிடம் அண்ணல் வாயில்". இதே ஊர் பதினான்காம் நூற்றாண்டில் பராக்கிரமன் பாண்டியன் கல்வெட்டு அண்ணல்வாசல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதைக்கொண்டு பார்க்கையில் அண்ணல்வாயில் அண்ணவாசல் என்றும் பிறகு அது அன்னவாசல் என்று மருவியதைப் போல சித்தண்ணவாயில் சித்தண்ணவாசல் என்றாகி பிறகு அது சித்தன்னவாசல் ஆகியிருக்கிறது. சித்தன்னவாசல் கல்வெட்டுகளில் மேலும் பல சொற்கள் உண்டு. இச்சொற்களை அணுகுவதன் மூலம் அவ்வூரின் வரலாற்றைக் காலத்துடன் பொருத்த முடியும்.

**இளங்கௌதமன்**

இளங்கௌதமன் கி.பி 820 ஆண்டு காலத்தவர். இவ்வாண்டில் மதுரையை ஆண்டது சிரீ வல்லபன். இவனது பட்டம் 'அவனிப சேகரன்'. இவனது அவையின் புலவராக இருந்தவர் இளங்கௌதமன். இவர் சித்தண்ணவாயிலுள்ள அறிவர் கோவிலுக்குத் திருப்பணி செய்திருக்கிறார். இதை முன்னிட்டு வடிக்கப்பட்டதே இக்கல்வெட்டு என்பது க.நெடுஞ்செழியனின் வாதம்.

பு.சி. தமிழரசன் இதை மறுக்கிறார். இளங்கௌதமன் செல்வவளம் படைத்த சமண சமய ஆசிரியர். இவர் மதுரையில் சமணம் பரப்பியதால் மதுரை ஆசிரியர் என்றானார். இவர் நார்த்தாமலை பகுதியைச் சார்ந்தவர், இவ்வூரிலிருந்த சமணப் பள்ளியில் பயிற்சி பெற்றவர். இவரே சித்தன்னவாசலிலுள்ள சமணர் கோவிலுக்குத் திருப்பணி செய்தவர். அப்போது இப்பகுதியை ஆண்டவர்கள் முத்தரையர். மேலும் சித்தன்னவாயில் கலைப் படைப்புகள் முத்தரையர் காலப் படைப்புகள் என்கிறார். முத்தரையர்களுக்கு வழங்கப்பட்ட பட்டங்களான பெரும்பிடுகு, விடேல்விடுகு, மாற்பிடுகு யாவும் பல்லவர்கள் முத்தரையர்களுக்கு வழங்கியவை என்கிறார்.

இளங்கௌதமன் வடித்திருக்கும் நீண்ட கல்வெட்டு செய்யுளில் மேலும் பல கலைச்சொற்கள் வடிக்கப்பட்டுள்ளன. கடவுள் நீலன், அருந்தவ முனிவன், அமணன் காணி, அண்ணல் வாயில், அறிவர் கோயில், ஆதிவேந்தர்.

நீலன் என்பவர் சமணத் துறவி என்கிறார் ஐராவதம். இதையே நெடுஞ்செழியன் ஆசீவகர் என்கிறார்.

**அருந்தவ முனிவன்**

அசீவகர் செய்த தவங்கள் அருந்தவங்கள். ஐந்து நெருப்புகளுக்கு இடையில் அமர்ந்த வண்ணம் செய்யும் தவமான ஐந்தீத்தவம் இவர்களது தவத்தில் முக்கியமானது. இதுதவிர பேசாமை, அசையாமை, காலை மடித்து அமர்தல், கழுத்து வரையிலும் புதையுண்டு நிற்றல், வௌவால் போல் தொங்குதல்,..போன்றவையும் அடங்கும். முனிவன் என்கிற சொல்தான் இன்று முனைவன் என்றும் முனைவர் என்றும் திரிந்துள்ளன

**ஆதிவேந்தர்**

கல்வெட்டு குறிப்பிடும் ஆதிவேந்தர் என்பவர் இரிசபத் தேவர். இவர் 2500 ஆண்டுகளுக்கும் முன்பு சமண சமயத்தைத் தோற்றுவித்தவர் என்கிறார்,

பு.சி.தமிழரசன். இதை மறுக்கும் நெடுஞ்செழியன், ஆதிவேந்தர் என்கிற சொல் சித்தண்ணவாயில் ஓவியத்துடன் தொடர்புடையது. இந்த ஓவியங்கள் தக்கிண ஓவியம் வகையைச் சார்ந்தது. அதாவது தென்னிந்திய ஓவியம். இவ்வோவியம் வடக்கே விந்திய மலை முதல் தெற்கே இலங்கை வரை பரவியுள்ளது. அஜந்தா, பாக் மலைக் குகை ஓவியங்களும் இலங்கை சிகிரியா மலைச்சுவர் ஓவியங்களும் இந்த வகையைச் சார்ந்தவை.

சித்தன்னவாசல் ஓவியங்கள் பாண்டியர் குலத்தைச் சேர்ந்த ஆதிவேந்தர் என்பவரால் வரையப்பட்டது. இவர் சேகரன் என்னும் சிரீ வல்லவன் எனும் பாண்டிய மன்னனுடன் தொடர்புடையவர். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனாக இருக்கலாம், என்கிறார். இவன் ஆசீவகத்தைத் தழுவியவன். ஓவியக் கலைகள் மீது அதீத விருப்பம் கொண்டவன். இவனே இந்த ஓவியத்தை வரைந்தான், என்கிறார் க.நெடுஞ்செழியன்.

### அமணன் காணி

அமணன் என்பவர் சமணர். சமணர் கோயில்களில் விளக்கு எரித்தல் முதலிய பணிகள் செய்வோருக்கு வரி நீக்கி வழங்கப்பட்ட நிலம், அமணன் காணி என்பது பு.சி. தமிழரசனின் வாதம்.

அமணர் என்பவர் அசீவகர். அசீவகர்களின் அடையாளம் யானை. அசீவகர்களை சைவர்கள் வீழ்த்துகிறார்கள். இதன் அடையாளமாக பெரியபுராணம் பாடலில் சிவபெருமான் யானை அரக்கனைக் கொன்று, யானையின் தோலை உரித்து, அதன் இரத்த ஈரம் உலர்வதற்குள்ளாக தன் உடம்பில் போர்த்திக்கொள்கிறார். இதனால் சிவபெருமான் சட்டநாதர் - சட்டை நாதர் என அழைக்கப்படுகிறார். சீர்காழி சிவனுக்கு சட்டநாதன் என்று பெயர். இங்கு யானை என்பது அசீவகர்.

பெரியபுராணம் அசீவகர்களைச் சாதி அமணர் என்கிறது. ஆசீவகர்கள் அழகிய தலைமுடியுடன் இருப்பவர்கள். அருகர்கள் என்கிற சமணர்கள் தலைமுடியை நீக்கிக் கொண்டவர்கள். சித்தண்ணவாயில் ஓவியங்கள் தலைமுடியுடன் காட்சியளிக்கிறது. ஆகவே இந்த ஓவியத்திலிருப்பவர்கள் சைனர்களோ, பௌத்தர்களோ அல்ல, அசீவகர்கள். ஆகவே அமணன் காணி என்பது அசீவகர்கட்குரிய கொடை.

இதுதவிர சித்தன்னவாசலுடன் தொடர்புடைய பல சொற்கள் உள்ளன.

அந்தமில் விளக்கு - முடிவு இல்லாமல் இரவு பகல் இரு நேரமும் எரியும் விளக்கு.

நீடொளி விளக்கு - இரவு மட்டும் எரியும் விளக்கு

மெழுக்குப்புறம் - சித்தன்னவாசல் கோவில் வாசலைச் சாணம் கொண்டு மெழுகி தூய்மையாக வைத்துக்கொள்ளும் பணியாளருக்கு வழங்கப்பட்ட வரி நீக்கப்பட்ட நிலம்

நெய்ப்புறம் - கோவில்களில் விளக்கு எரிய நெய் வழங்குவோர்க்கு வழங்கப்பட்ட வரி நீக்கப்பட்ட நிலம்.

ஏழடிப்பாட்டம் - சமணர்கள் உறைவிடமாக விளங்கிய மலையின் குடைவுப் பகுதிக்கு ஏழடிப்பாட்டம் என்று பெயர். மலையின் மேலிருந்து குடைவிற்குச் செல்லும் மலைச்சரிவு வழியில் ஆபத்தான நிலை இருந்தது. அடிகளை எட்டி வைத்து ஏழு பாட்டங்களாக பாதையைக் கடக்க வேண்டியிருந்திருக்கிறது. ஆகவே இதற்கு ஏழடிப்பாட்டம் என்று பெயர்.

படுக்கை - ஏழடிப்பாட்டத்தில் 17 படுக்கைகள் உள்ளன. இவ்வொரு முனையிலும் தலையணை போன்ற அமைப்பு உள்ளது. ஆறு படுக்கைகளில் பத்து சமணர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

### மலையில் தங்கிய சமணர்கள் மற்றும் காலங்கள்

ஏழடிப்பாட்டம் மலையில் தங்கியவர்கள் ஆசீவகர்கள் எனச் சொல்லும் க. நெடுஞ்செழியன் இப்படுக்கையில் வடிக்கப்பட்டுள்ள பெயர்களை காலத்தோடு பொருத்தி இவர்கள் ஆசீவகர்கள் என நிரூபிக்கத் தவறியிருக்கிறார். இவர்கள் அனைவரும் ஆசீவகர்களாக இருக்க வாய்ப்பும் கிடையாது. காரணம் இவர்கள் கி.மு மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை வெவ்வேறு காலத்தவர்கள். பு.சி தமிழரசன் தன் நூலில் இவர்கள் அனைவரும் சமணர்கள் என்று கால வரிசைப் படுத்தியுள்ளார். இதன்படி, குழுவூர் காவுதி ஈதேன் - சிறுபோசில் இளையர் (கி.மு 300 - கி.பி 200); கடவுளன் திருநீலன் - திட்டைச் சாணன் (கி.பி.4 ஆம் நூற்றாண்டு) ; சிறுபூரணச் சந்திரன்- நியத்தகரன், பட்ட காலழி, சேண்நாடன் சிற்சேனன் கணன், கம்போதல் சாத்தன் பெந்தோடன், நக்கன், கொற்றன் காயவன் (கி.பி.5 ஆம் நூற்றாண்டு); திருச்சாத்தன்- எருக்காட்டூர் கட்டுளன் (கி.பி 6 ஆம் நூற்றாண்டு); சிரி திருவாசிரியன்- உலகாதித்தன் (கி.பி 7ஆம் நூற்றாண்டு) ; கடவுளின் திருநீலன் - சிரியன் காலா (கி.பி 8 ஆம் நூற்றாண்டு); இளங்கௌதமன் - திருவேற்றான் (கி.பி 9ஆம் நூற்றாண்டு); கச்சமங்கல முடையன்- திருப்பூரணன் (கி.பி 13 ஆம் நூற்றாண்டு).

### ஆசீவகமா - சமணமா?

சித்தண்ணவாயில் குடைவரைக் கோவிலில் மூன்று சிலைகள் உள்ளன. சிலைகளுக்கும் மேலாக குடைகள் வடிக்கப்பட்டுள்ளன. மூன்றில் நடுவிலுள்ள சிலைக்கும் மேலாக மூன்று குடைகள் ஒன்றின்மேல் ஒன்றாக வடிக்கப்பட்டுள்ளன. முக்குடைக்கும் கீழாக

உள்ளவரே ஆசீவகத்தின் தோற்றுநர் மற்கலிகோசாலார் என்கிறார். ஆசீவகம் சமயத்தைத் தொடர்ந்து சமணம், பௌத்தம் தோன்றி இதற்கு மாற்றாக சைவம் ஆழமாக காலூன்றுகையில் ஆசீவகத்தின் தோற்றுநர் மற்கலிகோசாலார் அய்யனாராக மாற்றப்பட்டார், என்பதைத் தொடர்ந்து பேசியும் எழுதியும் வந்திருக்கிறார் க. நெடுஞ்செழியன். நாட்டார் வழிபாடுகளிலும் கிராம தெய்வங்களிலும் அய்யனார்க்கு என்று ஒரு தனித்துவம் இருக்கிறது. அய்யனார் ஆதி தமிழர்களின் வழிபாட்டுக் கடவுள்.

சித்தண்ணவாயிலில் நடுவிலுள்ள சிலைக்கு வடிக்கப்பட்டுள்ள மூன்று குடைகள்தான் இன்றைய அய்யனார் கோவில் திருவிழாக்களில் அய்யனாருக்கு குடையாகப் பிடிக்கப்படுகிறது, என்கிறார் இவர். மேலும் சைவ சமயம் ஆழமாக வேர்விட்டு மற்ற சமய அடையாளங்களை அழித்தொழிக்கும் வேலையில் இறங்குகையில் ஆசீவகம் வைணவ சமயத்துடன் இரண்டறக் கலந்தது, என்கிறார்.

வரலாற்றின் ஆதாரப் பூர்வமான உண்மையை விடவும் மக்களிடம் புழங்கும் வாய்மொழிக் கதைகள் வலுவானவை. பெரியபுராணக் கதைகளை விடவும் இராமாயணம், மகாபாரதக் கதைகள் மக்களிடம் பெரும் புழக்கத்தில் இருப்பதற்குக் காரணம் பிந்தைய இரண்டு இதிகாசங்கள் மக்களிடம் வாய்மொழிக் கதையாக இருப்பதுதான். பெரியபுராணம் தென்னிந்தியா குறிப்பாக தமிழக நிலத்தை அடித்தளமாகக் கொண்ட கதைகளாக இருந்தபோதிலும் இராமாயணம், மகாபாரதம் கதையளவுக்கு பெரியபுராணம் வாய்மொழி கதையாடலைக் கொண்டிருக்கவில்லை.

இது சித்தண்ணவாயில் உட்பட அனைத்து புராதன அடையாளங்களுக்கும் பொருந்தும். சித்தண்ணவாயில் மலையின் மீது வடிக்கப்பட்டுள்ள படுக்கை சமணப் படுக்கை என்றும் இங்குக் குடையப்பட்டுள்ள குடைவரைக் கோவிலிலுள்ள மூன்று சிற்பங்கள் சமணர்கள் என்றும் நீண்ட காலமாக மக்கள் கதையாடலிலும் வழக்கத்திலும் இருந்துவருகிறது. இவை ஒரு வகையான வரலாற்றுத் திரிப்பு என்கிறார் க.நெடுஞ்செழியன். ஆனாலும் மக்கள் சித்தன்னவாசலிலுள்ள தடங்கள் யாவும் சமணர் என ஏற்று அந்த வரலாற்றுடன் இரண்டறக் கலந்துவிட்டார்கள். இந்த வரலாற்றை மாற்றுவதும் அல்லது திருத்துவதும் அவ்வளவு எளிதான ஒன்றல்ல. அதேநேரம் ஒன்றின் வரலாறு தவறாக இருக்கும்பட்சத்தில் காலம் தக்க நேரத்தில் அதைத் திருத்திக்கொள்ளும். அப்படியாக வரலாற்றின் முந்தைய கட்டமைப்புகளை மறுஆய்வு செய்யவேண்டியது அவசியம் என்கிற புள்ளியில் கொண்டுவந்து நிறுத்துகிறார் க. நெடுஞ்செழியன். அதற்கான அவசியமும் தேவையும் கொண்டதாக சித்தண்ணவாயில் இருக்கிறது.

(கட்டுரையாளர், எழுத்தாளர்)



28.11.2022 அன்று, நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் சார்பில் 37 ஆவது தேசிய புத்தகக் கண்காட்சியை விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினர் "மக்கள் பணிச் செல்வர்" திருமிகு ப.மாணிக்கம் தாகூர் அவர்கள் துவக்கி வைத்தார். மதுரை, செந்தமிழ்க்கல்லூரி துணை முதல்வர், முனைவர் ரேவதி சுப்புலெட்சுமி, சமூக ஆர்வலர் வ.சண்முகசுந்தரம், இந்திரா காந்தி நினைவு மெட்ரிக் பள்ளி முதல்வர் ராதிகா மற்றும் என்சிபிஎச் மண்டல மேலாளர் அ. கிருஷ்ணமூர்த்தி மற்றும் கிளை மேலாளர் இரா. மகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கட்டுரை

# தேவதைகளால் தேடப்படும் கவிஞர் தங்கம் மூர்த்தி

க.உஷா நந்தினி

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலப் புலவர்கள் தொட்டு இக்காலக் கவிஞர்கள் வரை வரிசைப்படுத்தினால் அந்த வரிசையில் ஒரு நிலையான நிரந்தரமான தனித்த இடத்தை நிலை நாட்டியவர் பன்முகத் திறமை வாய்ந்த கவிஞர் தங்கம் மூர்த்தி.

கவிஞர் தங்கம் மூர்த்தியின் கவிதைகளில் கவிதைக்கான அனைத்து அம்சங்களையும் இவரது கவிதைத் தொகுப்பில் எளிதாகக் காண முடிகிறது. பல வகைப்பட்ட உணர்வுகளையும் தன் கவிதைகளில் இனிமையான தமிழ்ச் சொற்களால் அடுக்கி, படைப்புலகில் பட்டுக்கோட்டை காட்டிய பட்டுக்கோட்டையாரைப் போல் ஓர் எளிய, உறுதியான கவிதைக் கோட்டையை புதுக்கோட்டை மண்ணில் வாழ்ந்து கொண்டு அந்த மண்ணின் மனம் மாறாமல் கட்டமைத்து வருபவர் கவிஞர் தங்கம் மூர்த்தி. இவருடைய படைப்புகளில் தேவதைகளால் தேடப்படுபவன் மற்றும் முதலில் பூத்த ரோஜா என்னும் இரு கவிதைத் தொகுப்புகளின் நயங்களை எடுத்துக்காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கவிஞரின் தோற்றமும் எழுச்சியும்**

கவிஞர் தங்கம் மூர்த்தி புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகில் உள்ள சுப்பிரமணியபுரம் என்னும் சிற்றூரில் 19.8.1964 இல் பிறந்தார். இவரது பெற்றோர் டாக்டர் கே.கே.தங்கம் மற்றும் திருமதி ஜெயலட்சுமி ஆவார். இவர் ஆங்கில இலக்கியத்தில் ஓர் இளங்கலைப் பட்டமும் இரண்டு முதுகலைப் பட்டங்களும் பெற்றவர். அத்துடன் புதுக்கோட்டையில் திருக்கோகர்ணம் பகுதியில் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளியை நிறுவி அப்பள்ளியின் சிறந்த முதல்வராகவும் பணியாற்றி வருகிறார். இவர்கள் பெற்ற செல்வங்கள் நிவேதிதா மற்றும் திருமதி காவியா ஆகியோர் ஆவர்.

இவரது சிறப்பான ஆசிரியர் பணியைப் பாராட்டி தமிழக அரசு டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது, மத்திய அரசு தேசிய நல்லாசிரியர், கவிஞர் சிற்பி விருது, கவிக்கோ விருது, செல்வன் கார்க்கி விருது, சிறந்த சமூக சேவகர் விருது என பல விருதுகளும், பட்டங்களும் பெற்றுள்ளார். மதிப்புறு பணிகள் பல வகித்தும் சமூக நலப் பணிகளிலும் தம்மை இணைத்துக் கொண்டுள்ளார்.

முதலில் பூத்த ரோஜா 1994 என்னும் ஹைக்கூ நூல் தொடங்கி இதுவரை 12 நூல்கள் வெளியிட்டுள்ளார். இலக்கியத் துறையில் இன்று உலக அளவில் பேசப்படுகின்ற கவிஞராகவும், மேடைப் பேச்சாளராகவும், பட்டிமன்றப் பேச்சாளராகவும், சிறந்த எழுத்தாளராகவும் பவனி வருகிறார்.

தங்கம் மூர்த்தியின் பணிகளும் படைப்புகளும்

உன்னுடன் சேர்ந்து
நடக்க ஆரம்பித்த பிறகு தான்
சாலையோர மரங்களில் இருந்து
உதிரும் பூக்களின் மௌனத்திலும் நான்
இசை கேட்க ஆரம்பித்தேன்

என்று அறிவுமதி கூறியதைப் போல் கவிஞர் தங்கம் மூர்த்தியின் புதுக்கவிதைகளையும் துளிப்

பாக்களையும் படிக்க ஆரம்பித்த பிறகு தான் நமக்கு நம்மைச் சுற்றிலும் மலர்ந்து இருக்கின்ற ஒரு புதிய உலகம் தெரியவரும். அது மட்டுமன்று,

**சொல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை**
**இகல்வெல்லல் பார்க்கும் அரிது (குறள் - 647 )**

என்னும் குறளுக்கு ஏற்ப சபையை கட்டிப்போட்டு தன் வார்த்தை வீச்சில் மயங்க வைக்கும் மாயக்கண்ணன் இவர். பார்வையாளர்களின் நோக்கும் போக்கும் இருப்பிட சூழலின் தன்மையை அறிந்து உரையாற்றக் கூடிய வெற்றிகரமான மேடைப் பேச்சாளர். இவர் தான் சொல்லப் போகும் கருத்துக்களை இடம், பொருள், காலம் அறிந்து தேர்ந்து பேசக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர். இவர் பின்பற்றும் மேடை நாகரிகம் அனைவரையும் கவரக்கூடியது. எந்த அரசியல் கலப்புமற்றது தனிமனித துதியோ வேஷமோ அற்றது. செந்தமிழும் நாப்பழக்கம் என்பதை நன்கு உணர்ந்தவர் என்பது அவரது நாவினிலும், நாபிக் கமலத்தினிலும் இருந்து பிறந்து வரும் அழுத்தம் திருத்தமான நுனி நாக்கு ஆங்கிலம்போல் அல்லாத தெளிவான உச்சரிப்புடன் கூடிய தமிழ்ச் சொற்களினால் அறியலாம். அழகுத் தமிழ் இவரிடம் பழகு தமிழ் ஆகி மிளிர்வதைக் கேட்டு ரசிக்கலாம்.

தாய்ப்பாலோடு தமிழுணர்வையும், மாந்திய மறத்தமிழனாய்க் கவியரங்க மேடையில் ஒலிவாங்கியை கைபிடித்துக் கவிஞர் கவி பாடுவதைக் கேட்கும் பொழுது அவரது குரல் பெரும் உவகை கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

### தேவதைகளால் தேடப்படுபவன்

கவிதைக்கான கருப்பொருள் தெரிவுகள் தெளிவாக மொழிதல், தகுந்த சொற்களைத் தேர்ந்தெடுத்தல் போன்ற கவிதை பண்புகள் வெகு சிறப்பாக நூல் முழுவதும் விரவிக் கிடப்பதைக் காண முடிகிறது. கவிதை நடை இந்த கவிஞரைப் போலவே எளிமை மிகுந்திருக்கிறது. எளிய சொற்களைக் கையாண்ட விதமும் வெகு சிறப்பு. குழந்தைகள் கூத்தாடி கும்மாளம் இட்டு குதூகலித்து மகிழும் தருணங்களை கூடையாய் அள்ளித் தருபவை திருவிழாக்கள்தான்.

இதை நயமாக கவிதையில் பதிவு செய்வது கவிஞர்களுக்கு இயல்பு. ஒவ்வொரு சிறுவனும் தனக்கான கொண்டாட்டத்திற்கான வழிகளைத் தேடிக்கொள்கிறான் என்பார் எஸ். ராமகிருஷ்ணன். ஆனால் இங்கே திருவிழாக்களும் குழந்தைகளும், கவிதையில் குழந்தைகள் திருவிழாக்களை வரவேற்று அழைத்து வருவதும் திருவிழாவின் கரங்களை துலாவுவதும் அவற்றை முத்தமிடுவதும் அழகிய கற்பனை. இவை கூடப் பரவாயில்லை திருவிழாக்களிடம் கோரிக்கை வைப்பதும் பிரிவு உபச்சாரம் அளிப்பதும் பின் அவை உறையும் இடமும் நம் கற்பனைக்கு எட்டா சிகரங்கள். ஆனால் குழந்தைகள் உலகின் எதார்த்தங்களான அவற்றை கவிஞர் மிக அழகாகப் பதிவு செய்கிறார்.

நாய்களைப் பற்றிய கவிதை அல்ல என்று ஒரு கவிதையைத் தொடங்கி; நாய்களைப் பற்றியே பேசும்பொழுது அங்கே மறைமுகமாக பாரதியின் சாயல் இவர் எண்ணத்திலும் புலப்படுகின்றதோ என்று தோன்றுகிறது.

**வாலைக் குழைத்து வரும் நாய் தான்.**
**அது**
**மனிதருக்குத் தோழனடி பாப்பா**
(பாரதியும் பாப்பா பாட்டும்)

என்று ஆனந்தக் கூத்தாடியவனே பாரதி.

இங்கு தங்கம் மூர்த்தியும் இயல்பான மனதினை உடையவனாக வர்ணித்திருக்கிறார். கோபம் கொள்ளாமல் தொந்தரவு தரும் நாய்களின் சத்தத்தில் பிறந்த கவிதையையும் வாசகனை ரசிக்க வைத்திருப்பது பெரும் வியப்பு.

இந்தக் கவிதை என்னும் நதியில் காதல் என்னும் மீன்களின் வரத்து குறைவாய் இருப்பினும் ஆங்காங்கே சில காதல் கவிதைகள் தங்க மீன்களாய் நீந்தி வருகின்றன.

**"நிலவுகள் பூக்கும் பூமி", 'திறப்பு விழா',**
**"நமக்கருகே மிதக்கும் வானம்",** கானகமும்
நீரோட்டத்தில் கலந்து இறுதி வரிகளிலே ஒரு நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சுகின்றன.

**"காலை மாலை உலாவி நிதம்**
**காற்று வாங்கி வருவோரின்**
**காலைத் தொட்டு கும்பிட்டால்**
**காலன் ஓடிப் போவானே (சுகாதாரக் கும்மி 27)**

என்ற கவிமணி தேசிக விநாயகத்தின் வரிகளை நன்கு உணர்ந்தவர்கள் நாம், ஆனால் கடைப்பிடிக்க மாட்டோம். நடைப் பயிற்சிக்கு செல்லும்போது, நடைப்பயிற்சி எப்படி எல்லாம் நடக்கிறது என்ற நிஜங்களை கவிஞர் "நடைப்பயிற்சியும் சில நண்பர்களும்" கவிதையில் மிக அழகாக கோடிட்டுக் காட்டி இருக்கிறார்.

ஒரு மாபெரும் காப்பியத்தில் சிலம்பின் பரல்கள் சிதறியதால் எரிந்தது ஒரு நகரம். "ஒரு மாறுவேட போட்டியின் மறுபக்கத்தில்" என்ற கவிதையில் குழந்தைகளின் மகிழ்ச்சிகளும், ஏமாற்றங்களும் சிதறியதால் உடைந்து போகிறது. ஒரு கவி உள்ளம் அவரது உற்றுநோக்கல் திறனும் குழந்தைகள் மீது அவர் கொண்ட பரிவும் தெளிவாகத் தெரிகின்றன இங்கே.

அடுத்ததாக "பற...பற..." கவிதையில் குழந்தைக்குச் சுதந்திரம் மறுக்கப்படுவது மிக தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. குழந்தைக்கு 'நெல்' அறிமுகம் இல்லை என்பதையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் காட்டி இருக்கிறார். அடுத்த

தலைமுறையினருக்கும் விவசாயத்திற்கும் ஆன தொலைவை இது காட்டுகிறது.

இப்படி ஒவ்வொரு கவிதையும் வெவ்வேறு தளங்களில் மிகச்சிறப்பாகப் படைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த நூலின் சிறப்பு அம்மாவுக்கு என தொடங்கி பாட்டியிடம் முடிவடைந்து இருப்பது நடைமுறை வாழ்க்கையில் சொந்த பந்தங்களின் தேவையைச் சொல்லுவது போல் தோன்றுகிறது.

**முதலில் பூத்த ரோஜா**

பூக்களே பூக்காமல் இருக்கும் தோட்டத்தில் முதன் முதலாக ஒரு ரோஜா பூத்ததால் ஏற்படும் மன மகிழ்ச்சிக்கு அளவில்லை என்பதனை உணர்த்தும் வகையில் இவரது கவிதைகளில் வாழ்வியல் உணர்வுகள் மேலோங்கி இருக்கும். மனிதர்களின் பல முகங்களை எழுத்தோவியமாக கவி நடையில் அனுபவிக்கத் தரும் படைப்புகளுக்குச் சொந்தக்காரர் என்றால் அது மிகையாகாது.

இமைக்கா இரவுகளின் தூங்கா நினைவுகள் தரும் பாடங்களை கவிதைகளாய் வடித்து நூலாய் வெளியிட்டுள்ளார். தனது ஹைக்கூ கவிதைகளை "மழையின் கையெழுத்து'' - சைன் ஆஃப் ரெயின் என்ற ஆங்கில மொழியாக்க நூலாகவும் வெளியிட்டு உள்ளார். இவ்வாறு பல்வேறு வகையான கவிதைகளில் முதலில் பூத்த ரோஜா மேலும் சிறப்புக்குரியது. அன்றாட வாழ்க்கையில் மக்கள் சந்திக்கின்ற நிகழ்வுகளை உள்வாங்கி அதன் வெளிப்பாடாக அமைந்துள்ளதுதான் இப்படைப்பு. ஒன்றைப் பற்றிக் கூர்ந்து நோக்கி ஆராய்ந்து அதுபற்றி தீர்க்கமாய் உணர்ந்து வெளிப்படுத்துவது தான் கவிஞன் என்பதை வெளிப்படுத்தும் விதமாகவும் இன்னவைகள் நடக்கும், நடக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கும் வகையிலும் வழிகாட்டுபவனாக கவிஞன் திகழ்கிறான் என்பதனையும் இவரது கவிதைகள் வழி உணர முடிகிறது.

**சமூகத்திற்காக:**

"கறுப்பு ஆட்சிக்கு வரும்
இன்று அந்தியிலும்
நாளை ஆப்பிரிக்காவிலும்..."

(முதலில் பூத்த ரோஜா - ப எண் - 4)

இந்தக் கவிதையில் கவிஞரின் ஞான வெளிப்பாட்டை பிரவேசிப்பவை எனலாம். அப்பிரவேசம் பலரின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்துள்ளன. இக்கவிதையின் மூலம் காலத்தை வென்ற கவிஞன் எனவும் முன்கூட்டியே உணர்ந்து ஆற்றல் கொண்டு அமைந்த கவிதைகள் எனலாம்.

இவரது கவிதைகளில் இந்திய தேசம் இன்னும் மறுமலர்ச்சி பெறவில்லை என்பதனை உணர்த்தும் வகையிலும், இந்திய மக்கள் வளமான வாழ்வு பெற வேண்டும் என்று எதிர்பார்ப்புகளுடனே கவிதைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இத்தொகுப்பில் உள்ள அனைத்துக் கவிதைகளும் சமுதாய அவலங்களையும், குடும்ப பாங்கினையும், காதலையும் மிக நளினத்தோடும், நயம்படவும் உரைக்கின்ற பாங்கு கவிஞருக்கு கைவந்த கலையாகக் காட்சியளிக்கின்றன.

**பாசத்திற்காக:**

"அப்பாவுக்கு பத்தாயிரம்
அம்மாவுக்கு பத்து பவுன்
எனக்குக் கல்யாணம்"

(முதலில் பூத்த ரோஜா- ப.எண் 25)

என்ற கவிதையில் வரதட்சணை என்ற பெயரில் பெரியவர்கள் பேரம் பேசும் கொடுமைகளை தோலுரித்துக் காட்டுகின்றன.

"விளம்பரம் இல்லாமல்
விற்றுப் போயின
எல்லா வேலைகளும்"

(முதலில் பூத்த ரோஜா- ப.எண் 29)

என்ற கவிதையில் இன்றைய அரசியல் அதிகார வர்க்கத்தில் சிக்கித் தவிக்கும் இளைய தலைமுறைகளை வெளிப்படுத்துகிறார்.

"கொசுக்களின் தாலாட்டில்
குழந்தையின் உறக்கம்
பிளாட்பார்ம் "

(முதலில் பூத்த ரோஜா- ப.எண் 40)

என்ற கவிதையில் சமுதாயத்தில் ஏழைகள் எவ்வாறு துன்பப்படுகிறார்கள் என்பதைக் கூறியுள்ளார்.

இவ்வாறும்

"விழிகளில் ஊதி
தூசி எடுத்தாய்
தூசி வெளியேற உள்ளே நீ"
(முதலில் பூத்த ரோஜா- ப.எண் 20)

இக்கவிதையின் வாயிலாக காதல் உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறார்.

"பட்டிமன்றம் முடிந்து
தாமதமாய் வீடு வந்தேன்
வீட்டில் வழக்காடு மன்றம்"

( முதலில் பூத்த ரோஜா- ப.எண் 31)

இக்கவிதையில் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகள் மையமிட்டுக் காட்டப்படுகின்றன. இவ்வாறு இத்தலைப்பில் இடம்பெற்றுள்ள எல்லா கவிதைகளும் முதன்மை வாய்ந்தவை.

## முடிவுரை

கவிதை என்பது அழகியல் உணர்ச்சியுடைய ஓசை சந்தத்துடன் கூடிய ஒத்திசை பண்புச் சொற்களால் சேர்க்கப்பட்ட ஓர் எழுத்து இலக்கியக் கலை வடிவம்.

க.ப. அறவாணன்

புதுக்கவிதை என்று இன்று வழங்கப்படுவது தொடக்ககாலத்திலிருந்து பலராலும் பலபெயர்களில் வழங்கப்பட்டு வந்துள்ளது. புதுக்கவிதைகளை உரைப்பா, உரைவிடுபா, உரைக்கவிதை, வசனக்கவிதை, அலகு செய்யுள், கட்டற்ற கவிதை, நவ கவிதை, யாப்பு மீறிய கவிதை என பல பெயர்களிலும் வழங்கப்பட்டுள்ளன.

முனைவர் மா.கோவிந்தராசு - புதுக்கவிதை கட்டமைப்பு - முதல் பதிப்பு - நவம்பர் 2011

கவிஞன் படைப்புக் கடவுள் பிரம்மாவுக்கு ஒப்பானவன். காலம் வலிமை மிக்கது. அந்தக் காலத்தை வென்றெடுக்கும் சக்தி மனிதனிடம் உள்ளது. இருபதாம் நூற்றாண்டின் தமிழகத்தில் கவிதையுலகில் பாரதி தொடங்கி வைத்த மறுமலர்ச்சிப் பாதையில் புதுக்கவிதை செல்கிறது. (கவிமழை - 2005)

மேற்காணும் கவியாளுமைகளின் நீட்சியாகவும், அவர்களின் கவிதை குறித்த மையப் பொருள் சார்ந்தும் கவிதை சிறகுகளைப் பரப்பும் கவிஞராக கவிஞர் தங்கம் மூர்த்தி விளங்குகிறார். மிகுந்த அறிவாற்றலும், செறிவார்ந்த தமிழுணர்வும் சமூக நலனில் அக்கறையும் கொண்ட கவிஞரைத் தென்னாடும், தென் மொழியும், தென்னர் பண்பும் அறிந்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்வது மிக அவசியம்.

## மேற்கோள் நூல்கள்


1. கவிதை பயிற்றுமுறை - டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் - செப்டம்பர் - 1983
2. கவிதை இயல் - க. பூரணச் சந்திரன் - 2008
3. இனிய நந்தவனம் மாத இதழ் மார்ச் 2017.
4. தேவதைகளால் தேடப்படுபவன் - கவிஞர் தங்கம் மூர்த்தி - டிசம்பர் 2017
5. முதலில் பூத்த ரோஜா - கவிஞர் தங்கம் மூர்த்தி.
6. சுகாதாரக் கும்மி - கவிமணி 7 - மலரும் மாலையும் - 1938
7. முனைவர் மா.கோவிந்தராசு - புதுக்கவிதை கட்டமைப்பு முதல் பதிப்பு, நவம்பர் - 2011
8. கவிதை கிழக்கும் மேற்கும் - க.ப. அறவாணன் (1975)



கட்டுரையாளர், முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
அ.வீரையா வாண்டையார் நினைவு
திரு புட்பம் கல்லூரி (தன்னாட்சி) பூண்டி.





03.12.2022 அன்று, கரூர் மாவட்டம், குளித்தலை காவிரி நகரில் குளித்தலை தமிழ்ச் சங்கம் சார்பில் இரண்டாம் ஆண்டு புத்தகக் கண்காட்சி நடைபெற்றது. இதில் தமிழ்ச் சங்க நிறுவனத் தலைவர் முனைவர் கோபாலகிருஷ்ணன், தமிழ்ச்சங்க செயலாளர் மாணிக்கவாசகம், தமிழ்ச் சங்க துணைத் தலைவர் ரவிக்குமார், உழவர் ஆய்வு மன்ற அமைப்பாளர் கோபாலதேசிகன், குளித்தலை போக்குவரத்து காவல்துறை ஆய்வாளர் நாவுக்கரசு, முசிறி நுண்கலைப்பள்ளி நிறுவனர் தேன்மொழி, தனியார் மெட்ரிக் பள்ளி தாளாளர் ரம்யா, தமிழ்ச் சங்கப் பொருளாளர் மகேந்திரன், உடற்கல்வி ஆசிரியர் ராஜமாணிக்கம், நூலக குழுத் தலைவர் சிங்காரவேலன் மற்றும் என்சிபிஎச் திருச்சி மண்டல மேலாளர் குமார் மற்றும் கிளை மேலாளர் சுரேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.